
# இலங்கை திருச்சபை வரலாறு



# SRILANKAN CHURCH HISTORY

## G.C.E-A/L

By:

**MR.S.K.JUDE B.A.(HONS)**

# இலங்கை திருச்சபை வரலாறு

# SRILANKAN CHURCH HISTORY

## G.C.E - A/L

கௌரவ மறையாசிரியர்:
**திரு. எஸ். கே. யூட் பெனடிற்.** B.A (Hons)

வெளியீடு,
இளவாலை மறைக்கோட்ட கத்தோலிக்க
பொதுநிலையினர் கழகம்,
தியான இல்லம்,
பண்டத்தரிப்பு.
-2010-

3

3



## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து...

இயேசுகிறிஸ்துவில்எனதுஅன்பிற்கு இனிய மாணவச் செல்வங்களே!

"கருவறை முதல் கல்லறை வரை" ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கைப்படி நிலைகளில் பல நிகழ்வுகள் சங்கமமாகின்றன. அந்த வகையில், ஒவ்வொரு குழந்தையும் தாயின் கருவறையிலிருந்து இவ்வுலகில் அவதரிக்கின்ற போது அக்குழந்தை எதிர்காலத்தில் சிறந்ததொரு தொழில்வாய்ப்பினைப் பெற்று வளமான வாழ்க்கை வாழவேண்டும் என்பதே ஒவ்வொரு பெற்றோரினதும் எதிர்பார்ப்புக்களாகும். அதை நிறைவுசெய்வதில் பெற்றோரினதும், மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் கூட்டுமுயற்சி அவசியமாகும்.

மாணவர்களது கல்வி படிமுறைகளில் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி- என மூன்று விதமான கல்வித் தரங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் இடைநிலைக் கல்வியே உயர்கல்வியை நிர்ணயிக்கும். **"அழைக்கப்பட்டோர் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டோர் சிலர்"** என்ற கிறிஸ்தியல் சிந்தனைக்கு அமைவாக இடைநிலைக் கல்வி- க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயின்றவர்களில் உயர்கல்விக்கு அதாவது பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுவர்கள் ஒரு சிலரே. அந்த வகையில் க.பொ.த உயர்தரத்தில் ***கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரிகம்*** ஆகிய இரு பாடங்களிலும் "இலங்கைத் திருச்சபை வரலாறு" முக்கியமானதொரு பாடப்பரப்பாக விளங்குகின்றது. அதற்கமைவாக எனது நீண்டநாள் கனவினதும், விடா முயற்சியினதும் உருவாக்கமாக மிளிர்வதே "இலங்கைத் திருச்சபை வரலாறு" என்ற இந்நூலாகும். பல்கலைக் கழகத்தில் "சிறப்புபட்ட கற்கைநெறியாக" ஆக இப்பாடம் அமைந்துள்ளமை. சிறப்பம்சம் என்றால் மிகையாகாது.

**“வரலாறு”** என்ற பகுதி இன்று அனைத்து பாடத்துறைகளிலும் கனமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய சூழலில் வரலாறுகள் மறைக்கப்பட்டும் குழி தோண்டி புதைக்கப்பட்டும் வரும் சூழலில் இலங்கை திருச்சபை வரலாற்றினை அறிய ஆவலாக இருக்கும் மாணவர்களுக்கும், வரலாற்றுத் துடிப்புள்ளவர்களுக்கும் இந்நூல் பயன் நிறைந்ததாக அமையும் என நான் நம்புகின்றேன். பரீட்சைக்குரிய வினாக்களுக்கு விடை எழுதுவதற்கு மட்டுமன்றி, எமது திருச்சபையின் கடந்தகால தியாகம் மிக்க- சவால் நிறைந்த வரலாற்று அனுபவங்களையும் இந்நூலின் மூலம் அறியலாம்.

எனது கன்னி முயற்சியாக முதலில் கிறிஸ்தவ பாடத்திற்கு **“M.C.Q வினா விடைகள்”** அடங்கிய சிறியதொரு புத்தகத்தை வெளியிட்டிருப்பினும் எனது மனநிறைவுக்கு ஏற்ற விதத்தில் இப்புத்தகத்தை வெளியீடு செய்வதில் சந்தோசமடைகின்றேன். இலங்கைத் திருச்சபை வரலாற்றினை தாங்கி வரும் இந்நூலின் பிற்பகுதியில் பிற்சேர்க்கையாக **“வரலாற்று விழுதுகள்”** (சரித்திரக் குறிப்புக்கள்) என்ற தலைப்பில் முக்கிய வரலாற்று குறிப்புக்களையும் அமைந்துள்ளேன்.

இந்நூலை ஆக்குவதற்கு எனக்கு உந்துதலும் உற்சாகத்தையும் ஊட்டி, நிறைவான அருளாசீரைப் பொழிந்தருளிய இறைவனுக்கு என் முதற்கன் நன்றிகள். எனக்கு பல்வேறு வழிகளிலும் ஆர்வத்தை வழங்கிய எனது பெற்றோர், உடன்பிறப்புக்கள், விரிவுரையாளர்கள், திருநிலையினர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். இப்புத்தகத்தை சிறந்த முறையில் வடிவமைத்து தந்துதவிய **“அபி பதிப்பக உரிமையாளருக்கும்”** எனது மனம் கனிந்த நன்றிகள் பல உரித்தாக்குக.

"*குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்*" என்ற சான்றோர் கூற்றிற்கு இணங்க இந்நூலை மாணவர்களது கரங்களில் தவழ விடுகின்றேன். பல மாணவர்களும் இந் நூலைக் கற்று பயன்பெற வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக.

-நன்றி-

19.05.2010 உங்கள்ஆசிரியர்:
தேவாலய வீதி, திரு.எஸ்.கே- யூட் பெனடிற்.
சங்கானை.
யாழ்ப்பாணம்

**T.P -0774010333**
**021-4905889**

## -முன்னுரை-

இலங்கைக் கல்வி அமைச்சின் விதிமுறைக்கு அமைய க.பொ.த உயர்தரத்தின் கலைப்பிரிவு பாடத்திட்டத்தில் இன்று கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரிகம் எனும் இருபாடங்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. என்பதனை அறியலாம். இவ் இரு பாடங்களிலும் **"இலங்கைத் திருச்சபை வரலாறு"** எனும் **"வரலாற்று கற்கை நெறி"** கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறலாம். வரலாறு என்பது **"கடந்த கால சமுதாயத்தின் பன்முகப் பார்வை"** என்று கூறலாம். அதற்கமைவாக **"இலங்கைத் திருச்சபை வரலாறு"** எனும் கற்கை பரப்பை சீர்தூக்கி நோக்கும் போது **"திருச்சபை"** என்ற ஒரு அமைப்பு இலங்கைதேசத்தில் எப்படி, யாரால், எப்பொழுது, எவ்வாறு உதயமானது. மற்றும் இதற்கு பின்புலமாக அமைந்த சாதனைகள்,வெற்றிகள், தோல்விகள், எழுச்சிகள், வீழ்ச்சிகள், போராட்டங்கள் சுதந்திரம்- போன்ற பன்முக நிலையை புலப்படுத்தும் வகையில் அமைவதே **"இலங்கை திருச்சபை வரலாறு"** அல்லது **"ஈழத்து கிறிஸ்தவ சமூகத்தின் சரித்திரம்"** எனலாம்.

இற்றைக்கு 2010ஆம் ஆண்டுகளுக்கு முன்பு பலஸ்தீனாவில் உதயமாகிய கிறிஸ்தவம் ஐரோப்பிய பண்பாட்டில் இணைந்து, **"கிறிஸ்தவம் என்றால் ஐரோப்பியம், ஐரோப்பியம் என்றால் கிறிஸ்தவம்"** எனக் கூறுமளவிற்கு ஐரோப்பியமயப்படுத்தப்பட்ட கிறிஸ்தவமாகவே நம் இலங்கைக்கு **"கிறிஸ்தவ மதம் - திருச்சபை"** அறிமுகமானது என்பதே சரித்திரம் கூறும் உண்மை. இலங்கைத் திருநாட்டில் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற பன்மதங்கள் வாழ்கின்ற போதிலும் **"திருச்சபை"** என்ற பொன்மொழி கிறிஸ்தவ மதத்தில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. என்றால் அது கிறிஸ்தவ மதத்தின் தனித்துவம் என்று கூறுவது மிகையாது.

முதன் முதலில் ஐரோப்பாவின் போர்த்துக்கல் தேசத்திலிருந்து இலங்கைக்கு வருகை தந்த போர்த்துக்கேயரின் மறைபணியின் மூலமாகவேதான் இலங்கை திருச்சபை வரலாறு ஆரம்பமாகின்றது. என வரலாறு கூறுகின்றது. இருப்பினும் அவர்களது வருகைக்கு முற்பட்ட புராதன இலங்கையில் கிறிஸ்தவம் இருந்தமைக்கான ஆதாரமுள்ள வரலாற்று சான்றுகளும் உள்ளன. என்பதனை நாம் மறந்து விடமுடியாது. போர்த்துக்கேயரைத் தொடர்ந்து இலங்கைக்கு வருகை தந்த இரண்டாவது ஐரோப்பியராக ஒல்லாந்து தேசத்திலிருந்து வருகை தந்த ஒல்லாந்தர் விளங்குகின்றனர். இவர்களது இலங்கை ஆட்சியின் போது புரட்டஸ்தாந்து மதத்தின் (ஒல்லாந்த சீர்திருத்த மதத்தின்) செல்வாக்கு இலங்கையில் இடம்பெறத் தொடங்கியது. அதே வேளை கத்தோலிக்கமும் வளர்ச்சி அடையத் தொடங்கியது.

ஒல்லாந்தர் காலத்தில் "**கத்தோலிக்க மதம்**" தடை செய்யப்பட்ட மதமாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் மதச் சுதந்திரம் பறிபோன சூழலில் வாழ்ந்த கத்தோலிக்க சமூகத்திற்கு ஐரோப்பாவின் இங்கிலாந்து போன்ற தேசங்களிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த ஆங்கிலேயரின் வருகை அவர்களுக்கு புதியதொரு விடியலை கொடுத்தது. அதாவது ஆங்கிலேயர் காலத்தில் **மதச் சுதந்திரம்** வழங்கப்பட்டது. இதனால் ஐரோப்பாவின் பன்முக மிஷனறிகளின் வருகையின் பிரசன்னம் இலங்கைக்கு இடம்பெறத் தொடங்கியது.

இவ்வாறாக போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மதச் செயற்பாடும், ஒல்லாந்தர் காலத்தில் ஒல்லாந்த சீரதிருத்த மதத்துடன் கத்தோலிக்க மதமும், ஆங்கிலேயர் காலத்தில் இவ்இரு மதத்துடன் இன்னும் பல ஜரோப்பிய மிஷனறிகளின் செயற்பாடும் இலங்கையில் இடம் பெற்றது. இத்தகைய வரலாற்றினையே இலங்கைத் திருச்சபை வரலாறு எனும் இந்நூல் தாங்கி வருகின்றது.

மேலும் இந்நூலின் பிற்பகுதியில் **"வரலாற்று விழுதுகள்"** எனும் தலைப்பின் கீழ் முக்கிய வரலாற்றுக் குறிப்புக்களும் இடம் பெற்றுள்ளன. என்பது சிறப்பம்சமாகும்.

# -பொருளடக்கம்-

**பக்கம்**


அறிமுகம்

01) புராதன காலம் (கி.பி1 – 1505) 01 - 03

1.1 ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவர்கள்-கிறிஸ்தவம் இருந் தமைக்கான சரித்திரசான்றுகள் 01

- பழங்கதைகள் 02
- சான்றுள்ள வரலாற்று உண்மைகள் 02

02) போர்த்துக்கேயர் காலம் (கி.பி 1505 – 1658) 04 - 27

2.1 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை 04

2.2 போர்த்துக்கேயரின் இலங்கைவருகைக்கான காரணங்கள் 04

2.3 "பத்ரோ ஆதோ" – அரச ஆதரவு 05

2.4 போாத்துக்கேயரின் இலங்கை வருகையின் போது இலங்கையில் நிலவிய அரசியற் பின்னணி 05

2.5 மல்வானை ஒப்பந்தம் 09

2.6 போர்த்துக்கேய மறைப்பாளர்களின் மறைபணி 10

- பிரான்சிஸ்கன் சபை 10
- யேசு சபை 12
- புனிதசாமிநாதர்சபைபுனிதஅகுஸ்தினார்சபை 12

2.7 கண்டி அரசில்மறைபரப்புப்பணி 13

2.8 யாழ்ப்பான அரசில் மறைபரப்புப்பணி 15

2.9 மன்னார் மறைசாட்சிகள் 16

2.10 மன்னார்மறைசாட்சிகள் ஏற்படுத்திய விளைவு கத்தோலிக்க விசுவாசத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டமை 17

2.11 மறைப்பணியாளர்களால்மேற்கொள்ளப்பட்ட மறைசார் செயற்பாடுகள் 19

2.12 போர்த்துக்கேயர்காலக் கல்விச்செயற்பாடுகள் 22

2.13 போர்த்துக்கேயர் காலத்து கலாபனை 24

2.14 மதிப்பீடு 26

03) ஒல்லாந்தர்காலம் (கி.பி1658 – 1796) 28 - 53

3.1 அறிமுகம் 28

3.2 ஒல்லாந்தரின் இலங்கை வருகை 28

3.3 ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர் எதிர்நோக்கிய சவால்கள் - துன்பியல் அனுபவங்கள் 29

3.4 விசுவாசத்தைப் பாதுகாக்க கத்தோலிக்கர் மேற்கொண்ட நடவடிக்கைகள் - செயல்பாடுகள் 31

3.5 ஒல்லாந்தரின் மதம், கல்வி, சார்ந்த விவகாரங்கள் (ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக் கல்வி) 32

3.6 ஒல்லாந்தரது விவகாரங்கள் இலங்கை மக்களது சமூக,கலாச்சாத்தில் ஏற்படுத்திய செல்வாக்கின் மதிப்பீடு 33

3.7 அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும் (கி.பி.1651 – 1711) 35
- பின்னணி
- யோசப்வாஸ் அடிகளாரின் வாழ்வும் இலங்கை வருகையும் 36
- யோசப்வாஸ் அடிகளாரின் மறைபணி 39
- கண்டியில் அடிகளாரின் மறைபணி
- யோசப்வாஸ் அடிகளார் கையாண்டமறைபரப்பு உத்திகள் வழிமுறைகள் 43

3.8 அருட்திரு யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும். (கி.பி 1676 – 1742) 44
- கொன்சால்வெஸ்அடிகளாரின் வாழ்வும் இலங்கை வருகையும் 44
- கொன்சால்வெஸ் அடிகளாரின் மறைபணி 47
- கொன்சால்வெஸ் அடிகளாரின் படைப்புக்கள் 48

3.9 பிலிப்பல்தேயுஸ் பாதிரியாரின் வாழ்வும் பணியும் (கி.பி 1632 – 1671) 48
- பிலிப்பல்தேயுஸ்பாதிரியாரின் வாழ்வும் மறைபணியும்
- பிலிப்பல்தேயுஸ்பாதிரியார்தம்மறைபரப்பபு பணியின் போது எதிர்கொண்ட சவால்களும் அதற்குப் பதிலளித்த முறைகளும்

3.10 மதிப்பீடு 53

04) ஆங்கிலேயர் காலம் (கி.பி. 1796 – 1948) 54- 80

4.1 அறிமுகம் 54

4.2 ஆங்கிலேயரின் இலங்கைக்கான வருகை 54

4.3 இலங்கையில் ஆங்கிலேயரின் நிர்வாகக்கட்டமைப்பு 55

4.4 ஒல்லாந்த தடைச்சட்டங்கள் அகற்றப்பட்டதன் பயனாக கத்தோலிக்கசமூகம் அனுபவித்த நன்மைத்தனங்கள் 56

4.5 கத்தோலிக்க குருமாரின் மறைபணி 58

4.6 கண்டி அரசில் ஆங்கிலேயரின் பிரசன்னம் - ஆட்சி 58

4.7 ஆங்கிலேயர் காலத்தில் முழுமையான மதச் சுதந்திரமும் அதன் பல்பரிமானத் தாக்கமும் 59

4.8 ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையின் கல்வி, சமூக,சமய பணிபுரிந்த ஐரோப்பிய மறைபரப்புச் சபைகள் 60

4.9 ஆங்கிலேயர் காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாக அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் 62

4.10 முழுமையான மதச்சுதந்திரத்தின் பயனாக மறைப் பணிக்காக ஆற்றப்பட்டபன்முகச் சேவைகளும்சமுதாய முன்னேற்றமும் 64

4.11 மறைபரப்பாளர்களின் பயன் மிகுந்த கல்வி சார்ந்த செயற்பாடுகள் 67

4.12 நன்கொடை(அரசஉதவி)பெறும்பாடசாலைகளின் உதயம் 70

4.13 ஆங்கிலேயர் காலத்தில் கிறிஸ்தவ மகளிர் கல்விச் செயற்பாடுகள் 72

4.14 இலங்கைத் திருச்சபை தேசிய மரபுகளைப் பின்பற்றுதல் (கிறிஸ்தவம் பண்பாட்டு மயமாக்கம் பெறுதல்) 74

4.15 இலங்கை வள நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதில் கிறிஸ்தவர்களது பங்களிப்புக்கள்- முன்னேற்றகர மான பணிகள் (வரலாற்றுச்சம்பவங்கள்) 77

4.16 மதிப்பீடு 79

**05) சுதந்திரகாலம் (கி.பி 1948 - இன்றுவரை) 81 -99**

5.1 அறிமுகம் 81

5.2 சுதந்திர இலங்கையில்திருச்சபையின்நிர்வாகக் கட்டமைப்பு 82

5.3 சுதந்திரகாலத்தில் திருச்சபையின் கல்விச் செயற் பாடுகள் 84

5.4 சுதந்திர காலத்தில் பௌத்த, இந்துமத மறுமலர்ச்சியும் அதனால் கத்தோலிக்க சமூகம் அனுபவிக்க நேர்ந்த இடரர்களும்

5.5 அரசாங்கத்தால்பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்டமையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் 86

5.6 பாடசாலைகள்அரசாங்கத்தினால்சுவீகரிக்கப்பட்டதனால் ஏற்பட்ட நன்மைகள், தீமைகள் 88

5.7 இலங்கையில் காணப்படும் பல்வேறு கிறிஸ்தவ மறை பணி நிலையங்கள் 90

- இலங்கை வேதாகமச் சங்கம் 90
- இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் - பேரவை 91
- ஆயர் மன்றம் - பேரவையுடன் இணைந்துள்ள மறைபணித் துறைகள்
- இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை

5.8 சமாதானத்தை, நல்லுறவை கட்டியெழுப்புவ:தில் அனைத்துமதச் சமாதானத்திற்குமான அமைப்புக்களின் முக்கியத்துவம் 94

5.9 ஒன்றிப்புமிக்கஐக்கியஇலங்கையைகட்டியெழுப்புவதில் கிறிஸ்தவர்களது முன்னேற்றகரமான பொறுப்புக்கள்-கடமைகள் 97

5.10 மதிப்பீடு 99

06) நிறைவுரை 100
07) பிற்சேர்க்கை **101-128**

- **வரலாற்று விழுதுகள் - சரித்திரக் குறிப்புக்ள்**

08) துணை நின்ற நூல்களின் விபரம் 129

# இலங்கை திருச்சபை வரலாறு

## அறிமுகம்

இலங்கைத் தீவில் கிறிஸ்தவமதம் எப்போது எவரால் எவ்வாறு கொண்டுவரப்பட்டது? மற்றும் அது பல இடங்களிற்கும் பரம்பலடைந்தவிதம் அதனோடு தொடர்புடையவர்கள் மேலும் அவர்கள் ஆற்றிய பணிகள் சாதித்த சாதனைகள் அவர்கள் முகங்கொடுக்க நேர்ந்த பிரச்சினைகள் இடையூறுகள், எதிர்ப்புக்கள் பற்றிய பன்முக கற்கையே இலங்கை திருச்சபை வரலாறாகும்.

இலங்கை திருச்சபை வரலாற்றை நாம் மூன்று முக்கிய பகுதிகளாக பிரித்து நோக்குவது சிறந்தது.

1. புராதன காலம்::போர்த்துக்கேயரது வருகைக்கு முற்பட்ட காலம் (கி.பி1-1505வரை)
2. ஐரோப்பியர் காலம்: (கி.பி 1505-1948 வரை)
   - போத்துக்கேயர் காலம் (கி.பி 1505 – 1658)
   - ஓல்லாந்தர் காலம் (கிபி 1658 -1796)
   - ஆங்கிலேயர் காலம் (கி.பி 1796 –1948)
3. சுதந்திர இலங்கை: தற்காலம் (கி.பி 1948 - இன்றுவரை)

### 1. புராதன காலம்: போர்த்துக்கேயரது வருகைக்கு முற்பட்ட காலம்-(கி.பி1-1505வரை)

### 1:1 ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவர்கள்-கிறிஸ்தவம் இருந்தமைக்கான சான்றுகள்.

போர்த்துக்கேயரின் இலங்கை வருகையுடன் தான்: (கி.பி 1505 நவம்பர் 15ம் திகதி) இலங்கை திருச்சபை வரலாறு ஆரம்பமாகின்றது என பொதுவாக கூறப்பட்டாலும் போர்த்துக்கேயரது இலங்கை வருகைக்கு முன்பு இலங்கையில் கிறிஸ்தவமோ கிறிஸ்தவர்களோ இருக்கவில்லை என நாம் முடிவு செய்திட முடியாது. ஏனெனில் அவர்களின் வருகைக்கு முன்பு இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் எனக் கூறும் பல கட்டுக்கதைகளும், பழங்கதைகளும் மட்டுமல்ல ஆதாரத்துடனான பல சான்றுகளும் உள்ளன.

## பழங்கதைகள்:

- பெத்தலேகேமில் குழந்தை இயேசுவை வணங்க கீழைய தேசங்களிலிருந்து சென்ற மூன்று அரசர்களில் ஒருவர் **'கறுப்பு மேகஸ்'** என அழைக்கப்படும் யாழ்ப்பாண அரசனான **காஸ்பார் பெரியபெருமாள்** ஆவார்.இவர் அபபோஸ்தலரான புனிததோமாஸ் இந்தியா வந்த பொழுது அவரிடமிருந்து திருமுழுக்குப் பெற்று அவருடன் பணி செய்து இறுதியில் இருவரும் மறைசாட்சி மரணமடைந்து ஒரே இடத்தில் ஒரே கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டனர். என போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியரான யுவான் டீ பாறோஸ்(1496-1570) எழுதிய **'ஆசியா'** என்ற நூல் கூறுகிறது.

- மப்பேயி எனற ஆசிரியர் எழுதிய **இந்தியவரலாறு** என்னும் நூல்-அப்போஸ்தலர் பணிநூலில் வரும் திருத்தொண்டர் பிலிப் புவிடமிருந்து திருமுழுக்குப்பெற்ற எத்தியோப்பிய அண்ணகன (அமைச்சர்) **தப்றோபேன்** என அழைக்கப்பட்ட இலங்கையில் நற் செய்தியைப் போதித்தார்.என கூறுகின்றது.

- **யோவான்றி** பெய்றோ என்ற ஆசிரியர் கருத்துப்படி அப்போஸ் தலரான **புனிததோமாஸ்** இலங்கைத்தீவுக்கு வந்து தங்கியிருந்து அங்கு நற்செய்தியைப் போதித்தார்.மேலும் இந்தியாவில் அவர் செய்த நற்செய்திப் போதனையின் எதிரொலி இலங்கையிலும் கேட்கப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

## சான்றுள்ள வரலாற்று உண்மைகள்.

1) இந்தியகப்பலோட்டி என அழைக்கப்படும் கொஸ்மஸ் **இன்டி கோப்பிளாஸ்தர்** என்ற கிரேக்க வர்த்தகப்பயணி **கி.பி535**இல் எழுதிய **கிறிஸ்தவசபைகளின் விபரணம்** என்ற நூலில் அக்காலத்தில் இலங்கையிலிருந்த கிறிஸ்தவசபையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

"இந்திய கடலில் இந்தியாவுக்கு அப்பாலிலுள்ள தீவாகிய தாப்றோபேனில்(கிரேக்கர் இலங்கையை அழைத்த பெயர்) குருக்கள் விசுவாசிகளுடன் கூடிய ஒரு திருச்சபை இருக்கிறது. பாரசீகத்தினால் நியமணம் பெற்ற ஒரு குருவும் ஒருதிருத் தொண்டரும் இருக்கின்றனர். அங்கு திருவழிபாடுகளும் சிறப்பாக நிறை வேற்றப்படுகின்றன. ஆனால் சுதேசமக்களும் அரசர்களும் அந்நிய மதத்தை வழிபடுகின்றனர்" என்ற கூற்று இங்கு முக்கியம் பெறுகின்றது.

**கொஸ்மஸ்** என்பவரே இலங்கையில் புராதனகாலத்தில் கிறிஸ்தவ சமூகம் ஒன்று இருந்ததைப்பற்றி முதன் முதல் கூறும் எழுத்தாளர் ஆவார்.

2.) **கி.பி1912ஆம் ஆண்டு** நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது **கண்டெடுக்கப்பட்ட** அநுராதபுர காலத்தைச் சேர்ந்த கட்டிடச் **சிதைவுகளும்** கருங்கல்லினால் செதுக்கப்படட பாரசீக **நெஸ்தோரிய சிலுவையும** அக்காலத்தில் இலங்கையின் தலைநகராக விளங்கிய **அநுராதபுரத்திலேயே கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது.**

3) .கி.பி6ஆம் நூற்றாண்டில் மன்னார் மாதோட்டத்தில் கிறிஸ்தவ ஆலயம் இருந்தது என்பதுபற்றிய அறிக்கைகளும் காணப் படுகின்றன. ஒரு குருவும் ஒருதிருத்தொண்டரும் தங்கியிருந்து பணி செய்யும் அளவிற்கு பெரியசபை இருந்திருக்கின்றது என வரவாறு கூறுகின்றது.

4) **மறைந்தபேராசிரியர் செனரத்பரணவிதான** எழுதிய **"சிகிரியாவின் கதை"** எனும் நூலில் 5ஆம் நூற்றாண்டில் தாதுசேன மன்னனின் மக்களாகிய காசியப்பன் (கி.பி 423-491) முகலன் (கி.பி491-508) ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டு கிறிஸ்தவ உயர்அதிகாரிகளாக **பெரிய மிக்கார, சிறியமிக்கார** போன்றோர் பணியாற்றியுள்ளனர் என்ற குறிப்பும் காணப்படுகின்றது.

5) முகலன் (கி.பி491-508) மன்னனின் ஆட்சிக்காலத்தில் வெளியிடப் பட்ட தங்கநாணயங்களில் கிறிஸ்தவ சின்னங்கள் பொறிக் கப்பட்டிருக்கின்றன. எனவும் சிகிரியாவின்கதை எனும் நூல் சான்று பகர்கின்றது.

6) சிங்கள வரலாற்று நூலாகிய **மகாவம்சத்தில்** கிறிஸ்தவர்கள் இருந்ததற்கான சில குறிப்புக்கள் தென்பட்டாலும் அங்கு அதுபற்றி தெளிவான விபரங்கள் ஒன்றும் காணப்படவில்லை.

# 2. போர்த்துக்கேயர் காலம்-(கி.பி1505-1658)

## 2:1 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை.

புராதன காலந்தொட்டு கீழைத்தேச வர்த்தகத்தின் ஏகபோக உரிமை முஸ்லீம்களின் கைகளிலேயே இருந்தது. அவர்கள் கீழைத்தேச நாடுகளுடன் வர்த்தகம் செய்து தம் நாடுகளின் வருவாயை வளர்த்து செல்வம் கொழிக்கும் நாடுகளாக்கி வந்தனர். இதனால் வியாபாரத்தில் முஸ்லீம்களிற்கும் போர்த்துக்கேயருக்கு இடையே போட்டி நிலவியது இத்தகைய சூழ்நிலையில் பொன், வெள்ளி வாசனைத் திரவியங்கள் பீங்கான் யானைத்தந்தம் போன்ற பொருட்களின் மீது போர்த்துக்கேயர் கொண்டிருந்த பற்றும் முஸ்லீம்களின் மேலிருந்த வெறுப்பும் ஆத்திரத்தின் காரணமாக போாத்துக்கேயர் கீழைத்தேச நாடுகள் மீது படையெடுத்தனர்.

இவ்வாறான ஒரு பின்னணியில் முஸ்லீம்கள் மாலைதீவு வழியாக தங்கள் வர்த்தகப்பயணங்களை மேற்கொண்டு வரும் செய்தி பேரரசனின் பிரதிநிதி டொம்பிரான்சிஸ்கோவுக்கு எட்டவே அதை உடனடியாகத் தடுத்துநிறுத்த தம் மகன்- டொம்லோறன்ஸோ டி அல்மெய்டா தலைமையில் ஒன்பது கப்பல்கள் கொண்ட ஒருபடையை அனுப்பிவைத்தார். அப்படைக்கப்பல்கள் பெரியதொரு புயற்காற்றில் அகப்பட்டு தென்கிழக்கு திசையாக காற்றினால் அள்ளிச்செல்லப்பட்டு இலங்கையின் தென்மேற்குத் துறையை அடைந்தன. அதுவே கொழும்புத்துறைமுகமென அறிந்தனர்.

இவ்வாறாக போாத்துக்கேயர் எதிர்பாராதவிதமாக திடீரென 1505ஆம் ஆண்டு கார்த்திகை திங்கள் பதினைந்தாம் திகதி இலங்கையில் முதன் முறையாக காலடி எடுத்து வைத்தனர். இதுவே அவர்களின் தற்செயலான இலங்கை வருகையாகும்.

## 2:2 போர்த்துக்கேயரின் இலங்கை வருகைக்கான காரணங்கள்.

- தமது வாணிபத்தை விஸ்தரித்து தமது நாட்டை வளம்படுத்துவது.
- தமது வியாபார போட்டியாளர்களான முஸ்லீம்களை இலங்கை யிலிருந்து விரட்டுவதும் தமது வாணிப ஆதிக்கத்தினை இலங்கையில் நிலைபெறச்செய்வதும்.
- சுதேச மக்களை மனம்மாற்றி மதமாற்றுவது.
- புதிய நாடுகளை கண்டுபிடித்து தமது ஆட்சி அதிகார எல்லையை அகலப்படுத்தல்.
- ஆன்மீக அதிகாரத்தினையும் லௌகீக அதிகாரத்தினையும் ஒன்றில்லாமல் ஒன்றைச் செயல்படுத்த முடியாத அளவிற்கு ஒருங்கிணைத்தல்.

## 2:3 "பத்ரோஆதோ"-அரச ஆதரவு

"திருந்தந்தையால் போர்த்துக்கேய மன்னனுக்கு வழங்கப்பட்ட ஒரு சில உரிமைகளும் கடமைகளும் பற்றியதே" பத்ரோஆதோ எனப்படும் .மறைபரப்புப்பணி, திருச்சபையை தாபித்தல், மறைமாவட்டங்கள், பங்குகள், மடங்கள், பாடசாலைகள், போன்ற தாபனங்களை அமைத்து நிர்வகித்தல் அவற்றிற்குத் தேவையான குருக்கள் துறவிகள் மறைபரப்பாளர்களைச் சேர்த்து அனுப்புதல், அவர்களைப் பராமரித்தல் அதற்குரிய நிதிஉதவி வழங்குதல் போன்ற பொறுப்புக்கள் அனைத்தும் அந்நாட்டு கத்தோலிக்க அரசர்களிடமே பாரம்கொடுக்கப்பட்டன.

சுருங்கக்கூறின் 'பத்ரோஆதோ' உடன்படிக்கை என்பது **போர்த்துக்கேய மன்னனுக்கு- திருநிலைப்படுத்தப்பட்ட குருக்களுக்கே உரிய திருவருட்சாதனங்கள் வழங்கும் விடயம் தவிர்ந்த அனைத்து திருச்சபையின் அதிகாரங்களையும் அளித்தது** எனலாம். .அரசர் திருந்தந்தையின் பிரதிநிதி போன்று செயற்பட்டார்.

## 2:4 போர்த்தக்கேயரின் இலங்கை வருகையின் போது இலங்கையில் நிலவிய அரசியல் பின்னணி.

போர்த்துக்கேயரின் இலங்கை வருகையின் போது இலங்கை மூன்று அரசுகளாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு அரசர்களால் ஆளப்பட்டு வந்தது.இலங்கையின் தென்மேற்குப் பகுதி சிங்கள கோட்டை அரசும் மத்தியமலைப்பகுதி சிங்கள கண்டி அரசும் வடக்கில் தமிழ் யாழப்பாண அரசும் ஆண்டு வந்தது.

- கோட்டைஅரசு- ஒன்பதாம் தர்மபராக்கிரமபாகு அதன் தலைநகராகிய ஜயவர்த்தனபுர கோட்டையிலிருந்து ஆண்டு வந்தான்.
- கண்டி அரசு- விக்கிரமபாகு
- யாழப்பாண அரசு- சங்கிலியன்(செகராசசேகரன்-சங்கரன்)

ஒன்பதாம் தர்மபராக்கிரமபாகு போர்த்துக்கேயருடன் உடன்படிக்கை செய்து கப்பமாக கறுவாவை கொடுத்து தனக்கும் தனது அரசிற்கும் பாதுகாப்பை பெற்றுக்கொண்டான்.

கொழும்பை தமது வர்த்தக மையமாக கொண்டிருந்த முஸ்ஸீம்கள் போர்த்துக்கேயரின் வருகையை சற்றேனும் விரும்பவில்லை. பலமுறைகளில் போர்த்துக்கேயர் முஸ்ஸீம்களின் துன்புறுத்தலுக்கு ஆளாகினர்.

கண்டி இளவரசன்-விக்கிரமபாகு சுதேச முஸஸீம்களுடன் இணைந்து கோட்டை அரசைக் கைப்பற்ற முயற்சிசெய்தான்.அப்போது ஒன்பதாம் தர்மபராக்கிரமபாகு போர்த்துக்கேயரின் உதவியைநாடி அவர்களுடன் முன்பு செயது கொண்ட உடனபடிக்கையை புதுப்பித்து அவர்களின் உதவியையும் பாதுகாப்பையும் பெற்றுக்கொண்டான்.

தர்மபராக்கிரமபாகுவின் மரணத்தை அடுத்து 1520இல் அவன்மகன் விஜயபாகு கோட்டை அரசனானான்.**(இவன் தன் தந்தைக்கு நஞ்சு ஊட்டி கொலை செய்ததாக அறியப்படுகின்றது)**

போர்த்துக்கேயா் களிமண்ணால் கட்டப்பட்ட தம் கோட்டைக்குப் பதிலாக கற்களாலும் சுண்ணாம்பாலும் பலமான கோட்டையைக் கட்டினா். இது சிங்களவருக்கு சந்தேகத்தையும் அச்சத்தையும் கொடுத்தது.

விஜயபாகு முஸ்ஸீம்களுடன் சேர்ந்து தந்தை போர்த்துக் கேயருடன் செய்து கொண்ட உடன்படிக்கைகது மாறாக அவர்கள்மேல் போர்தொடுத்தான். அதில் தோற்கடிக்கப்பட்ட அவன் மனம் வருந்தி போர்த்துக்கேயருடன் செய்து கொண்ட உடன்படிக்கையை புதுப்பித்துக்கொண்டான்.

**விஜயபாகுவின்** ஆட்சி நீண்டகாலம் நிலைக்கவில்லை. அவனுக்கு நான்கு ஆண்மக்கள் இருந்தனா்.மூத்தவன் இறந்தபடியால் எஞ்சிய மூவருமே **(ஏழாம் புவனேகபாகு, பரராஜசிங்கன்,** மாயதுன்ன) அவனுக்குப் பின் கோட்டை வாரிசுகளானார்கள்.

கோட்டை அரசு மூன்றாகப்பிரிக்கப்பட்டு மூன்று இளவரசர் களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

- **கோட்டை- ஏழாம் புவனேகபாகு.**
- **சீதாவாக்கை-** மாயதுன்ன.
- **றைகம-** பரராஜசிங்கன்.

இது 1521இல் இடம்பெற்றது. இவ்வாறு கோட்டை அரசு பிளவுபட்டமை போாத்துக்கேயர் மெண்மேலும் அரசியலில் பங்கெடுப்பதற்கு வழிகோழியது.

மூன்று சகோதரர்களின் நல்லுறவு பலகாலம் நீடிக்கவில்லை. கோட்டை அரசன் எழாம் புவனேகபாகு வயதில் முதிர்ச் சியடைந்தவனாக காணப்பட்டதனால் சீதாவாக்கை அரசன் மாயதுன்ன முஸ்ஸீம்களுடன் சேர்ந்து கோட்டையை கைப்பற்ற பலதடவை முயன்றான்.

தனக்கு வாரிசாக ஆண்மகவு இல்லாத அவன் தன் மகளை தன் சகோதரியின் மகனாகிய விதியபண்டாராவுக்குத் திருமணம் செய்து வைத்தான் தன் மகளின் மகனும் தன்பேரனுமாகிய தர்மபாலாவையே தனது அரசுரிமை வாரிசாக்கினான்.

றைகம அரசன் பரராஜசிங்கன் இறந்ததையடுத்து றைகமவையும் தனதாக்கிக் கொண்ட மாயதுன்ன இன்னும் வலிமை பெற்று போர்த்துக்கேயரின் எதிரியான இந்தியாவைச்சேர்ந்த பச்சிமர்க்கர் என்பவனின் உதவியுடன் மீண்டும் கோட்டை அரசன் மேல் போர் தொடுத்தான். இதனால் மாயதுன்ன போர்த்துக்கேய படையினரால் தோற்கடிக்கப்பட்டு அதிக இழப்புகளுக்கு ஆளானான்.

தன்பேரன் தர்மபாலா சிம்மாசனம் ஏறுவதை எழாம் புவனேகபாகு நிச்சயப்படுத்திக்கொள்ள் போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். பொன்னினால் செய்யப்பட்ட தனது பேரன் தர்மபாலாவின் முழுஅளவிளான சிலையை மாணிக்க கற்கள் பொறிக்கப்பட்ட பொன்முடியுடன் தன்தூதுவர்கள் வழியாக போர்த்துக்கால் மன்னனிடம்அனுப்பி அதற்கு முடிசூட்டும்படி கேட்டான்.

போர்த்துக்கேய அரசன் மூன்றாவது யுவான் புவனேகபாகு வினுடைய விண்ணப்பத்தை ஏற்று 1543இல் வெகு ஆடம்பரத்துடன் தர்மபாலாவின சிலைக்கு முடிசூட்டினான்.

இலங்கையில் கிறிஸ்தவத்தைப் போதிக்க சில கத்தோலிக்க குருமார்களை அனுப்பும்படியான புவனேகபாகுவின் விண்ணப்பம் போர்த்தக்கேயர் இலங்கையில் மறைபரப்புப் பணியை மேற்கொள்ள வழிகோழியது.

யுவான் டா விலா டோ கொண்டே என்ற குருவின் தலை மையில் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த ஆறு குருக்கள் இலங்கை வருகை தந்தனர்.

தனது அரசு முழுவதும் நற்செய்தியைப் போதிக்க அனுமதியளித்த மன்னன் தானும் தனது குடும்பத்தினரும் கிறிஸ்தவத்தை தழுவ விரும்பவில்லை. ஏனெனில் நான் மதம் மாறினால் எனது மக்கள் மாயதுன்னையின் பக்கம் சென்று விடுவார்கள் என அவன் அஞ்சினான் பிரான்சிஸ்கன் சபையினருக்கு இந்நிகழ்வு பெரிய ஏமாற்றமாயிருந்தது. இருப்பினும் பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் தமது மறை பரப்புப்பணியை ஆரம்பித்து நடத்தினர். போர்த்துக்கேய அதிகாரிகளின் அடாவடித்தனங்களும் கெடுபிடிகளும் பேராசைகளும் நாட்டு சட்டதிட்டங்களை மதியாத போக்கும் புவனேகபாகுவிற்கு அவர்கள் மேல் சினத்தையும்

வெறுப்பையும் ஊட்டின. ஆதலால் அரசன் புதுக்கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தித் தண்டித்ததுமல்லாமல் தனது மக்கள் கிறிஸ்தவத்தை தழுவுவதையும் மறைமுகமாக எதிர்த்தான்.

பட்டத்து இளவரசனான தர்மபாலாவின் பாதுகாப்பை முன்னிட்டு அவனுக்கு கல்வியறிவு ஊட்டும் பொறுப்பை பிதா யுவான் டா விலா கொண்டேயிடம் ஒப்படைத்தான்.

போர்த்துக்கேயருடன் கொண்டிருந்த நட்புறவின் காரணமாக தனது மூத்த மகன் கிறிஸ்தவத்தை தழுவுவதற்கு முன்னர் அவனைக் கொன்றான்.

புவனேகபாகு தன் சகோதரனும் தன் பலகால எதிரியுமான மாயதுன்னவுடன் கூட்டுச்சேர்ந்தான். இருவரும் இணைந்ததைக்கண்ட கண்டி அரசன் ஜெயவீர பயந்து போர்த்துக்கேயரின் நட்பையும் உதவியையும் நாடினான்.

அரசியல் நோக்கத்திற்காகவும் தனது பாதுகாப்பிற்காகவும் 1546ம் ஆண்டு பங்குனி மாதம் 9ஆம் திகதி இரகசியமாக ஜெயவீர திருமுழுக்கு பெற்றுக்கெண்டான். அரசன் புவனேகபாகு 1551ம் ஆண்டு வைகாசி மாதம் எதிர் பாராத விதமாக இனந்தெரியாத வர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். புவனேகபாகுவின் மரணத்திற்குப் பின்பு முன்னர் செய்திருந்த உடன்படிக்கையின் படி அவனுடைய பேரன் தர்மபாலா கோட்டை அரசனானான். வயதில் இளைஞராக இருந்ததனால் அவனுடைய தந்தையாகிய விதிய பண்டார அவனுக்குப் பதிலாக கோட்டையை ஆளுபவனாக நியமிக்கப்பட்டான்.

போர்த்துக்கேய மன்னனின் பிரதிநிதியான "நொறோனா" புவனேக பாகுவின் மரணத்தைப்பற்றி விசாரிக்கவும் தர்மபாலாவின் திரு முழுக்கை துரிதப்படுத்தவும் கோட்டை அரசிலிருக்கும் செல்வங்களை கைப்பற்றும் நோக்குடனும் கொழும்புக்கு வந்தார்.

விதியபண்டாராவைத் துன்புறுத்தி ஏராளமான பொக்கி ஷங்களை அவன் கைப்பற்றி கோவைக்கு சென்றதனால் கோபமடைந்த விதிய பண்டார போர்த்துகேயரை பழிவாங்கும் நோக்குடன் கிறிஸ்தவ ஆலயங்களை அழித்து கிறிஸ்தவர்களின் நிலபுலன்களைப் பறிமுதல் செய்து அவர்களைத் துன்புறுத்தினான்.

போர்த்துக்கேயரால் சிறைபிடிக்கப்பட்ட இவன் தன் மனைவியின் உதவியுடன் அங்கிருந்து தப்பித்து கிறிஸ்தவர்களை இன்னும் துன்புறுத்தி விட்டு யாழ்பாணத்திற்கு தப்பியோடிச் சென்று அங்கு இருந்தான்.

1556ம் ஆண்டு முற்பகுதியில் ஏறக்குறைய **70,000** பேர் தங்கள் தலைவர்களுடன் மனந்திரும்பி திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவத்தை தழுவினார்கள் இந் நிகழ்வின் மூலம் மனத்துணிவைப் பெற்ற தர்மபாலா 1556ல் திருமுழுக்குப்பெற்று டொன் யுவான் என்ற பெயருடன் கிறிஸ்தவத்தை தழுவினான். அவருடன் அவருடைய இராணியாரும் அநேக அரச அதிகாரிகளும் மக்களும் திருச்சபையில் சேர்ந்தனர்.

கிறிஸ்தவ அரசரென்ற ரீதியில் கிறிஸ்தவ குருக்களுக்கு அரச நிலங்களையும் நிதிகளையும் வழங்கினான். இதைப் பௌத்த பிக்குகளும் மக்களும் விரும்பவில்லை.

மாயாதுன்னையும் அவனுடைய மகன் திகிரிபண்டாவும் கோட்டை அரசின் கடற்கரைப்பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளைத் தாக்கி கிறிஸ்தவ ஆலயங்களையும் அழித்து கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார்.

தர்மபாலா மூன்று பெண்களை திருமணம் செய்தும் புத்திர பாக்கியம் கிடைக்காமையால் தனக்கு பின் கோட்டை அரசு போர்த்துக்கேயருக்கே சேர வேண்டும் என தம் மரண சாசனத்தில் எழுதிவைத்தார். இது அரசர் கத்தோலிக்க மதத்தில் கொண்டிருந்த உறுதியான பற்றைக் காட்டுகின்றது.

தர்மபாலா 1597ம் ஆண்டு வைகாசி மாதம் 27ம் திகதி மரணமானார். இவரது மரண சாசனத்தின் படி கோட்டை அரசு போர்த்துக்கேய அரசன் முதலாவது பிலிப்பின் ஆட்சியின் கீழ் வந்தது.

## 2:5 மல்வான ஒப்பந்தம்.

போர்த்துகேய ஆட்சியாளரும், மக்களும் மல்வானவில் ஒன்று கூடிப் பேசினார். மக்கள் போர்த்துகேய அரசன் பிலிப்பை தங்கள் அரசனாக ஏற்றுக் கொண்டனர். மதத்தை பொறுத்த மட்டில் ஒருவர் கிறிஸ்தவத்தை தழுவுவதற்கு எவரும் தடுக்க முடியாது என்றும் அதே வேளை எவரையும் கிறிஸ்தவத்தைத் தழுவும் படி எவரும் வலோத்காரப் படுத்தக் கூடாதென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு மக்களுக்கும் ஆட்சியாளருக்குமிடையே ஏற்பட்ட இவ் இணக்கத்தை மல்வான ஒப்பந்தம் என அழைப்பர்.

## 2:6 போர்த்துக்கேய மறைபரப்பாளர்களின் பணி

போர்த்துகேயர் முதன் முதலாக 1505ம் ஆண்டு கார்திகை மாதம் 15ம் திகதி டொம் லோறன்ஸேடி அல்மெய்டா தலைமையில் இலங்கைக் கொழும்புத் துறைமுகத்தில் காலடி எடுத்து வைத்தனர்.கொழும்புத் துறைமுகத்தினருகே கட்டப்பட்ட **புனித லவுறேஞ்சியார் சிற்றாலயமே இலங்கையில் கட்டப்பட்ட முதல் கத்தோலிக்க வழிபாட்டு** தலமாகும்.

**அருட்திரு பிறேவிசென்ரே அடிகளாரே இலங்கையில் முதல் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்**.மிகவும் ஆன்மீக வாஞ்சையுள்ள இவர் இலங்கையில் நற்செய்திப்பணியில் ஈடுபட விரும்பினார். இலங்கையை பொறுத்தமட்டில் முதல் 40**ஆண்டுகளும்** எவ்வித திட்டமிடப்பட்ட மறைபணி இடம்பெறவில்லை.

போர்த்துக்கேயபடைவீரர்களுக்கு **ஆன்மீகப்பணி**புரிய இருந்த குருமார் படைவீரர்களின் மதநலன்களை கவனித்ததோடு தம் அயலில் இருந்த கிராமங்களில் நற்செய்தியைப்பரப்ப தம்மாலானவற்றை செய்தனர்.

1518 - 1543க்கு இடைப்பட்ட காலத்தில் கோட்டை அரசில், கண்டி அரசில், யாழ்ப்பாண அரசில் ஓரளவு நற்செய்தி பரவியிருந்தது. சில ஆலயங்களும் கட்டப்பட்டன. இவர்களிடையே மறைபணி புரிந்தவர்களுள் **அருட்திரு மொன்ரெய்றோ** அடிகளாரும் ஒருவராவார். (1536இல் காலமானார்)

### ✍ பிரான்சிஸ்கன் சபை

1543இல் போர்த்துக்கேய மன்னன் டொம்யுவானிடம் புவனேகபாகு விண்ணப்பித்ததன்படி **அருட்திரு யுவான் டா விலா கொண்டே** தலைமையில் அதே ஆண்டுஆறு குருக்கள் அடங்கிய பிரான்சிஸ்கன் சபைக் குழு இலங்கைக்கு வருகை தந்தது. இவர்களின் வருகையின் மூலமாகவே முறையான திட்டமிடப்பட்ட மறைபோதகப்பணி இலங்கையில் ஆரம்பமாகியது. இலங்கைக்கு வருகை தந்த முதல் மறைபோதக குழு இதுவாகும்..

மறைபரப்பாளர்களை மகிழ்வுடன் வரவேற்று தமது அரசு முழுவதும் நற்செய்தியை போதிக்க அனுமதியளித்த புவனேகபாகு தானோ தன் குடும்பமோ கிறிஸ்தவத்தை தழுவ விரும்பவில்லை. ஏனெனில் மதமாறினால் குடிமக்கள் தனது எதிரியான மாயதுன்னவின் பக்கம் சென்றுவிடுவார்கள் என்று பயமே அதற்கு காரணம்.

அரசன் மதமாறினால் விரைவில் குடிமக்களும் மதமாறுவார்கள் என எதிர்பார்த்து வந்த மறைபரப்பாளர்களுக்கு இது பெரும் ஏமாற்றமாக அமைந்தாலும மனந்தளராமல் தமது பணியை தொடங்கினர்.

போர்த்துகேய அதிகாரிகளின் நடத்தையும் கெடுபிடிகளும் அடாவடித்தனங்களும் நாட்டு சட்ட ஒழுங்குகளை மதியாத போக்கும் பெரும் முட்டுக்கட்டைகளாக இருந்தன. அவர்களைப் பின்பற்றி புதுக்கிறிஸ்தவர்களும் வரிகள், அரச பணி போன்ற நாட்டுச்சட்டங் களை மதியாமல் தம் விருப்பம் போல் வாழ்ந்தபடியால் அரசரும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி மறைமுகமாக தம் பிரசைகள் கிறிஸ்தவத்தை தழுவுவதைத் தடைசெய்தார்.

1550 ஆண்டுக்கு முன் கோட்டையிலும் கொழும்பிலும் மட்டுமல்ல பாணந்துறை, மகோனா, பேருவலை, களுத்துறை, காலி, வெலிகாமம் முதலிய கரையோர நகரங்களிலும் கிறிஸ்தவ சபைகள் ஆரம்பிக்கப்பட்டு தேவாலயங்கள் நிறுவப்பட்டன.

**காலித்துறைமுகத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களை புனித பிரான்சிஸ்கு சவேரியார் 1548ல் தரிசித்ததாகச் அறியப்படுகின்றது.**

புவனேகபாவின் மரணத்தை அடுத்து கோட்டை அரசனான அவனுடைய பேரன் தர்மபாலா 1556ல் திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவத்தை தழுவியதைத் தொடர்ந்து நற்செய்திப் போதகம் அவனுடைய ஆதரவுடன் அரசு முழுவதும் மிகத்துரிதமாக நடைபெற்றது. மடங்கள், கல்லூரிகள், ஆலயங்கள் கட்டுவதற்கு அரசன் நிலபுலன்களையும் நிதியையும் தாராளமாய் கொடுத்துத வினான்.

கொழும்பு படிப்படியாக ஒரு கிறிஸ்தவ பட்டணமாக மாறியது. பல பங்குகளும் துறவற மடங்களும் பக்திச்சபைகளும் ஆரம்பிக் கப்பட்டன.

1597ம் ஆண்டில் அரசர் **டொன்** யுவான் **தர்மபாலா** இறந்த பொழுது கோட்டை அரசில் 100.000 க்கு அதிகமான கத்தோ லிக்கரும் ஏறக்குறைய 50 ஆலயங்களும் அநேக சிற்றாலயங்களும் 100 பங்குச்சபைகளும் இருந்தனவென்று கூறப்படுகின்றது.

## ✍ இயேசு சபை .

அறுவடை அதிகமாகவும் வேலையாட்கள் குறைவாகவும் இருந்தபடியால் பிரான்சிஸ்கன் சபையினர் வேறு சபைகளிருந்தும் மறைபரப்பாளர்களை உதவிக்கு வரவழைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அக் காலத்தில் இலங்கை முழுவதும் இந்திய கொச்சின் மறைமாவட்ட ஆயரின் நிர்வாகத்தின் கீழ் அமைந்திருந்தது. கொச்சின். ஆயரான ஆந்திரே டி சாந்த மரியாவின் அயராத முயற்சியினால் 1602ம் ஆண்டு சித்திரை மாதம் அருட் திரு தயோகோ டாகுன்கவின் தலைமையில் முதல் இயேசு சபைக் குழுவினர் இலங்கையில் மறைப்பரப்பு பணியில் பங்கெடுக்க வந்தனர்.கொச்சின் ஆயர் கொழும்புக்கு வந்து கோட்டை அரசுக்கு உட்பட்ட பகுதிகளில் இரு சபையிரினரிதும் பணித்தள எல்லைகளை நிர்ணயித்துக் கொடுத்தார்.

மகா ஓயா ஆற்றை எல்லையாக வைத்து திருமலை, மட்டு நகர், யாழ்ப்பாணம் வரையிலான அதன் வட பகுதி இயேசுச்சபையினருக்கும் அதற்கு தெற்கே மாத்தறை மாவட்டம் வரையிலான பகுதிகள் பிரான்சிஸ்கன் சபையினருக்கும் வழங்கப்பட்டன. இயேசு சபையினர் கொழும்பில் ஒரு கல்லூரி கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இரு சபையினரும் போர்த்துக்கேயரால் உட்பட்ட கரையோரப் பகுதிகளில் ஆர்வத்துடன் பணி செய்து பல்லாயிரக்கணக்காண மக்களை திருச்சபையில் சேர்த்தனர். இவர்களுள் அழகிய வண்ண முகத்தல எனஅழைக்கப்பட்ட சிங்களக்கவிஞர் ஒருவர் அடங்குவார்.

## ✍ புனித சாமிநாதர் சபை, அகுஸ்தினார் சபை.

1605ம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையினருக்கும் இயேசு சபையினருக்கும் உதவி செய்ய புனித சாமிநாதர் சபையும் புனித அகுஸ்தினார் சபையையும் சேர்ந்த குருக்கள் இலங்கைக்கு வரவ ழைக்கப்பட்டனர்.

இவர்களின் பணித்தளமாக 1606ல் அவர்களிடம் கண்டி அரச எல்லைகளை அண்டிய மாவட்டங்கள் ஒப்படைக்கப்பட்டன. சாமிநாதர் சபையிடம் சப்பிரமுவ மாகாணமும் ( இரத்தினபுரி மாவட்டமும்) இரண்டு கோறளைகளும்.அகுஸ்தீனார் சபையிடம் சப்த கோறளை தம்புக்கண்ண மாவட்டமும் நான்கு கோறளைகளும் ஒப்படைக்கப்பட்டன.

இவ்வாறு பிரான்சிஸ்கன் சபை, இயேசு சபை, சாமிநாதர் சபை, அகுஸ்தீனார் சபைகளைச் சேர்ந்த மறைபரப்பாளர்களின் அயராத உழைப்பினால் நற்செய்தி எங்கும் போதிக்கப்பட்டு திருச்சபை வளர்ந்தது. பல கஸ்ரங்கள் இடையூறுகள் மத்தியில் அவர்கள் நற்செய்தியை போதித்து மக்கள் பின்பற்றும் தப்பறைகளை விளக்கி உணர்த்தினார்கள்.அவர்களில் பிறரன்புப் பணிகளும், தம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்ட மக்களில் காட்டிய அக்கறையும் ஆர்வமும் மக்கள் வரட்சி பஞ்சம் கொள்ளை நோய் போன்ற துன்பங்களில் வருந்திய வேளைகளில் அவர்கள் காட்டிய கருணையும் இரக்கமும் ஆதரவும் அர்ப்பணமும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

இவர்கள் பல நோயாளர்களை குணமாக்கி அவர்களுக்காகச் செபித்து அசுத்த ஆவிகளை விரட்டி மக்களின் நன் மதிப்பைப் பெற்றனர். இவை மக்களை கிறிஸ்தவத்தின் பால் ஈர்த்தன இவையெல்லாம் திருச்சபையின் வளர்ச்சிக்கு மிகவும் உதவின.

## 2:7 கண்டி அரசியல் மறைபரப்புப் பணி

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலகட்டத்தில் கண்டி அரசை – ஜெயவீர ஆண்டு வந்தான்.இவன் வீர விக்கிரமபாகு என அழைக்கப்பட்டான்.சீதாவாக்கை அரசனான மாயாதுன்ன கண்டி அரசை கைப்பற்ற முனைந்ததை அறிந்த ஜெயவீர பயங்கொண்டு போர்த்துக் கேயரின் உதவியை நாடினான்.

போர்த்துகேயரின் உதவியைப் பெறுவதற்கு சிறந்த வழி தான் கிறிஸ்தவனாக வர விரும்புவதாக அறிவிப்பதே என அறிந்து சில மறைபரப்பாளர்களை கண்டிக்கு அனுப்பும்படி கோட்டே அரசில் பணி புரிந்த பிரான்சிஸ்கன் சபையினருக்கு விண்ணப்பித்தான்.

கொழும்பிலிருந்த பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த குருக்கள் சிலர் கண்டிக்கு உடனடியாக அனுப்பப்பட்டனர்.அரசன் ஜெய வீர அவர்களை வரவேற்று தமது அரசில் கிறிஸ்தவ மதத்தை போதிக்க அனுமதியளித்ததுமல்லாமல் ஒரு தேவாலயத்தையும் அவர்கள் தங்குவதற்கு ஒரு மடத்தையும் கட்டுவதற்குப் போதிய நிலத்தையும் கொடுத்தான்.

மக்கள் இரகசியமாக திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தை தழுவி யதை அறிந்து சில அரச முக்கியஸ்தர்களும் பிரசைகளும் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவினார்கள்.

அரசன் ஜெய வீர அரசியல் நோக்கத்திற்காக திருமுழுக்குப் பெற்றானேயன்றி கிறிஸ்தவத்திற்கு தன்னை அர்ப்பணிக்க விரும்ப வில்லை.தான் கேட்ட படை உதவியை வழங்க போர்த்துக்கேயர் காலந்தாழ்த்தியமையால் கிறிஸ்தவனாக வர தமக்கு விருப்பமில்லை எனக் கூறியதுடன் போர்த்துக்கேயருக்கு எதிராகவும் மறைபரப் பாளருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்தான்.

இச்செயலை விரும்பாத இவனது மகன் பட்டத்து இளவரசனான கரலியட் பண்டார தன் தந்தையின் கொடுமைகளை பொறுக்க முடியாமல் சிறையிலிடப்பட்ட மறைபரப்பாளர்களை விடுதலை செய்து ஊவாவுக்குச் சென்று அங்கு படைகளைத் திரட்டி தன் தந்தையோடு போர் தொடுத்து தந்தையை விரட்டி விட்டு தான் 2வது ஜெய வீர என்ற பெயருடன் 1550ல் கண்டி அரசனானான்.

மறைபரப்பாளர்கள் கண்டிக்கு வந்து இவனுடைய ஆட்சிக்காலத்தில் எவ்வித தங்குதடையுமின்றி நற்செய்தியைப் போதித்து பல அரச அதிகாரிகளைகளையும் பொதுமக்களையையும் மனந்திருப்பினர்.

அரசனும் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தை தழுவி டொம் பிலிப் என்ற பெயரையும் பெற்றுக் கொண்டான். இவனுடைய மனமாற்றம் நேர்மையானதாக இருந்தது ஏனெனில் அவன் இறுதி மட்டும் திருச்சபைக்கு பிராமாணிக்கமாயிருந்தான்.

கண்டி அரசன் 2வது ஜெய வீர அவனது குடும்பத்தினர் அதிகாரிகள் சிலரும் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டு இறந்ததையடுத்து அவனது மருமகனான ஜெமசிங்க பண்டார கண்டி அரசனானான். கோவைக்கு சென்ற ஜெமசிங்க பண்டார அங்கு திருமுழுக்குப் பெற்று டொன் பிலிப்பு என்ற பெயரை பெற்றுக் கொண்டான்.

கண்டி அரசை கைப்பற்றிய ராஜசிங்க கிறிஸ்தவர்களை மிகவும் துன்புறுத்தினான். வேதனை பொறுக்க முடியாத கண்டி மக்கள் கலகம் செய்து பழைய அரச பரம்பரையைச் சேர்ந்த டொன் பிலிப்புவையே கண்டி அரசனாக்க விரும்பினர்.

ஆகவே டொன் பிலிப்பு 1584ல் போர்த்துக்கேய படையோடு கண்டி அரசை தாக்கி அரசைக் கைப்பற்றி அதனைத் தொடர்ந்து டொன் பிலிப்பு கண்டி அரசனாகவும் அவனுடைய மகன் டொன் யுவான் பட்டத்து இளவரசனாகவும் பிரகடனம் செய்யப்பட்டனர்.

மகிழ்ச்சியடைந்த மறை போதகர்கள் தம் போதகப் பணியை ஆர்வத்துடன் தொடர்ந்து செய்து அரச குடும்பத்தினரையும் பல

பிரபுக்களையும் பொதுமக்களையையும் மனந்திருப்பினார்கள்.இவ்வாறு கண்டி அரசில் திருச்சபை விரைவாக வளர்ந்தது. **டொன் பிலிப்புவின்** மரணத்தையடுத்து **டொன் யுவான்** கண்டி அரசனானான். படைத் தளபதியாக இருந்த **கோணப்பு** **பண்டார** பௌத்த மக்களின் **ஆதரவுடன்** அதற்கு எதிராக கலகம் செய்து **விமலதர்மசூரிய** என்ற பெயருடன் தன்னையே கண்டி அரசனாக்கிக் கொண்டான்.

டொன் பிலிப்பு பின்பு ஒரு குருவாக வந்து இஸ்பானியாவில் பணி செய்து 1642ல் இறந்தான். விமலதர்ம சூரியாவோ புத்த மதத்திற்கு ஆதரவளித்து கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான். ஆதலால் மறைபரப்பாளர்களும் தம் பணியை நிறுத்திக்கொண்டு கண்டியி லிருந்து வெளியேறினார்கள்.

1594ம் ஆண்டு போர்த்துக்கேயரால் விமலதர்மசூரியா தோற்கடிக்கப்பட்டு - **டோனா கத்தரினா** 1594ம் **ஆண்டு** ஆடி மாதம் 6ம் நாள் கண்டி அரசியாக பிரகடணம் செய்யப்பட்டாள். மீண்டும் டோனா கத்தரினாவை விமலதர்மசூரியா தனது மனைவியாக்கி தனது அரச உரிமையை உறுதிப்படுத்தினான்.

கைது செய்யப்பட்ட போர்த்துக்கேயரையும் குருக்களையும் கொடுமைப்படுத்திக் கொன்றான். கிறிஸ்தவர்களை மிகவும் துன்புறுத் தினான்.இந்நிலை போர்த்துக்கேயரின் ஆட்சி இலங்கையில் முடியும் வரை நீடித்தது. இதன் காரணமாக கண்டி அரசில் கிறிஸ்தவம் ஒரு போதும் உறுதியாக நிலை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 2:8 யாழ்ப்பாண அரசில் மறைபரப்புப் பணி

கோட்டை அரசன் புவனேகபாகுவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந்த பிரான்சிஸ்கன் குருக்கள் வட இலங்கையில் இருந்த யாழ்ப்பாண அரசில் மறைமுகமாய் பணியாற் றினார்கள்..அக்காலத்தில் யாழ்பாண அரசை சங்கிலி அரசன் செகராச சேகரன் என்ற பெயரில் நல்லூரிலிருந்து ஆண்டு வந்தான்.

பிரான்சிஸ்கன் சபைக்குருக்கள் போர்த்துக்கேய வியாபாரிகளோடு வியாபாரிகளாய் மாறுவேடத்தில் யாழ்ப்பாண அரசில் நற்செய்தியைப் போதித்து பலரை மனந்திருப்பினர்.

தனது அரசில் கிறிஸ்தவம் போதிக்கப்படுவதை சற்றேனும் விரும்பாத அரசன் அதை முழுமையாக எதிர்த்தான.ஏனெனில் கிறிஸ்தவத்தை தனது பிரசைகள் தழுவுவது அந்நிய போர்த்துக்கேய அரசை ஆதரிப்பதற்கு ஒத்ததாகும் எனக் கருதினான்.

அந்திரே டி சூசா என்ற போர்த்துக்கேய வியாபாரி சங்கிலியனின் அரச மாளிகையை தரிசித்து வணக்கம் செய்ததுமல்லாமல் அரசனின் மூத்த மகனுக்கு இரகசியமாக நற்செய்தியைப் போதித்து அவனை மனந்திருப்பினார் .இதனை அறிந்த அரசன் தன் மூத்த மகனென்றும் பாராமல் அவனைக் கொடூரமாய் கொலை செய்து சடலத்தை நாட்டு வழக்கப்படி பிரசித்தமாகச் சுட்டெரித்தான்.

இறைவன் அவ்விடத்தில் பல அற்புதங்களைச் செய்து இளவரசனை மகிமைப்படுத்தினார்.பூமி நடுக்கம் ஏற்பட்டு வானத்தில் ஒரு பிரகாசமான பெரிய சிலுவை அடையாளம் தோன்றியது. சடலம் எரிக்கப்பட்ட இடத்தில் ஒரு பெரிய சிலுவை அடையாள வடிவில் பூமி பிளந்தது.இதனைக் கண்டு இருநூற்றுக்கும் மேற்பட்டோர் மனந்திரும்பி கிறிஸ்தவத்தை தழுவினார்கள். அவர்களுள் சங்கிலி அரசனின்-இருமகன்களும் அவனுடைய சகோதரியின் மகனொருவனும் சில அரச அதிகாரிகளும் அடங்குவர்.

யாழ்ப்பாண அரசில் முதல் மறைசாட்சி ஒரு அரச குமாரனென்பது குறிப்பிடத்தக்கது.

## 2.9 மன்னார் மறைசாட்சிகள்

கி.பி.1542ல் இயேசு சபையைச் சேர்ந்த புனித பிரான்சிஸ்கு சவேரியார் திருந்தந்தையின் பிரதிநிதியாக தென் இந்திய கடலோரப்பகுதிகளில் வாழ்ந்த மக்களை கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதிப்படுத்தி தமது போதனையாலும் அற்புதங்களாலும் பல்லாயிரக்கணக்கானோரை மனந்திருப்பினார். இதனை இறிந்த மன்னார் மக்கள் தங்களுக்கும் வந்து நற்செய்தியைப் போதிக்குமாறு புனித பிரான்சிஸ்கு சவேரியாருக்கு தூது அனுப்பினர்.அவ் அழைப்பை ஏற்ற பிரான்சிஸ்கு சவேரியார் தாமாக அங்கு போக முடியாமையால் ஒரு மேற்றிராசன குருவான யுவான் டி லிஸானோ அடிகளாரை மன்னாருக்கு அனுப்பி வைத்தார். இதன்படி மன்னாருக்குச் சென்ற அவர் அங்குள்ள மக்களுக்கு நற்செய்தியை போதித்து ஏறக்குறைய எழுநூறு பேரை மனந்திருப்பினார். அவர் களின் தலைவராகிய **இளஞ்சிங்கன்** என்பவரும் அதில் அடங்குவார்.

அக்காலத்தில் மன்னார் யாழ்ப்பாண அரசின் ஒருபகுதியாகவே இருந்தது. மன்னார் மக்கள் கிறிஸ்தவத்தை தழுவியதைக்கேட்ட-செய்தியைக் கேள்வியுற்ற யாழ்ப்பாண மன்னன் சங்கிலியன் கோபமும் பயமும் அடைந்தான். **சங்கிலியன் ஒரு மனிதப்பண்பற்ற கொடியவன். சர்வாதிகாரப் போக்குடையவன்.** முடிக்குரிய தன் மூத்த சகோதரனைச் சிறையிலடைத்துவிட்டு நாட்டு பிரசைகளை

அடிமைப்படுத்தி தன்படை பலத்தினால் கொடுங்கோல் ஆட்சி செய்து வந்தான். 5000 படைவீரர்களை திரட்டி அவர்களுக்கு தானே தலைமைதாங்கி மன்னாருக்குச் சென்று கிறிஸ்தவர்களை அச்சுறுத்தினான். கிறிஸ்தவத்தை கைவிட்டு மீண்டும் இந்துக்களாக வரும்படியாக கட்டளையிட்டான்.ஆனால் மன்னார் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக இருந்தனர்.எனவே சங்கிலியன் கட்டளைப்படி **யுவான் டி லிஸானோ அடிகளாருடன் ஏறக்குறைய 700பேர் 1544ம் ஆண்டு மார்கழி மாதம் தோட்டவெளி என்னும் இடத்தில் மிகக்கொடூரமாக கொல்லப்பட்டனர்.** இவர்களையே நாம் **மன்னார் மறைசாட்சிகள்** என அழைக்கின்றோம்.அவர்கள் சிறு பிள்ளைகளைத் தானும் விட்டு வைக்கவில்லை.எஞ்சியவர்கள் ஓடி ஒழித்துக்கொண்டனர். கிறிஸ்தவர்களின் இரத்தம் ஆறாக ஓடியது. மறைசாட்சிகள் பூமியாக மாறிய மன்னார் தீவு **"புனித குருசுத்தீவு"** என அழைக்கப்படுகின்றது.

## 2.10 மறைசாட்சி மரணம் ஏற்படுத்திய விளைவு – கத்தோலிக்க விசுவாச வளர்ச்சிக்கு வித்திட்டமை.

சங்கிலியன் இந் நிகழ்வுடன் கிறிஸ்தவம் முற்றாக அழிந்துவிடும் என எண்ணினான்.ஆனால் மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாக மாறியது.குறிப்பாக இந் நிகழ்வினை அறிந்து **கொழும்பில் 70.000 பேரும் அத்துடன் அரசன் தர்மபாலாவும் கிறிஸ்தவத்தை தழுவிக் கொண்டான்.** இவ்வாறு மன்னார் கிறிஸ்தவர்களின் மறைசாட்சி மரணத்தை கேள்வியுற்ற புனித பிரான்சிஸ்கு சவேரியார் 1545ம் ஆண்டு மன்னாருக்கு வருகை தந்து மறைசாட்சிகளின் இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்பட்ட பூமியை முத்தி செய்தார்.அக் காலத்தில் மன்னாரில் ஒரு பெரிய கொள்ளை நோய் பரவி பலர் இறந்து கொண்டிருந்தார்கள்.அவ் வேளை புனித சவேரியார் அக் கொள்ளை நோயை தம் செபத்தினால் நிறுத்தி னார்.இதைக் கண்ட பல நூற்றுக்கணக்காண மக்கள் மனந்திரும்பிக் கிறிஸ்தவத்தைத் தழுவினர். புதுக்கிறிஸ்தவர்களைச் சில பிரான்சி ஸ்கன் சபைக் குருக்களின் பராமரிப்பில் விட்டு விட்டு புனித சவேரியார் இந்தியாவிற்கு திரும்பினார். வழியில் அவர் **நெடுந்தீவில்** தங்கியிருந்த போது **இறந்த ஒரு இளைஞனை உயிர்ப்பித்ததாக** கூறப்படுகின்றது.

பிற்பட்ட காலத்தில் போர்த்துக்கேயர் சங்கிலியனோடு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டதன் பயனாக சங்கிலியன் போர்த்துக்கேய மன்னனின் ஆதிக்கத்தை ஏற்று கிறிஸ்தவர்களை இனித் துன்புறுத்துவதில்லையென வாக்களித்தான்.இதன் வழியாக கிறிஸ்தவர்கள் சற்று சுதந்திரம் அடைந்தார்கள்.இதைப் பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் நன்றாக பயன்படுத்தி யாழ்ப்பாண

அரசில் மறைபரப்புப் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர். இதனால் யாழ்பாண அரசில் கிறிஸ்தவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தது.மூன்று வருடங்களுக்குப் பின்னர் 1548ல் புனித சவேரியார் யாழ்ப்பாணத்திற்குச் சென்று சங்கிலி அரசனைச் சந்தித்து அவன் கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதை எதிர்த்து பேசி யாழ்ப்பாணத்தில் நற்செய்தியை போதித்ததாகவும் அரசன் சங்கிலியன் போர்த்துக்கேயர் தன்னுடன் கூட்டுறவு கொண்டால் தான் கிறிஸ்தவத்தை தழுவ வாக்களித்ததாகவும் சொல்லப்படுகின்றது. **மேலும் புனித சவேரியார் நற்செய்தியை ஏற்க மறுத்த மக்கள் வாழ்ந்த காரைதீவைச் சபித்ததாகவும் அவர் பருத்தித்துறையில் ஒரு புளிய மரத்தின் கீழ் போதித்ததாகவும் அறியப்படுகின்றது.**

கொச்சின் ஆயரும் மற்றும் பிரான்சிஸ்கன் சபைக் குருக்களும் தமது மறைபரப்புப் பணியை தொடர்ந்து செய்து கிட்டத்தட்ட 4000 பேரை மனந்திருப்பினர்.மீண்டும் சங்கிலி அரசன் எதிர்பாராத விதத்தில் திடீரென போர்த்துக்கேயருக்கு எதிராக நாடெங்கும் ஒரே நேரத்தில் கலகத்தை உண்டு பண்ணவே படை வீரரும் மறைபரப்பாளரும் விரைவாக நாட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தது.அகப்பட்டுக்கொண்ட சில குருக்களும் சில படை வீரர்களும் பல புதுக்கிறிஸ்தவர்களும் கொல்லப்பட்டனர். யாழ்ப் பாணத்திலிருந்து புறப்பட்ட போர்த்துக்கேயபடைகள் மன்னாரைக் கைப்பற்றி அங்கு கோட்டையொன்றைக் கட்டி அதைக் கிறிஸ்தவர் களுக்கு பாதுகாப்பான இடமாக அமைத்தனர்.அங்கு இவ்வளவு காலமும் பணி புரிந்த பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் இயேசு சபைக் குருக்களிடம் பணியை ஒப்படைத்துவிட்டு மாதோட்டப் பக்கமாய் சென்று அங்கு நற்செய்தியை போதித்தனர்.1560ம் ஆண்டு தொடக்கம் போர்த்துக்கேயர் இலங்கையை விட்டுச் செல்லும் மட்டும் மன்னாரே அவர்களின் கடலோரத் தலைமையகமாக இருந்தது.அங்கு இயேசு சபைக்குருக்களே பணி புரிந்தனர்.

யாழ்பாண மக்கள் அரசன் சங்கிலியனின் கொடுங் கோலாட்சியைப் பொறுக்க முடியாமல் கலகம் செய்து 1561ல் அவனை பதவி நீக்கம் செய்து அவனின் மகனான புவிராசசிங்கனை தம் அரசனாக்கினர். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்து 1591ல் அவனைக் கொன்றனர்.அவனுடைய இடத்திற்கு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க **எதிர்** மன **சிங்கன்** என்ற இளவரசனை பரராசசேகரன் என்ற பெயருடன் அரசனாக்கினர். அவன் போர்த்துக்கேயருக்கு பிரமாணிக்கமாய் இருந்தான்.அவனுடைய ஆட்சிக் காலத்தில் மறைபரப்பாளர்கள் எவ்வித தடையுமின்றி

நற்செய்தியைப் போதித்து நூற்றுக்கணக்கானோரை மனந்திருப்பினர். பல இடங்களில் தேவாலயங்களும் கட்டப்பட்டன. குறிப்பாக **நல்லூரில் வெற்றி மாதா ஆலயம் கட்டப்பட்டது இவனது காலத்தில்** என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1621ல் யாழ்ப்பாண அரசு முழுமையாக போர்த்துக்கேயரின் கட்டுப்பாட்டுக்குள் கொணரப்பட்டது. அதைத் தொடர்ந்து போர்த்துக்கேய தளபதி **ஒலிவேயிராவின்** ஆதரவுடன் மறைப்போதகப் பணி தீவிரமாக நடைபெற்றது .இதனால் கிறிஸ்தவம் வளர்ந்தது. யாழ்ப்பாண அரசில் மறை பணிக்குப் பொறுப்பாயிருந்த பிரான்சிஸ்கன் குருக்களுக்கு இயேசு சபைக் குருக்களும் உதவிசெய்து இணைந்து பணியாற்றினர். குறிப்பாக பருத்தித்துறையிலிருந்து மட்டக்களப்பு வரையிலான கடலோரப்பகுதிகளில பிரான்சிஸ்கன் சபையினரும் உள் பகுதிகளில் இயேசுசபையினரும் பணிபுரிந்தனர்.இதனால் என்றுமில்லாதவாறு பல்லாயிரக்கணக்கான மக்கள் நற்செய்தியை ஏற்று கிறிஸ்தவத்தைத் தழுவினர். 1626ல் 41260 **கிறிஸ்தவர்கள்** யாழ்ப்பாணத்தில் இருந்ததாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. போர்த்துக்கேய ஆட்சியின் முடிவில் யாழ்ப்பாண மக்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவத்தை தழுவியிருந்தனர்.இறந்த அரசன் பரராசசேகரரின் அரசகுமாரனும் மற்றும் இரு அரச குமாரிகளும் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வெகு ஆடம்பரமாகத் திருமுழுக்குப் பெற்றனர்.இளவரசனுக்கு **டொம்கொன்ஸ்தாந்தினோ வென்றும்** இளவரசிகளுக்கு **டோனா மரியா, டோனா** இசபெல் என்றும் பெயரிடப்பட்டது.பின்பு அவர்கள் கோவைச் சென்று இளவரசன் ஒரு பிரான்சிஸ்கன் சபை குருவாகவும் இளவரசிகள் அகுஸ்தீனார் சபைக் கன்னியர்களாகவும் வந்தனர். **இவர்களே இலங்கையின் முதல் அருட் கன்னியர்களென்பது** குறிப்பிடத்தக்கது.

## 2.11 மறைபணியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

இலங்கைத் திருச்சபை வரலாற்றில் போர்த்துக்கேயர் காலத்தில் மறைபணிபுரிந்த மறைபணியாளர்கள் தமது மறைபணியை வெற்றி நிலைக்கு இட்டுச் செல்லும் வகையில் கையாண்ட போதனா முறைகள் மற்றும் அதன் பொருட்டு மேற்கொண்ட பல்வேறு மறைபணியின் தன்மைகளை அறிந்திருப்பது நமக்கு நன்மை பயக்கும். முன்பு குறிப்பிட்டது போன்று போர்த்துக்கேயரின் மறைபரப்புப் பணி **"பத்ரோஆதோ"** என்று அழைக்கப்படும்.(அரச பராமரிப்பு) ஒரு உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இடம்பெற்றது. 1493ம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் அலெக்சாந்தர் கீழைத்தேச

நாடுகளில் மறைபரப்பும் பொறுப்பை போர்த்துக்கேய அரசிடம் ஒப்படைத்திருந்தார்.அதன் படி திருவருட்சாதனங்கள் தவிர்ந்த அப்போஸ்தலிக்க திருச்சபையின் அனைத்து - விடயங்களிலும் போர்த்துக்கேய அரசனுக்குப் பரவலான அதிகாரம் வழங்கப்பட் டிருந்தது. அதாவது கீழைத்தேசத்தில் அவர் கண்டுபிடித்து கைப் பற்றும் நாடுகளில் கிறிஸ்தவத்தைப் பரப்புவதும் அங்கு திருச் சபையை ஸ்தாபிப்பதும் மாவட்டங்கள், பங்குகள், மடங்கள் பாடசா லைகளைத் தாபித்து நிர்வகிப்பதும், அவற்றிற்கு தேவையான மறைபரப்பாளர்களை சேர்த்துக்கொள்வதும், அவர்களைப் பராமரிப் பதும் முதலான அதிகாரங்கள் போர்த்துக்கேய அரசனுக்கு வழங்கப் பட்டிருந்தது.

முதலில் பிரான்சிஸ்கன் சபையினரே இலங்கையில் மறைபரப்புப்பணியை ஆரம்பித்தாலும் பின் அவர்களிடம் தனியே அப் பணியையைச் செய்வதற்கு வேண்டிய மனிதவளம் இல்லா ததால் இயேசு சபை, சாமிநாதர் சபை, அகுஸ்தீனார் சபைக் குருக்களையும் வரவழைத்து அவர்களுக்கிடையில் மறைபணிக்கான தளங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன.இவ்வாறு கோட்டை அரசு நான்காகப் பிரித்தளிக்கப்படுகின்றது. யாழ்ப்பாண அரசிலும் பிரான்சிஸ்கன் சபையினருக்கு கடலோரப்பகுதிகளும் இயேசுசபைக் குருக்களுக்கு உட்பகுதிகளும் ஒப்படைக்கப்பட்டது.மன்னாரில் இயேசு சபைக் குருக்கள் மன்னார் தீவுப்பகுதிகளில் பணி புரிய பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் மாதோட்டத்திலும் தீவுப் பகுதிக ளிலும் பணி புரிந்தனர்.மேலும் இப்பகுதிகள் பல மறைப் பங்குக ளாகவும் பிரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு மறையானது இவ்வுலக வாழ்வு, மறுவுலகவாழ்வு பற்றிய விசுவாச சத்தியங்களை கோட்பாடுகளை அத்திவாரமாக கொண்டுள்ளது.அந்த வகையில் மறைபரப்புப் பணியில் மறைபோதனையும் மறைஅறிவு ஊட்டுதலும் முக்கிய இடத்தை பெறுகின்றன. முதலில் எல்லாவிடமும் சென்று பிறரன்போடும் ஆன்மீக வாஞ்சையோடும் நற்செய்தியை போதித்தனர்.

இவ்வாறாக ஆண்டவரின் வார்த்தையை கேட்டவர்கள் அதன்பால் ஈர்க்கப்பட்டு படிப்படியாக மனந்திரும்பி விசுவாசம் கொண்டு கிறிஸ்தவத்தை தழுவினார்கள். மறைபரப்பாளர்களின் முதல் நோக்கம் மக்கள் மத்தியில் அதிகாரமும் செல்வாக்கும் கொண்டிருந்த அரசர்களையும் தலைவர்களையும் மற்றும் முக்கியமானவர்களையும் கிறிஸ்தவத்திற்கு மனந்திருப்புவதிலேயே இருந்தது. ஏனெனில் மக்கள் சமூகங்களின் தலைவர்கள் மனந்திரும்பினால் அவர்களுக்கு கீழ்ப்பட்டவர்களும் அவர்களைப் பின் தொடர்ந்து கிறிஸ்தவத்தை தழுவுவார்கள் என்பது அவர்களது நம்பிக்கை.அதற்கமைய அவர்கள்

கோட்டை அரசன் புவனேகபாகு கண்டி அரசர்களான ஜெயவீர டொம்பிலிப்பு யாழ்ப்பாண அரசன் எதிர்மனசிங்கம் போன்றோரை மனந்திருப்ப முயன்றனர். எனினும் மறையைப் பரப்ப அவர்கள் அடிமட்டத்தில் எடுத்த முயற்ச்சிகள் பெரும் வெற்றியை அளித்தன. இவ்வாறாக மேற்கு வடக்கு கரையோரப் பகுதிகளில் பரவர்களும் கரையார்களும் கடையர்களும் பெருந்திரளாக கிறிஸ்தவத்தை தழுவினர்.

மேலும் போர்த்துக்கேயர் பொதுவாக தனிப்பட்ட ஒருவரை மனந் திருப்புவதிலும் பார்க்க ஒரு குழுவினரை ஒரு கூட்டத்தினரை மனந் திருப்பவே முயன்றனர்.ஏனெனில் ஒருவரை தனிய மனந்திருப்பினால் அன்றைய சூழலில் அவர் தனது இனத்தவரால் அயலவரால் வெறுத்து ஒதுக்கப்பட்டு ஆதரவு ஊக்குவிப்பு எதுவுமின்றி கைவிடக்கூடிய சூழல் அதிகமாக இருந்தது.எனவேதான் வழமையாக குழுக்களாகவும் கூட்டமாகவுமே திருமுழுக்கு அளிக்கப்பட்டது. திருமுழுக்கு அளிக்கும் சடங்குகள் மிகச்சிறப்பாக சோடினை அலங் காரங்களுடன் பாடல்கள் இசைகள் புத்தாடைகளுடனான பெருவிழாக்களாக பல குருக்களும் அரச அதிசாரிகளும் பிரசன்னமாயிருக்க வெகு ஆடம்பரமாக இடம்பெற்றன. இச் செயற்பாடுகள் புதுக் கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலாகவும் அவர்களின் மதப்பற்றிலான ஆர்வத்தையும் வளர்த்தது மட்டுமன்றி பிறமதத்தவர்களையும் கவரவும் செய்தன.

திருமுழுக்கிற்கு முன்னரும் பின்னரும் மறைக்கல்வி ஊட்டுவதிலும் மிகவும் கவனம் செலுத்தப்பட்டது.திருமுழுக்கு பெறுமுன் இரண்டு மூன்று மாதங்களுக்கு வெவ்வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டு மறைக்கல்வி வழங்கப்பட்டது.குறிப்பாக கிறிஸ்தவம் போதிக்கப்பட்ட தயவும் இரக்கமும் நிறைந்த ஆட்தன்மையுடைய கடவுள் சகோதர அன்பு சகோதரத்துவம் சமத்துவம் பரஸ்பர மன்னிப்பு பாவத்திலிருந்து விடுதலை மரணமும் மறுவுலக வாழ்வும் நிலையான வாழ்வு போன்ற உண்மைகள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன.மதமாற்றத்திற்கு அவர்களை இட்டுச் சென்றன.அத்துடன் மறைபரப்பாளர்கள் தத்துவப் போதகர் என அழைக்கப்பட்ட றொபேட்டி நொபிலி அடிகளாரைப் பின்பற்றி சில பௌத்த இந்து பழக்கவழக்கங்களை ஏற்று அல்லது தம் வழிபாடுகளை அவர்களின் சடங்குகளைத் தழுவி அமைத்து புனிதர் வழிபாடு திருச்சூருபவணக்கம் ஆசிநீர், தூபம், தீபங்கள், சுற்றுப் பிரகாரங்கள், மேள வாத்தியங்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் வழியாக கிறிஸ்தவத்தை மக்கள் கவரக்கூடிய முறையில் போதித் தனர். இவ்வாறாக கிறிஸ்தவத்தை தழுவியவர்களுக்கு சில சலுகைகள் விதிவிலக்குகள் கிடைக்கப்பெற்றன.

## 2.12 போர்த்துக்கேயர் காலத்து கல்விச் செயற்பாடுகள்.

மறைபணியாளர்களின் மறைபரப்புப் பணி ஆலயம் ஆலய வழிபாடுகளுடன் நின்று விடாது கல்விச் சேவை சுகாதார சமூக பிறர் நலச் சேவைகள் என்பவற்றிலும் அவர்கள் பெரும் பங்காற்றினார்.மறை பங்குகளில் பணி புரிந்த குருக்கள் புதுக் கிறிஸ்தவர்களுக்கு மறைக்கல்வி வழங்குவதை தமது முக்கிய கடமைகளுள் ஒன்றாக கருதினர். ஒவ்வொரு பங்கிலும் ஆரம்பப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு காலையிலும் மாலையிலும் ஆண் பெண் பிள்ளைகளுக்கு சிங்களத்தில் அல்லது தமிழில் மறைக்கல்வி அளிக்கப்பட்டது. பாடப்புத்தகங்கள் இல்லாததால் மனப் பாடம் செய்தும் வினா-விடை முறையிலும் போதிக்கப்பட்டது.அத்துடன் செபங்கள், பாடல்கள், வாசிப்பு, எழுதுதல், எண்ணுதல் போன்ற பாடங்களும் சுதேச மொழியில் கற்பிக்கப்பட்டன.

ஆரம்ப பாடசாலைகளை விட இரண்டு கொழும்பிலும் இரண்டு யாழ்ப்பாணத்திலுமாக நான்கு கல்லூரிகளும் நிறுவப்பட்டன.இங்கு உயர்தர மறைக்கல்வி, நற்பண்புகள், வாசிப்பு, எழுதுதல் மற்றும் போர்த்துக்கேயம், இலத்தீன், கணிதம், பாட்டு, சங்கீதம் போன்றனவும் கற்பிக்கப்பட்டன. பிரான்சிஸ்கன் சபை, இயேசு சபை ஆகிய இரு சபைகளைச் சேர்ந்த குருக்கள் கல்வித்துறையில் மிக ஆர்வத்துடன் உழைத்தனர். சில கல்லூரியில் மாணவர்கள் தங்கியிருந்து கற்பதற்கு விடுதி வசதிகளும் இருந்தன.இப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பாடங்கள் அனைத்தும் இலவசமாகவே கற்பிக்கப் பட்டன. பொதுவாக கிறிஸ்தவ மாணவர்களும் சில இடங்களில் பிற சமயத்தவர்களும் பயின்றனர். பாடசாலைகள் அனைத்தும் அரச ஆதரவுடனேயே நடாத்தப்பட்டன.சிங்கள தமிழ் இலக்கணப் புத்தகங்கள் மற்றும் நாவல்கள் நாடகங்கள் மத நூல்கள் சுதேச மொழியில்எழுதப்பட்டன. இப் பாடசாலைகளில் மாணவருக்கு படிப்பிப் தற்கு வேண்டிய ஆசிரியர்களை பயிற்றுவிக்க பிரான்சிஸ்கன் சபை யினர் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையையும் ஆரம் பித்தனர். பிறப்பு திருமுழுக்கு திருமணம் போன்றவற்றைப்பற்றிய விவரங் களைப் பதிவு செய்து பிற்கால தேவைக்கு பாதுகாக்கும் பொருட்டு தோம்பு பதிவு முறையை ஆரம்பித்துச் செயற்படுத்தினார்.இவர்கள் காலத்திலேயே திருமணத்தின் புனித தன்மைகளான ஒருமை கட்டவிழாமை போன்ற பண்புகள் மக்களிடையே புகுத்தப்பட்டன.

மேலும் மறைபரப்பாளர்கள் கிராமப் புற பங்குகளில் மக்களோடு வாழ்ந்து அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்தனர் சுகாதாரம் சமூக பிறர் நல சேவை போன்ற துறைகளிலும் ஈடுபட்டனர்.வைத்தியசாலைகளை கொழும்பு மன்னார் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் ஆரம்பித்தனர். போர்த்துக்கேய படைவீரர் களுக்காக அவை அமைக்கப்பட்டாலும் பொது மக்களும் அதன் மூலம் பல நன்மைகளை பெற்றுக் கொண்டனர்.துறவற சபையினரின் நிர்வாகத்தின் மேற்பார்வையின் கீழ் அவை நடத்தப்பட்டன.இவ்வாறு போர்த்துக்கேயர் காலத்தில் மேற்கத்தேய-வைத்தியம் இலங்கையில் அறிமுகமாகியது. குறிப்பாக "மிசெறிக்கோடியா" என்ற பிறர் நல சேவைத்தாபனம் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஆன்மீக-சரீர இரக்கச் செயல்களான கைதிகளை விடுவித்தல் அவர்களைச் சந்தித்தல் நோயாளர்களை பராமரித்தல், உடுபுடவை அற்றவர்களிற்கு உடு புடவை வழங்குதல் பசியாக இருப்பவர்களிற்கு உணவளித்தல். இல்லிடமற்றவருக்கு தங்க இடமளித்தல். இறந்தவர்களை அடக்கம் செய்தல் போன்ற பல பணிகளினால் மக்களிற்கு உதவிசெய்தனர்.அத்துடன் அனாதை களைப் பராமரிக்கவென அனாதை இல்லங்களும் மடங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இதன் கிளைகள் காலி, மன்னார் யாழப்பாணம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன.

இவ்வாறாக போர்த்துக்கேயர் காலத்தில் நான்கு சபையினர் சமூக சமய கல்வித்துறைகளுக்கு பணியாற்றியமை குறிப்பிடத் தக்கதாகும்.

- **பிரான்சிஸ்கன் சபையினர்.**
- **இயேசு சபையினர்.**
- **சாமி நாதர் சபையினர்(டோமினிக்கன் சபை)**
- **அகுஸ்தீனார் சபை.**

இச் சபைகள் அளப்பரிய பணியை இலங்கையில் ஆற்றினாலும் அதன் பிராந்திய தலைமையகங்களும் குருமடங்களும் இந்தியாவிலே இருந்தன. இச்சபைகளில் சுதேசிகள் எவரும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்துறவற சபைகளும் சுதேசிகளை பயிற்றுவிக்க தவறினர்.மேலும். சில அரச –மத அதிகார செல்வாக்கினால் கிறிஸ்வவர்கள் பல துன்பங்களை அனுபவித்தனர்.போர்த்துக்கேயமும்- கத்தோலிக்கமும் ஒன்று என்ற

**மேலாதிக்க போக்கினால்** போர்த்துக்கேயரை வெறுத்தவர்கள் கத்தோலிக்கரையும் வெறுத்தார்கள்.அத்துடன் இலங்கையின் மத இனமரபுகள், பாரம்பரிய பழக்க வழக்கங்கள் போன்றவை மதிக்கப்படாமல் பெரிதும் பாதிப்படைந்தன.- இவை போர்த்துக்கேய மறைபணியாளர்கள் மட்டில் நிலவிய குறைபாடுகள் என்றே கருதலாம்.

## 2.13: போர்த்துக்கேய கால கலாபனை.

கலாபனை என்பது **கத்தோலிக்கருக்கும் அவர்களது விசுவாச உணர்வுகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடு** எனலாம்.அந்த வகையில் போர்த்துக்கேயர் காலத்தில் இடம் பெற்ற மறைபரப்புப் பணி பல கலகங்கள் குழப்பங்கள் மத்தியிலேயே மேற்கொள்ளப்பட்டன.எடுத்துக்காட்டாக, கோட்டை அரசில் அரச பிரதிநிதி மற்றும் விதிய பண்டாரவினால் கத்தோலிக்கருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலகத்தையும், யாழ்ப்பாண அரசன் சங்கிலி மன்னன் மன்னாரில் அரங்கேற்றிய இரத்தக் களறியையும் குறிப்பிடலாம்.

கோட்டை அரசன் புவனேகபாகுவின் திடீர் மரணத்தையடுத்து அவனது மரண விசாரணையை மேற்கொள்ள கோவையிலிருந்து அரச பிரதிநிதி **அப்பொன்ஸோ டி நொறோனா** 3000 படைவீரருடன் 1551ம் ஆண்டு ஐப்பசி மாதம் கொழும்புக்கு வந்தான். **(இந்தப் படையே இலங்கைக்கு வந்த மிகப் பெரிய படையாகும்.)** வருகை தந்த அரச பிரதிநிதி புவனேகபாகுவின் மரண விசாரணைகளை மேற்கொள்ளாது கோட்டையின் புதிய மன்னன் தர்ம பாலா திருமுழுக்கு பெறும்படி வலியுறுத்தியதோடு கோட்டை அரசின் பொக்கிசங்களையும் (பொன் பணம் நகை இரத்தினக்கற்கள் வெள்ளி பொன்னாலான விக்கிரகங் கள் மணிகள் நகைகள்) சூறையாடியும் சிலரை சித்திர வதையும் செய்தான்.இதனால் கோபம் கொண்ட விதியபண்டார கோட்டையில் இருந்த போர்த்துக்கேயரை பழி வாங்கத் தொடங்கினான். அரண் மனையில் இருந்த போர்த்துக்கேயர்,மற்றும் அவர்களுடைய உதவியாளர்கள் மற்றும் சிலர் கொல்லப்பட்டனர். குடியிருப்புக்கள் ஆலயம் தீக்கிரையாக்கப்பட்டன.அயலிலிருந்த பிரான்சிஸ்கன் சபை மடங்கள், கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. கிறிஸ்தவ

ஆலயங்கள் அழிக்கப்பட்டன. கிறிஸ்தவர்களின் நிலபுலன்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் விதியபண்டார கிறிஸ்தவர்களை துன்புறுத்தி தானே அரசனாக முயற்சித்தான்.இறுதியில் அவன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.

மனைவியினுடைய தந்திரத்தால் சிறையிலிருந்து தப்பிய விதிய பண்டார காலிக்குச் செல்லும் வழியில் சந்தித்த போர்த்துக் கேயரைக் கொலை செய்து கிறிஸ்தவ கட்டிடங்களையெல்லாம் அழித்து கிறிஸ்தவர்களை துன்புறுத்தினான். மாயாதுன்னவின் உதவியுடன் கொழும்பிலிருந்து காலி வரையிலான பாணந்துறை, களுத்துறை போன்ற கிராமங்களை எல்லாம் அவன் அழித்ததாக கருதப்படுகின்றது. பின் அவன் யாழ்ப்பாணம் சென்ற போது அங்கு கொலை செய்யப்பட்டான்.

விதிய பண்டாரவினால் கோட்டை அரசில் ஏற்படுத்தப்பட்ட கலகத்தை விட யாழ்ப்பாண அரசில் சங்கிலி அரசனால் மேற்கொள்ளப்பட்ட கலகம் அகோரமானதாக அமைந்திருந்தது என்றே கூறலாம். தங்கள் தொழிலின் நிமித்தம் தென்இந்திய கடலோரப்பகுதிகளில் வாழ்ந்த மக்களில் சிலர் மன்னாரில் வந்து குடியேறியிருந்தனர்.இவர்களின் வருகையினால் கடலோரப் பகுதிகளில் வாழ்ந்த பலர் மனந்திரும்பி கத்தோலிக்கத்தை தழுவினர். இதனை அறிந்த மன்னார் வாழ் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிரான்சிஸ்கு சவேரியார் என்ற இந்தியக் குருவின் போதனையால் **(ஒரு மேற்றிராசனக் குருவான யுவான்டி லிஸானோ அடிகளார் என்றும் சிலர் கருதுவர்.)** குறுகிய காலத்தில் 700 பேரளவில் தம் தலைவர் இளஞ்சிங்கத்துடன் மனந்திரும்பி கத்தோலிக்கரானார்கள்.

யாழ்ப்பாண அரசின் ஒரு பகுதியாக இருந்த மன்னாரில் வாழ்ந்த மக்கள் கத்தோலிக்கத்தை தழுவிய செய்தியை கேள்விப்பட்ட யாழ்ப்பாண அரசன் சங்கிலியன் மிகக் கோபாவேசமும் பயமும் கொண்டான்.போர்த்துக்கேயரின் மதமான கத்தோலிக்க மதத்தை தழுவுவது தன்னை விடுத்து போர்த்துக்கேயரின் அரசை ஆதரிப்பதாக அவனுக்கு தென்பட்டது.ஆதலால் சங்கிலி அரசன் 5000 போர்வீரர்களைத் திரட்டிக் கொண்டு தனது தலைமையில் மன்னாருக்குச் சென்றான். புதிதாக கத்தோலிக்கத்தை தழுவியவர்கள் அதை மறுதலித்து மீண்டும் இந்து மதத்திற்குத் திரும்ப வேண்டும் என்று கூறி,

அன்றேல் அவர்கள் மிகக் கடுமையாகத் தண்டிக் கப்படுவார்கள் என்றும் எச்சரித்தான். கத்தோலிக்கரோ தமது விசுவாசத்தில் உறுதியாக நின்றதை அறிந்த சங்கிலி அரசன் கோபம் கொண்டு அவர்களை கொன்று நிர்மூலமாக்க கட்டளை பிறப்பித்தான். எனவே படைவீரர்கள் கத்தோலிக்க விசுவாசிகள் மேல் பாய்ந்து முரட்டு தனமான முறையில் எல்லோரையும் கொலை செய்தனர். ஆணோ, பெண்ணோ, குழந்தையோ, வளர்ந்தவரோ எவரென்றும் பாராமல் எல்லோரையும் சிரச்சேதம் செய்து தமது வாளுக்கு இரையாக்கினர். அவர்களுக்காகப் பணிபுரிந்த அருட்திரு பிரான்சீஸ்கு சவேரியாரும் அம்மக்களுடன் கொலைசெய்யப்பட்டார். விசுவாசிகளின் இரத்தம் வெள்ளமாக ஓடியது. ஓர் சிறிது நேரத்தினுள் 600க்கு அதிகமானோர் பிணமாக்கப்பட்டனர். இத்தோடு கத்தோலிக்கர்கள் அழிந்துவிட்டனர் என்று சங்கிலியன் நினைத்து ஆறுதலடைந்தான். ஆனால் மறைசாட்சிகளின் இரத்தத்தால் தோய்க்கப்பட்ட மன்னார் புனித புண்ணிய பூமியாக மாறியது எனலாம்.

இவ்வாறு நோக்கும் போது கோட்டையிலும் மன்னாரிலும் மறைசாட்சிகள் சிந்திய இரத்தம் புதுக்கிறிஸ்தவர்களின் வித்தாக மாறியது.இதனை அறிந்த கொழும்புக்கும் நீர் கொழும்புக்கும் இடையே வாழ்ந்த மீனவர்கள்(கரையார்) 70000 பேர் கத்தோலிக் கத்தை தழுவினர். திருமுழுக்குப் பெறுவதற்கு காலம் தாழ்த்திய அரசன் தர்மபாலாவும் மனத்துணிவு அடைந்து திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவினான்.

## 2.14 மதிப்பீடு :

இலங்கையில் போர்த்துக்கேயரின் வராலாறு மூன்று நிலைகளை கொண்டதாக அமைந்துள்ளது

1. சிங்கள – போர்த்துக்கேய சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. (1505-1550)
2. புவனேகபாகுவின் மரணத்தை அடுத்து அரசன் தர்மபாலாவின் காலத்தில் அவர்கள் கோட்டை அரசின் பாதுகாவலராக இருந்தனர். (1551-1597)

3. அரசன் தர்மபாலாவின் மரணத்தையடுத்து அவர்கள் கோட்டை அரசை அவனிடமிருந்து நன் கொடையாகப்பெற்று முழுமையாக ஆட்சி செலுத்திய காலம் (1597-1658)

போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கை மக்கள் பெற்றுக் கொண்ட பெரிய தொரு செல்வம் **"கத்தோலிக்க விசுவாசமே"** என்றால் மிகையாகாது. **"நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** என்ற அமுத மொழிக்கு ஏற்ப குருக்கள் மறைபணி புரிந்தனர்.நற்பணி புரிய தம்மை முற்றும் அர்பணிக்கவும் முன் வந்தனர்.மக்களின் அறிவு வளர்ச்சிக்காக அநேக பாடசாலைகளையும் கல்லூரிகளையும் ஆலயங்களையும் மடங்களையும் கட்டி மக்களுக்கு கல்வியறிவும் மறையறிவும் ஊட்டினர். கிறிஸ்தவ மறையின் கொள்கைகள், கோட்பாடுகள், கருத்துக்கள் இலங்கையெங்கும் பரவின. போர்த்துக்கேயரின் சுதேச பழக்க வழக்கங்களும் நடை, உடை பாவனைகள் நாகரீகமானவையாக இலங்கை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. போர்த்துக்கேயர்-அன்று இலங்கையில் நிலவிய கொடிய சாதிவேற்றுமைகள், பாகுபாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினர். சாதி வேற்றுமைத் தீட்டுகளுக்கு எதிரான தங்கள் சமய பழக்க வழக்கங்கள் வழியாக சாதிபாகுபாட்டில் காணப்பட்ட எத்தனையோ மனிததன்மையற்ற அம்சங்களை படிப்படியாக இல்லாமல் செய்தனர்.

இவர்களே இலங்கையில் **"ஒருவனுக்கு ஒருத்தி"** என்ற ஒரு தாரப் பழக்கம், திருமணத்தின் புனிதத்தன்மைகளான **ஒருமை, கட்டவிழாமை** போன்ற சமூகக் கருத்துக்களைப் புகுத்தி பல கணவர்களை அல்லது பல மனைவியரைக் கொண்டிருக்கும் பல தாரப் பழக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தனர். முதன்முதலில் இலங்கைக்கு **மேற்கத்தேய வைத்திய முறைகளை அறிமுகம் செய்தனர்**. மேலும் இன்று நாம் பேசும் தமிழ் சிங்கள மொழிகளில் போர்த்துக்கேய மொழியின் செல்வாக்கினை அறியலாம். இதை விட போர்த்துக்கேயமதம், தளபாடம், கட்டிடம், உணவு, உடை, பெயர் சம்பந்தமான சொற்களை இன்றும் நாம் பயன்படுத்தி வருகின்றோம். இவை யெல்லாம் போர்த்துக்கேயர் இலங்கை மக்களின் வாழ்வியலில் ஏற்படுத்திய தாக்கம் - செல்வாக்கினை நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

# 03. ஒல்லாந்தர் காலம் (கி.பி 1658 -1796)

## 3.1 அறிமுகம்

திருச்சபை வரலாற்றில் 16ம் நூற்றாண்டில் ஏற்பட்ட மார்டீன் லூதரின் புரட்சியின் பயனாகத்தோன்றிய **யோன்கல்வினின் சீர்திருத்தக் கொள்கையைப்** பின்பற்றியவர்களாக ஒல்லாந்தரும் கத்தோலிக்க மத்தினை பின்பற்றியவர்களாக போர்த்துககேயரும் காணப்பட்ட தனால் இருவருக்கும் - இரு நாடுகளுக்கமிடையில் ஆரம்பத்திலிருந்து போட்டியும் பூசலும் அதிகரித்திருந்தன.

முன்பு முஸ்லீம்கள் தங்கள் ஏகபோக உரிமையாக கொண் டிருந்த கீழைத்தேச வர்த்தகத்தைப் போர்த்துக்கேயர் கீழைத்தேச நாடுகளைக் கைப்பற்றி தமதாக்கிகக் கொண்டதை அறிந்த ஒல்லாந்தர் ஏட்டிக்குப் போட்டியாக கீழைத்தேய வர்த்தகரின் ஏகபோக உரிமையை தமதாக்கிக் கொள்ள முயன்றனர்.

### 3.2 ஒல்லாந்தரின் இலங்கை வருகை

ஒல்லாந்தர் கீழைத் தேச வர்த்தக ஏகபோக உரிமையை தமதாக்கிக் கொள்ளும் பின்னணியிலேயே போர்த்துக்கேயர் ஆட்சிபுரிந்த இலங்கையை படிப்படியாக ஒல்லாந்தர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். அதன் படி,

- கி.பி 1638 : கிழக்கிலங்கை நகரம் - மட்டக்களப்பு
- **கி.பி 1639 : திருகோணமலை**
- **கி.பி 1640 : நீர்கொழும்பு, காலி**
- **கி.பி 1655 : களுத்துறை, பாணந்துறை**
- **கி.பி 1656 : கொழும்பு**
- **கி.பி 1658 : மன்னார், யாழ்ப்பாணம்**

இவ்வாறாக 1658ம் ஆண்டு இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சி முடிவடையவே ஒல்லாந்தர் ஆட்சி இலங்கையில் அரம்ப மாகியது.

ஒல்லாந்தர் மகா ஓயா முதல் வளவை கங்கை வரையிலான நிலப்பரப்பையும் யாழ்ப்பாணக் குடா நாடு, மன்னார் தீவு, கல்பிட்டி, திருகோணமலை, மட்டக்களப்புக்கோட்டைகள், வன்னிப் பகுதி ஆகிய பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்தி தமது நிர்வாகத்தை அமைத்தனர். இலங்கையின் எஞ்சிய மகா ஓயாவுக்கு வட பக்கமாகவுள்ள நிலப்பரப்புக்கள் கண்டி அரசனின் ஆட்சியின் கீழ் இருந்தன.

குறிப்பு :

போர்த்துக்கேயரின் ஆட்சியின் முடிவில் இலங்கையில் ஏறக்குறைய *'200,000'* (இரண்டு இலட்சம்) கத்தோலிக்கரும், 125 ஆலயங்களும்100 பங்குகளும், 120 குருக்களும் இருந்தனர். இவர்கள் பிரான்சிஸ்கன் சபை இயேசு சபை, அகுஸ்தினார் சபை, சாமிநாதர் சபையைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுள் ஒன்றிரண்டு சுதேச குருக்களும் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஒல்லாந்தரின் வருகையை அடுத்து அவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

ஒல்லாந்தர்காலத்தில் பௌத்த, இந்து மதங்களுடன், கத்தோலிக்க மதமும் பின்பற்றப்பட்டது. அத்துடன் ஒல்லாந்தர் பரப்பிய ஒல்லாந்த சீர்திருத்த மத்தையும் (Dutch Reformed Church) மக்கள் பின்பற்றி வந்தனர். அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பனி (Dutch East Indian Company) பொறுப்பாக இருந்தது.

மேலும் ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மத வளர்ச்சிக்கு அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாரும், யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரும், ஏனைய ஒறற்ரோறியன் சபைக் குருக்களும் அயராது உழைத்தனர். அதேவேளை ஒல்லாந்த சீர்திருத்த மதச் செயற்பாடுகளுக்கு ஒல்லாந்த போதகரான பிலிப் பல்தேயுஸ் பாதிரியாரும் பணியாற்றினர்.

## 3.2 ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர் எதிர்நோக்கிய சவால்கள்- துன்பியல் அனுபவங்கள்

போர்த்துக்கேயர் மீண்டும் இலங்கையை கைப்பற்ற முற்பட்டால் உள்நாட்டிலிருந்து கத்தோலிக்கர்கள் அவர்களுக்கு ஆதரவளிக்ககூடும் என எண்ணிய ஒல்லாந்தப் படையினர் கத்தோலிக்க மத்தையும் அதன் செயற்பாடுகளையும் முற்றாக அழிக்க முற்பட்டனர். இதனால் ஒல்லாந்தர் சில பாதுகாப்பு நடைமுறைகளை

ஏற்படுத்தினர். இதனால் கத்தோலிக்க சமூகம் பல இன்னல்களை எதிர்நோக்கினர்.

1. கத்தோலிக்க மதம் முற்றாக தடைசெய்யப்பட்டது.
2. அனைத்து கத்தோலிக்க ஆலயங்களும் பாடசாலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. சில ஆலயங்கள் அழிக்கப்பட்டதோடு அங்கிருந்த திருச்சுரூபங்கள் உடைக்கப்பட்டன, தீக்கிரையாக்கப்பட்டன.
3. கத்தோலிக்க பாடசாலைகள் அனைத்தும் கல்வினிஸ்ற்மத பாடசாலைகளாக மாற்றப்பட்டன. அப்பாடசாலைகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பும் படி கத்தோலிக்க பெற்றோர்கள் வற்புறுத்தப்பட்டனர்.
4. எல்லாக் கத்தோலிக்க குருக்களும், மறைபரப்பாளர்களும் நாட்டிலிருந்து விரட்டப்பட்டனர். இரகசியமாகத் தங்கியிருந்த ஒரு சில குருக்களும் தேடிப் பிடிக்கபட்டு கொலை செய்யப்பட்டனர்.
5. கத்தோலிக்க மக்கள்இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ ஒன்று கூடி கத்தோலிக்க ஆராதனைகளை நடத்துவது அல்லது அவற்றில் பங்கெடுப்பது தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கப்பட்டது.
6. கல்வினிஸ்ற் மத ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகளில் பங்கெடுக்கும்படி கத்தோலிக்கர் பலவந்தம் செய்யப்பட்டனர். அத்துடன் கல்வினிஸ்ற் மத முறைப்படி நிறைவேற்றப்படும். திருமுழுக்குகளும், திருமணங்களும், மரணச்சடங்குகளும் மட்டுமே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன.
7. கல்வினிஸ்ற் மதத்தை தழுவியவர்களுக்கே விசேட சலுகையும், அரச பதவிகளும் வழங்கப்பட்டன. கத்தோலிக்கருக்கு அவை மறுக்கப்பட்டன.
8. கத்தோலிக்கர் அனுபவித்த **மிகப் பெரிய இழப்பு – தங்கள் குருக்களையும் மறை பரப்பாளர்களையும் இழந்ததே.** விசுவாசத்தில் உறுதியாக இருந்த கத்தோலிக்கருக்கு குருமார்களின் உதவியும் உற்சாசகமும் கிட்டாததால் அவர்களால் நல்ல உத்தமமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.
9. சிலர் பதவி மோகத்தால் அரச உயர் பதவிகளைப் பெறும் நோக்குடன் தங்கள் கத்தோலிக்க விசவாத்தைக் கைவிட்டு கல்வினிஸ்ற் மதத்தைத் தழுவினர்.
10. சில புதிய கத்தோலிக்க விசுவாசிகள் கொடிய துன்பங்களுக்கு முகம் கொடுக்க அஞ்சி தங்கள் பழைய பௌத்த அல்லது இந்து மதங்களுக்கு மீண்டும் திரும்பிச் சென்றனர்.பொதுவாக சுதேச கத்தோலிக்கர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நின்று அதைக் காப்பாற்றினர். ஒல்லாந்தரால் விதிக்கப்பட்ட துன்புறுத்தல்களை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டனர்.

## 3.4 விசுவாசத்தைப் பாதுகாக்க கத்தோலிக்கர் மேற்கொண்ட நடைமுறைகள்- செயல்பாடுகள்

பல்வேறு இன்னல்களை கத்தோலிக்க சமூகம் அனுபவித்த போதிலும் தமது விசுவாசத்தில உறுதியாயிருந்து அதைப்பாதுகாக்க பல்வேறு விதத்தில் சான்று பகர்ந்து வந்துள்ளனர் என்பதனை கீழ்வரும் செயல்பாடுகள் நமக்கு தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.

- தங்கள் மத சுதந்திரத்திற்காகவும் தங்கள் பிள்ளைகளுக்கு தாம் விரும்பிய தகுந்த கல்வியறிவையும், மத அறிவையும் அளிக்கும் உரிமைகளுக்காகவும் துணிவுடன் அதிகாரிகளுடன் வாதாடினர்.
- கத்தோலிக்க வழிபாடுகளை ஒழுங்காக கடைப்பிடித்து வந்தனர். குறிப்பாக இரவு வேளைகளில் கத்தோலிக்கர் தனியார் வீடுகளில் இரகசியமாக ஒன்று கூடி செபித்தனர். தம் பிள்ளைகளை விசுவாசத்தில் வளர்த்து தமது விசுவாத்திற்கு சான்று பகர்ந்தனர்.
- ஒல்லாந்தரிடமிருந்து தாம் காப்பாற்றிக் கொண்ட திருச் சுரூபங்களை வீடுகளில் மறைவாக வைத்து வணங்கினர்.
- கத்தோலிக்க மக்கள் சமூகமாக ஒன்று கூடி குறிப்பிட்ட காலத்திற்கு தங்களில் ஒருவரை தலைவராக - மூப்பராகத் தெரிந்தெடுத்து அவருடைய வழிகாட்டலின் கீழ் வாழ்ந்து வந்தனர். குறிப்பாக தலைவரின் தலைமையில் விசுவாசிகள் ஒரு இடத்தில் ஒன்று கூடி பூசைத்தியானங்கள், பிரார்த்தனைகளை வாசித்து செபித்தனர்.
- தலைவர்கள் பிள்ளைகளுக்கு கத்தோலிக்க முறைப்படி திருமுழுக்கு கொடுத்தனர். கத்தோலிக்கரின் திருமணம், மரணச்சடங்கு போன்றவற்றையும் நிறைவேற்றி வைத்தனர்.
- பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு மறைக்கல்வி ஊட்டி, கத்தோலிக்க நெறியில் பயிற்றுவித்து வளர்த்தனர்.
- ஒல்லாந்தரின் கெடுபிடியிலிருந்து தப்பி அமைதியும், பாதுகாப்புமுள்ள வன்னிக் காட்டுப் பகுதிக்குச் சென்றனர். குறிப்பாக பல அற்புதங்களைச் செய்த மாதா சுரூபத்தையும் எடுத்துக் கொண்டு அடர்ந்த காடுகள் சூழ்ந்த மடு என்னுமிடத்திற்குச் சென்று அமைதியுடன் வாழ்ந்தனர். இதுவே **'மருதமடுத்திருப்பதியின்'** ஆரம்ப வரலாறாகும்.
- சில கத்தோலிக்க மக்கள் பாதுகாப்புக் கருதி கண்டி இராச்சியத்தில அடைக்கலம் புகுந்தனர். ஏனெனில் ஒல்லாந்தர் காலத்தில் கண்டி இராச்சியம் ஒல்லாந்தரது ஆளுகைக்கு உட்பட்டிருக்கவில்லை.

இவ்வாறு கத்தோலிக்கர் தங்களது விசுவாசத்தை பல இன்னல்கள் மத்தியிலும் உறுதியுடனும் பிரமாணிக்கமாய் காப்பாற்றி வந்தனர்.

## 3.5: ஒல்லாந்தரின் மதம்,கல்விசார்ந்த விவகாரங்கள் (ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக் கல்வி)

இலங்கையைப் பேர்த்துக்கேயரின் ஆட்சியிலிருந்து கைப்பற்றியது. ஒல்லாந்த அரசு அல்ல.மாறாக **ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பனியே** ஆகும். அது **'பலர் பங்கெடுத்த ஒரு வர்த்தக நிறுவனம்'** ஆகும். அவர்களின் நோக்கம் வர்த்தக ஆதிக்கமேயன்றி தம் மதத்தைப் பரப்புவதல்ல. எனவே தான் தங்கள் வர்த்தக ஏகபோக உரிமையினை முதலில் பாதுகாக்க செயற்பட்டனர். அதன் பின்பே தமது மதம், கல்வி சார் பணியை ஆரம்பித்தனர்.

தமது மறைபோதகப்பணியைப் பொதுவாக பாடசாலைகளை நடுநிலையமாகக் கொண்டே மேற்கொண்டனர். **"மறையைப் பிரசாரப்படுத்தும் அடித்தளம் பள்ளிக்கூடமாகும்"** என்பதே அவர்களின் கொள்கை. தேவாலயங்களுக்கு அருகே பாடசாலைகள் கட்டப்பட்டன. சிறுவர்களும் சிறுமிகளும் அப்பாடசாலைகளுக்கு ஒழுங்காக வரும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். வராத பிள்ளைகளின் பெயர்கள் குறிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டன. பொதுவாகப் பெற்றோர் தம் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு ஒழுங்காக அனுப்புவதற்கு ஊக்கம் எடுக்கவில்லை.

**"யோண்கல்வின்"** என்பவரின் புரட்டஸ்தாந்து மதக் கொள்கையின் அடிப்படையில் அம்மத்தைப் போதித்தனர். ஆண்டுக்கு ஒரு முறை பாடசலைகளைத் தரிசித்து மாணவர்களுக்டைய மறை அறிவின் வளர்ச்சியைப் பரிசோதித்தனர். அச்சந்தர்ப்பத்தில் தான் அவர்கள் மக்களுக்குத் திருமுழுக்கு அளித்து திருமணங்களை நிறைவேற்றி வைத்தனர். பாடசாலை ஆசிரியர்கள் பழைய கத்தோலிக்கராக கத்தோலிக்க விசுவாசத்தில் பயிற்றப்பட்டவராகக் காணப்பட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வளர்ந்தவர்கள் ஞாயிறு தினங்களில் ஆலயங்களுக்கு வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு போதகர்களால் **பத்துக்கட்டளைகள்,** விசுவாசமந்திரம், ஆண்டவர் கற்பித்த செபம் என்பன சொல்லிக் கொடுக்கப்பட்டன. ஆனால் அவர்களும் ஒழுங்காக ஆலயம் செல்வதில் அக்கறை எடுக்கவில்லை. வழிபாடுகள் மக்களைக் கவரக் கூடியவையாக மக்கள் விரும்பும் இசை,பாடல்களுடனான திருவிழாக் கள், திருப்பவணிகள் எதுவுமின்றி அறிவு சம்பந்தமான வையாக, சுவையற்றவையாக அமைந்திருந்தன.

போதகர்களுக்கு சுதேசமொழி தெரியாததன் காரணமாக போர்த்துக்கேய மொழியில் வழிபாடுகள் நடாத்தப்பட்டன.அச்சுகூடமும்

ஒன்று தாபிக்கப்பட்டு நற்செய்திகளும் வேறு நல்ல நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் சுதேச மொழிகளில் அச்சிடப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டன. கத்தோலிக்க மதக் கோட்பாடுகளை எதிர்த்தும் அவை தவறானவையென நிரூபிக்கவும் நூல்கள் வெளியிடப்பட்டன.

மறை ஆசிரியர்களின் பற்றாக்குறையைப் போக்க முதலில் யாழ்ப்பாணத்திலும் பின்பு கொழும்பிலும் ஒன்றாக இரு குருமடங்கள் ஆரம்பிக்கப்பட்டு தகுதி பெற்ற இலங்கையர்கள் பயிற்றப்பட்டனர். அவர்களில் திறமையானோரில் சிலர் இறையியலில் மேற்படிப்புக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறு பாடசாலைகளுக்கு வேண்டிய ஆசிரியர்களும், மறைபோதகர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## 3.6: ஒல்லாந்தரது விவகாரங்கள் -இலங்கை மக்களது சமூக கலாசாரத்தில் ஏற்படுத்திய செல் வாக்கின் மதிப்பீடு

ஒல்லாந்தரின் ஆட்சி இலங்கையில் ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு மேலாக நீடித்தன. இக்காலத்தில் ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பனியின் நோக்கம் இலங்கை மக்களினதோ, ஒல்லாந்த மக்களினதோ, மதத்தினதோ நன்மையல்ல. மாறாக அவர்களின் சொந்த வியாபார ஆதாயமே. இதனைக்கருத்திற் கொண்டு இலங்கையை நிர்வகித்து நாட்டின் மூலதனத்தை இயற்கை வளத்தை வளம் பெறச் செய்யவே மக்களின் நலன்களில் அக்கறை எடுத்தனர்

- மக்கள் மத்தியில் பல கைத்தொழிற்சாலைகள், விவசாயப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. இதன் மூலம் மக்கள் உழைத்து தம் வருவாயைப் பெருக்க சந்தர்ப்பம் கிடைத்தது.
- ஒல்லாந்தரே முதன் முதலில் அச்சுப் பதிவு நுட்பத்தை, அச்சடிக்கும் இயந்திரத்தை இலங்கையில் அறிமுகம் செய்தனர்.
- தமிழிலும் சிங்களத்திலும் போர்த்துக்கேயத்திலும் பல பிரயோசனமுள்ள சமய நூல்களை அச்சடித்தது வெளியிட்ட துடன் நற்செய்திப் பகுதிகள். வேத நூல்கள், துண்டுப்பிரசுங்கள் என்பனவும் அச்சிடப்பட்டு இலவசமாக மக்களுக்கு வழங்கப்பட்டன.
- சிங்கள இலக்கண நூல், அகராதி போன்றவற்றையும் வெளியிட்டனர். ஒவ்வொரு ஆலயத்திற்கும் அருகில் பாடசாலைகள் கட்டப்பட்டு பிள்ளைகள் அப்பாடசாலைக்கு ஒழுங்காக வரும்படி வலியுறுத்தப்பட்டனர்.

- ✍ பாடசாலையிலேயே மாணவர்களுக்கான மறைக்கல்வி அளிக்கப் பட்டது. ஆண்டு தோறும் மறைபோதகர்கள் பாடசாலைகளைத் தரிசித்து மாணவர்களின் மறை அறிவின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தனர்.
- ✍ **தோம்பு பதிவு முறையை ஒல்லாந்தர் அறிமுகம் செய்தனர்.**
- ✍ மறைபோதகர்களையும், மறையாசிரியர்களையும், பாடசாலை ஆசிரியர்களையும் பயிற்சியளித்து உருவாக்க யாழ்ப்பாணத்தில் ஒன்றும் கொழும்பில் ஒன்றுமாக இரு குருமாடங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- ✍ தொழுநோயாளர்களை வைத்துப் பராமரிக்க விடுதிகளும், வைத் தியசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.
- ✍ முதன் முதலில் இலங்கையில் **உரோமைய – ஒல்லாந்த சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.** இதனால் மக்களுக்கு நல்ல நீதி கிட்டியது.
- ✍ விவசாய மூலதனங்களையும், கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்ததே ஒல்லாந்தர் நம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஆற்றிய பெரும் பணிகளாகும்.
- ✍ பல தெருக்கள், **வீதிகள்** நாட்டின் முக்கிய நகரங்களில் தோற்று விக்கப்பட்டன.
- ✍ சிறிய ஆறுகள் பாலங்களாலும், பெரியவை மக்கள் போக்குவரத்துச் செய்யக் கூடிய வள்ளச் சேவைகளினாலும் இணைக்கப்பட்டன.
- ✍ வரண்ட பிரதேசங்களிற்கு நீர் பாய்ச்சப்பட்டு வளமாக்கப் பட்டதுடன், ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பனி புதிய விவசாய உற்பத்திப் பொருட்களான **கோப்பி, கராம்பு, கறுவா, ஏலம், தென்னை** போன்றவற்றை அறிமுகம் செய்து அதன் மூலமாக உற்பத்தியை ஊக்குவித்தது.
- ✍ புடவை நெய்தல், அவற்றிற்கு சாயம் போடல் போன்றவற்றை ஆரம்பித்து வளர்த்தனர் இதனால் மக்கள் தம் கைத்தொழிலிலும், வர்த்தகத்திலும் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர்.
- ✍ ஒல்லாந்த மொழியின் தாக்கம், அதன் பயன்பாடு இன்றும் நாம் பேசும் பேச்சுக்களின் மூலம் அறியலாம்.
- ✍ நாம் இன்று காணும் ஒல்லாந்தரின் கட்டிடங்களும், கோட்டை களும், ஆலயங்களும், ஒல்லாந்த சட்ட முறைகளும் அவர்களின் சந்ததியினர் வகிக்கும் பெரும் பதவிகளும் அவர்களின் செல் வாக்கை நமக்கு உணர்த்துகின்றன.

## 3:7 அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் வாழ்வும் - பணியும் (கி.பி 1651 – 1711)

- **பின்னணி**

ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மதம் அழிவுறும் நிலையில் இருந்த போதும் இறைவனின் திட்டம் வேறுவிதமாக அமைந்திருந்தது. அவர் இலங்கை கத்தோலிக்க திருச்சபையை கைவிடவில்லை. **நெருப்பினால் பொன் புடமிடப்படுவது போல** ஒல்லாந்தரின் துன்புறுத்தலால் இலங்கை கத்தோலிக்க திருச் சபை சுத்திகரிகப்பட்டு புதிதாய் தாபிக்கப்பட்டு புத்துயிருடன் பிரகாசமாய் வளர வேண்டும் என்று விரும்பினார்.

30 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைக் கத்தோலிக்கர்கள் தமது விசுவாசப் புதுப்பித்தல் எதுவுமின்றி, எவருமின்றி ஆயனில்லா மந்தைகள் போல் துன்பப்பட்டனர். அவ்வேளையிலேயே இலங்கை கத்தோலிக்கருக்குப் பணி புரிய தம் வாழ்க்கையை முற்றாக அர்ப்பணிக்குப் படியாக எளிமையான ஓர் இளம் குரு இலங்கைக்குவருகைதந்தார். அவரே **"இலங்கையின் அப்போஸ்தலர்"** என்று அன்போடு அழைக்கும் அருட்திரு யோசப்வாஸ் அடிகளார் ஆவார்.

- **யோசப்வாஸ் அடிகளாரின் வாழ்வும் இலங்கை வருகையும்**

அடிகளார் 1651ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதி இந்தியாவின் கோவையிலிருந்த ஒரு உயர்ந்த கொங்கோணி மொழி பேசும் கிறிஸ்தவ பிராமணர் குடும்பத்தில் பிறந்தார்.

சிறு பராயத்திலிருந்தே கூர்மையான அறிவும், மிகுந்த தேவ பக்தியும் நிறைந்தவராக விளங்கினார். ஆரம்பக்கல்வியை பாடசாலையில் கற்ற பின் தம் வாழ்வை இறை பணிக்கென முற்றாக அர்ப்பணிக்க விரும்பி, குருவாகும் நோக்குடன் **புனித தோமாஸ் அக்குவைனஸின்** சாமிநாதர் குருமடத்தில் **சேர்ந்து தத்துவ இறையியல் கல்வியை மேற்கொண்டார்.**

1676ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு கோவையில் ஐந்து ஆண்டுகள் ஆன்மீகப் பணியாற்றிய பின்பு 1681இல் கன்னடத்திற்கு குருமுதல்வராக அனுப்பபடப்டு 3 ஆண்டுகள் அங்கு பணி புரிந்தார். இந்நிலையிலேயே இலங்கை மக்களுக்கு ஆன்மீகப் பணி புரிய ஒரு குருவும் இல்லாததையிட்டு மிகவும் மனக்குழப்பமடைந்து கவலைப்படார். அங்குசென்று குருக்களின்றித் தவிக்கும் அம்மக்கள் மத்தியில் பணி புரிய வேண்டும் என்ற ஆசை அவர் மனதில் உதித்தது. ஆதலால் யோசவ்வாஸ் தன்னுடைய விசுவாசமுள்ள வேலைக்காரனான

**யோணைத்** தம்முடன் அழைத்துக் கொண்டு 1686ம் **ஆண்டு இலங்கைக்கு வருகை** தந்தார்.

இருவரும் கூலிக்காரராக வெறும் மேலுடன் இடுப்பில் முழங்கால்வரை ஒருசிறிய வேட்டித் துண்டைக்கட்டி, மாறுவேடம் தரித்துச் கொண்டு ஒரு சிறிய வள்ளத்தில் இலங்கைக்கு வருகை தந்தனர். இவர்கள் பயணித்த போது வள்ளம் புயலில் அகப்பட்டு அலைகளால் அடித்துக் செல்லப்பட்டு மறை சாட்சிகளின் பூமியான மன்னாரில் கரை ஒதுங்கியது. இவ்வாறு மன்னாருக்கு இவர்கள் வருகை தந்தார்கள். மன்னாரில் சில நாட்கள் நோய் வாய்ப்பட்டிருந்த யோசப்வாஸ் அடிகளார் குணமடைந்த பின் தனது உதவியாளருடன் யாழ்ப்பாணத்திற்கு தரை மார்க்கமாக கால்நடையாக சென்றடைந்தார்.

யாழ்ப்பாணத்தில் ஒரு மண்டபத்தில் தங்கியிருந்த போது சில நாட்கள் வயிற்றுளைவினால் பீடிக்கப்பட்டு இவர்கள் வருந்திய போது ஒரு ஏழைப் பெண் இவர்களுக்கு உண்ண கஞ்சி கொடுத்து உதவியதாக அறியப்படுகின்றது. குணமடைந்த பின் யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்கர்களைக் கண்டு பிடிப்பதே அடிகளாரின் முதற் நோக்கமாகவிருந்தது.

## • யோசவ்வாஸ் அடிகளாரின் மறை பணியும்

30 ஆண்டுகளாக குருக்களின் உதவியின்றி வாழ்ந்து வந்த கத்தோலிக்கர்கள் ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களுக்குப் பயந்து தங்களை கத்தோலிக்கரெனக் காட்டிக் கொள்ளாதவாறு புற மதத்தினரைப் போலவே வாழ்ந்துவந்தனர். இதனால் உண்மையான விசுவாசமுள்ள கத்தோலிக்கர்களை இனம் கண்டு கொள்வது இவருக்கு மிகவும் கடினமாக இருந்தது.

அடிகளார் கழுத்தில் ஒரு **பெரிய செபமாலையை எலலோரும்** காணத்தக்கதாக **அணிந்து** கொண்டு **பிச்சைக்காரனைப்(இரப்போன்)** போல் வீடு வீடாகச் சென்று இடையிடையே சிலுவை அடையாளம் வரைந்து செபமும் சொல்லிக் கொண்டு பிச்சை கேட்டு வந்தார். சில வீடுகளில் அவர் மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரிக்கப்பட்டார். பின் தன்னை ஒரு இந்திய கத்தோலிக்க குருவென்ற இரகசியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

இதனை அறிந்த யாழ்ப்பாண கத்தோலிக்க சமுதாயத்தின் மூப்பர் மாறுவேடங்களில் பிச்சை எடுத்து திரிந்த அடிகளாரிடம் சென்று அவர் உண்மையாகவே ஒரு கத்தோலிக்க குருதானோ என்று விசாரித்தார். அதன் மூலம் அடிகளார் ஒரு கத்தோலிக்க

குருவென்பதை அறிந்து கொண்டார். ஏங்கித்தவித்த கத்தோலிக்க மக்களுக்கு மிகுந்த சந்தோசத்தையும் மன ஆறுதலையும் இவரது பிரசன்னம் கொடுத்தது. அடிகளாரும் 30 ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் முதல் தடவையாக மூப்பருடைய வீட்டில் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இவ்வீடே அடிகளார் (யாழ்ப்பாணம்) இலங்கையில் ஆரம்பித்த அரும் பெரும் ஆன்மீகப் பணியின் நடு நிலையமாக அமைந்தது.

விசுவாசமும் நம்பிகையுமுள்ள கத்தோலிக்கர்கள் ஒவ்வொரு நாளும் இரவில் பெரும் திரளாக வந்து திருப்பலியில் பங்குபற்றி திருவருட்சாதனங்களைப் பெற்று அடிகளார் தமிழ் மொழியில் ஆற்றிய மறை உரைகளையும் கேட்டனர். பின்பு அடிகளார் தமது பாதுகாப்பை முன்னிட்டு தமது நடுநிலையத்தை யாழ்ப்பாண்த்திலிருந்து பத்து மைல் தூரத்திலிருந்த சில்லாலை என்ற கிராமத்திற்கு மாற்றினார். நூற்றுக்கு நூறு வீதம் தன்னகத்தே கத்தோலிக்க மக்களைக் கொண்டிருந்த சில்லாலைக் கிராமம் இலங்கையில் உறுதியாய் கத்தோலிக்க விசுவாசத்தின் இருப்பிடமாகவிருந்தது. அக்கிராம மக்கள் கத்தோலிக்க விசுவாசத்திலும் ஒழுக்க வாழ்விலும், சிறந்து விளங்கினர். ஆதலால் **"சின்ன உரோமை"**என சில்லாலை அழைக்கப்படலாயிற்று.

சில்லாலையில் மூப்பரின் வீட்டில் தங்கியிருந்த யோசவ்வாஸ் இரவு வேளைகளில் அங்கிருந்து யாழ்ப்பாணத்திலிருந்த பல இடங்களுக்குச் சென்று கத்தோலிக்கர்களுக்குத் திருப்பணி புரிந்து திருப்பலி நிறைவேற்றி வந்தார். அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி திருவருட்சாதனங்களை வழங்கி, கத்தோலிக்க மதத்தை எதிர்த்தோரையும் இந்துக்களையும் மனந்திருப்பினார். மேலும் அடிகளாரின் போதனைகளிலும் பார்க்க அவருடைய முன் மாதிரியான வாழ்க்கையும் அவரில் மிளிர்ந்த-பிரகாசித்த கிறிஸ்தவ நற்பண்புகளும் புண்ணியங்களும் மக்களை வெகுவாக கவர்ந்தன. குறிப்பாக

- ***ஏழ்மை, உலகப் பற்றற்ற வாழ்க்கை***
- ***அடக்கவொடுக்கமான மரியாதையுடைய நடத்தை***
- ***உபவாசம், உணவு – குடி மட்டில் இச்சை அடக்கம்***
  போன்றவற்றைகுறிப்பிடலாம்.

அடிகளார் ஊட்டிய விசுவாச உற்சாகத்தால் மக்களும் தங்கள் விசுவாசத்தில் உறுதியும் புத்துணர்வும் பெற்றவர்களாய் தங்கள் வீடுகளில் தம் மதக் கடமைகளை மனத் துணிவுடன்

வெளிப்படையாகக் கடைப்பிடித்தனர். படிப்படியாக இரவு வேளைகளில் வழிபாடுகள், செபங்கள், செபமாலைப் பிரார்த்தனை, பக்திப் பாடல்கள் முதலான விசுவாச முயற்சியில் பகிரங்கமாக ஈடுபட்டனர். துணிவுடன் கழுத்தில் திருச்செபமாலை அணிந்து, மறைத்து வைத்த திருச்சுரூபங்களையும் பகிரங்கமாக தரிசித்தனர்.

அடிகளார் 1689ம் **ஆண்டு** எட்டு இடங்களில் வெளிப் படையாகத் திருப்பலி ஒப்புக்கொடுத்து மக்களை விசவாசத்தில் தைரியப்படுத்தினார். ஒல்லாந்தரின் போதனைகளை கத்தோலிக் கர் பகிரங்கமாக எதிர்த்து தாம் கத்தோலிக்கர் என்பதை வெளிப் படையாக அறிக்கையிட்டனர்.

கி.பி 1690ம் ஆண்டு கிறிஸ்துவின் பிறப்பு திருவிழாவான மார்கழி 25ம் திகதி இரவில் யாழ்ப்பாணத்தில் 3 வெவ்வேறு இடங்களில் திருப்பலி ஒப்புக் கொடுக்க அடிகளார் ஆயத்தம் செய்திருந்ததை அறிந்த **ஒல்லாந்த அதிகாரி ஹென்றிக் அதிரியான்** திருப்பலி ஒப்புக் கொடுக்கவிருந்த இடங்களிற்கு தனது படைவீரர்களை அனுப்பினான். அடிகளாரையும் கத்தோலிக்கர்களையும் கைது செய்ய திட்டமிட்டு அவ்விடத்தை முற்றுகையிட்டு விசுவா சிகளை ஆண் பெண் பாராது ஆவேசத்துடன் அடித்து வதைத்து, நிர்வாணமாக்கி அட்டகாசம் செய்தனர். அங்கிருந்த பலிப்பீடங் களையும் திருச் சுரூபங்களையும் உடைத்து கால்களால் மிதித்து அவற்றை தீட்டுப்படுத்தினர். 300 பேரைக் கைது செய்து சிறையிலும் அடைத்தனர். ஆனாலும் அடிகளார் தெய்வாதீனமாக தப்பித்துக் கொண்டார்.

சவுக்கு அடிகளின் வேதனை தாங்க முடியாமல் **டொன்பேதுரு** என்ற தலைவர் மரணமானார். மற்றைய ஏழு பேரும் சிறையில் தொடர்ந்து அடைக்கப்பட்டு யாழ்ப்பாணக் கோட்டையைக்கட்ட கல்சுமக்கும் படி கட்டாயப்படுத்தப்பட்டனர். இதன் காரணமாக ஆபத்திலிருந்து தப்பி தன் பயணத் தோழன் யோனுடன் மாறுவேடத்தில் கிழிந்த அழுக்கடைந்த உடுப்பு அணிந்தவராய் கால் நடையாக பூநகரி வழியாக வன்னிக்குச் சென்றார். அங்கிருந்து கண்டி அரசனுடைய ஆட்சியின் கீழ் இருந்த புத்தளம் நகருக்குச் சென்று அங்கிருந்த கத்தோலிக்கர் மத்தியில் ஒன்றரை ஆண்டுகள் தங்கியிருந்து மறைபணி புரிந்தார். அங்கு போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட ஒரு சிற்றாலயமும் இருந்தது. கத்தோலிக்கருக்கு நற்செய்தியைப் போதித்து அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி திருப்பலிஒப்புக்கொடுத்து திருவருட் சாதனங்களை வழங்கினார். பல ஆண்டுகளாக ஒருகுருவினதும் உதவியுமின்றி அஞ்ஞானிகள் போல் வாழ்ந்து வந்த விசுவாசிகளுக்கு இது மகிழ்ச்சியையும் தைரியத்தையும் அளித்தது.

## கண்டியில் அடிகளாரின் மறைப்பணி

மேலும் கண்டியிலுள்ள கத்தோலிக்ககரை தரிசித்து அவர்களுக்குப் பணி புரியவென 1692 ம் ஆண்டு சித்திரை மாதம் கண்டிக்குப் பயணமானார். அக்காலத்தில் கண்டியை ஆண்டு வந்த இரண்டாவது விமலதர்மாசூரிய தன் தந்தை இரண்டாம் இராஜசிங்கவைப்போல் ஒல்லாந்தரால் துன்புறுத்தப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு ஆதரவு அளித்து வந்தான். ஆனால் யோசப்வாஸ் அடிகளார் கோவையிலிருந்து வந்திருந்த படியால் அவர் போர்த்துக்கேயருக்கு வேவு பார்க்க வந்திருக்கும் உளவாளி என்ற தப்பான வதந்தி பரவியதால் கோபமடைந்த அரசன் அடிகளாரைக் கைது செய்து விலங்கிலிட்டு கடும் காவலில் வைத்திருக்கும்படி கட்டளையிட்டான். இச்சிறைவாசம் மூலம் கண்டி அரசனின் ஆதரவும், பாதுகாப்பும் அடிகளாருக்கும் அவரது சக குருக்களுக்கும் கிடைக்கச் செய்வதே இவைனின் திட்டமாகவிருந்தது.

இத்தகைய அடிகளாரின் சிறைவாசத்தில் அவரது செயற்பாடுகள் எல்லாம் வெகு நுணுக்கமாக அவதானிக்கப்ட்டன. அடிகளார் சாந்தமும் தாழ்ச்சியும் நிறைந்தவராய் தனது நேரத்தை அதிகாமாய் செபத்திலேயே செலவழித்தார். சில நாட்களுக்குப் பின் அடிகளாரை விசாரணை செய்த அரசன் அவர் மேல் சுமத்தபடட்ட குற்றங்களெல்லாம் ஆதாரமற்றவையெனக் கண்டு அவரையும் அவரது பயணத் தோழரான யோணையும் விடுதலை செய்து சிறைக் கூடம் இருந்த வளவிற்குள் சுதந்திரமாக நடமாட அனுமதித்தான். அச்சந்தரப்பத்தைப் பயன்படுத்திய அடிகளார் சிங்கள் மொழியைக் கற்று தம் வருங்காலப் பணிக்கு தம்மை ஆயத்தம் செய்தார். எவ்வித தடையுமின்றி செபிக்கவும் திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் அவரை கத்தோலிக்க மக்கள் வந்து சந்திக்கவும் அனுமதி வழங்கப்பட்டது. சிறைச் சாலைத் தோட்டத்தில ஒரு சிறுகொட்டில் போட்டு அதைச் சிற்றாலயமாககப் பாவித்தார். தன்னிடம் வந்த விசுவாசிகளுக்கு நற்செய்தியைப் போதித்து திருவருட் சாதனங்களை வழங்கி மறைபணி ஆற்றினார். இக்கால த்தில் இந்தியாவுக்கு திரும்பி வருமாறு கோவையிலிருந்த இவரு டைய சிரேஸ்டரிமிருந்து அழைப்பு கிடைத்த போதிலும் இறை பராமரிப்பினால் அவர் தடுத்து வைக்கப்பட்டார். இதனால் கண்டி நகரமெங்கும் அரச அனுமதியுடன் மறைபணியாற்றினார்.

கண்டி நகரில் ஒரு சிற்றாலயத்தைக் கட்டி அதை **'அஞ்ஞானிகள் மனமாற்றத்தின் மாதா'**வுக்கென அர்ப்பணம் செய்தார். பல ஆண்டுகளாக திருவருட்சாதனங்களின்றி வாழ்ந்த கத்தோலிக்கர்கள் அவரிடம் திரளாக வந்தனர். அவ்ரகளுக்கு அருட்சாதனங்களை வழங்கி திருப்பலி ஒப்புக்கொடுத்து நற்செய்தி

யைப் போதித்து அவர்களை நல்வழிப்படுத்தி விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். சிலவேளைகளில் கோவிலிலேயே தங்கி மக்களுக்கு போதித்து பாவமன்னிப்பு அளித்தார். வீடு வீடாகச் சென்று நோயாளர்களையும் வயோதிபர்களையும் சந்தித்து அவர்களக்கு திருவருட்சாதனங்னைக கொடுத்தார். சில அடிமைகளை யும், வெளிநாட்டவர்களையும் மனந்திருப்பி திருச்சபையில் சேர்த்தார்.

இதுவரை இலங்யையில் தான் ஆற்றிய பணிபற்றி அறிக்கையொன்றை தன் சிரேஸ்டருக்கு அனுப்பி கண்டி அரசிலும் ஒல்லாந்தருக்கு கீழ்ப்பட்ட பகுதிகளிலும் பரவி வாழும் பெரும் தொகையான கத்தோலிக்கருக்கு தனித்து நின்று பணியாற்ற முடியாததன் நிலையை எடுத்துக் கூறி வேறு சில குருக்களை உதவிக்கு அனுப்பும்படி தியானசம்பிரதாயசபைச் சிரேஸ்டரைக் கேட்டுக் கொண்டார். சிரேஸ்டரும் அடிகளாரின் வேண்டுகோளை அறிந்து மகிழ்ச்சி அடைந்து

- அருட் திரு யோசவ் டெமெனசெஸ் அடிகளார்
- அருட் திரு யோசவ் கர்வாலோ அடிகளார்
- மேற்றிராசனக் குரு – பேதுரு பெராவோ

ஆகியோரை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இக்காலத்தில் 1696ம் ஆண்டின் இறுதியில் கண்டி அரசில் மழையில்லாது கடும் வரட்சியுண்டாகி நாடடெங்கும் பெரும் பஞ்சம் ஏற்படும்ஆபத்தில் இருந்தது. அவ்வேளை அரசனின்வேண்டுகோளுக்கு இணங்க அடிகளார் நகரின் சதுக்கத்தில் ஒரு பீடத்தை அமைத்து அதன் மேல் ஒரு சிலுவையை வைத்து முழந்தாள் படியிட்டுச் செபித்தார். பலர் அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த வேளை சிறிது நேரத்திற்குள் வானத்தில் மழை முகில்கள் உருவாகி இருட்டியது. திடீரென பேரிரைச்சலுடன் பெரும் மழை பெய்யத் தொடங்கியது. ஆனால் அடிகளாரின் முழந்தாள் படியிட்டிருந்த இடத்தில் ஒரு துளி மழைதானும் விழவில்லை. இதனால் அடிகளாரனி ஆற்றலும் புகழும் எங்கும் பரவியது. அரசனும் அவரை மிக மரியாதையுடன் நடத்தி தங்கு தடையின்றி ஒல்லாந்தரின் ஆட்சிக்கு உட்பட்ட எல்லா இடங்களிற்கும் சென்று மறைப்பணி புரிய அனுமதியளித்தான். இவ் அனுமதியைப் பயன்படுத்திய அடிகளார் மறுபடியும் பிச்சைக்காரர் வேட்த்தில் கொழும்பு, நீர்கொழும்பு, இரத்தினபுரி, வன்னி, மாதோட்டம், மன்னார், பூநகரி, யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களிற்கு சென்று கத்தோலிக்கர்களை இரகசியமாக சந்தித்து அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். தவறிப் போனவர்களை மனந்திருப்பி மீண்டும் திருச்சபையில் சேர்த்து திருவருட்

சாதனங்களை அளித்து அவர்களை நல்வழிப்படுத்தினார். ஒல்லாந்தர் அவரைக் கைது செய்ய பல முறைகளிலும் முயன்றும் அவர் இறைபராமரிப்பினால் பாதுகாக்கப்பட்டார். பத்து ஆண்டுகளாக யோசப்வாஸ் அடிகளார் தனிமையாக இலங்கையில் ஆற்றிய மறைப்பணி அளப்பரியது.

1696ம் ஆண்டு கோவையில் இருந்த தியான சம்பிரதாயச் சபையைச் சேர்ந்த மூவர் அடிகளாருக்கு துணையாக இலங்கைக்கு வருகை தந்தனர். அவர்கள் கொச்சின் ஆயரிடமிருந்தும், சபைச் சிரேஸ்டரிடமிருந்தும் இரண்டு அதிகாரப் பத்திரங்களை அடிகளாருக்கு கொண்டு வந்தனர்.

1. இலங்கைக்கான கொச்சின் ஆயரின் பிரதிநிதி
2. இலங்கையிலுள்ள தியான சம்பிரதாய சபைக் குருக்களுக்கு (ஒறற்ரோயின் மறை போதகர்கள்) சிரேஸ்டர்

இவ்விரு அதிகாரங்களையும் பயன்படுத்தி ஆர்வத்துடன் மறைபணியை அடிகளார் ஆற்றினார். சில ஒழுங்கு விதிகளை மேற்கொண்டு, பணித்தளங்கள் வரையறை செய்யப்பட்டு வெவ்வேறு குருக்களிடம் வெவ்வேறு பகுதிகளின் மறைப்பரப்புப் பணிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதன் படி

1. பேதுரு பெர்றாவோ அடிகளாரிடம் – யாழ்ப்பாணம், பூநகரி, மாதோட்டம், மன்னார், வன்னிப்பகுதிகள்
2. யோசப் டெமெனெசெஸ் அடிகளாரிடம் - புத்தளம், சிலாபம், நீர்கொழும்புப் பகுதிகள்
3. யோசப் கர்வாலோ அடிகளாரிடம் - கண்டி என இலங்கை மூன்றாகப் பிரிக்கப்பட்டு பணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மேலும் மறைப்பரப்பாளர்கள் சகலரும் மக்கள் பேசும் சிங்களம்,தமிழ் ஆகிய மொழிகளை நன்றாகக் கற்க வேண்டும். விசுவாசத்திற்கும் ஒழுக்கத்திற்கும் முரணில்லாத மக்களின் பாரம்பரியங்களையும் பழக்கவழக்கங்களையும் ஆதரிக்க வேண்டும். வறிய மக்களுக்கு தாராளமாய் தர்மம் செய்ய வேண்டும் முதலான ஒழுங்குகளை அடிகளார் மேற்கொண்டார். இச்செயற்பாடு கத்தோலிக்க மதம் இலங்கையில் எங்கும் புத்துயிருடன் பரவுவதற்கு ஏதுவாக அமைந்தன. யோசப்வாஸ் அடிகளார் தம் மறைப்பணியின் நடுநிலையத்தை கண்டியில் அமைத்து இடையிடையே பிற நகரங்களையெல்லாம் தரிசித்து குருக்களுக்கு ஆலோசனை வழங்கி ஊக்குவித்து மக்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி நல்வழிப்படுத்தி வந்தார். 1697ம் ஆண்டு கண்டி நகரிலும் அதன் அயலிலும் கொடிய தொற்று நோயான சிறிய அம்மை (வைசூரி) பரவியதால் நூற்றுக்கணக்கான மக்கள்

இறந்தனர். இந்நிலையில் யோசப்வாஸ் அடிகளாரும், கர்வாலோ அடிகளாரும் கிறிஸ்தவ அன்பினால் தூண்டப் பெற்றவர்களாய் தங்கள் சுகத்தைப் பொருட்படுத்தாமல் சாதி, மத பேதமின்றி நோயாளிகளை தரிசித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர். நோயாளர்களின் புண்களைக் கழுவி மருந்து கட்டி, உணவு, குடிநீர், உடுபிடைவைகளைக் கொடுத்து இறந்தவர்களை அடக்கம் செய்தல் போன்ற மகத்தான மனிதநேயப் பணிகளை மேற்கொண்டனர். தம்முடைய ஆலயத்திற்கு அருகாமையில் ஓர் வைத்தியசாலையையும் அமைத்து அங்கு நோயாளிகளைப் பராமரித்தனர்

இக்கத்தோலிக்க குருக்களின் தன்னலம் கருதாப் பிறர் நலப் பணிகளைக் கண்ட பிற சமயத்தினர் வியப்படைந்து கத்தோலிக்க மதத்தின்பால் மிக வெகுவாக கவரப்பட்டு பலர் மனந்திரும்பி கத்தோலிக்க மத்தைத் தழுவினர். கண்டி அரசனாகிய விமலதர்ம சூரியாவும் அவர்களின் அன்புப் பணிகளை மெச்சிப் பாராட்டினான். இரவு பகலாக அயராது நோயாளிகளைப் பராமரித்த யோசப்வாஸ் நோயுற்றார். சிறிது கால ஓய்வின் பின் தம் பணியை கர்வாலோ அடிகளாரிடம் ஒப்படைத்து விட்டு சீதாவாக்கை, இரத்தினபுரி போன்ற இடங்களைத் தரிசித்து கத்தோலிக்ககருக்கு திருவருட்சாதனங்கள் வழங்கி நல்வழிப்படுத்தினார். யோசப்வாஸ் அடிகளாரும் அவருடைய சககுருக்களும் வயதில் முதிர்ந்து நோயுற்று பலவீனமடைந்தனர். இதன் காரணமாக அவர்களுக்கு உதவியாக தியான சம்பிரதாய சபையைச் சேர்ந்த

1. **அருட் திரு பேதுரு டா சுல்தானோ**
2. **யாக்கோமே கொன்சால்வெஸ்**
3. **மிகுவெல் ' டி மெல்லோ**
4. **யோசே டே சமாரியா**
5. **மனுவேல் டே மிராண்டா** ஆகிய ஐவரும் இலங்கைக்கு வருகை தந்தனர். அடிகளாரும் இலங்கை முழுவதையும் பல்வேறு பகுதிகளாகப் பிரித்து வெவ்வேறு குருக்களிடம் ஒப்படைத்தார்.

மக்கள் பேசும் தமிழையும் சிங்களத்தையும் நன்கு கற்று கத்தோலிக்கருக்குத் தேவையான சகல வேத நூல்களையும் எழுதும் பொறுப்பினைஅடிகளார் கொன்சால்வெஸ்அடிகளாரிடம் ஒப்படைத்தார். மேலும் அடிகளார் தாழ்மை, ஏழ்மை, கற்பு, கீழ்படிதல், இறையன்பு, பிறரன்பு போன்ற புண்ணியங்களை சிறப்பான முறையில் வாழ்ந்து தமது சக குருக்களுக்கும் ஏனைய கத்தோலிக்க,பிறமத மக்களுக்கும் முன் மாதிரிகைமிக்க ஒரு நல்லதொரு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். நாட்டின் கலாசாரம், பழக்கவழக்கங்களை மதித்தல், சகிப்புத்தன்மை, கூட்டு வாழ்வு, நட்புறவு போன்ற கொள்கைகளையும் கடைப்பிடித்தார். மக்களை வலோத்காரப்படுத்தியோ, சலுகைகள்

அளித்தோ மனந்திருப்பாமல் தன்னுடைய தியாகம் நிறைந்த முன்மாதிரியான அன்புப் பணியினால் மக்களைக் கிறிஸ்துவின்பால் கவர்ந்தார். ஐரோப்பிய மறைபரப் பாளருக்கு சரிநிகராக சுதேச குருக்களும் மறை பணியாற்றுவதற்கு ஏற்றதுணிவும் ஆற்றலும் ஆக்கத்தையும் அடிகளார் அவர்களுக்கு கொடுத்தார்.

அடிகளார் இலங்கையில் மறைபணியாற்றிய 25 ஆண்டு காலத்தில் ஏறக்குறைய 12 குருக்கள் இலங்கையில் பணி புரிந்தனர். கண்டி அரசர்களதும், ஏனைய சக குருக்களினதும் ஆதரவையும் நட்பையும் மரியாதையையும் பெற்றிருந்த அடிகளார் தமது இறுதிக்காலத்தில நோய்வாய்ப்பட்டு **1711ம் ஆண்டு தை மாதம் 16ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.** அவரது பூதவுடல் கண்டி அரசரின் அனுமதியோடு கண்டியில் அவரால் கட்டப்பட்ட தேவ ஆலயத்திலேயே அரசர்கள், பல இன, மத மக்கள் பெருந்தொகை யாக கூடியிருந்த வேளையில் மிக மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அருட்திரு யோசப்வாஸ் அடிகளார் உயிருடன் இருக்கும் போதே அவருடைய புனிதத்தின் புகழ் இலங்கை, இந்தியாவெங்கும் மட்டுமல்ல போர்த்துக்கல், உரோமை வரை பரவியிருந்தது. அவருக் குப் புனிதர் பட்டம் அளிக்கும் முயற்சிகள் இழுத்தடிக்கப்பட்டு அவர் இறந்து 25 ஆண்டுகளின் பின்னரே ஆரம்பமாயின். கண்டி ஆயர் கலாநிதி யோசவ் வியான்னி ஆண்டகையும், கத்தோலிக்க மக்களும் எடுத்த அயராத முயற்சியின் பயனாக இலங்கை வருகை தந்த **திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரால் 1995ம் ஆண்டு தை மாதம் யோசவ்வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம்** வழங்கி கௌரவிக்கப்பட்டது. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

### ❖ அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் கையாண்ட மறைபரப்பு உத்திகள் - வழிமுறைகள்

ஒறற்றோரியன் சபையின் (தியான சம்பிரதாய சபை) சிரேஸ்டரான யோசப்வாஸ் அடிகளார் இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையை நிலைநிறுத்துவதற்கு பல்வேறு மறைபரப்பு உத்திக ளை கையாண்டார் என்பதனை நாம் அவரது வாழ்வும் பணியின் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

- ✞ இரகசியமாகவும் இரவிலும் கத்தோலிக்க மக்களை மாறுவேடத்தில் (இரப்போன்) சந்தித்து அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார்.
- ✞ ஒவ்வொரு கிராமத்திலும் வாழ்ந்த கத்தோலிக்க மக்களைக் கவனிக்க மூப்பர்களையும் அண்ணாவிமார்களையும்

நியமித்து, ஆன்மீக செபம், வழிபாடுகளை தலைமை தாங்கி நடாத்துதல், ஆன்மீக காரியங்களை முன்னெடுத்தல் முதலான பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்படைத்தார்.

- ✝ குருக்களெல்லாரும் இலங்கைத் தேசிய மொழிகளான தமிழையும், சிங்களத்தையும் கற்க வேண்டும் என வற்புறுத்தினார்.
- ✝ யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாருக்கு இலக்கியங்கள் ஆக்குவதற்கான பணியை ஒப்படைத்து சுதேச மொழியில் இலக்கியங்களைப் படைக்கவும் அதன் வழி மக்கள் கத்தோலிக்கம் பற்றிய ஆழமான அறிவைப் பெறவும் ஞான காரியங்களில் ஈடுபடவும் வழிவகுத்தார்
- ✝ கத்தோலிக்கமக்களின் இல்லங்களைத் தரிசித்து அவர்களின் குறைநிறைகளை அறிந்து மறையறிவைஅளித்து அவர்களின் இன்பதுன்பங்களில் பங்கு பற்றி ஆறுதல் வழங்கி விசுவாசத் தில் ஊக்கப்படுத்தி, வழிநடத்தி, சிறந்த சாட்சிய வாழ்விற்கு அடித்தளமிட்டார்.
- ✝ தியாகம் நிறைந்த எளிய, விரதத்துவ எடுத்துக் காட்டான வாழ்க்கையும், அவரது ஆழமான விசுவாச வாழ்வும் கடின உழைப்பும் மக்களை கவர்ந்தன.
- ✝ பஞ்சம், கொள்ளை நோய்கள் ஏற்பட்ட வேளை அடிகளார் ஆற்றிய பிறரன்புப் பணிகளும், சமூக மனித நேயச் சேவைகளும் மக்களின் விசுவாச வாழ்விற்கு உரமூட்டின.

## 3.8 அருட்திரு யாக்கோமே கொன்சால் வெஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும் (கி.பி 1676 – 1742)

இலங்கையில் மறைபணி புரிந்த ஒறற்ரோரியன் சபைக்குருக்க ளில் அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாரைத் தொடர்ந்து யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் முக்கியத்துவம் பெறுகின்றார். இலங்கைத் திருச்சபையின் மறைபரப்புப் பணியில் மட்டுமன்றி நாட்டுக்கலைத்துறையிலும் ஈடுபட்டு தம் அறிவு, திறன், ஆற்றல்ளைப் பயன் படுத்தி உள்நாட்டு கிறிஸ்தவ இலக்கியம், சங்கீதம், நாடகம் போன்ற கலைகளைத் தோற்றுவித்து வளர்ப்பதில் பெரும் பங்களிப்பு செய்திருக்கினறார். இவர் இலக்கியத்துறைக்கு ஆற்றிய மகத்தானபணியின் காரணமாக **"கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை"** என சிறப்பிக்கப்ப்டுகின்றார்.

இந்தியாவில் கோவா பட்டணத்தில் **'திபாரி'** எனும் ஊரில் கொங்கோணி மொழி பேசும் பிராமணர் குடும்பத்தில் 1676ம் ஆண்டு ஆனி மாதம் 8ம் திகதி பிறந்தார். சிறுவயதிலேயே அறிவும்,

சங்கீத்திறன்களும் பன்மொழி பயிலும் ஆற்றல்களும் கொண்டு விளங்கிய இவர் தன் கல்லூரிப் படிப்பை வெற்றியுடன் முடித்து கோவை சர்வகலாசாலையில் சேர்ந்து ஒரு சிறந்த கலைப்பட்டதாரி யானார். ஒழுக்கத்திலும், தெய்வபக்தியிலும் சிறந்த விளங்கிய இவர் இளம் வயதில் ஒரு குருவாக வரவிரும்பி புனித தோமையார் உயர் கல்லூரியில் சேர்ந்து இறையியல் கற்றார். பெற்றறோரின் எதிர்ப்புக ளையும் எதிர்கொண்டு ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு 1700ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி ஒறற்ரோறியன் சபையில் இணைந்தார். சர்வகலாசாலையில் **தத்துவம் சாஸ்திரம் (மெய்யியல்)** கற்பிக்கும் **பேராசிரியராகவும்** நியமனம் பெற்ற முதல் ஒறற்ரோரியன் சபைக் குருவும் இவரே என்பது சிறப்புக்குரியது.

சர்வகலாசாலையில் பட்டதாரிகளுக்கு கற்றுக் கொடுப்பதை விட கிறிஸ்தவத்தை அறியாத பாமர மக்களுக்கு மறைக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதில் மிகவும் ஆர்வமுடையவராய் செயற்பட்டார். யோசப்வாஸ் அடிகளார் இலங்கையில் தமக்கு உதவியாக பணி புரிய விண்ணப்பித்த போது தனது **பேராசிரியர் பதவியை** ராஜினாமா செய்து விட்டு இலங்கைக்கு புறப்பட்டு செல்ல விரும்பினார். 1705ம் ஆண்டு வைகாசி மாதம் 9ம் திகதி கோவையிலிருந்து இலங்கைக்கு புறப்பட்ட இவர் பல நாள் துன்பப்பட்டு கொச்சின் என்ற இடத்தில் தங்கி அதன் பின்பு அதே ஆண்டு ஆவணி மாதம் 30 திகதி இலங்கை வந்தடைந்தார். கொன்சால்வெஸ் அடிகளார் கொச்சினில் தங்கியிருந்த காலத்தில இலங்கையில் பேசப்படும் தமிழ்மொழியை எழுதவும், பேசவும், வாசிக்கவும் கற்றுக் கொண்டார். இலங்கையில் அன்புடன் இவர்களை வரவேற்ற யோசப்வாஸ் அடிகளார் இலங்கையைப் பல பகுதிகளாகப் பிரித்து கொன்சால்வெஸ் அடிகளாரிடம் **மன்னார், அரிப்பு, முசலி, மாதோட்டம்** முதலான பகுதிகளில் மறை பணியாற்றும் பொறுப்பை ஒப்படைத்தார். யோசப்வாஸ் அடிகளார் தமிழையும் சிங்களத்தையும் கற்று சில நூல்களை எழுதியிருந்தாலும் பல வித இலக்கியங்களை ஆக்கும் பொறுப்பை கொன்சால்வெஸ் அடிகளாரிடம் ஒப்படைத்தார். தம் வாழ்நாளில் **தமிழ், சிங்களம், இலத்தீன், ஸ்பானியம் ஒல்லாந்தமொழி முதலான பன் மொழிகளிலும் புலமை பெற்றிருந்த கொன்சால்வெஸ் அடிகளார்** தம் அறிவையும் ஆற்றலையும் மறைபரப்புப் பணிக்குத் திறம்படப் பயன்படுத்தினார்.

கத்தோலிக்க விசுவாசிகளுக்கு பயனுள்ள பல நூல்களை ஆக்கினார். குறிப்பாக கல்வினிஸ்ற் மதபேதகர்களுக்கு எதிராகவும், அஞ்ஞான மதத்தை எதிர்த்தும், பௌத்த மதத்திலுள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டியும், நூல்களை எழுதினார். இவ்வாறான நூல்களை கற்ற அறிவாளிகளும் உயர் குலத்தைச் சேர்ந்த பல சிங்களவரும் மனந்திரும்பினார்கள்.இதன் காரணமாக கத்தோலிக்கரின் விசுவாசம்

எங்கும் பரவி வளர்சசியடைந்தது. பிறமதத்தினரும் கத்தோலிக்க மதத்தைப் போற்றி மதித்தனர். யோசப்வாஸ் அடிகளாரின் இறப்பிற்கு பின்பு அருட்திரு யோசப் டெமெனசெஸ் அடிகளார் இலங்கைத் திருச்சபையின் தலைவராக கடமையாற்றினாலும் கண்டியில் இருந்து இலங்கைத் திருச்சபையின் பணிகளை கவனிக்கும் பொருட்டு கொச்சின் ஆயரின் உபபிரதிநிதியாக கண்டி அரசன் நரேந்திரசிங்கவினால் நியமிக்கப்ட்ட கொன்சால் வெஸ் அடிகளார் அரசனால் **“சாங்கோபாங்க சுவாமி”** என அழைக்கப்பட்டார். அரசனும் விசேட மதிப்பும் , அன்பும் அவருக்கு காட்டி வ்ந்தார். 1724ம் ஆண்டு டெமெனெசெஸ் அடிகளார் இறந்த பின்பு கொன்சால்வெஸ் அடிகளார் **இலங்கைத் தியான சம்பிரதாயச் சபைக் குருக்களுக்கு சிரேஸ்டராகவும் கொச்சின் ஆயரின் பிரதிநிதியாகவும் உத்தியோகபூர்வமாக நியமனம் பெற்றார்.** இவரது இலங்கைப் பணி 37ஆண்டுகளாக நீடித்தது. 1742ம் ஆண் ஆடி மாதம் 17ம் திகதி இறைவனடி சேர்ந்தார். இவரது உடல் போளவத்தையில் அவரால் கட்டப்பட்ட தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

கொன்சால்வெஸ் அடிகளார் 1705ம் ஆண்டு தொடக்கம் 1742ம் ஆண்டுவரையும் இலங்கையில ஆற்றிய மறைப்பணி அளப்பரியதாகும். அவர் தமது நிர்வாகப் பெறுப்புக்கள் மத்தியிலும் எண்ணற்ற பல கடினமான பயணங்களை மேற்கொண்டு பல பகுதிகளையும், பங்குகளையும் தரிசித்து நற்செய்திகளைப் போதித்து நூற்றுக் கணக்கான அற்புதங்களைச் செய்து ஆயிரக்கணக்கான அஞ்ஞானிகளை மனந்திருப்பி, கத்தோலிக்கரை அவர்கள் விசுவாசத்தில் உறுதிப்படுத்தி அரும்பணியாற்றியுள்ளார். சிறப்பாக அவர் இலக்கிய, கலை, நாடகத்துறைகளில் ஆற்றிய பணி மகத்தானது. சிங்கள தமிழ் மொழிகளில் சிறந்த தேர்ச்சி பெற்று இரு மொழிகளிலும் கத்தோலிக்கருடைய பிற மத்தினருடைய தேவைகளுக்கும் ஏற்ப **42ற்கும் அதிகமான நூல்களை** வெவ்வேறு இலக்கிய நடைகளில் எழுதியுள்ளார். அத்துடன் பல அகராதிகளையும் படைத்துள்ளார். கொன்சால்வெஸ் அடிகளார் தமது கருத்துக்களை விளக்குவதற்கு உவமானங்களை, ஒப்புவமைகளைப் பயன்படுத்துவதில் அதிசிறந்த வல்லுநர். அடிகளார் தமிழ் சிங்கள் கத்தோலிக்க இலக்கியத்துறைக்கு ஆற்றிய பாரிய பங்களிப்பினால் ‘‘கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை’’ எனப்பலராலும் இலங்கைத் திருச்சபை வரலாற்றில் அழைக்கப்படுகின்றார். இவரைப் பின் தொடர்ந்து வந்த குருக்களும் மறை பணியாளர்களும் சிங்கள, தமிழ் மொழிகளைக் **“கசடறக் கற்கவும்”** இலக்கியத்துறையில் ஈடுபடவும் சுதேச மொழிகளில் நூல்களை எழுதவும் தூண்டும் கோலாய் அமைந்தார்.

**அருட்திரு யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரின் படைப்புகள் (இலக்கியங்கள்)**

கொன்சால்வெஸ் அடிகளாரின் படைப்புக்களை பின்வருமாறு நோக்கலாம்.

- தமிழிலும் சிங்களத்திலும் - 10 இலக்கியங்கள்
- தமிழில் மட்டும் - 06 இலக்கியங்கள்
- சிங்களத்தில் மட்டும் - 08 இலக்கியங்கள்
- போர்த்துகேயத்தில் - 04 இலக்கியங்கள்
- ஒல்லாந்த மொழியில் - 01 இலக்கியம்
- அகராதிகள் - 04 அகராதிகள்

## தமிழிலும் சிங்களத்திலும் எழுதியவை

1. கிறிஸ்தியானி ஆலயம் - கிறீஸ்தியானி பள்ளிய
2. தேவ அருள் வேத புராணம் - தேவ வேத புராணய
3. சத்தியவேதாகம சங்கேபம் - தேவவேத சாங்கேபய
4. சுவிசேச விரிந்துரை – சுவிசேச விஸாதனய
5. வியாகுலப் பிரசங்கம் - துக் பறுப்பதி ப்றஸங்கய
6. தர்ம உத்தியானம் - தர்மோத்தியானய
7. அற்பத வரலாறு – ப்றதி ஆர்யவல்ய
8. ஞான உணர்ச்சி – ஞானுஞ்ஜனய
9. சுகிர்த தர்ப்பணம் - ஸக்றுத தர்ப்பணய
10. சுகிர்த குறள் - தர்ம ஸஞ்ஞாவ

## தமிழில் மட்டும் எழுதியவை

1. வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக் கொண்ட தர்க்கம்
2. நவதர்க்கம்
3. முசல்மன் வேதம்
4. கடவுள் நிர்ணயம்
5. நாலு வேதம்
6. சிந்துப் பிரார்த்தனை

## சிங்களத்தில் மட்டும் எழுதியவை

1. தேவ நீதி விஸர்ஜனய
2. அஞ்ஞான அவுசதய
3. புத்த பண ப்ரத்ய கூசய
4. புத்த மூல
5. பேதகாறயங்கே தர்க்கய
6. வேத காவ்ய
7. மங்க்ல கீத்திய
8. ஆனந்தக் களிப்புவ

**அகராதிகள்**

1. போர்த்துக்கேய – தமிழ் - சிங்கள அகராதி
2. சிங்கள – போர்த்துக்கேய அகராதி
3. போர்த்துக்கேய – சிங்கள அகராதி
4. தமிழ் சொற்தொடர்கள் அகராதி

இவரது இலக்கியங்களில் மிகச் சிறப்பு வாய்ந்த இலக்கியமாக விளங்குவது **'வியாகுலப் பிரசங்கம்'** (பசாம்) எனும் தவக்கால இலக்கியமாகும். சிங்களத்தில் 1728ம் ஆண்டும் தமிழில் 1730ம் ஆண்டும் எழுதப்பட்டது. ஏனெனில் இவ் இலக்கியம் ஆக்கிய காலமுதல் இன்றுவரை மக்களின் பயன்பாட்டிலும் தவக் காலங்களிலும் பாடப்பட்டு வருகின்றது எனலாம்.

## 3:9 பிலிப் பல்தேயுஸ் பாதிரியாரின் வாழ்வும் பணியும் (கி.பி. 1632 – 1671)

இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சி நிலவிய போது ஒல்லாந்த சீர்திருத்தமதச் செயற்பாடுகளை மேற்கொண்ட ஒல்லாந்த சீர்திருத்த சபைக் குரு இவரேயாவார். இலங்கை வாழ் கத்தோலிக் கரை ஒல்லாந்த சீர்திருத்த மதத்தில் சேர்க்கும் பணியில் அதி தீவிரமாக ஈடுபட்டார். 1658ம் ஆண்டு தொடக்கம் 1665வரையும் இவர் மறைபணி புரிந்தார். ஏற்கனவே போர்க்கேயர் கையாண்ட மத மாற்ற முறைகளை தாமும் பின்பற்றி தமது மத மாற்ற செயற்பாடுகளை மேற்கொண்டார்.

பிலிப்பல்தேயுஸ் பாதிரியார் ஒல்லாந்திலுள்ள **'டெல்ப்ற்'** என்ற ஊரில் 1632ஆம் ஆண்ட ஐப்பசி மாதம் பிறந்தார். நான்கு வயதில் தம் பெற்றோரை இழந்த இவர் முதலில் அவருடைய பேரனாலும் பின்பு அவருடைய நெருங்கிய உறவினரான **'றொபேட் யூனியஸ்'** என்பராலும் வளர்க்கப்பட்டார். தத்துவ சாஸ்த்திரத்தில் பட்டம் பெற்ற பல்தேயுஸ் தனது வளர்ப்புத் தந்தை யூனியஸைப் போல் தானும் ஒர் கல்வினிஸ்ற் மத போதகராக வர விரும்பி 1654ம் ஆண்டு தனது 21ம் வயதில் ஒல்லாந்த சீர்திருத்த சபையில் ஒரு மறை பணியாளராக நியமனம் பெற்றார். இந்தோனேசியாவிலுள்ள பட்டாவியாவிற்கு படையினர் மத்தியில் பணி புரிய 1654ம் ஆண்டு அனுப்பப்பட்ட பல்தேயுஸ், ஒல்லாந்தர் கொழும்பைக் கைப்பற்றிய துடன் படையினருக்கு பணி புரிய காலிக்கு 1656ம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டார். பின்பு ஒல்லாந்தர் 1658ம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார். யாழ்ப்பாணத் தை சுற்றியுள்ள தீவுகளுக்கும், மன்னார் மாதோட்டப் பகுதிகளுக்கும் மறைபோதகராக நியமிக்கப்பட்டார். பல்தேயுஸ் அப்பகுதியில் வாழ்ந்த

இந்து, கத்தோலிக்க மக்களை ஒல்லாந்த சீர்திருத்த சபைக்கு மனந்திருப்பும் செயற்பாட்டில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்.

பிலிப் பல்தேயுஸ் பாதிரியார் தமது மறைபரப்புப் பணியை போர்த்துக்கேய மறைபரப்பு பணியாளரின் முறைமையைக் கையாண்டே மேற்கொண்டார். போர்த்துக்கேயரின் ஆட்சியில் நாற்பது ஆண்டுகளாக தொடர்ச்சியான உறுதியான விசுவாசமும் மதப்பற்றும் நிறைந்த பெருந்தொகையான கத்தோலிக்கரைக் கொண்ட பகுதியிலேயே பாதிரியார் பணியாற்றினார். போர்த்துக்கேயர் காலத்து தேவாலயங்கள், பாடசாலைகள் மற்றும் அனைத்து சொத்துக்களும் ஒல்லாந்த சபையினருக்கு சொந்தமாக்கப்பட்டிருந்தன. ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பனியும் (DEIC) முழு ஆதரவையும் பாதியாருக்கு வழங்கியிருந்தது. இதனால் அவர் தமது மறைபரப்புப் பணியை மிகுந்த ஆர்வத்துடன் ஆரம்பித்தார். இவருடைய பொறுப்பில் 24 கிறிஸ்தவ சமூகங்கள் இருந்தன. பாடசாலைகளும் அவற்றிற்கு அருகிலிருந்த தேவாலயங்களும் அவரது மறைப்பணியின் மையமாக அமைந்தன.

மாணவர்கள் அனைவரும் பாடசாலைகளுக்கு சமூகமளிக்க கட்டளையிடப்பட்டதுடன் பெற்றோர் தம் பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பி வைக்கும்படியும் பணிக் கப்பட்டனர். பெற்றோர்களும் வளர்ந்தவர்களும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலயத்திற்கு வரவழைக்கப்பட்டனர். ஆரம்ப பாடசாலைகளில் ஆசிரியர்களால் முக்கியமாக மறைக்கல்வியே அளிக்கப்பட்டது. ஆசியர்களையும் கற்பித்தல் ஒழுங்கில் பல்தேயுஸ் பாதிரியார் வழிநடத்தினார். ஆலயங்களில் பல்தேயுஸ் பாதிரியார் வழிபாடுகளையும் மறைக் கல்வியையும் நடத்தினார். அவர் எழுதிக் கொடுத்த பிரசங்கங்கள் ஆலயங்களில், பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களினால் தமிழில் வாசிக்கப்பட்டன.

பல்தேயுஸ் பாதிரியார் மக்களுக்கு தெரிந்த மொழியில் மறைப்பணி புரிவதற்கு ஏற்ற வகையில் தமிழ்மொழியையும் , போர்த்துக்கேய மொழியையும் கற்றுக்கொண்டார். **"நற்செய்தியைப் போதிப்பதற்கு சிறந்த பயனுள்ள வழி - மக்களுக்கு எம்மொழியைக் கற்பிப்பதைவிட நாம் அவர்களின் மொழியைக் கற்று அறிவதே சிறந்தது" என்பதே அவரது கொள்கை.** - பாதிரியார் தமிழிலும் போர்த்துக்கேயத்திலும் மறைபரப்புதலுக்கு உதவியாக பல நூல்களை எழுதி வெளியிட்டு அவற்றைப் பாடசாலை ஆசியர்களுக்கு கொடுத்து உதவி செய்தார். இவர் எழுதிய நூல்களில் முக்கியமானது **"எம் மதத்தின் முக்கிய கடமைகள்"** என்ற மறைக்கல்வி நூலாகும். இன்னும் பல நூல்களையும் போர்த்துக்கேயத்தில் எழுதி

தமிழில் மொழிபெயர்த்தார். ஆரம்பத்தில் இவருக்கு உதவியாக வேறு பணியாளர்கள் யாரும் இருக்கவில்லை. இவர் தனித்தே பணியாற்றினார். இருப்பினும் பிற்பட்ட காலத்தில் **'யுவான் அ பிறில்' 'யுவான் டொங்கர்'** என்ற இருவரும் அவரது மறைப்பணிக்கு உதவியாளராகச் செயற்பட்டனர்.

தேவாலயங்களை அடிக்கடி தரிசித்து மறை போதனைகளை ஆற்றினார். ஞாயிறு தோறும் ஆலயங்களில் நடைபெற்ற வழிபாட்டின் போது அதிகமாக பாடசலைகள் ஆசிரியர்களால் இவர் எழுதி கொடுத்த பிரசங்கங்கள் வாசிக்கபட்டன. ஆசிரியர்களால் மறைக்கல்வி வினா-விடை முறையிலேயே இடம் பெற்றது. மறைக் கல்வி கற்பிக்கக் கூடிய சுதேச ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து அவர்களை **மறையாசிரியர்களாகப் (Catechist)** பயிற்றுவித்தார். பயிற்சிக்கென ஒரு குரு மடமும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்ட்டது. மறை போதகர்கள் ஆண்டுக்கு ஒரு முறை அப்பாடசாலைகளைத் தரிசித்து மாணவர்கள் மறையறிவில் அடைந்த முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தனர். அவ்வேளையில் தான் பிள்ளைகளுக்குத் திருமுழுக்கு அளிக்கப்ட்டு அவர்கள் ஒல்லாந்த சீர்திருத்த சபையில் சேர்த்துக் கொள்ப்பட்டனர். மேலும் மக்களுடையபிறப்பு, திருமுழுக்கு, திருமணம் போன்றனவும் தோம்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன. சிறப்பாக முதன்முதலில் இவரே **மத்தேயு நற்செய்தியை தமிழில் மொழி பெயர்ப்பு செய்தார்.** இதன் மூலம் வேதாகம அறிவையும் மாணவர்களுக்கு வழங்கினார்.

இவ்வாறாக பிலிப் பல்தேயுஸ் பாதிரியாரின் மறைபரப்பு பணியை நோக்கும் போது பெரும்பாலும் அவரது பணி பல சவால்கள் மத்தியில் இடம் பெற்றாலும் இறுதியில் வெற்றியாகவே அமைந்தது. இவரது பணியின் முடிவில் யாழ்ப்பாணத்திலிருந்த **'120,000'** மக்களில் **'100,000'** மக்கள் கல்வினிஸ்ற் மத கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். மற்றும் பாடசாலைகளில் **'18000'** க்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் கல்வி பயின்றார்கள். என தோம்புப் பதிவுகள் சான்று பகர்கின்றன. பாதிரியார் ஒரு சிறந்த சித்தி பெற்ற போதகராக அக்கால மக்களால் கருதப்பட்டார். இதனால் ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பனியும் **(DEIC)** சகல விதமான ஒத்துழைப்புக்களையும் இவருக்கு வழங்கியிருந்தது. இருப்பினும் பிற்பட்ட காலத்தில் கம்பனி இவருக்கு கொடுத்து வந்த ஆதரவை விலக்கியது என்பதனை அறியலாம்.

## பல்தேயுஸ் பாதிரியார் தம்மறைபரப்பு பணியின் போது எதிர்கொண்ட சவால்களும்,அதற்கு பதிலளித்த முறைகளும்

பிலிப்பல்தேயுஸ் பாதிரியார் கி.பி 1658ம் ஆண்டு தொடக்கம் 1665ம் ஆண்டு வரையான காலப் பகுதியல் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஆற்றிய மகத்தான மறை பணியின் போது பல விதமான இடையூறுகளையும் துன்பங்களையும் எதிர்நோக்கினார். அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

- யாழ்ப்பாணத்தை அண்டியுள்ள தீவுப்பகுதிகளில் நாற்பது ஆண்டுகளாக 40 குருமார் போர்த்துக்கேயர் காலத்தில் ஆற்றிய மறைப்பணியினால் அங்குள்ள பெருந்தொகையான மக்கள் கத்தோலிக்கராக மாறி உயிரூட்டமும், செயலூக்கமும் நிறைந்த கத்தோலிக்க சமூகமாக வாழ்ந்தனர். இவர்கள் மத்தியில் ஒல்லாந்த கல்வினிஸ்ற் மத்தைப் போதிப்பது மிக்ககடினமாக இருந்தது.
- மக்களோடு தொடர்பு கொள்வதற்கும் அவர்களுக்கு மறைக்கல்வி அளிப்பதற்கும் இவருக்கு சுதேசமொழி (தமிழ்) தெரியாமை பெரும் பிரச்சினையாகவிருந்தது. மக்களுக்கும் அவருடைய மொழியான ஒல்லாந்த மொழி பற்றிய அறிவும் இல்லை.
- மக்களுக்கு மறைக்கல்வி அளிப்பதற்கும், அவர்களுக்கு கல்வினிஸ்ற் மதக் கொள்கைகளை விளக்குவதற்கும் ஏற்ற நூல்களோ, மறைக்கல்விப் புத்தகங்களோ தமிழ், போர்த்துக்கேய மொழிகளில் இருக்கவில்லை.
- மறைப்போதகரினதும் உதவியாளரினதும் பற்றாக்குறையும் இவருப் பெரும் சிக்கலான இருந்தது. குறிப்பாக 40 கத்தோலிக்க குருக்கள் பணிபுரிந்த பகுதியில் இவர் மட்டுமே பல ஆண்டுகளாக தனித்து நின்று மறை பணி புரிந்தார்.
- எல்லா இடங்களுக்கும் சென்று மறைப் போதகம் செய்வது இவரால் முடியாத காரணமாக இருந்தது. ஏனெனில் உதவியாளர்களும் இருக்கவில்லை.
- பாடசாலைகளில் மறைக்கல்வி ஊட்டுவதற்கு தகுதி வாய்ந்த அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் இருக்கவில்லை.
- மாணவ, மாணவிகள் பாடசாலைக்கு வருவதில் அக்கறையோ, அதிக ஊக்கமோ காட்டவில்லை. வரவு மிகக் குறைவாகவே இருந்தது.
- ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பனிக்கும் இவருக்கும் பாடசாலை தரிசிப்பு விடயத்தில் ஏற்பட்ட முரண்பட்ட கருத்தினால் அக்கம்பனி இவருக்கு மறைபணியின் போது கொடுத்து வந்த ஆதரவினை நீக்கியது. இச்செயற்பாடு இவரது மறை பணியின் செயற்பாட்டிற்கு பிரச்சினையாக இருந்தது. "மறை போதகர்களுக்கு தம்பணியை தாமே ஒழுங்கு செய்து நடத்துவதற்குரிய சுதந்திரம் இருக்க வேண்டும்" என்று வாதாடி வந்தார்.

இவ்வாறான சவால்களை பாதியார் தம் மறைப்பரப்பு பணியின் போது எதிர்கொண்டாலும் அவற்றிற்கு சிறப்பான முறையில் பதிலளித்து செயற்பட்டு மறைபணியில் வெற்றியைப் பெற்றார். அதாவது அவர் எதிர் கொணட சவால்களுக்கு பதிலளித்த முறையை பின்வருமாறு நோக்குவோம்.

- போர்த்துகேயர் காலத்தின் இறுதியில் 40 வருடங்களாக 40 குருமார் ஆற்றிய பணியால் உறுதிநிலைபெற்ற கத்தோலிக்க சமூகத்தில் மனந்தளராது தனித்து நின்று பணியாற்றினார்.
- **'மக்கள் மறை போதகருடைய மொழியைக் கற்பதிலும் பார்க்க மறைபோதகர் மக்களின் மொழியைக் கற்பதே மேலானது'** என்ற கொள்கையுடைய பாதிரியார் தமிழையும், போர்த்துக்கேயத்தையும் கற்றார்.
- தமிழையும் போர்த்துக்கேயத்தையும் நன்கு கற்ற பாதிரியார் அம்மொழிகளில் தேவையான நூல்களையும் பிரசங்கங்க ளையும் ஆக்கினார்.
- பாடசாலையை தமது மறை பணியின் மையமாகக் கொண்டு தமது உதவியாளர்கள் மூலம் பாடசாலைகளில் மறைக்கல்வி யை வழங்கினார்.
- மறையாசிரியர்களை பயிற்றுவிக்க குருமடம் ஒன்றை நிறுவினார்.
- மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி அவர்களின் பாடசாலை வரவினை ஊக்கப்படுத்தினார்.
- எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வி, எல்லோருக்கும் கட்டாய ஞாயிறு வழிபாடு போன்ற செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தினார்.
- பாழடைந்திருந்த பாடாசலைகள், ஆலயங்களைத் திருத்துதல், ஒவ்வொரு பங்கிலுமுள்ள ஒரு பாடசாலைக்கு அரச செலவில் ஒரு மறையாசிரியர் நியமிக்கப்படல் போன்ற செயற்றிட்டங்களை மேற்கொள்ள சிபாரிசு செய்தார்.

இவ்வாறாகப் பாதிரியார் தாம் எதிர்கொண்ட சவால்களுக்கு சிறப்பான முறையில் பதிலளித்து தமது மறைபரப்புப் பணியில் வெற்றி நிலையை அடைந்தார். இருப்பினும் பாடசாலைப் பரிசோதனை விடயத்தில் இவருக்கும் கம்பனிக்கும் இடையே ஏற்பட்ட தகராற்றின் காரணமாக பாதிரியார் 1665ம் ஆண்டு முடிவில் தாம் பணியாற்றிய பங்கு கோவில்களுக்குச் சென்று மக்களுக்கு பிரியாவிடை கூறிய பின்பு தமது உதவியாளருடன் இலங்கை யிலிருந்து வெளியேறி ஐரோப்பாவிற்குப் பயணமானார்.

## 3:10 மதிப்பீடு :

இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சியைத் தொடர்ந்து ஒல்லாந்தரின் ஆட்சி இடம்பெறுகின்றது. போர்த்துககேயரால் ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்ட கத்தோலிக்க சூழல் மத்தியில் ஒல்லாந்தர் பல நெருக்கடிகள் மத்தியில் மறை பணி புரிந்தனர். இவர்கள் இருவரினதும் மதக் கொள்கை வேறுபட்டிருந்தது. இதனால் ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பனியில் **1642ம் ஆண்டு "கல்வினிஸ்ற் மதத்தைத் தவிர வேறு எந்தவொரு மததமும் இரகசியமாகவோ அல்லது பகிரங்கமாகவோ கற்பிக்கவோ பரப்பவே கூடாது"** என சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்டத்தை மீறுபவர்களின் உடமைகள் பறிமுதல் செய்யப்பட்டு அவர்கள் சிறையலிடப்படுவர் அல்லது நாடு கடத்தப்படுவரெனவும் எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டது.

இத்தகைய நெருக்கடியான சூழலின் போது அழிவுறும் நிலையிலிருந்த கத்தோலிக்க திருச்சபையை மீள கட்டியெழுப்பிய, சீரமைத்த சிற்பியாக அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் பணி முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. என்றால் மிகையாகாது. இக்காலத்தில் கத்தோலிக்க மதச் செயற்பாட்டிற்கு யோசப்வாஸ் அடிகளார், யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் மற்றும் ஒறற்றோறியன் சபைக்குருமார்களின் பணிகள்சிறப்பிடம் பெறுகின்றன. அதுபோல ஒல்லாந்த சீர்திருத்தமத (கல்வினிஸ்ற்) செயற்பாட்டிற்கு பணி புரிந்தவர்களாக பிலிப்பல்தேயுஸ் பாதிரியார் மற்றும் அவரது உதவியாளர்கள் ஆற்றிய பணியும் சிறப்பிடம் பெறுகின்றது. பாதிரி யாரின் மறை பரப்புப் பணியின் போது மனந்திரும்பியவர்கள் நீண்ட காலத்திற்கு அவ்விசுவாசத்தில் நிலைத்திருக்கவில்லை. என்றே கூறலாம். இதற்குப் பல காரணங்கள் செல்வாக்கு செலுத்தி யுள்ளன.

கல்வினிஸ்ற் மதம் இயல்பிலேயே கீழைத்தேய மக்களுக்கு ஒவ்வாததாகவிருந்தது. அது கத்தோலிக்க மத்தைப் போன்று மக்களை மதம் மாற்றத் தேடும் ஒரு மதமல்ல. மாறாக **வேதாகமத்தையே மையமாக கொண்டு அதிலேயே முற்று முழுவதும் தங்கியிருக்கும் அம்மதம்** மக்களிடத்தில் ஓரளவு கல்வி அறிவை. விளக்கத்தை எதிர்பார்த்து நின்றது. ஆனால் மக்களிடத்தில் அதற்குரிய கல்வியறிவும், விளங்கும் ஆற்றலும் காணப்படவில்லை மேலும் வெளித்தோற்றத்தில் மிகக் கடுமையானதாகத் தோன்றினாலும் கீழைத்தேச மக்களைக் கவரும் சடங்குகளோ, அழகான ஆடம்பரமான வழிபாடுகளோ, திருவிழாக்களோ, திருச்சுரூபப பவனிகளோ சங்கீதங்களோ இருக்கவில்லை. ஆனால் கத்தோலிக்க மத வழிபாடுகள் இந்து, பௌத்த மத வழிபாடுகளைப் பழக்கவழக்கங்களையும் தழுவி அமைக்கப்பட்டிருந் ததினால் மக்கள் அம்மதத்தின் பால் ஏராளமாகக் கவரப்பட்டனர் என்று கருதலாம்.

# 04.ஆங்கிலேயர் காலம் (கி.பி 1796-1948)

## 4.1 அறிமுகம்

இலங்கைத் திருச்சபை வரலாற்றில் 16ம் நூற்றாண்டில் கீழைத்தேச நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் நோக்குடன் இந்தியாவிற்கு வருகை தந்த போர்த்துக்கேயர் பின்பு இலங்கையை கைப்பற்றி கீழைத்தேச வர்த்தக ஏகபோக உரிமையைத் தமக்குச் சொந்தமாக்கிப் பெரும் வருவாயைச் சம்பாதித்தனர். இதனை அறிந்த ஒல்லாந்தரும் 17ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரின் கீழைத்தேச வர்த்தக உரிமைகளுக்குச் சவாலிட்டு ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பனி மூலமாக 1660ம் ஆண்டளவில் போர்த்துக்கேயரின் கீழைத்தேச உடமைமைகள் எல்லாவற்றையும் கைப்பற்றி வரத்தக ஏகபோக உரிமையை தமதாக்கிக் கொண்டனர். இதனைக் கண்ணுற்ற ஆங்கிலேயரும், ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பனியும் கீழைத்தேச வர்த்தகத்தில் தாமும் பங்கு பெற விரும்பினர். 1600ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பனிக்கு இங்கிலாந்து அரசி முதலாவது எலிசபெத் அம்மையார் கீழைத்தேச நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் ஏக உரிமையை அளித்தார். இத்தகைய பின்னணியிலேயே ஆங்கிலேயரின் இலங்கைக்கான வருகை இடம் பெறலாயிற்று.

## 4.2 ஆங்கிலேயரின் இலங்கைக்கான வருகை

ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பனியின் கீழிருந்த பகுதிகளின் நிர்வாகம் 1773ம் ஆண்டு ஆங்கிலேய அரசாங்கத்தின் கீழ் வந்தது. ஆங்கிலேயர் இந்துமா சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்தி இந்தியா வின் கிழக்கு மேற்குக் கரையோரங்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்து வங்காள விரிகுடாவில் ஒரு தகுந்த துறைமுகத்தை வைத்திருக்க விரும்பினர். இத்தகைய சூழ்நிலையிலேயே திருகோண மலைத் துறைமுகத்தை கைப்பற்றும் எண்ணம் அவர்கள் மனதில் தோன்றியது. இதனால் 1762ம் ஆண்டு 'பைபஸ்' என்ற தம் தூதுவரை கண்டி அரசனிடம் அனுப்பினர். ஒல்லாந்தருடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்த கண்டி அரசன் ஒல்லாந்தரை இலங்கையிலிருந்து விரட்ட ஆங்கிலேயர் உதவி செய்தால், அவர்கள் கேட்கும் திருகோணமலைத் துறைமுகத்தை அவர்களுக்கு வழங்குவதாகக் கூறினான். இதனால் ஆங்கிலேயர் ஒல்லாந்தரைத் தாக்கினர். திருகோணமலையிலிருந்த 'பிறெட்றிக்' கோட்டையைத்

தாக்கி 1795ம் ஆண்டு ஆவணிமாதம் 26ம்திகதி திருகோணமலைத் துறைமுகத்தை ஆங்கிலேயர் தம்வசம் கொண்டு வந்தனர். அடுத்து புரட்டாதி மாதம் 27ம் திகதி யாழ்ப்பாணமும், ஐப்பசி 5ம் திகதி மன்னாரும் கார்த்திகை மாதம் கல்பிட்டியாவும் இறுதியாக 1796ம் ஆண்டு மாசி மாதம் 14ம் திகதி கொழும்பும் அவர்கள் வசமாயின.

இவ்வாறாக 1796ம் ஆண்டு மாசி மாதம் 16ம் திகதி இலங்கையிலிருந்த ஒல்லாந்தரின் உடமைகளெல்லாம் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பனியின் கைக்கு மாறின.

## 4.3 இலங்கையில் ஆங்கிலேயரின் நிர்வாகம்

ஆங்கிலேயர் நாட்டைக் கைப்பற்றும் நோக்குடன் இலங்கைக்கு வரவில்லை. யுத்த தந்திரப்படி முக்கியமான இடத்தில் இலங்கை இருந்ததினாலேயே அவர்கள் இலங்கைக்கு வந்தனர். குறிப்பாக இந்தியாவிலிருந்த அவர்களின் வர்த்தக நிலையங்களை பிரான்ஸ்காரரிடமிருந்து பாதுகாக்க அவர்களுக்கு அவசியமாயிருந்த துறைமுகம் திருகோணமலையில் அமைந்திருந்ததே அவர்களை இலங்கைக்கு வரச்செய்தது எனலாம். ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பனியால் கைப்பற்றப்பட்ட இலங்கையின் சிவில் நிர்வாகம் இலங்கையிலுள்ள ஆங்கிலேயப் படையின் தளபதியான **கேர்ணல் ஜேம்ஸ் ஸ்டுவார்ட்டிடம்** ஒப்படைக்கப்பட்டது. ஆங்கிலேயர் பொதுவாக அங்கிளிக்கன் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாயிருந்ததால் கத்தோலிக்கர் மட்டில் மிகவும் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டனர். இலங்கை ஒற்றறோரியன் சபைச் சிரேஸ்டரான **வண.டொமிங்கோஸ் மொன்ரெய்றோ அடிகளாரின்** விண்ணப்பத்தின் படி ஆங்கிலேய தளபதி ஆங்கிலம், ஒல்லாந்தம், போர்த்துக்கேயம் ஆகிய மும்மொழிகளில் அறிக்கையொன்றினை 1796ம் ஆண்டு ஆவணி மாதம் 3ம்திகதி வெளியிட்டார். அதன் படி இலங்கையிலிருக்கும் றோமன் கத்தோலிக்க குருக்கள் தம் மத முறைப்படி வழிபாடுகளை தங்குதடையின்றி நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

1798ம் ஆண்டில் **பிறெட்றிக் நோத்** என்பவர் இலங்கையின் சிவில் நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்தார். தம் பொறுப்பில் வாழும் மக்களுக்கு **மனச்சாட்சிச் சுதந்திரம்** அளித்து அவர்கள் தம் விருப்பப்படி மத வழிபாடுகளை அனுசரிக்க அனுமதிக்கும்படியும், கத்தோலிக்கருக்கு விசேடஇரக்கம் காட்டுமாறும் ஆங்கிலேய அரசால் கேட்கப்பட்டிருந்தார். இதன்படி கத்தோலிக்கரின் மீது சுமத்தப்பட்ட

வரிகள் நீக்கப்பட்டன. அவர்கள் தம்முறைப்படி தம் **சேமக்காலையில் இறந்தோரை அடக்கம் செய்தல், திருமணம் செய்து கொள்ளல், திரு முழுக்கு வழுங்கல்** முதலான செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆண்டுக்கு நான்கு முறை திருமுழுக்கு, திருமணம், மரண அடக்கம் பற்றிய கணக்கு விபரங்களை ஒழுங்காக அனுப்பி வைக்கும்படியும் குருக்கள் கேட்கப்பட்டிருந்தனர். மேலும் கத்தோலிக்கர்கள் தம் மததைப் பின்பற்ற முழுச் சுதந்திரமும், கத்தோலிக்க குருக்கள் தம் மறைபணியை ஆற்றி மதவழிபாடுகளை நடாத்தவும் அனுமதி வழங்கப்பட்டன.

1801ம் ஆண்டு இலங்கையின் நிர்வாகத்தை கிழக்கிந்திய கம்பனியிடமிருந்து ஆங்கிலேயஅரசு பொறுப்பெடுத்தது. இதனால் **1802ம் ஆண்டு இலங்கை ஒரு அரச குடியேற்ற நாடாகப் பிரகடணம்** செய்யப்பட்டது. அதன் முதல் கவனராக **'பிறெட்றிக்நோத்'** நியமிக்கப்பட்டார். பல ஐரோப்பிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த அவர் கத்தோலிக்கர் விடயத்தில்- கத்தோலிக்க மறைபரப்பாளர்கள் மட்டில் மிக இரக்கம் காட்டி அவர்களை கூடிய அன்புடன் நடத்தினார். கத்தோலிக்க மாணவமாணவிகளுக்கென சில பாடசாலைகளை ஆரம்பிக்க அனுமதியளித்தார். எனினும் ஒல்லாந்தரால் கத்தோலிக்கருக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டங்கள் இன்னும் சட்டப்புத்தகத்திலிருந்து அகற்றப்படாமலிருந்தன. புதிதாக 1805ம் ஆண்டு பதவி ஏற்ற கவனர் **தோமஸ் மெயிற்லன்ட்**- '**எம் மதமும் சம்மதம்**' என்ற கருத்தை உடையவராக திகழ்ந்தார். எவரும் தம்மத்தை மற்றவர்கள் மேல் திணிப்பதைப் பொறுக்காத இவர், இறை உதவியினால் கத்தோலிக்கர் மேல் ஒல்லாந்தரால் விதிக்கப்பட்ட பலவிதமான தடைச்சட்டங்களை அகற்றும் கட்டளையை **1806ம் ஆண்டு வைகாசி மாதம் 27ம் திகதி பிரகடணம் செய்தார்.** இதனால் இலங்கை திருச்சபை வரலாற்றில் மதச்சுதந்திரம் உதயமாகியது. கத்தோலிக்க சமூகம் பலவித நன்மைத்தனங்களை அனுபவிக்கத் தொடங்கினர்.

## 4.4 ஒல்லாந்த தடைச் சட்டங்கள் அகற்றப்பட்டதன் பயனாக கத்தோலிக்க சமூகம் அனுபவித்த நன்மைத்தனங்கள்.

◊ கத்தோலிக்கர் தம்மனச்சாட்சியின் படி நடக்கவும், தாம் விரும்பும் மதத்தைப் பின்பற்றவும் தம் மதவழிபாபடுகளை எவ்வித தடையுமின்றி நடாத்தவும் முழுமையான மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.

- இலங்கையின் ஆங்கிலேய குடியிருப்பிலுள்ள எந்தவொரு பகுதியிலும் எவ்வித துன்புறுத்தல்களும் இன்றித் தம்மதத்தை அறிக்கையிட்டு அனுசரிக்க அனுமதிக்கப்பட்டனர்.
- **கத்தோலிக்கர் சகல சலுகைகளையும், பதவிகளையும் பெற தகுதியுடையவர்களாயினர்.**
- 1795ம் ஆண்டிலிருந்து ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் சடங்கு முறைப்படி இடம் பெற்ற சகல திருமணங்களும் அவை ஒல்லாந்த அரசு நிர்ணயித்த முறைப்படி நடைபெற்றிருக்காவிட்டாலும் சட்ட பூர்வமானவையாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- இந்தச் சட்டங்கள் அரசின் பிறந்த தினமாகிய ஆனி மாதம் நான்காம் திகதி அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டது.
- இச்சட்டங்களுக்கு முரணான வேறு எந்தச்சட்டங்கள், பிரகடணங் களின் எந்தவொரு பகுதியும் இத்தால் ரத்து செய்யப்படுகின்றது. எனவும் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறான பிரகடனப்படுத்துதலினால் திருச்சபையில் நீண்ட காலமாக நிலவிய கலாபனைகளும் துன்புறுத்தல்களும் முடிவுக்கு கொணரப்பட்டது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளுக்கு நன்றி கூறி **83,000 கத்தோலிகர்கள் கையொப்பமிட்டு கவணருக்கு வாழ்த்துக் கடிதம்** எழுதி **அனுப்பினர்.** கத்தோலிக்கர் மதச் சுதந்திரம் கிடைத்த **1806ம் ஆண்டு ஆனி மாதம் நான்காம் திகதியை இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை** மறுபிறப்படைந்த **நாள்** எனக் கூறுவர். எனினும் கவணரால் பிரகடணம் செய்ப்பட்ட சட்டமூலம் கத்தோலிக்கரின் சமூக அழுத்தத்தின் விளைவே அன்றி நீதியை நிலை நாட்ட வேண்டும் என்ற நோக்கில் ஏற்படுத்தப்பட்டதல்ல. இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் 1829ம் ஆண்டு சித்திரை மாதம் 13ம்திகதி அங்கீகரிபப்பட்ட **"அரசருக்கு கீழ்ப்பட்ட ரோமன் கத்தோலிக்க குடிமக்களுக்கு நிவாரணம்"** என்ற சட்டமூலமே இலங்கை போன்ற ஆங்கிலேய குடியேற்ற நாடுகளில் வாழும் கத்தோலிக்க சமூகத்திற்கு உண்மையான மதச்சுதந்திரத்தை அளித்ததுடன் அவர்களை நிறைவான பிரசைகளாக்கியது. அடுத்து வந்த கவணர் **'பாண்ஸ்'** அரசுக்கு விசுவாசப் பிரமாணம் செய்த பின்பு கத்தோலிக்கருக்கு அரசாங்க பொறுப்புள்ள, நம்பிக்கைக்குரிய பதவிகள் வழங்கப்படலாம், என இலங்கிலாந்திலிருந்து பணிப்புரை வழங்கினார்.

## 4.5 கத்தோலிக்க குருமாரின் பணி

முழு மதச்சுதந்திரம் பெற்ற கத்தோலிக்க குருக்களும் மறை பரப்பாளர்களும் தம்பணியை மிக ஆர்வத்துடன் தொடர்ந்து செய்தனர். தம் பங்கிலுள்ள கோவில்களை தரிசித்து மறைப்போதகம் செய்து திருப்பலி ஒப்புக் கொடுத்து திருவருட்சாதனங்களை நிறை வேற்றினர். திருமணங்களையும் நிறைவேற்றி குடும்பத் தகராறுகளையும் தீர்த்து வைத்து நோயாளிகளைத் தரிசித்து இறந்தவர்களை அடக்கம் செய்யும் மனித நேயப் பணிகளிலும் பிராமாணிக்கத்துடன் செயற்பட்டனர். தமது முன்மாதிரிகைமிக்க சாட்சிய வாழ்வால் பலரை திருச்சபையில் இணைத்துக் கொண்டனர்.

1829ம் ஆண்டு இலங்கையெங்கும் 323 ஆலயங்களும் சிற்றாலயங்களும் இருந்தன. கொழும்பு, யாழ்ப்பாணம், நீர்கொழும்பு, களுத்துறை, காலி, திருகோணமலை போன்ற இடங்களில் பெரிய உறுதியான ஆலயங்களும் கட்டப்பட்டிருந்தன. 16 ஒறற்றோறியன் சபைக் குருக்கள் கத்தோலிக்க விசுவாசிகளுக்குப் பணிபுரிந்தனர். இவ்வாறாக கத்தோலிக்க மக்களின் உடல், உள, ஆன்மீகப் பணிகளிலும் கத்தோலிக்க குருமார் சிறந்து விளங்கினர்.

## 4.6 கண்டி அரசில் ஆங்கிலேயரின் பிரசன்னம் - ஆட்சி

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்- இலங்கையை ஆண்டகாலத்தில் கண்டி அரசு ஒரு சுதந்திர தனி அரசாகவே இருந்து வந்துள்ளது. ஆங்கிலேயரின் ஆட்சியின் ஆரம்பத்திலும் அது அவ்வாறே இருந்து வந்தது. ஏற்குறைய 300 ஆண்டு காலமாக இலங்கையில் ஒரே தனிச் சுதந்திர அரசாக கண்டி அரசு செயற்பட்டு வந்தது. ஆனால் 19ம் நூற்றாண்டில் ஆட்டம் காணத்தொடங்கியது. கண்டி அரசின் பதவிக்கு உரிமைகோரி தமிழ் - சிங்கள அதிகாரிகளுக்கு இடையே நிலவிய பிரச்சினைக்கு உரிய தீர்வினை கொடுத்து உதவி செய்யும் நோக்கில் கண்டி அரசிற்குள் ஆங்கிலேயர் உட்பிரவேசித்தனர். இதன் மூலம் தம் ஆட்சியை அங்கு நிலைநாட்டி உறுதி செய்து கொண்டனர். இவ்வாறு 1815ம் ஆண்டு, 300 ஆண்டுகளாக சுதந்திரத் தனி அரசாக இருந்த கண்டி அரசும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குள் கொண்டு வரப்பட்டது.

## 4.7 ஆங்கிலேயர் காலத்தில் முழுமையான மதச்சுதந்திரமும் அதன் பல்பரிமாணத் தாக்கமும்.

ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்ட முழு இலங்கையும் எவ்வித படையெடுப்புக்களோ, உள்நாட்டுப் போர்களோ, குழப்பங்களோ இன்றி பொருளாதாரம், தொழிற்றுறை, வர்த்தகம், தொலைத்தொடர்புகள், அரசியல் நிர்வாகம் போக்குவரத்து, கல்வி போன்ற சகல துறைகளிலும் துரிதமாக முன்னேறியது. ஆங்கிலம் முழு இலங்கையினதும் அரச கருமமொழியாகப் பிரகடணம் செய்யப்பட்டது. ஒல்லாந்தரின் ஆட்சியின் போது நிலவிய சட்ட அமுலாக்கத்தினால் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து விலகி கல்வினிஸ்ற் சபையை தழுவிய பலரும், பிற மதத்தினரும் கத்தோலிக்க திருச்சபையில் மீண்டும் இணைந்து கொண்டனர். ஒறற்றோரியன் சபைக் குருக்களும் அவர்களுக்குப் பணி புரிந்து எவ்வித தடைகளுமின்றி எங்கும் பயணம் செய்து விசுவாசிகளைத் தரிசித்து தம் வழிபாடுகளை நிறைவேற்றினர். மதச் சுதந்திரம் கத்தோலிக்கருக்கு மட்டுமல்ல பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் புரட்டஸ்தாந்து பிரிவினை சபைகளுக்கும் கிடைக்கப் பெற்றதனால் அனைவரும் மும்முரமாக தமது மறைபரப்பு பணியில் ஈடுபட்டனர்.

மதச் சுதந்திரத்தினால் தம் விசுவாசிகளுக்கு ஏற்படக் கூடிய ஆபத்து நிலையினை உணர்ந்த கத்தோலிக்க குருக்கள் கத்தோலிக்கரல்லாத மறைகளின் தப்பறையான போதனைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றி கத்தோலிக்க மறையறிவை வளர்த்து அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்த வேண்டிய தேவையிருந்தது. மனச்சாட்சிச் சுதந்திரத்தினால் கத்தோலிக்கருக்கு அரச பதவிகள் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இதற்கு அவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற வேண்டியிருந்ததால் பாடசலைகளில் ஆங்கிலம் கற்பிக்க வேண்டிய கட்டாய தேவை எழுந்தது. மேலும் மதச் சுதந்திரம் கத்தோலிக்கர் மத்தியில்- அவர்களின் மத வாழ்வில் ஒரு வித வளர்ச்சியையும், பின்னடைவையும் ஏற்படுத்தியது. பலர் ஞாயிறு திருநாட்களை அனுசரிப்பதை கைவிட்டு ஞாயிற்றுகிழமைகளில் தம் வியாபாரம் மற்றும் தொழில்களில் ஈடுபட்டனர். “எம்மதமும் சம்மதம்” என்ற கருத்து பரவியது. அவர்களின் மதப்பற்றும் மறைக்கல்வி கற்கும் ஆர்வமும் திருவருட்சாதனங்களைப் பெறவிருந்த ஆசையும், குறைந்து போயின. இதனால் சுதந்திர காலம் ஒறற்றோரியன் சபைக் குருக்களைப் பாதித்தது எனலாம்.

யோசப்வாஸ் அடிகளாரிடமிருந்து ஒறற்றோரியன் சபைக்குருக்கள் பெற்றுக் கொண்ட **அப்போஸ்தலிக்க ஆர்வம், ஆன்மீக வாஞ்சை, தியாக நிறைந்த பணி வாழ்வு, உலகப் பற்றற்ற வாழ்வு,** செப வாழ்வு போன்றன படிப்படியாக குறைந்து போயின. குருக்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் முதலான மொழிகளை கற்க எவ்வித முயற்சியும் எடுக்காது, சிறுவர்களுக்கு மறைக்கல்வி புகட்டும் பொறுப்பை தகுதியில்லாத மறையாசிரியர்களிடம் ஒப்படைத்து விட்டு தாங்கள் உல்லாசமாக வாழ்ந்தனர். மறைப்பணியில் எவ்வித ஆர்வமுமின்றி தமது சுகநலனையே தேடியவர்களாய் சொகுசான வாழ்க்கை வாழ்ந்தனர். மக்களுக்கு மறை பணி செய்யத்தக்கதாக தமது வாழ்க்கையை அமைக்காது, மக்கள் குருக்களின் சுகமான வாழ்க்கைக்கு ஏற்ற வித்தில் தங்கள் வாழ்வை அமைக்க வேண்டும் என விரும்பினர். இத்தகைய குருக்களின் செயற்பாட்டினால் அதிருப்தியடைந்த கத்தேலிக்க சமூகம் ஒறற்ரோறியன் குருக்களுக்கு எதிராக மேலிடங்களுக்கு முறைப்பாடுகள் பலவற்றைச் செயதனர். தங்களுக்குப் பணி புரிய ஐரோப்பிய மறைபரப்பாளர்களை அனுப்பி வைக்கும் படி விசவாசப் பரம்புதல் சபைக்கு விண்ணப்பம் செய்தனர்.

## 4.8 ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு மற்றும் சமூக,சமய முன்னேற்றத்திற்கு பணி புரிந்த ஐரோப்பிய மறைபரப்புச் சபைகள்

இலங்கையில் நிலவிய மதசுதந்திரத்தைப் பயன்படுத்தி இங்கிலாந்திலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் பல மறைபரப்புச் **(Mesanery)**சபைகள் இலங்கைக்கு வருகைதந்து கல்வி,சமய,சமூக. முன்னேற்றத்திற்கு அயராது உழைத்தன.

1. 1801ம் ஆண்டு **அங்கிலிக்கன்** சபையைச் சேர்நத **கிறிஸ்ரியன் டேவிட்** தலைமையில் வந்த **"கிறிஸ்தவ அறிவை வளர்க்கும் சபை"** இச்சபையே முதலில் தனது மறைபரப்புப் பணியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தது.
2. 1805ம் ஆண்டு வருகை தந்த லண்டன் மிஷன்றிச் சபையைச் சேர்ந்த **நான்கு முன்னோடி மறைபரப்பாளரக்கள்.**
3. 1812ம் ஆண்டு வண **ஜேம்ஸ்சாட்டரின்** தலைமையில் வந்த **பப்ரிஸ்ற் மிஷனறி** சபையினர். இவர்கள் கொழும்பில் தமது நடுநிலையத்தை அமைத்து இலங்கையின் பலபாகங்களிலும் குறிப்பாக இரத்தினபுரி, தங்காலை, கடவத்தை, கண்டி, மாத்தளை போன்ற இடங்களில் ஆலயங்களையும்

பாடசாலைகளையும் அமைத்தனர். கொழும்பில் இவர்கள் அமைத்த **'கேரி பப்ரிஸ்ற் கல்லூரி'** குறிப்பிடத்தக்கது.

4. 1815ம் ஆண்டு **மெதடிஸ்த சபையினர் (வெஸ்லியன்சபை).** ஆறு வெஸ்லியன் மறை பரப்பாளர்கள் மேற்கு கடலோரமாக தம் பணி நிலையத்தை அமைத்து 1828ம் ஆண்டளவில் 54 தம்மதப் பாடசாலைகளையும் ஒருஅச்சுக்கூடத்தையும் அமைத்துக் நிர்வகித்தனர்.

குறிப்பாக கொழும்பில் **மெதடிஸ்த கல்லூரிகள்,** கண்டியில் **கிங்ஸ்வூட்,** காலியில் **றிச்மொன்ட்** போன்ற பாடசாலைகள் குறிப்பிடத்தக்கவை. கொழும்பு டாம் வீதியில் இவர்கள் அமைத்த ஆலயமே இன்று ஆசியாவில் பழமை வாய்ந்த மெதடிஸ்த ஆலயமாகும். மேலும் இவர்கள் சுகாதார சமூக சேவைகளிலும் ஈடுபட்டு அனாதை மடங்களையும் நடத்தினர்.

5. 1815ம் ஆண்டு வருகை தந்த **"சேர்ச் மிஷனறி சபை". (CMS)** இவர்கள் இலங்கையின் பல இடங்களிலும் சிறப்பாக கிராமப்புறங்களில் பாடசாலைகளை ஆரம்பித்தனர்.

6. **அமெரிக்கமிஷன் சபையும்** இலங்கைக்கு வருகை தந்து யாழ்ப்பாணத்தில் தம் பணித்தளத்தை அமைத்துக் கொண்டு சுதேச சிறுவர்களின் கல்வியிலேயே கூடிய கவனம் செலுத்தி மாணவ மாணவிகள் பாடசாலைகளில் இலவசமாக தங்கியிருந்து கற்கக் கூடிய விடுதி வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

இவர்கள் 1823ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் ஒரு மத்திய உயர்தரப் பாடசாலையையும் , ஒரு குரு மடத்தையும், உடுவிலில் ஒரு மகளிர் கல்லூரியையும் கிராமப்புறங்களில் பல ஆரம்பப் பாடசலைகளையும் ஆரம்பித்தனர். திறனும் அறிவாற்றலும் உள்ள சுதேச ஆண்களையும் பெண்களையும் தெரிந்தெடுத்து தம் பாடசலைகளில் கற்பிக்க ஆசிரியர்களாகப் பயிற்றுவித்தனர்.

மேலும் இந்த சுதந்திரயுகத்தில் இன்னும் பல துறைவற சபைகளும் இலங்கைக்கு வந்து தம்பணியினை ஆரம்பித்தனர். அமல மரித்தியாகிகள் சபை (1849) மற்றும் கன்னியர் சபைகளான திருக்குடும்ப கன்னியர் சபை (1862) இவர்களே இலங்கைக்கு வருகை தந்த முதல் ஐரோப்பிய கன்னியர் சபையாகும். டிலாசால் கிறிஸ்தவ சகோதரர்கள் (1867) இவர்கள் கொழும்பில் புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியை பொறுப்பெடுத்து நிர்வகித்தனர். நல்லாயன் சபை (1869) இச்சபையைச் சேர்ந்த ஐந்து கன்னியர்கள் கொழும்பில் பெண்கள் பாடசலையொன்றினை ஆரம்பித்தனர். பிரான்சிஸ்கன் சபைக் கன்னியர்கள் (1886) இலங்கைக்கு வந்து

வைத்தியசாலைகளிலும் அநாதை மடங்களிலும் தம்பணியை ஆரம்பித்தனர். **யேசுசபையினர் (1893)** இலங்கைக்கு வந்து பாடசாலைகளில் பணி புரிந்தனர். இதனை விட பிறர் சிநேக **சகோதரிகள் (1888) மாரிஸ்ட் சகோதரர்கள், பிரான்சிஸ்கன் மரியாள் சபைக் குருக்கள்** எனப் பல சபைகள் இக்காலகட்டத்தில் இலங்கைக்கு வருகை தந்து பலவித மறைபணிகள், பிறர் நல சமூக சேவைகளிலும் ஈடுபட்டனர்.

இவ்வாறாக இலங்கையில் பணிபுரிய வந்த ஐரோப்பிய மிஷனறி சபைகள் இலங்கையின் பல பாகங்களிலும் பாடசாலைகளைக் கட்டினர். தங்களின் மதத் தலைமைப்பீடங்களினதும் இலங்கை ஆங்கிலேய அரசாங்கத்தினதும் நிதி உதவிகளைப் பெற்று கொண்டு மாணவர்களைச் சிறந்த முறையில் பயிற்றுவித்தனர். இதனால் பெருந்தொகையான மாணவர்கள் பாடாசலைகளுக்கு வரவழைக்கப் பட்டனர். பல கத்தோலிக்க பெற்றோரும் தம் பிள்ளைகளைப் புரட்டஸ்தாந்து பாடசாலைகளில் சேர்த்தனர். சிறந்த கல்விமான்களான புரட்டஸ்தாந்து மிஷனறி ஆசிரியர்களும் தம் பணிக்கு தம்மை முழுவதுமாக அர்ப்பணித்து அருமையான கல்விச் சேவை புரிந்தனர். **இருபது வருடங்களுக்குள் இலங்கை எங்கும் 235 பாடசாலைகளுக்கு மேலாக நிறுவி 10,000 மாணவர்களுக்கு கலவி அறிவு ஊட்டினர்.** இதன் காரணமாக ஆசியாவிலேயே 19ம் நூற்றாண்டில் கல்வித்துறையில் இலங்கை முதல் தர நாடாக பிரகாசித்தது என்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாத வரலாற்றுப் பாடமாகும்.

## 4.9 ஆங்கிலேயர் காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாக அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்.

ஆங்கிலேயர் காலத்தில் ஏற்பட்ட சதந்திரத்தினால் கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாக அமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. கீழைத்தேய நாடுகளில் போர்த்துக்கேயரின் அதிகாரம் நலிந்து போனதால் அவர்களோடு செய்த கொள்ளப்பட்ட **"பத்றோ ஆதோ"** ஒப்பந்தம் திருத்தந்தை பதினாறாவது கிரகோரியாரினால் 1838ம் ஆண்டு வெளியிடப்பட்ட **"முல்ரா பிறேகிளாறே"** என்ற அதிகார அறிக்கையினால் செல்லுபடியற்றதாக்கப்பட்டு இந்திய நாடுகளின் மறை பரப்பு பணி **'விசுவாசப் பரம்புதல் சபையினரிடம்'** ஒப்படைக்கப்பட்டது. இதற்கு இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரு சில பகுதியினரால் பல எதிர்பார்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டு ஒரு பிரிவினையே வரக் கூடிய ஆபத்து கூடத்தென்பட்டது. மேலும் 275 ஆண்டுகளாக கொச்சின் மறை மாவட்டத்தின் கீழிலிருந்த இலங்கை

பிரித்தெடுக்கப்பட்டு ஒரு தனி மறைமாநிலமாக **(Vicariate apostolic of Ceylon)** நிறுவப்பட்டது.

இலங்கையில் ஒற்றரோறியன் சபையினர் ஆற்றிய பணியினை பாராட்டும் வண்ணம் அச்சபையின் குரு முதல்வரும், சிரேஷ்டராகவுமிருந்த **அதி வண. பிரான்சிஸ்கோ சேவியர் அடிகளார்** இலங்கையின் முதல் அப்போஸ்தலிக்க விக்காராக நியமிக்கப்பட்டார். அவர் தம் பதவியை ஏற்கும் முன்பு இறந்து போனதால் அவரைத் தொடர்ந்து சபையின் சிரேஷ்டராகவிருந்த **அதி வண. வின்சென்ரே டோ றொசைறோ அடிகளார்** இலங்கையில் இரண்டாம் அப்போஸ்தலிக்க விக்காராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில இலங்கை கத்தோலிக்க திருச்சபையில் ஒரு புதிய சகாப்பதம் ஆரம்பமாகியது. ஏனெனில் இவரது ஆட்சியில் ஆங்கிலேயர் காலத்தில் முதல் ஐரோப்பிய கத்தோலிக்க மறைபரப்பாளர் (மிஷனறி) **வண. அலெக்சாந்தர் டுமோஸ்** என்பவர் 1842ம் ஆண்டு பங்குனி 11ம் திகதி இலங்கைக்கு வருகை தந்தார். அத்துடன் இலங்கைக்கு வந்த இரண்டாவது ஐரோப்பிய கத்தோலிக்க மறைபரப்பாளர் **வண. ஓறாஷியோ பெற்றகினி அடிகளார்** ஆவார். இவரும் 1842ம் ஆண்டு பங்குனி மாதத்தின் பின்பு வந்தார். இவரே விசுவாசப்பரப்புதல் சபையினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட முதல் ஐரோப்பியமிஷனறி என்பதும் குறிப்பிடத்தக்கது. மூன்றாவதாக இலங்கைக்கு வந்த ஐரோப்பிய கத்தோலிக்க மறைபரப்பாளர் பிரெஞ்சுக் குருவான **வண. அந்திரே றெய்னோ அடிகளாவார்.** ஐரோப்பிய மிஷனறிமார் இலங்கைக்கு வந்தால் தங்கள் ஆதிக்கம் பறிபோய் விடும் எனப் பயந்து அவர்களின் வருகையை விரும்பாத ஒறற்றோறியன் சபைக் குருக்கள் எதிர்ப்பையும் வெறுப்பையும் வெளிப்படுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை வட, தென் மாநிலங்களென இருமறை மாநிலங்களாகப் (Vicariates) 1847ம் ஆண்டு பிரிக்கப்பட்டு வட மாநிலத்தின் தற்காலிக விக்காராக அதி. வண. பெற்றக்கீனி ஆண்டகை நியமிக்கப்டார். 1849ம் ஆண்டு வடமாநிலம் மீண்டும் ஓர் தனி மாநிலமாக பிரிக்கப்ட்டு அதன் முதல் அப்போஸ்தலிக்க விக்காராக பெற்றக்கீனி ஆண்டகை நியமனம் பெற்றார். அவருடைய இடமாக கொழும்பு மறைமாநில இணைஉதவி விக்காராக சில்வெஸ்திரன் ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த இத்தாலியரான யோசவ் பிராவி அவரக்ள் நியமிக்கபட்டார். 1849ம் ஆண்டு இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம் என்னும் இரு மறை மாநிலங்கள் மட்டுமே இருந்தன. மேலும் 1886 ம் ஆண்டு இலங்கை

ஓர் தனிச் திருச்சபை அமைப்பாக நிறுவப்பட்டு கொழும்பு ஒரு அதிமேற்றிராசனமாகவும் யாழ்ப்பாணமும் கண்டியும் அதற்குக் கீழ்ப்பட்டமேற்றிராசனங்களாகவும் நிறுவப்பட்டன. அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் பொன்ஜின் அடிகளார் கொழும்பு அதிமேற்றராசனத்தின் முதல் அதிமேற்றறிராணியாராக நியமிக்கப்டார். அதை தொடர்ந்து பிற்பட்ட ஒவ்வொரு காலகட்டங்களிலும் பலர் பொறுப்பு ஏற்று மேற்றிராசன வளர்ச்சிக்கு பணி புரிந்தனர்.

இவ்வாறாக ஆங்கிலேயர் காலத்தில் கிடைத்த மதச் சுதந்திரத்தினால் கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாக கட்டமைப்புகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டு பல துறைகளிலும் அது அபிவிருத்தியடைந்து முன்னேறியது எனலாம்.

## 4:10 முழுமையான மதச்சுதந்திரத்தின் பயனாக மறை பணிக்காக ஆற்றப்பட்ட பன்முக சேவைகளும் சமுதாய நலன் முன்னேற்றங்களும்.

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நிலவிய மத சுதந்திரத்தினை பயன்படுத்திய பல ஐரோப்பிய புரட்டஸ்தாந்து மிஷனறிக் குழுக்களும், கத்தோலிக்க குருக்களும், துறவற கன்னியர் சபையினரும் இலங்கைக்கு வருகை தந்து தமது மறைபரப்பு பணியில் முழுமையான ஆர்வத்துடன் ஈடுபட்டனர். இவர்கள் தங்கள் மறை பணியில் மட்டும் நின்று விடாது கல்வி, பிறர் நல – மனித நேயப் பணிகள், சமுக நலச் சேவைகளிலும் தம்மை அர்ப்பணித்து மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தனர். அனைவரும் பின் தங்கிய நிலையிலிருந்த கல்வித் துறையில் அதிக கவனம் செலுத்தி அதனை உயர்த்த பல பாடசாலைகளை அமைத்து மாணவர்களுக்கு சிறந்த கல்வியறிவு ஊட்டி, அவர்களை நல்வழிப்படுத்துவதில் தமது கவனத்தைச் செலுத்தினர். கல்வித்துறையை விட அவர்களது அன்புப் பணியும் இன்னும் பல துறைகளில் செயற்பட்டன.

துறவற கன்னியர்கள் அநாதைமடங்கள், சிறுவர் இல்லங்கள், நன்நடத்தை விடுதிகள், வைத்திய பராமரிப்பு இல்லங்கள், வயோதிப இல்லங்கள், புலனற்றோர் நிலையங்கள் போன்ற மனித நேய–சமுக நலன் பேணும் தாபனங்களை ஆரம்பித்து மக்களின் பலவித இன்னல்களையும் போக்கி நற்பணி புரிந்தனர். இலங்கைக்கு முதலில் வருகை தந்த (1862) ஐரோப்பிய துறவற கன்னியரான திருக்குடும்பக்

கன்னியர் சபை யாழ்ப்பணத்தில் சுதேச பெண்களுக்கென தம் சகோதர சபையான புனித இராயப்பர் சபையை 1865இல் தாபித்து மகளிர் கல்வித் துறையில் ஈடுபட்டனர். 1886ம் ஆண்டு வருகை தந்த பிரான்சிஸ்கன் மிஷனறிசபையைச் சேர்ந்த கன்னியர்கள் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கெழும்பு பெரியாஸ்பத்திரியில் நோயாளிகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டனர். இப்பணி பின்னர் மன்னார் அரசினர் வைத்தியசாலைக்கும் இன்னும் பல தொழுநோயாளர் வைத்தியசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. 1887ம் ஆண்டு அமல மரித்தியாகிகள் மக்கோனாவில் ஆண் அநாதைச் சிறுவர்களுக்கான ஒரு மடமும் ஒரு தொழில்துறைகள் கற்கும் பாடசாலைகளையும் அமைத்தனர். அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இளம் குற்றவாளிகளை சீர்திருத்தும் மடத்தையும் ஆரம்பித்தனர். 1888ம் ஆண்டு வருகை தந்த ஏழைகளின் சிறிய சகோதரிகள் மருதானையில் ஒரு வயோதிப சாலையையும் ஆரம்பித்தனர்.

இலங்கைக்கு 1815ம் ஆண்டு வருகை தந்த வெஸ்லியன் மறைபரப்பாளர்கள் கொழும்பில் ஒரு அச்சகத்தை அமைத்து சிங்கள மொழியில் வேதாகமத்தின் சில பகுதிகளையும் வேறு மத நூல்களையும், கைநூல்களையும் பத்திரிகைகளையும் அச்சிட்டு விநியோகித்தனர். 1869ம் ஆண்டு சில்லாணி ஆண்டகையின் முயற்சிகளால் கொழும்பில் கத்தோலிக்க அச்சகம் உருவாகியது. இவ் அச்சக உதவியுடன் அதே ஆண்டில் " இலங்கை கத்தோலிக்க தூதன்" என்ற ஆங்கிலப் பத்திரிகையும் 1873ம் ஆண்டில் "ஞானார்த்த பிரதீபய" என்ற சிங்களப் பத்திரிகையும் வெளியிடப்பட்டன. பொன்ஜின் ஆண்டகையால் 1871இல் யாழ்ப்பாணத்திலும் ஒரு கத்தோலிக்க அச்சகம் அமைக்கப்பட்டு 1876ம் ஆண்டு "யாழ்ப்பாண கத்தோலிக்க பாதுகாவலன்" என்ற பத்திரிகையும் வெளிவரத் தொடங்கியது. சிறந்த எழுத்தாளரான பொன்ஜின் ஆண்டகை கத்தோலிக்க கொள்கைகளையும், கத்தோலிக்கரின் பல்வேறு பிரச்சனைகளுக்குத் தம் தீர்வுகளையும், இலங்கை கத்தோலிக்க மக்களின் உரிமைகள் பற்றியும் பத்திரிகை மூலமாக வெளிப்படுத்தினார்.

அப்போஸ்தலிக்கபணிகள் வளர்ச்சி அடைய அப்போஸ் தலிக்க பணியாட்களின் தேவையும் அதிகரித்தது. சில சுதேச கன்னியர் சபைகள் ஆரம்பிக்கப்பட்டு அவைகளின் நிர்வாகமும் உருவாக்கமும் ஐரோப்பிய கன்னியர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. கொழும்பில் மறைபணி புரிந்த சில்லானி ஆண்டகை இரு சுதேச

துறவற சபைகளை ஆரம்பித்தார். ஒன்று **"புனித பிரான்சிஸ்கு சவேரியாரின் சகோதரிகள்"** மற்றையது **"மரியாளின் புதல்விகள்"** என்னும் இருசபைகள் ஆரம்பிக்கப்பட்டன. திருக்குடும்ப கன்னியர் சபை சுதேச பெண்களுக்கென **"புனித இராயப்பர் சபை"** உடன் **"சிறிய சகோதரிகள்"**, **"பக்தியுள்ள ஆசிரியைகள்"** என்ற சபைகளும் தொடங்கப்பட்டன. வண. பிச்சினெல்லி அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட **"மக்கோனா பிரான்சிஸ்கன் சகோதரர் சபை"** பாடசாலைகளிலும் அநாதை மடங்களிலும் பணியாற்றியது. யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் ஒரு அநாதை மடமும் அத்தோடு மாணவர்களுக்கு தொழில் முறைப் பயிற்சிப் பாடசாலையும் அமைத்து அதை நடத்த 1816ம் ஆண்டு "கொழும்புத்துறை புனித சூசையப்பர் சகோதரர்சபை"யும் ஆரம்பிக்கப்பட்டது. இளைஞர்களை மறையாசிரியர்களாக பயிற்றுவிப்பதை நோக்காகக் கொண்ட இந்த தபானம் காலப்போக்கில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாக மாறியது. சுதேச குருக்களைப் பயிற்றுவிப்பதற்கென இலங்கையில் முதல் குருமடம் 1871ம் ஆண்டு பொன்ஜின் ஆண்டகையால் ஆரம்பபிக்கப்பட்டது. புனித மடுத்தீனார் குருமடம் பெரிய குரு மடத்திற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்தும் சிறிய குருமடமாகவும் அதே வேளையில பெரிய குருமடமாகவும் செயல்பட்டது. மேலும் இலங்கை, இந்தியா, பர்மா போன்ற கீழைத்தேச நாடுகளின் குருத்துவ மேற்படிப்புக்கு உதவியாக சர்வகலாசாலை நிலையிலான "திருத்தந்தையின் குருமடம்" ஒன்றும் அப்போஸ்தலிக்க பிரதிநிதி "லடிஸ்லவுஸ் சலெஸ்கியின்" முயற்சியால் கண்டி நகரில் 1893ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு சுதேச குருக்களை இலங்கையில் பயிற்றுவிப்பதன் வழியாக நாட்டுப்பாரம்பரியத்தை, மரபுகளை நோக்கித் திருச்சபையை வழிநடத்த வழி திறக்கப்பட்டது. இலங்கையில் பணி புரிய வந்த ஐரோப்பிய மறை பரப்பாளர்கள் அவர்கள் அறிந்திராத ஒரு புதிய மக்களினத்தை, புதிய மொழிகளை புதிய கலாசாரத்தை, புதிய மதத்தை சந்திக்க வேண்டியிருந்தது. இதன் மட்டிலும் அவர்கள் மக்களைக் கவரக்கூடிய முறையில் மறைபணி புரிந்தனர். மக்கள் அறிவு குறைந்தவர்களாக இருந்ததால் மக்களைக் கவரும் மதச் சடங்குகளும், வழிபாடுகள், திருவிழாக்கள், திருச்சுருபப் பவனிகள், பாடல்கள் என்பனவும் அவர்களின் மத வாழ்வில் முக்கிய இடத்தைப் பெற்றன. எண்ணை விளக்குகள், தூப வர்த்திகள், குருத்தோலைச் சோடினைகள், மேளவாத்தியங்கள், கீழ் நாட்டுச் சங்கீதங்கள் என்பன வழிபாடுகளில் இடம் பெற்றன. இவற்றைப் பயன்படுத்தி இவற்றின் ஊடாக மறைபரப்பாளர்கள் மறை அறிவு ஊட்டி மக்களது விசுவாசத்தை வளர்த்தனர். இதே முறையில் சுதேச குருக்களும்

மறைபணியினை ஆற்றினர். அவர்களது சாட்சிய வாழ்வும் மக்களின் வாழக்கையை ஒத்ததாகவே அமைந்திருந்தன. இதனால் மறைபணி சீராக இடம் பெற்றது.

மேலும் மறைபரப்பாளர்கள் மக்களுக்கு தலைமை தாங்கி அவர்களின் உரிமைகளுக்காக, நல்வாழ்விற்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். நீதிக்கு முரணாகச் சட்டங்கள் ஆக்கப்பட்ட வேளைகளில் மக்கள் சார்பாக குரல் கொடுத்து நீதிக்காகப் போராடினர். எடுத்துக்காட்டாக மது ஒழிப்பு, சுகாதார வசதிகள், குடிநீர், கழிவுநீர் நீர்த்திட்டங்கள், போக்குவரத்து வசதிகள், கல்வி, மதம், பாடசாலைகள் அவற்றிற்கான அரச நிதியுதவி, நாட்டுத் திருமணச்சட்டங்கள், மக்களின் அடிப்படைத் தேவைகள் போன்ற பல விடயங்களில் அரசாங்கத்துடன் வாதாடி மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

## 4:11 மறைபரப்பாளர்களின் பயன் மிகுந்த கல்வி சார்ந்த செயற்பாடுகள்.

ஒல்லாந்தரின் ஆட்சியின் போது அனைத்துப் பாடசலைகளும் கல்வித்துறையும் அரசாங்கத்தால் நியமிக்கபட்ட "பாடசாலை ஆசிரியர்களின் ஆணைக்குழு" இன் கட்டுப்பாட்டிலிருந்தன. பிற்பட்ட ஆங்கிலேயர் ஆட்சியின் போது ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பனி ஆரம்பத்தில் கல்வியைப் பற்றி எவ்வித அக்கறையும் செலுத்தவில்லை. இதனால் 1798ம் ஆண்டு ஆங்கிலேய அரசாங்கம் பாடசலைகளைப் பொறுப்பேற்று நடத்தியது. அவை அரசாங்க பாடசலைகள் என்று அழைக்கப்பட்டாலும் உண்மையில் அவை அங்கிலிக்கன் பாதிரிமாரால் அங்கிளிக்கன் மதத்தை கற்பிக்க அமைக்கப் பெற்ற அங்கிளிக்கன் பாடசலைகளாகவே இருந்தன.

இங்கிலாந்தில் ஏற்பட்ட மத மறுமலர்ச்சியின் விளைவாக பப்றிஸ்ற், வெஸ்லியன், அமெரிக்கன் மிசன் போன்ற பல புரட்டஸ்தாந்து பிரிவினை சபைகள் இலங்கைக்கு வருகை தந்து பல இடங்களிலும் பல பாடசாலைகளை நிறுவி தம் மறை பரப்புப் பணியில் ஈடுபட்டன. சகல அரசாங்கப் பாடசாலைகளையும் நடத்த நிதி போதாததால் **கவணர் பிறவுண்றிக்** சில பாடசாலைகளை அம் மிசனறிக் குழுக்களிடம் ஒப்படைத்து அவர்களுக்கு வேண்டிய உதவியையும் ஊக்கத்தைம் வழங்கினார். அரசாங்கப் பாடசாலைகளில் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளிலேயே பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஆங்கிலமொழி அரச கரும மொழியாக பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆங்கில மொழியின் முக்கியத்துவம்

கருதி புரட்டஸ்தாந்து சபையினர் இலங்கையின் பல பாகங்களிலும் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவினர். சிறந்த கல்விமான்களாகிய புரட்டஸ்தாந்து சபையினரும் தம்பணிக்கு தம்மையே முற்று முழுவதுமாக அர்ப்பணித்து மாணவர்களுக்கு சிறந்த கல்விச் சேவை புரிந்தனர்.

இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்கன் மிசனறிச் சபையினர் வடபகுதிக்குச் சென்று அங்கு மாணவருக்கு கல்வி அறிவூட்டுவதில் அதி கவனம் செலுத்தினர். மாணவர்கள் தங்கியிருந்து பயிலுவதற்கு வசதியாக இலவச விடுதி வசதிகளுடன் பல பாடசாலைகளை வட்டுக்கோட்டை, உடுவில், உடுப்பிட்டி, கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சங்கானை போன்ற வெவ்வேறு இடங்களில் பாடசாலைகளை அமைத்தனர். வட்டுக்கோட்டையில் ஓர் மத்திய உயர் கல்விக் கல்லூரி ஒன்றையும், குரு மடத்தையும், உடுவிலில் பெண்களுக்கான மகளிர் கல்லூரியையும் தாபித்தனர். இப்பாடசாலையே ஆசியாவில் நிறுவப்பட்ட முதல் மகளிர் பாடசாலை என்ற சிறப்பை பெற்றுக் கொள்கின்றது. இதனை விட வேறு மூன்று இடங்களிலும் உயர் கல்விப் பாடசாலைகளையும், ஆரம்பப் பாடசலைகளையும் அமைத்து யாழ்ப்பாண தமிழ் மாணவர் சமூகத்திற்கு அளப்பரிய கல்விய பணி புரிந்தனர். "பெண்கள் கல்வி கற்பது தீது" என்ற சமூக வழக்கிற்கு முற்றுப்புள்ளி வைத்து இவர்கள் ஆற்றிய கல்விப் பணி காலத்தா... மறைக்கவோ, மறுக்கவோ முடியாத மகத்தான பணி என்று கூறுவது சிறப்பானதாகும். அங்கிலிக்கன் சபையினரும் "நல்லூர் இறையியல் கல்லூரி" என்ற கல்லூரியையும் (இதுவே இன்று புனித பரியோவான் கல்லூரி, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி என இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.) அநாதைகளுக்கென கைதடியில் "நவீல்ட் பாடசாலையையும்" நிறுவினர். அவ்வாறே மெதடிஸ்த சபையினரும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, திருகோணமலை போன்ற இடங்களிலும் பாடசாலைகளை நிறுவி அளப்பரிய கல்விப் பணி புரிந்தனர்.

ஆங்கிலேயர் காலத்தில் மூன்று தரமான பாடசலைகள் இருந்தன. **i.** அரசாங்கப் பாடசாலைகள் **ii.** மிசன் பாடசாலைகள் **iii.** தனியார் பாடசாலைகள். இதை விட பௌத்த விகாரைகளினால் நடத்தப்பட்ட பன்சில்கள் அல்லது கோவில் பற்று பாடசாலைகளும் இருந்தன. ஆங்கிலக் கல்வியை ஊக்குவித்து கல்வித்துறையில் வேண்டிய சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், அரச பாடசாலைகளைப் பொறுப்பெடுத்து நடத்துவதற்கும், ஆங்கிலம் நன்கு தெரிந்த தகுதியான ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு

நியமிப்பதற்கும் அதிகாரம் கொண்ட ஒரு **"பாடசாலை ஆணைக்குழு"** அமைக்கும்படியான சிபார்சிற்கு அமைய 1834ம் ஆண்டு கொழும்பில் ஒரு **"பாடசாலை ஆணைக்குழுவும்"**, மாகாணங்களில் **"பாடசாலைச்சபைகளும்"** ஆரம்பிக்கப்பட்டன. இவ் ஆணைக்குழுவினால் பல ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் ஒன்றே தற்போதைய றோயல் கல்லூரி **(Royal College)** என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய மறைபரப்பு குழுக்களும் பல ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பித்தனர். மேலும் ஆங்கிலப் பாடசாலைகள், **ஆங்கில—சுதேச மொழிப்பாடசாலைகள், சுதேசமொழிப் பாடசாலைகள்** என கற்பிக்கும் மொழி அடிப்படையிலான 03 வகையான பாடசாலைகளும் இருந்தன.

ஆங்கிலப் பாடசாலைகளில் சகல பாடங்களும் ஆங்கில மொழியால் கற்பிக்கப்பட்டன. சுதேச மொழிப் பாடசாலைகளில் சகல பாடங்களும் சிங்களம் அல்லது தமிழ் ஆகிய சுதேச மொழியில் கற்பிக்கப்பட்டன. ஆங்கில—சுதேச மொழிப்பாடசாலைகளில் ஆங்கிலம் ஒரு தனிப்பாடமாகக் கற்பிக்கப்பட்டதோடு ஏனைய பாடங்கள் அனைத்தும் சுதேச மொழிகளில் கற்பிக்கப்பட்டன. "பாடசாலை ஆணைக்குழுவின்" திருப்பதியற்ற செயற்பாட்டினால் அனைத்து கிறிஸ்தவ சபையினரையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 1841ம் ஆண்டு **"மத்திய பாடசாலை ஆணைக்குழு"** ஏற்படுத்தப்பட்டது. **"அனைத்து மதத்தையும் சேர்ந்த இலங்கை பிரசைகள் அனைவருக்கும் எற்ற கல்வி வழங்குவதே"** இவ் ஆணைக்குழுவின் நோக்கமாகும். காலப்போக்கில் அரசாங்க பாடசாலைகளின் நிலை வீழ்ச்சி அடைய மிசன் பாடசாலைகள் திறமையுடன் செயற்பட்டு சிறந்த கல்வி நிலையங்களாக செயற்பட்டன. இதனால் மத்திய பாடசாலை ஆணைக்குழுவால் அரசாங்க பாடசாலைகள் மூடப்பட்டு சில பாடசாலைகள் அரசாங்கத்தின் பெயரால் நடத்தும் படி மிசனறிக் குழுக்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டன. கத்தோலிக்க திருச்சபைக்கும் ஒரு சில பாடசாலைகள் நடத்த உதவி வழங்கப்பட்டது. எனினும் கல்வித் துறையில் கிறிஸ்தவ மிசன்களே ஆதிக்கம் செலுத்தின.

இவ்வாறாக ஐரோப்பிய மறைபரப்பாளரகள்(மிசனறிகள்) கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பெரும் பங்களிப்புச் செய்திருக்கின்றன. இவற்றுள் அமெரிக்கமிசன்சபை யாழ்ப்பாணத்தில் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. ஐரோப்பாவிலிருந்து சிறந்த கல்வி மான்களை இலங்கைக்கு வரவழைத்து யாழ்ப்பாண மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவி புரிந்தனர். இவர்கள் ஆற்றிய கல்விப் பணியின் பயனாக யாழ்ப்பாணத்தில் சிறந்த கல்வியறிவுடைய

பரம்பரை ஒன்று உருவானது. அதன் விளைவாக இன்றும் யாழ்ப்பாண மக்கள்சமூகம் தாம் பெற்ற அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தை பாதுகாத்து தம் பிள்ளைகளுக்கு அளித்து வருகின்றனர்.

## 4:12 நன்கொடை (அரசஉதவி) பெறும் பாடசாலைகளின் உதயம்

**வண.கிறிஸ்தோப்பர் பொன்ஜின்அடிகளார்** ஒவ்வொருவருக்கும் உள்ள மதச் சுதந்திரத்தை எடுத்துணர்த்தி பெற்றோரே தம் விருப்பத்தின் படி தம் பிள்ளைகளுக்கு ஏற்ற பாடசாலைகளை தெரிவு செய்யும் உரிமையுள்ளவர்களென அரசுடன் வாதாடினார். பல மத மக்களைக் கொண்டுள்ள இலங்கைக்கு அரச உதவியுடன் (நன்கொடை) இயங்கும் மதப்பாடசாலைகளே சிறந்ததென்பதை மிகவும் வலியுறுத்தினார். தொடர்ந்து பொதுக்கலவன் பாடசாலைகளில் அனைத்து கிறிஸ்தவ பிரிவினருக்கும் பொதுவான ஒரே கிறிஸ்தவத்தைக் கற்பிக்கும் அரச கல்வி முறையை எதிர்த்தும் பல கட்டுரைகளை எழுதி, அக்காலத்தில் பிரபல்யமாயிருந்த **"Examiner"** என்ற பத்திரிகையில் வெளியிட்டார். அவர் அரசாங்கத்தின் கல்வி முறையை கடுமையாக விமர்சனம் செய்தாலும் அவ்விமர்சனங்கள் ஆக்கபூர்வமானவையாகவே இருந்தன. அரசு அவருக்கு மதிப்பளித்து அவ்விமர்சனங்களுக்கு கவனம் செலுத்தியது. 1865ம் ஆண்டு கூட்டப்பட்ட சட்டசபை இலங்கைக் கல்வி முறையைப் பற்றி விசாரணை செய்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவென ஒரு குழுவை நியமித்தது. பொன்ஜின் அடிகளாரிடமிருந்தும் ஆலோசனைகள் கேட்கப்பட்டன. ஒவ்வொரு மதக்குழுவினாலும் அரசாங்க உதவியுடன் (நன்கொடை) நடத்தப்படும் மதப் பாடசாலைகளைக் கொண்ட கல்வி முறையை மீண்டும் வற்புறுத்தினார். கத்தோலிக்கர் மட்டுமல்ல பௌத்த மதத்தினர், இந்துக்கள், முஸ்லீம்களும் நீதியுடன் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று வாதாடினார். இவையெல்லாம் பின்பு **"கத்தோலிக்க திருச்சபையும் சீர்திருத்தமும்"** என்றபெயரில் புத்தகமாக வெளியிடப் பட்டன.

பொன்ஜின் அடிகளாரின் ஆலோசனையை ஏற்று விசாரணைக்குழு தனது அறிக்கையில் இரு முக்கிய கோட்பாடுகளை முன் வைத்தது.

1. இலங்கையிலுள்ள ஒவ்வொரு மதக் குழுவும் தமது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக தமது பாடசாலைகளை

வைத்திருக்க விரும்பினால் அதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டும்.

2. அரசாங்கத்திற்கு திருப்தி அளிக்கக் கூடிய முறையில் கல்வி வழங்கும் ஒவ்வொரு தனியார் பாடசாலைகளுக்கும் அரச நிதியுதவி ( நன்கொடை) வழங்கப்படல் வேண்டும்.

இவ்விரு கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்ட அரசாங்கம் 1869ம் ஆண்டு "மத்திய பாடசாலை ஆணைக்குழுவை" இரத்துச் செய்து அதற்குப் பதிலாக **"பொதுக் கல்வித் திணைக்களம்"** ஒன்றை ஏற்படுத்தி அதன் கீழ் தனது புதுக்கல்வித் திட்டத்தை அமுல் செய்தது.

பொதுக்கல்வித் திணைக்களம் அரச நன்கொடைகளுடன் சுதேச மதப் பாடசாலைகளை ஆரம்பித்தல், வர்த்தக, விஞ்ஞான பாடங்களை பாடசாலைப் பாடத்திட்டத்தில் சேர்த்தல், சிறந்த மாணவர்களிற்கு புலமைப்பரிசில் வழங்கி, கல்கத்தா, இங்கிலாந்து தேசங்களிலுள்ள சர்வகலாசாலைக்கு அனுப்புதல், சுதேச பாட நூல்களை அச்சடித்தல், ஆசிய பயிற்சிக் கலாசாலையை அமைத்தல் போன்றவற்றைச் சிபார்சு செய்தது. இதன் பயனாக அரச உதவியுடனான மதப் பாடசாலைகளை அமைக்கும் உரிமை கத்தோலிக்கருக்கு மட்டுமல்ல இலங்கையிலுள்ள ஏனைய கிறிஸ்தவரல்லாத பௌத்த இந்து, முஸ்லீம் மதத்தினருக்கும் அளிக்கபட்டது. இந்த மதப் பாடசாலை கல்வி முறைப்படி அரசாங்கம் கல்வித்துறையை தன் கட்டுப்பாட்டிற்குள் எடுக்காது; மதத்தலைவர்கள் மதப்பாடசலைகளை அமைத்து தம் மதக் கோட்பாடுகளுக்கு அமைய அவற்றை நடத்த நிதியுதவி (நன்கொடை) வழங்கித் துணை செய்தது. மதத் தாபனம்-காணி, கட்டிட உதவிகளை வழங்க அரசு ஆசிரியர்களின் சம்பளம் போன்ற நிதியுதவியை வழங்கியது. உலக சம்பந்தமான கல்வி மட்டும்ல்ல மத அதிகாரிகள் மதப் பாடசலைகளை பரிசோதனையிட்டு மேற்பார்வையும் செய்தனர். இம்முறையிலேயே அரசும் மதத தபானமும் கல்வித்துறையில் பங்காளர்களாகச் செயலாற்றினர். இதுவே பல மதங்களைக் கொண்ட நம் நாட்டிற்கு உகந்த கல்வி முறையாகும். இவ்வாறு **வண. பொன்ஜின் அடிகளாரின்** அயராத **கடின உழைப்பினால் இலங்கையில் அரச உதவி (நன்கொடை) பெறும் மதப்பாடசாலை முறை (Denominational school system) உருவாகியது.** எனவேதான் பொன்ஜின் அடிகளார் அனைவராலும் **"அரச உதவி பெறும் மதப் பாடசாலைகளின் தந்தை"** என அழைக்கப்படுகின்றார்.

ஆங்கிலம் அரச கரும மொழியாக பிரகடனம் செய்யப்படதனால் ஆங்கிலப் பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் படையெடுத்தனர். இந்நிலையில் பொன்ஜீன் அடிகளார்- மாணவர் சுதேச மொழி

கற்பதன் அவசியத்தை உணரவும் சுதேச பாடசலைகளின் தரத்தை உயர்த்தவும் பாடுபட்டார். இலங்கையரை தம் சொந்த நாட்டிலேயே அந்நியராக்கும் ஆங்கிக் கல்வி முறையைச் சாடினார். அதை அந்நிய நாட்டு கலாசாரத்தை இலங்கை மக்கள் மேல் திணிக்கும் முயற்சியாகவே கருதினார். மாணவர்கள் தமது புத்திசாதுரியத்தை, நுண்ணறிவை வெளிக்கொணர்ந்து பயன்பெற, அவர்கள் தம் சொந்த மொழியில் சிந்திக்கவும், பேசவும் வேண்டுமென வற்புறுத்தினார். ஆங்கிலக் கல்வி குடிமக்களை அறிவுரீதியில் வலுவற்றவர்கள் ஆக்குகின்றதென்பதை விளக்கிக் கூறினார். சுதேச கல்விக்குப் பதிலாக ஆங்கிலக்கல்வியை வளர்ப்பதன் வழியாக பலர் அடிப்படைக் கல்வியுமின்றி அறியாமையில் இருப்பதை எடுத்துக் காட்டினார். இதை உணர்ந்த பொதுக்கல்வித் திணைக்களம் அரசு சுதேசமொழியில் கல்விஅளிப்பதை பெருமளவில் மேற்கொள்வேண்டும் என முடிவு செய்தது. மேலும் ஆரம்ப கல்வியை சிங்கள, தமிழ் மொழிகளில் அளிக்கும் சுதேச பாடசாலைகளை பரவலாக எல்லாக் கிராமங்களிலும் அமைக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது.

கத்தோலிக்க திருச்சபை இச்சந்தர்ப்பததை பயன்படுத்தி நாடெங்கும் நகரங்களிலும், கிராமப் புறங்களிலும் பரவலாக அரச உதவிபெறும் சுதேசபாடசாலைகளை அமைத்தது. அப்பாடசாலை களில் பிறமதப்பிள்ளைகளும் கற்க அனுமதிக்கப் பட்டனர். பொதுவாக ஒவ்வொரு பங்கிலும் உள்ள ஒவ்வொரு கோவிலுக்கும் அருகாமையில் கத்தோலிக்க கலவன் ஆரம்பப் பாடசாலை அல்லது ஆண்களுக்கான பாடசாலை, பெண்களுக்கான பாடசாலைகள் அமைக்கப்பட்டன. 1892ம் ஆண்டில் கத்தோலிக்க திருச்சபை ஆகக் கூடுதலான தொகையான 209 அரச நிதியுதவி (நன்கொடை) பெறும் சுதேச மொழிப் பாடசாலைகளையும், அரச நிதியுதவி பெறும் 14 ஆங்கில உயர்தரப் பாடசாலைகளையும் கொண்டிருந்தது. பௌத்த, இந்து மத தாபனங்களும் தம் மத மாணவர்களுக்கென அரச நிதியுதவியுடன் பாடசாலைகளை ஆரம்பித்தன. இவ்வாறு கல்வித் துறையில் பெரும் வளர்ச்சி ஏற்படலாயிற்று.

## 4:13 ஆங்கிலேயர் காலத்து கிறிஸ்தவ மகளிர் கல்விச் செயற்பாடுகள்

ஆங்கிலேயர் காலத்தில் நிலவிய மதச் சுதந்திரத்தை அடுத்து ஐரோப்பாவிலிருந்து பல புரட்டஸ்தாந்து மிசனறி சபையினரும் அவர்களைத் தொடர்ந்து ஐரோப்பாவிலிருந்து கத்தோலிக்க மறைபரப்பாளர் சபைகளும், துறவறக் குழுக்களும் இலங்கைக்கு வருகை தந்தனர். இவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பாடசலைகளை அமைத்து கல்வித் துறையில் பணி

புரிந்தனர். இவர்களுள் சில புரட்டஸ்தாந்து மறை தூதுக் குழுக்களும், கத்தோலிக்க துறவற சபையினரும் கிறிஸ்தவ மகளிர் கல்விக்கென தம்மை அர்ப்பணம் செய்து அதற்கென முன்னணி வகித்துச் செயலாற்றினர். இவர்களுள் **பப்ரிஸ்ற் மிசனறி, மெதடிஸ்த மிசனறி, அங்கிளிக்கன் மிசனறி, அமெரிக்கன் மிசனறி, திருக்குடும்பக் கன்னியர் சபை, நல்லாயன் சபை** போன்றவற்றை நாம் சிறப்பாக குறிப்பிடலாம். இவர்கள் இலங்கைக் கிறிஸ்தவ மகளிரின் கல்வி மேம்பாட்டிற்கென பெரும்பணியாற்றினர்.

இலங்கையெங்கும் இவமிசனறிச் சபையினர் பரவலாக பாடசாலைகளை அமைத்தனர். தமது சபைகளின் நிதியுதவிடனும் அரசாங்கத்தின் உதவியுடனும் பாடசாலைகளில் தமது பணியை சிறப்புடன் ஆற்றியதால் அவர்களிடம் பெருந்தொகையான மாணவிகள் இணைந்து கொண்டனர். இலங்கைக்கு வந்த அமெரிக்கன் மிசன் சபையினர் யாழ்ப்பாணம் சென்று பல இடங்களில், பெண்கள் தங்கியிருந்து கற்பதற்கு ஏற்ற வசதிகளுடன் பெரிய பாடசாலையை உடுவிலில் அமைத்தனர். (உடுவில் பெண்கள் விடுதிப் பாடசாலை) இதனை விட உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாண நகரம், தெல்லிப்பளை போன்ற இடங்களில் பெண்களுக்கான ஆரம்பப் பாடசாலைகளை அமைத்து யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்திற்கு சிறப்பாக மகளிருக்கு சிறந்த சேவை செய்தனர். இருபது ஆண்டுகளுக்குள் அவர்கள் 235 பாடசாலைகளை ஆரம்பித்து 10,000 மாணவ மாணவிகளுக்கு கல்வி அறிவு ஊட்டினர்.

யாழ்ப்பாணத்திற்கு 1862ம் ஆண்டு வருகை தந்த திருக்குடும்ப கன்னியர் சபையின் பிரசன்னத்தை அடுத்து இலங்கையில் மகளிர்க்கு கொன்வென்ற் பாடசாலைக் கல்வி **(Convent School Education)** ஆரம்பமாகியது. பெற்றக்கீனி ஆண்டகையால் 1849ம் ஆரம்பிக்கப்பட்ட "யாழ்ப்பாண கத்தோலிக்க ஆங்கில பெண்கள் பாடசாலை" **(Jaffna Catholic English Ladies School)** அயர்லாந்து நாட்டு விதவையான திருமதி மேரி ஆன் ஓபிளநகன் என்பரின் தலைமையில் இயங்கி வந்தது. 1862ம் ஆண்டு திருக்குடும்ப கன்னியர் யாழ்ப்பாணம் வந்து அப்பாடசாலையை பொறுப்பேற்றனர். 1864இல் புதிய கொன்வென்ற் பாடசாலை **(New Convent School)** ஆரம்பமாகியது. கன்னியரின் தலைமையில் அங்கு வழங்கப்பட்ட கல்வியூட்டுதலும், ஆங்கில அறிவும், ஒழுங்கும், நல்லொழுக்கமும், நற்பண்பும் பெற்றோரையும் மாணவிகளையும் மிகவும் கவர்ந்தன. புரட்டஸ்தாந்து மதப் பெற்றோரும் தம்பிள்ளைகளை கன்னியர் மடத்தில் சேர்த்தனர். இதைத் தொடர்ந்து திருக்குடும்பக் கன்னியர் தமது சகோதர சபையான சுதேச பெண்களின் புனித இராயப்பர் சபைக் கன்னியரின் ஒத்துழைப்புடன்

தமது இப்பணியை வட இலங்கையின் பல பாகங்களுக்கும் விஸ்தரித்தனர். 1893இல் இளவாலையிலும், 1894இல் மாதகலிலும் மன்னாரிலும், 1896இல் சில்லாலையிலும், 1897இல் பருத்தித்துறையிலும். 1898இல் ஊர்காவற்றுறையிலும், 1908இல் நாரந்தனையிலும், 1916இல் கரம்பொனிலும் ஆங்கில–சுதேச மொழி மதப் பாடசாலைகளை ஆரம்பித்தனர்.

மேலும் 1869இல் இலங்கைக்கு வந்த நல்லாயன் சபைக் கன்னியர்கள் கொழும்பிலும் உயர்தர (Convent) பாடசாலையை ஆரம்பித்தனர். தொடர்ந்து அவர்கள் தென் இலங்கையின் பல இடங்களில் பலமதப் பாடசாலைகளை அமைத்து மகளிரின் கல்விக்குப் பெரும் பணி புரிந்தனர். இம்மதப் பாடசாலைகளிற்கு பெற்றோரினதும் மாணவிகளினதும் அமோக வரவேற்பும் ஆதரவும் பாராட்டும் கிடைத்தன. அத்துடன் 1801ல் வருகை தந்த அங்கிளிக்கன் சபையின்ர் யாழ்ப்பாண நகரின் சுண்டுக்குழியில் மகளிர் கல்லூரி ஒன்றையும், உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு கைதடியில் நவீல்ட் பாடசாலையையும் அமைத்து கல்வி பணி ஆற்றினர். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 4:14 இலங்கைத் திருச்சபை தேசிய மரபுகளைப் பின்பற்றுதல் - (கிறிஸ்தவம் பண்பாட்டு மயமாதல்)

இலங்கைத் திருச்சபை தேசிய பண்பாடு, கலாசாரத்தின் பெறுமதிகளைத் தமதாக்கிகொண்டு நற்செய்தியையும் கிறிஸ்தவச் சடங்குகளையும் பொதுவழிபாடுகளையும் அவற்றைத் தழுவி அமைத்து அர்த்தமுள்ளதாக்கிக்கொள்வதையே நாம் "பண்பாட்டு மயமாக்கல்" அல்லது "தேசிய மரபுகளைப் பேணுதல்" என அழைக்கின்றோம். கிறிஸ்தவ மதம்- ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் மூலமாகவே இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. இதனால் **கிறிஸ்தவம் என்றால் ஐரோப்பியம். ஐரோப்பியம் என்றால் கிறிஸ்தவம் என்ற கருத்து நிலவியது.** கிறிஸ்தவம் எந்தவொரு இனத்துக்கோ, மொழிக்கோ பண்பாட்டிற்கோ கட்டுப்பட்டதல்ல. அது ஒரு அனைத்துலகமதம். அனைத்து இன மக்களுக்கும் மொழிகளுக்கும் பண்பாட்டிற்கும் உரியமதம். இதையே **"கத்தோலிக்கம்"** என்ற திருச்சபையின் பண்பு உணர்த்துகின்றது. ஒருவன் தன் இனத்தை, மொழியை பண்பாட்டை இழக்காமல் கிறிஸ்தவனாகலாம்-கிறிஸ்தவனாக வாழலாம் என்பதை ஏற்கனவே முதலாம் எருசலேம் பொதுச்சங்கம்(கி.பி48-49) தெளிவாக எடுத்துரைத்தது. கிறிஸ்துவும் அனைத்துலக மீட்பராக மனித அவதாரம் எடுத்து வந்த வேளை தாம் பிறந்த யூத இனத்தின்

பண்பாடு, கலாசார மரபு முறைகளுக்கு அமைவாகவே வாழ்ந்து போதித்து மறைப் பணி புரிந்தார்.

ஆரம்பத்தில் இலங்கைப் பண்பாட்டினை ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் அறியாதிருந்தமையால் அதை அசட்டை செய்து அதை இழிவாக நோக்கியிருந்தனர். ஆனால் காலப்போக்கில் அந்நிலை மாறி மறைபரப்பாளர்கள் மக்களின் மொழிகள் பண்பாட்டியலை கற்றுக் கொண்டனர். கிறிஸ்தவ திருச்சபையையும் தம் வாழ்விலும் வழிபாட்டிலும் போதனைகளிலும் தேசிய மொழிகளை, பண்பாடுகளை, மரபுகளைப் பயன்படுத்தத் தொடங்கியது. குறிப்பாக *வண. யோசப்வாஸ் அடிகளார்* தம் குருக்கள் தமிழையும், சிங்களத்தையும் நன்கு கற்க வேண்டும் எனக் கட்டளையிட்டார். ஒறற்ரோறியன் குருக்களும் *வண டி நோபிலி அடிகளாரைப்* பின்பற்றி மக்களின் பண்பாட்டு, கலாசார முறைகளைத் தழுவி நற்செய்தியை அறிவித்து மறையறிவு ஊட்டி வழிபாடுகள், திருவிழாக்களை நடாத்தியதை நாம் காணலாம். இவ்வாறு தேசிய பண்பாடு,கலாசாரத்தின் பெறுமதிகளைத் தமதாக்கி நற்செய்தியையும் கிறிஸ்தவ சடங்குகளையும், பொது வழிபாடுகளையும் அவற்றைத் தழுவி அமைத்தலையே "பண்பாட்டு மயமாக்கம்". அல்லது "தேசிய மரபுகளைப் பின்பற்றுதல்" என அழைக்கப்படுகின்றது.

ஆங்கிலேயர் காலத்தில் இலங்கைத் திருச்சபை தேசிய பண்பாடு, கலாசாரம் மரபுகளைப் பின்பற்றி தேசிய மயமாக்குவதில் மிகவும் வளர்ச்சி கண்டது. ஏனெனில் சிங்கள, தமிழ் மொழிகளையும் பண்பாடு, கலாசாரத்தையும் வளர்க்க பொன்ஜின் ஆண்டகை முன்னின்று உழைத்தார். அவர் தேசிய மொழிகளான தமிழ், சிங்களம் கற்பிக்கும் சுதேச மதப் பாடசாலைகளுக்காக அரசுடன் வாதாடினார். இலங்கைப் பண்பாட்டிலும் கலாசாரத்திலும் பிறந்து வளர்ந்து பயின்ற சுதேச குருக்களையும் உருவாக்க மிகவும் முயற்சி எடுத்தார். அதற்கென யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமாக இரு குரு மடங்களை ஆரம்பித்தார். ஐரோப்பிய துறவறசபைக் கன்னியரும் சுதேச பெண்களுக்கென துறவற சபைகளைத் தாபித்து சுதேச துறவற கன்னியர்களை உருவாக்கினர். இவ்வாறாக இலங்கைத் தேசிய பண்பாட்டில்-கலாசார மரபில் பிறந்து வளர்ந்து உருவாகிய குருக்களும், துறவறக் கன்னியரும் துறவறச் சகோதரர்களும் இலங்கைத் திருச்சபையை தேசியமயமாக்க, உழைத்தனர். தேசிய மொழிகளையும் பண்பாடு, கலாசாரத்தையும் வளர்க்க பொன்ஜின் ஆண்டகையும் முன்னின்று உழைத்தார். அவர் தேசிய மொழிகளான தமிழ், சிங்களம் கற்பிக்கும் சுதேச மதப் பாடசாலைகளுக்காக அரசுடன் வாதாடினார். இலங்கைப் பண்பாட்டிலும் கலாசாரத்திலும் பிறந்து வளர்ந்த பயின்ற சுதேச குருக்களையும் உருவாக்க மிகவும் முயற்சி எடுத்தார். அதற்கென யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலுமாக

இரு குரு மடங்களை ஆரம்பித்தார். இவ்வாறாக இலங்கைத் தேசிய பண்பாடு கலாசார மரபில் பிறந்து வளர்ந்து உருவாகிய குருக்களும் துறவறக் கன்னியரும் துறவறச் சகோதர்களும் இலங்கைத் திருச்சபையை தேசிய மயாக்க தேசிய மரபைப் பேணி வளர்க்க அயராது உழைத்தனர்.

இன்று திருச்சபையின் ஆயர்கள், அதிகாரிகள், தலைவர்கள் அனைவருமே சுதேசிகளாகவே உள்ளனர். இவ்வாறு திருச்சபையை தேசிய மயமாக்கும் முயற்சியில் வண. சுவாமி ஞானப்பிரகாசம் அடிகளார், அதி வண. தோமஸ் கார்டினல் கூறே ஆண்டகை, அதி. வண. எட்மன்ட் பீரிஸ் ஆண்டகை, வண. எஸ்.ஜி. பெரேரா அடிகளார், ஆயர் லக்தாஸ டிமெல், வண.மோசேஸ் பெரேரா ஆகியோர் முன்னணியில் இருக்கின்றனர். இலங்கையின் முதல் சுதேச சிங்களப் பேராயரான அமலமரித்தியாகி தோமாஸ் கர்தினால் கூறே ஆட்டகை ஒரு சிறந்த இறையியலாளர். இவரே 2ம் வத்திக்கான் சங்கத்தின் தீர்மானங்களுக்கமைய இலங்கைத் திருச்சபையின் பண்பாட்டு மயமாக்கலை முன்னெடுத்துச் சென்றவர். இவரே இன்று *தேவத்தையில் அமைந்துள்ள இலங்கை மாதா பேராலயத்தை கட்டியவராவார்.* முதல் சிங்கள சுதேச ஆயரான எட்மன்ட் பீரிஸ் ஆண்டகை பல ஆய்வுகளை மேற்கொண்டு இலங்கைத் திருச்சபை வரலாறு பற்றியும், இலங்கை வரலாறு பற்றியும் பல நூல்களை எழுதியிருக்கின்றார். இன்னும் பல சிங்களப் பாடல்களையும் செபங்களையும் இயற்றியிருக்கின்றார். பல மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்த இவரை அரசாங்கம் பாராட்டி அவருக்கு சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை சரித்திரத்திற்கு இயேசு சபையைச் சேர்ந்த வண. எஸ். ஜி. பெரேராவைப் போல் எவரும் பங்களிக்கவில்லை. அவர் இலங்கை வரலாறு பற்றி எழுதிய பல நூல்கள் இன்றும் பலராலும் படிக்கப்படுகின்றன. இலங்கைத் தமிழர் வரலாற்றுக்கும், தமிழ் மொழிக்கும் வண. சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரைப் போல் எவரும் பங்களிப்பு செய்யவில்லை. 'பன்மொழிப் புலவர்' என அழைக்கப்படும். இவர் பல தமிழ் இலக்கண நூல்களையும் அகராதிகளையும் எழுதியுள்ளார்.

அங்கிலிக்கன் சபையின் குருநாகல் ஆயரான வண. லக்ஸ்மன் விக்கிரமசிங்க- திருச்சபையை பண்பாட்டு மயமாக்க அயராது உழைத்தார். நீதிக்காக குறிப்பாக அரசியல் இனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கடுமையாக முயற்சி எடுத்தார். ஒரு உண்மைக் கிறிஸ்தவன் சமூக வளரச்சிக்காக உழைக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியவராவார். அத்துடன் இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த குருநாகல் ஆயரான வண. லக்தாசா டி

மெல் நம் நாட்டின் திருச்சபையை பண்பாட்டு மயமாக்கி வளர்ப்பதில் பெரும் பங்களிப்பு செய்துள்ளார். குருநாகலிலும், பத்தேகமவிலும் இலங்கைக் கட்டிடக்கலை அமைப்பில் இரு ஆலயங்களைக் கட்டினார். சுதேசஇசை, சங்கீதங்களையும், பாடல்களையும் திருவழிபாட்டில் அறிமுகம் செய்து வைத்தவர். இலங்கையிலுள்ள பல்வேறு மதத் தலைவர்களையும் ஒன்று கூட்டி மதங்களுக்கிடையில் நல்லுறவை வளர்த்தவர். இறுதியாக இலங்கையின் பழைய மரபுகளை, கலை, கலாசாரத்தை நாம் கற்று அறிய ஐரோப்பிய மிசனறிமார்களே புதிய ஆராய்ச்சி முறைகளை எமக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 4:15 இலங்கை வளநாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதில் கிறிஸ்தவர்களது பங்களிப்புக்கள் – முன் னேற்றகரமான பணிகள் (வரலாற்று சம்பவங்கள்)

இலங்கை அரசியல் வரலாற்றிலே ஆங்கிலேயர் 1796ம் ஆண்டு ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையை கைப்பற்றினர். 1815ல் கண்டி அரசும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வரவே இலங்கை முழுவதும் ஒரே ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. இவ்வேளை ஒறற்ரோரியன் சபைக் குருக்களின் அயராத முயற்சியினால் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க 1806ம் ஆண்டு சகல மதத்தினருக்கும் சட்ட பூர்வமாக மதச் சுதந்திரம் வழங்கப்பட்டது.

கத்தோலிக்க குருவான வண. பொன்ஜின் அடிகளாரின் அயராத முயற்சியினால் எல்லா மத்தினருக்கும் கல்விச் சுதந்திரம் கிடைத்தது. முதலில் 1834ல் ஒரு பாடசாலை ஆணைக்குழுவும் தொடர்ந்து 1841ல் மத்திய பாடசாலை ஆணைக்குழுவும் இறுதியாக 1869இல் பொதுக்கல்வித் திணைக்களமும் நிறுவப்பட்டு எல்லா மதத்தினருக்கும் அரசநன்கொடையுடன் சுதேசமொழிப் பாடசாலைகள் எங்கும் ஆரம்பித்து நடத்த அனுமதி வழங்கப்பட்டது. 1915ம் ஆண்டு ஏற்பட்ட பௌத்த–முஸ்லீம் கலவரத்தின் போது அரசாங்கம் இராணுவச்சட்டத்தைப் பிறப்பித்தது. டி.எஸ். சேனநாயக்கா, எவ்.ஆர். சேனநாயக்கா போன்ற பலர் கைது செய்யப்பட்டனர். இன்னும் பலர் கொடூரமாக கொலையும் செய்யப்பட்டார்கள். இதற்கு ஆட்சேபம் தெரிவிக்க இலங்கைப் பெரியோர்கள் ஒன்று கூடினார்கள். 1915ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ம் திகதி கொழும்பில் "பொது மண்டபத்தில்" கூட்டப்பட்ட கூட்டத்திற்கு **சேர். ஜேம்ஸ் பீரீஸ் என்ற கிறிஸ்தவரே தலைமை தாங்கினார்.**

இவ்வாறு ஆங்கிலேய அரசாங்கத்தின் அநீதிகள் அட்டூழியங்களை பிரித்தானிய அரசுக்கு வெளிப்படுத்தி சிறையிலிடப்பட்ட சேனநாயக்கர்களையும் ஏனைய சிங்கள பௌத்தர்களையும் விடுவிக்கக் கோரி எழுதப்பட்ட முறையீட்டு விண்ணப்பத்தில் கையெழுத்திட்டவர்களில் அதிகமானோர் கிறிஸ்த்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இ.டபிள்யு பெரேரா என்ற கத்தோலிக்கரே தன் உயிருக்கு ஆபத்தாயிருந்த போதிலும் முறையீட்டு விண்ணப்பத்தை தன் சப்பாத்துக்குள் மறைத்து வைத்து இரகசியமாக இலண்டனுக்கு எடுத்துச் சென்று பிரித்தானிய அரசிடம் ஒப்படைத்தார். இவ்வாறு சுதந்திரத்தை, அமைதியை நிலைநாட்ட கிறிஸ்தவர்கள் அயராது உழைத்தார்கள் என்பது வரலாறு நமக்கு கற்றுத் தரும் உண்மையாகும். என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு நூற்றாண்டு கால ஆங்கிலேய ஆட்சியின் பின்னர் தான் இலங்கைத் தேசப் பற்றுள்ளவர்கள் நாட்டின் முழு சுதந்திரத்திற்காக முழு மூச்சுடன் உழைக்கத் தொடங்கினர். இலங்கைத் தமிழ் - சிங்கள தேசபிமானிகளும் கல்விமான்களும் ஒன்று சேர்ந்து 1919இல் இலங்கைத் தேசிய காங்கிரசை அமைத்தனர். அதன் முதல் தலைவராக திரு. பொன்னம்பலம் அருணாசலமும் அவரைத் தொடர்ந்து கிறிஸ்தவரான சேர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களும் நியமனம் பெற்றனர். அதன் செயலர்களில் ஒருவராகவும், பொருளாளராகவும் கத்தோலிக்கராகன திரு. இ.ரி.டி சில்வா தெரிவு செய்யப்பட்டார்.

ஆங்கிலேயரில் ஒரு பொது எதிரியை கண்டு அந்நிய ஆட்சியாளரால் சீர்குலைக்கப்பட்ட தங்கள் சுதேச கலாசாரத்தையும் பண்பாட்டையும் திரும்பவும் நிலை நிறுத்தி வளர்க்கும் நோக்குடன் சுயாட்சி கேட்டு கிளர்ச்சி செய்வதாக இலங்கைத் தேசிய காங்கிரஸ் தீர்மானித்தது. இந்த தீர்மானத்தை திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனா முன்மொழிய ஒரு கத்தோலிக்க சட்டவாதியான ஜே. ஏ. சீ. கூரே வழி மொழிந்தார். தேசிய பிரச்சினைகளை, போராட்டங்களின் போது தாம் ஏனைய மக்களுடன் கூட்டாக இணைந்து செயல்பட வேண்டும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து செயற்பட்டனர். இவர்களில் சிறப்பாக சேர். ஜேம்ஸ் பீரீஸ், திரு. இ.டபிள்யு பெரேரா, ஏ. விக்கிரமசிங்க, சட்டத்தரணி, ஜே.ஏ.சீ. கூரே, ஸ்ரான்லி சொய்ஸா, இ.ரி.டி.சில்வா, மார்க்கஸ் பர்னாந்து, ஜி.சி.எஸ் கொறெயா போன்ற இவர்கள் இலங்கையிலிருந்த ஆங்கிலேய அரசாங்கத்திற்கும், பிரித்தானிய ஆட்சியாளருக்கும் பல வகைகளிலும் அழுத்தம் கொடுத்து கிளர்ச்சி செய்தனர். தம்மைத் தாமே ஆளுவதற்கு இலங்கை மக்களின் உரிமையை எடுத்துக் கூறி மக்களின் தகைமையை முன் வைத்து முழுச் சுதந்திரம் கிடைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இதன் விளைவாக 1931ம் ஆண்டு அநேகமாக அனைத்து உள்நாட்டு விவகாரங்களிலும் ஓரளவு சுதந்திரம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து டொனமூர் ஆணைக்குழு நியமமிக்கப்டது. இதனுடைய டொனமூர் சட்ட யாப்பின் பிரகாரம் ஒரு புதிய ஜனநாயக அமைப்பு முறை அறிமுகம் செய்யப்படது. இதன் படி **சட்டம் ஆக்கும், அமுல் செய்யும் அதிகாரங்களைக் கொண்ட ஒரு அரசியல்** சட்ட **மன்றம்** எற்படுத்தப்பட்டது. அம்மன்றம் **கல்வி, விவசாயம் போன்ற வெவ்வேறு துறைகளை பொறுப்பெடுத்து** நடாத்த **ஏழு குழுக்களைத் தெரிவு செய்தது.** சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்குப் பாதகமான சட்டங்களை நிராகரிக்கவும் இலங்கையின் ஆளுணருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அத்துடன் ***21 வயதுக்கு மேற்பட்ட சகல ஆண், பெண்கள் இருபாலாருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.*** இவ்வாறு டொனமூர் சட்ட யாப்பின் மூலமாக இன்னும் கூடுதலான அதிகாரங்கள் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டன. இச்சட்ட யாப்பில் காணப்பட்ட குறைகளை, தவறுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு 1946ஆம் ஆண்டு 'சோல்பரி ஆணைக்குழு' நியமிக்கப்பட்டது. இதன் சட்ட யாப்பின் பிரகாரம் **மக்கள் பிரதிநிதிகள் சபை (கீழ்ச்சபை), செனற் சபை(மேல்ச்சபை)** என இரு அமைப்புக்களைக் கொண்ட **'மக்களாட்சி மன்றம்'** உருவாக்கப்பட்டது. இத்தகைய வரலாற்று சம்பவங்களின் பின்னணியிலேயே 1948ம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி இலங்கைக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டு இலங்கை முழுச் சுதந்திரம் பெற்ற நாடாகியது.

## 4:16 மதிப்பீடு :

இலங்கையை ஆட்சிபுரிந்த **ஐரோப்பியர்களான போர்த்துக் கேயர், ஒல்லாந்தர்** என்பவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயரின் ஆட்சி இடம் பெறுகின்றது. கி.பி 1796ம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்ட இலங்கை – சுதந்திரம் அடையும் வரையான 1948ம் ஆண்டு வரையான காலப்பகுதி வரை ஆங்கிலேய நிர்வாககட்டமைப்புக்குள் இலங்கையின் ஆட்சி செயல்பட்டது. பிற ஐரோப்பியரை விட ஆங்கிலேயரது ஆட்சி, நிர்வாகம், மற்றும் பல்துறைசார் செயற்பாடுகளால் இலங்கை வளம் பெற்றது. சிறப்பாக இவர்கள் காலத்தில் இலங்கை பெற்ற அரிய கொடைச் செல்வமே **ஆங்கிலக்கல்வியாகும்**. அத்துடன் அவர்களது 150 வருட ஆட்சியின் கீழ் இலங்கை பல துறைகளிலும் வளர்ச்சி கண்டு விரைவாக முன்னேறியது.

ஆசியாவிலேயே கல்வித்துறையில் முதல் தர நாடாக இலங்கை விளங்கியது. இவர்களது 19ம் நூற்றாண்டின் ஆட்சியிலேயே என்றால் மிகையாகாது. ஏனெனில் அந்தளவிற்கு பல கிறிஸ்தவ மிசனறி அமைப்புகள் சுதந்திரத்துடன் கல்வித்துறைக்கு அயராது உழைத்து பெண்கள், ஆண்கள் மற்றும் ஏழைகளின் கல்வித் தர முன்னேற்றத்திற்கு அயராது உழைத்தனர் எனலாம். மேலும் சமூகத்தில் அடிமைத்தனம், கட்டாய வேலை செய்தல் என்பன நிறுத்தப்பட்டது. அரச-நிர்வாகம், போக்குவரத்து, சமூக தொடர்பு, தபால்தொடர்பு, புகையிரத பாதைகள், விவசாய உற்பத்தி, சுகாதாரம், நீர்ப்பாசனம் போன்ற பல துறைகளில் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு நாடு முன்னேறியது. எனலாம்.

# 5- சுதந்திரகாலம் (கி.பி1948-தற்காலம்வரை)

## -சுதந்திர இலங்கை-

## 5:1 அறிமுகம்

இலங்கை ஐரோப்பியரான ஆங்கிலேயரின் 150 வருடங்களிற்கு மேலான ஆட்சியிலிருந்து 1948ம் ஆண்டு மாசி மாதம் 4ம்திகதி முழுச்சுதந்திரத்தையும் பெற்றுக்கொண்டது. ஆங்கிலேயரின் நிர்வாகக் கட்டமைப்பு, அவர்களது இராணுவச் சட்டம், மேலாதிக்க போக்கு என்பவற்றை வெறுத்த இலங்கை வாழ் தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியினால் ஆங்கிலேய அரசாங்கம் முழுச்சுதந்திரத்தையும் இலங்கை வள நாட்டிற்கு வழங்கினார்கள். அதன் பின்பு தமது நாட்டிற்கு சென்றார்கள். இதனால் சுதந்திரம் பெற்ற இலங்கை சுதேச மக்களின் நிர்வாக ஆட்சியின் கீழ் செயல்படத் தொடங்கியது. இதன் விளைவாக திருச்சபை பல துறைகளிலும் துரிதமாக முன்னேறி ஒரு வலிமையான சக்தி அமைப்பாகத் திகழ்ந்தது.

## 5:2 சுதந்திர இலங்கையில் திருச்சபையின் நிர்வாகக் கட்டமைப்பு

அதி. வண. பொன்ஜீன் ஆண்டகை 1883 இல் கொழும்பு ஆயராக நியமனம் பெற்றதை அடுத்து 1887 இல் இலங்கையில் திருச்சபையின் ஆட்சிப் பீடம் நிறுவப்பட்டு கொழும்பு மறைமாவட்டம் ஒரு அதிமேற்றிராசனமாக பிரகடனம் செய்யப்பட்டது. அதன்முதல் பேராயராக அதி.வண பொன்ஜீன் ஆண்டகையே நியமிக்கப்பட்டார் யாழ்ப்பாணம், கண்டி மறை மாவட்டங்கள் அதன் உபமறை மாவட்டங்களாக விளங்கின. 1893ம் ஆண்டு காலி, திருமலை, மட்டக்களப்பு மறை மாவட்டங்கள் அமைக்கப்பட்டு இயேசு சபையினரிடம் அதன் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டில் சிலாபம் மறைமாவட்டம் நிறுவப்பட்டு அதன் ஆயராக அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அதி.வண எட்மன்ட் பீரிஸ் அடிகளார் நியமிக்கப்பட்டார். இலங்கை கத்தோலிக்க திருச்சபையை வழி நடத்திய முதல் சுதேச சிங்கள ஆயர் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதோர் பின்னணியில் இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்து அரசியல் சுதந்திரம் பெற்ற 1948ஆம் ஆண்டில் அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த சுதேச குருவான அதி. வண தோமஸ் பென்ஜமின் கூறே அடிகளார் கொழும்பு பேராயராக நியமனம் பெற்றார் இவரே இலங்கையின் முதல் சுதேச பேராயராவார். அதைத் தொடர்ந்து 1950ஆம் ஆண்டில் யாழ்மறை மாவட்ட ஆயராக அதி.வண ஜெறோம் எமிலியானுஸ் பிள்ளை நியமனம் பெற்றார் அவரே இலங்கையின் முதல் சுதேச தமிழ் ஆயராவார். தொடர்ந்து வேறு பல மறை மாவட்டங்களும் நிறுவப்பட்டு இன்று இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் ஆட்சிப்பீடத்தில் கொழும்பு, யாழ்ப்பாணம் , கண்டி , திருமலை , மட்டக்களப்பு, காலி சிலாபம் , அனுராதபுரம் , பதுளை , குருணாகலை , இரத்தினபுரி , மன்னார் என பதினொரு மறைமாவட்டங்கள் இருக்கின்றன. இன்று இவற்றினுடைய நிர்வாகப் பொறுப்புகள் முற்று முழுவதும் சுதேச ஆயர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 5:3 சுதந்திர காலத்தில் திருச்சபையின் கல்விச் செயற்பாடுகள்

இலங்கை திருச்சபை இக்கால கட்டங்களில் குருமடங்களை நிறுவி சுதேச மாணவர்களை குருவாக உருவாக்குவதில் செயற்பட்டன. அதி.வண பொன்ஜீன் ஆண்டகை 1869இல் யாழ்ப்பாணத்தில் புனித மடுத்தீனார் பெரிய குருமடத்தையும் 1883ஆம் ஆண்டில் கொழும்பில் புனித பேர்னாட் பெரிய குருமடத்தையும் நிறுவி சுதேச குருக்களைப் பயிற்றுவிப்பதில் முன்னோடியாக இருந்தார். 1955ஆம் ஆண்டில் இவ்விரு குருமடங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு கண்டியில் இலங்கைத் தேசிய பெரிய குருமடம் அமைக்கப்பட்டது. அங்கேயே இலங்கையில் இன்று பணிபுரியும் பெரும்பாலான சுதேச மேற்றிராசன துறவற சபைக் குருக்கள் உருவாக்கம் பெற்றனர். இக் குருமடத்திற்கு உதவியாக பலசிறிய குரு மடங்களும் நிறுவப்பட்டன. இலங்கைத் தளத் திருச்சபையின் வளர்ச்சிக்கும் அதன் சுதேச பண்பாட்டு மயமாக்கலுக்கும் பெரும் உதவியாக அமைந்தன. சுதந்திர இலங்கைத் தளத்திருச்சபையின் தரம் உயர்வதற்கு அக்காலத்தில் அமுலிலிருந்த சகலருக்கும் கல்வி கற்கும் சந்தர்ப்பம் அளிக்கக் கூடிய கல்வி முறை மற்றொரு முக்கிய காரணியாக இருந்தது.

கத்தோலிக்க திருச்சபை இவ் அரசநன்கொடை பெறும் கல்விமுறையைப் பின்பற்றி இலங்கையின் நகர்ப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் பரவலாக பாடசாலைகளை அமைத்து ஒரு சிறந்த பாடசாலைகளின் இணைப்புத் திட்டத்தைக் கொண்டிருந்தது. இப்பாடசாலைகளில் பிற மத மாணவர்களும் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர். பொதுவாக ஒவ்வொரு பங்கிலுமுள்ள ஒவ்வொரு ஆலயத்திற்கும் அருகில் ஒரு கலவன் பாடசாலையோ அல்லது ஆண்-பெண்களுக்கென்று தனித்தனியாக இரு பாடசாலைகளோ அமைக்கப்பட்டிருந்தன. அரசமேற்பார்வை, நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் செயற்பட்டன. கத்தோலிக்கப் பாடசாலைகளுக்குப் பொறுப்பாக ஒரு குரு-பாடசாலைப் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இவ்வாறு கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாகத்தின் கீழ் 750 க்கு மேற்பட்ட பாடசாலைகள் இயங்கின. இப்பாடசாலைகளில் மதக்கல்வியும் மறைசார ஏனைய பாடங்களும் கற்பிக்கப்பட்டன. இக்கத்தோலிக்க பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை பயிற்றுவிக்கவென "ஆசிரியர் பயிற்சி கலாசாலை களும்" நிறுவப்பட்டன. இதனால் பாடசாலைக்கும். பங்குத்தளத் திருச்சபைக்கும், பங்குத்தந்தைக்கும் இடையே நெருங்கிய தொடர்பும் உறவும் ஏற்படத் தொடங்கியது.

அமலமரித் தியாகிகள் சபை,ஆசீர்வாதப்பர் சபையினர், இயேசு சபையினர், டிலாசால் சகோதரர், மாறிஸ்ற் சகோதரர் போன்ற துறவிகள் ஆண்களுக்கென ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்துக் கல்வியறிவு ஊட்டினர். பிரான்சிஸ்கன் சகோதரர், யாழ்ப்பாண புனித சூசையப்பர்சபைச்சகோதரர் சுதேசமொழிகளில் கல்வியை வழங்கினர். திருக்குடும்பக் கன்னியர் , நல்லாயன் சபைக் கன்னியர், பிரான்சிஸ்கன் மிசனறிச்சபைச் சகோதரிகள் , பிறர் சிநேகச் சகோதரிகள் எனப் பல துறவற சகோதரிகள் பெண்களுக்கென ஆங்கில,சுதேச மொழிப்பாடசாலைகளை அமைத்து மாணவிகளுக்குச் சிறந்த கல்வியறிவு அளித்தனர். இவ்வாறு கத்தோலிக்க மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்ட சிறந்த கல்வி கத்தோலிக்க திருச்சபையின் தரத்தை உயர்த்தி அதை மிக வலிமையுள்ள தாபனமாக்கியது.

மேலும் கத்தோலிக்கரை மறை அறிவிலும், கல்வி அறிவிலும், சமூகப் பொருளாதார நலன்களிலும் உயர்ந்தவர்களாக்கி அரச தனியார் துறைகளில் பல உயர் பதவிகளைப் பெற வழிவகுத்தது. இதன் விளைவாக கத்தோலிக்க திருச்சபை இலங்கையில் செல்வாக்குடன் திகழ்ந்து கனமான தாக்கத்தை எந்தத் துறையிலும் ஏற்படுத்தக் கூடிய நிறுவனமாக திகழ்ந்தது.

## 5:4 சுதந்திர காலத்தில் பௌத்த, இந்து மத மறுமலர்ச்சியும் அதனால் கத்தோலிக்க சமூகம் அனுபவிக்க நேர்ந்த இடரல்களும்

கத்தோலிக்க திருச்சபையின் இத்தகைய மேன்மையான முன்னேற்றமும், வலிமைமிகு செல்வாக்கும் பெரும்பான்மை யோராகவிருந்த பௌத்தமத சிங்களவர்களுக்கு எரிச்சலையும் ஆத்திரத்தையும் ஊட்டின. இதனால் பௌத்த, இந்துமத மறுமலர்ச்சி உதயமாயின. அனைத்து இலங்கை பௌத்த சம்மேளனம், 1954ஆம் ஆண்டு சித்திரை 2ம் திகதி கூடிய தனது 33வது வருடாந்த மகாநாட்டில் பௌத்த மதத்தை வலிமைப்படுத்த ஒரு பௌத்த ஆணைக்குழுவை நியமித்தது. அக்குழு பௌத்தமத செயற்பாடுகளை ஆராய்வதற்குப் பதிலாக கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகளை ஆராய்ந்து கத்தோலிக்க பாடசாலைகளுக்கு எதிராக பல கருத்துக்களை முன்வைத்தது. கத்தோலிக்க பாடசாலைகளுக்கு அரசு வழங்கும் ஆதரவு பௌத்த மக்களுக்குச் செய்யப்படும் அநீதி என்றும் குற்றம் சுமத்தியது. கத்தோலிக்க பாடசாலைகளில் கடைப்பிடிக்கப்படும் உயர்தராதரம் , ஒழுக்கம் , கட்டுப்பாடு போன்றவற்றின் நிமித்தம் பௌத்த மாணவர்கள் அப்பாடசாலைகளை நாடுகின்றார்கள். என்றும் அரச உயர் பதவிகள் கத்தோலிக்க மாணவர்களுக்கு அல்லது கத்தோலிக்க பாடசாலைகளில் பயிலும் பௌத்த மாணவர்களுக்கே கிடைக்கின்றன. என்றும் குறை கூறப்பட்டதோடு அரச உயர் பதவிகள் விகிதாசார முறைப்படியே வழங்கப்பட வேண்டும். எனவும் கூறப்பட்டது. கத்தோலிக்க பாடசாலைகள் பௌத்த மத மாணவர்களை மத மாற்றம் செய்யும் தளங்களாக அமைந்துள்ளன. என்றும் குற்றப்பழி சுமத்தப்பட்டது.

பௌத்த ஆணைக்குழு வெளியிட்ட பௌத்த மதத்திற்கு நம்பிக்கைத் துரோகம் என்ற தனது அறிக்கையில் கத்தோலிக்க திருச்சபையை, அதாவது அதன் பாடசாலைகள், அனாதை இல்லங்கள் , எனைய அன்புப்பணி இல்லங்கள், தாபனங்கள் போன்றவற்றை அழிப்பதன் வழியாகத்தான் பௌத்த மதத்தை மலரச் செய்யலாம். என்று பரிந்துரைத்தது. 1956ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இவ்வறிக்கை பௌத்த மதத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் பலரால் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வாறு கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக பௌத்த ஆணைக்குழுவின் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை. என எண்பித்து இலங்கை கத்தோலிக்க ஐக்கியம் பதிலளித்தது. இதன் விளைவாக சுதந்திர காலத்தில் அரசாங்கம் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக சில நடவடிக்கைகளை

பழிவாங்க எடுத்தது. அத்தகைய நடவடிக்கை களுள் ஒன்றாகவே கத்தோலிக்க-கிறிஸ்தவ பிறநாட்டு மறைபரப்பாளர்கள் இலங்கைக்குள் பணிபுரிய வருவது கட்டுப்படுத்தப்பட்டு அதைத் தடைசெய்ய முயற்ச்சிகள் பல எடுக்கப்பட்டன. ஆனால் இலங்கையில் 1869ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் குருமடங்களில் பயிற்றப்பட்டு உருவாக்கம் பெற்ற பல சுதேச குருக்கள் இருந்தமையால் இக்கட்டுப்பாடு கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகளை அதிகம் பாதிக்கவில்லை.

மேலும் அரசாங்கத்தின் பணிப்புரைக்கு இணங்க 1886ஆம் ஆண்டு தொடக்கம் 78 ஆண்டுகளாகக் கொழும்பு பெரிய வைத்தியசாலையிலும், இன்னும் பல தொழுநோய் வைத்தியசாலைகளிலும் நோயாளிகளை அன்புடனும் பொறுப்புடனும் பராமரித்து வந்த கத்தோலிக்க துறவறக் கன்னியர்கள் 1964ம் ஆண்டு அனைத்து அரசவைத்தியசாலைகளிலிருந்தும் வெளியேற்றப்பட்டார்கள். இத்தகைய நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டவர்கள் கன்னியர்கள் அல்ல- மாறாக நோயாளிகளும் , விசுவாசமிக்க மக்கள் சமூகமுமே ஆகும். வெளியேறிய சில கன்னியர்கள் கத்தோலிக்க திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்ட வேறு வைத்தியசாலைகளிலும், சிலர் வேறு பிறர் சிநேகப் பணிகளிலும் தம்மை அர்ப்பணித்து மனித நேய சேவையை தொடர்ந்து ஆற்றினர். 1965ஆம் ஆண்டு காலா காலமாக விடுமுறை நாட்களாக இருந்த ஞாயிறு தினம் வேலை நாளாக ஆக்கப்பட்டு அதற்குப் பதிலாக போயா தினங்கள் விடுமுறை நாட்களாக ஆக்கப்பட்டன. இதனால் கத்தோலிக்கர் ஞாயிறு தினங்களில் தமது கடமைகளை நிறைவேற்றவும் கடன் திருநாளில் பங்கெடுக்கவும் மிகக் கஸ்டப்பட்டாலும் தங்கள் விசுவாசத்திற்குச் சான்றுபகரும் வகையில் பெருந்தொகையானோர் ஞாயிறு வழிபாடுகளில் பங்கெடுத்து தமது சமூக, ஞானக் கடமைகளை நிறைவேற்றினர்.

மேலும் உள்நாட்டு அமைச்சரின் முன் அனுமதியின்றி தேவாலயங்கள் கட்டுவது தடைசெய்யப்பட்டது. இவ்வாறாக சுதந்திரகாலத்தில் பல வழிகளில் கத்தோலிக்க திருச்சபை அரசினால் பல்வேறு வகையில் துன்புறுத்தப்பட்டாலும் அதன் மத்தியிலும் கத்தோலிக்கர்கள் மிகத் துணிவுடனும் உறுதியான விசுவாசத்துடனும் இச்சவால்களை எதிர் கொண்டு திருச்சபையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தனர்.

## 5:5 அரசாங்கத்தால் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்டமையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும்

சுதந்திரகாலத்தில் இலங்கையில் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட மிகப்பெரிய தீங்கு,அநீதி,அநியாயம்- அரச உதவிபெறும் அனைத்துப் பாடசாலைகளையும் பறிந்தெடுத்து அவற்றை அரச உடமையாக் கியதாகும். 1960ஆம் ஆண்டு அதிகாரத்திற்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிரான கொள்கைகள், உணர்வுகள் அதனுடைய அரசியல் கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அமுல் செய்யப்பட்டன. கல்வித்துறையில் கிறிஸ்தவ சபைகள் குறிப்பாக கத்தோலிக்க திருச்சபை அடைந்திருந்த முன்னேற்றத்தை சில பௌத்த தீவிரவாதிகளால் ஜீரணிக்க முடியவில்லை. கத்தோலிக்க பாடசாலைகள் மாணவர்களின் நலனில் அல்ல மாறாக தங்கள் அதிகாரத்தை வலுப்படுத்துவதிலேயே அக்கறை கொண்டுள்ளன. என்றும் அவை பாடசாலைக்கிடையில் போட்டியை உருவாக்கி பிறிதொரு பாடசாலையின் முன்னேற்ற தரக்குறைவுக்கு காரணமாக அமைகின்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

கற்பதற்கு எல்லோருக்கும் சம வாய்ப்புக் கிட்டாததால் ஒரு சமநிலையற்ற தன்மை உருவாகி நாட்டின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்து ஏற்படலாமென்றும், அத்தகைய கல்வி அமைப்பு முறை ஒரு ஜனநாயக நாட்டிற்கு உகந்தது அல்ல. என்றும் கூறப்பட்டது. இதற்கு ஒரே வழி **மதத்துவேஸம் கொண்ட பௌத்த ஆணைக்குழு-** "எல்லா மத பாடசாலைகளையும் அரசு தேசிய மயமாக்க வேண்டும்". என அழுத்தம் தெரிவித்தது. அதாவது அனைத்துப் பாடசாலைகளும் பௌத்தமத பாடசாலைகளாக மாற்றப்பட வேண்டும் என்பதே அதன் கருத்தாகும். இதற்கு திருச்சபைக்கு எதிரான இடதுசாரிப் பொதுவுடமைவாதக் கட்சிகளும் இதற்கு சார்பாக அரசாங்கத்தை வற்புறுத்தின. அனைத்து மத பாடசாலைகளையும் தேசிய மயமாக்குதலை தங்களது தேர்தல் விஞ்ஞாபனமாகக் கொண்டு வெற்றி பெற்று **1960 இல் ஆட்சியைக் கைப்பற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம்** அதே ஆண்டு ஐப்பசி மாதம் 28ஆம் திகதி அனைத்து மத பாடசாலைகளையும் தேசிய மயமாக்கும் "<u>மாசோதாவை</u>" மக்களாட்சி மன்றத்தில் சமர்ப்பித்து, அதன் சட்ட மூலத்தை நிறைவேற்றியது. இதனை அறிந்த கத்தோலிக்க ஆயர்கள் ஒன்றுகூடி அச்சட்டமூலத்திற்கு எதிராக தமது ஆட்சேபனையைத் தெரிவித்து கத்தோலிக்க

மாணவர்கள் தமது கல்வியை மேற்கொள்ளுவதில் இருக்கின்ற அடிப்படை மனித உரிமையை விளக்கினர்.

பாடசாலைகளைச் சுவீகரிக்கும் சட்ட மூலத்தை நிறைவேற்றி அதை அமுல் செய்ய 1960 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் திகதியை நிர்ணயித்தது. இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான அதி.வண தோமஸ் கூரே ஆண்டகை- இச்சட்டம் அமுல் செய்யப்படுவதை கத்தோலிக்க மக்கள் கடைசித்துளி இரத்தத்தையும் சிந்தி தடுப்பார்கள். என அரசாங்கத்தை எச்சரிக்கை செய்யும் ஆலோசனையை வழங்கினார். கத்தோலிக்கரும் தங்கள் பாடசாலைகளை ஆக்கிரமித்து அரசாங்கம் பாடசாலைகளை கைப்பற்றுவதை தடை செய்தனர். இதற்கென மார்கழி 21ஆம் திகதி கொழும்பு நகரில் கத்தோலிக்கரினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் எதிர்ப்புக் கூட்டத்தை பௌத்த காடையர்கள் குழப்பி கலகம் உண்டாக்கினர். இதனால் நாடெங்கும் பதட்டமும் பெரிய இரத்தக்களரியும் இடம்பெறும் ஆபத்தான சூழல் நிலவியது. அவ்வேளை வத்திக்கான் திருச்சபையின் பணிப்புரையின் பேரில் இலங்கைக்கு வருகை தந்த இந்திய ஆயரான வலேரியன் கர்தினால் கிறாசியாஸ் ஆண்டகையின்- தலையீட்டினால் ஏற்பட இருந்த ஆபத்து நீங்கியது. கத்தோலிக்கர்களின் மத வாழ்விற்கு எவ்வித குந்தகமும் விளைவிக்கப்படமாட்டாது என்ற நிபந்தனையின் கீழ் அரசாங்கத்தின் தேசிய கல்வித் திட்டத்தை தாம் ஏற்றுக் கொள்வதாக அறிக்கை வெளியிட்டனர். இதனால் கத்தோலிக்க விசுவாசிகள் தாம் ஆக்கிரமித்திருந்த கத்தோலிக்க பாடசாலைக் கட்டிடங்களிலிருந்து அமைதியாக தமது இல்லங்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

அரச உடமையாக்கும் சட்டத்தின் பிரகாரம் அனைத்து மதப் பாடசாலைகளையும் , கத்தோலிக்க திருச்சபைக்குச் சொந்தமான 600 க்கும் மேற்பட்ட பங்குப் பாடசாலைகள், அதன் காணிகள், கட்டிடங்கள், தளபாடங்கள் அனைத்தும் எவ்வித நஸ்ட ஈடுகளுமின்றி பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்டன. இதனால் திருச்சபை பல தீமைகளை அனுபவிக்க உள்ளான போதிலும் பல நன்மைத்தனங்களையும் அனுபவித்தது.

## 5:6 பாடசாலைகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டதினால் ஏற்பட்ட நன்மை, தீமைகள்

### ➢ நன்மைகள்

**"மானிடர் செய்யும் தீமைகளைக் கொண்டு நன்மை செய்யக் கூடியவர் கடவுள்"** என்பது கிறிஸ்தவர்கள் அறிந்த மெய்மை. அரசாங்கத்தினால் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்டதன் விளைவாக திருச்சபைக்கு கிட்டிய நன்மைகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

- ❖ பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் வளர்ப்பில்- மறைக்கல்வியில் முன்னரிலும் பார்க்க அதிக கரிசனை எடுக்கத் தொடங்கினர்.
- ❖ பாடசாலைகளில் மறைக்கல்வி கற்க முடியாத மாணவர்களின் குறையை நிவர்த்தி செய்ய கத்தோலிக்க திருச்சபை வேறு வழிமுறைகளைக் கையாண்டது.
- ❖ "தேசிய மறைக்கல்வி நிலையம்" ஒன்று நிறுவப்பட்டு அனைத்து இலங்கை மாணவர்களுக்கும் மறைக்கல்வி அளிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல் செய்யப்பட்டது.
- ❖ ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மறைக்கல்வி நடுநிலையங்களை அமைத்து, தகுதியான மறையாசிரியர்களைத் தெரிந்தெடுத்து, பயிற்றுவித்து அவர்களின் துணையுடன் பெரும்பணி ஆற்றப்பட்டது.
- ❖ பங்குரீதியில் மறைவகுப்புக்களையும் ஞாயிறு பாடசாலைகளையும் ஒழுங்கு செய்து நன்கு பயிற்றப்பெற்ற மறையாசிரியர்களின் துணையுடன் நடாத்திவரும் சூழல் தோற்றம் பெற்றது.
- ❖ விவிலிய வகுப்புக்கள், பாசறைகள், கருத்தரங்குகள் எனப் பலவிதமான போதனாமுறைகளைக் கையாண்டு திருச்சபை விசுவாசிகளுக்கு மறைக்கல்வி அளித்து வருகின்றது.
- ❖ நிலைப்படக் காட்சிகள் , திரைப்படங்கள் , பொருட்காட்சிகள் போன்றவை பெரிதளவில் பயன்படுத்தப்படுகின்றன.
- ❖ புதிய மறைக்கல்வி போதனா முறைகளுக்கமைய புதிய பாடத்திட்ட நூல்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.
- ❖ பங்குத் தந்தைக்கும், பெற்றோருக்கும் , மாணவர்களுக்கும் மறையாசிரியர்களுக்குமிடையே நெருங்கிய உறவு- தொடர்பு ஏற்பட்டுள்ளது.
- ❖ பொது நிலையினர் திருச்சபையில் தம் பணிகளையும் கடமைகளையும் உணர்ந்து பங்குப் பணிகளிலும் திருவழிபாடுகளிலும் கூடிய பொறுப்புடன் உயிரூட்டம் பெற்ற முறையில் பங்கெடுத்து வருகின்றனர்.

- ❖ பிற சமயப் பிள்ளைகளுடன் கத்தோலிக்க மாணவர்கள் சமமாக கற்கும், வாழும் சூழல் உதயமாகியது.

இவ்வாறான பல நன்மைத்தனங்களை திருச்சபை அனுபவித்த போதிலும் பல தீமைகளையும் சந்திக்க நேர்ந்தது.

## ➤ தீமைகள்

- ❖ கத்தோலிக்க மாணவர்களுக்கு கத்தோலிக்க் சூழலில் கல்வி பயிலும் உரிமை மறுக்கப்பட்டது.
- ❖ கத்தோலிக்க ஆசிரியர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.
- ❖ இன்று அநேகமான பாடசாலைகள் எவ்வித மதமுமற்ற, மதச் சூழலற்ற பாடசாலைகளாக காணப்படுகின்றன.
- ❖ கத்தோலிக்க திருமறையை பாடசாலைகளில் கற்பிப்பதில் இருந்த சுதந்திரம் அற்றுப் போனது. தமது மத முறைப்படி மாணவர்களை உருவாக்கும் உரிமையும் மறுக்கப்பட்டது.
- ❖ தம் மத ஆசிரியர்களைப் பயிற்றுவித்து நியமிக்கும் உரிமையும் பறிக்கப்பட்டது.
- ❖ ஏனைய பாடங்களைப் போல் மறைக்கல்வியும் வாரத்தில் ஒர் இரு பாடவேளையிலேயே கற்பிக்கப்பட்டன.
- ❖ அதிக பாடவேளைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.
- ❖ பல பாடசாலைகளில் மறைக்கல்வி கற்பிக்கும் திட்டம் முற்றாக அற்றுப் போயின.
- ❖ தலைமை ஆசிரியர், உதவி ஆசிரியர் பதவிகளெல்லாம் அரச செல்வாக்குடையவர்களுக்கே கிடைத்தன.
- ❖ கட்டுப்பாடற்ற முறையில் பெரியோரை, பெற்றோரை, ஆசிரியரை மதியாத, ஒழுக்கமில்லாத, கடவுள் பயமறியாத, மனித மதிப்பீடுகளற்ற சமுதாயம் உருவாக்கம் பெற்றமை.
- ❖ பாடசாலை நிர்வாகம், ஒழுக்கம் பற்றி கத்தோலிக்க திருச்சபைக்கு இருந்த உரிமை அற்றுப் போனமை.
- ❖ கத்தோலிக்க ஆசிரியர்களை வேறு சமயப் பாடசாலைகளிற்கு மாற்றம் செய்யப்பட்டனர்.

## 5:7 இலங்கையில் காணப்படும் பல்வேறு கிறிஸ்தவ மறை பணி நிலையங்கள்

### (01) இலங்கை வேதாகமச் சங்கம்

பிரித்தானியாவில் 1804ஆம் ஆண்டு முதன் முதலாக வேதாகமச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. பிரித்தானியாவினதும் பிற வெளிநாடுகளினதும் வேதாகமச் சங்கத்தின் ஒரு கிளையாகவே இலங்கை வேதாகமச் சங்கம் கொள்ளுப்பிட்டியில் 1812இல் ஆரம்பிக்கப்பட்டது. ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் தம் மறைபரப்புப் பணிக்கு வேதாகமத்தின் அவசியத்தை உணர்ந்து அப்போஸ்தலிக்க ஆர்வத்தால் தூண்டப்பட்டு அதைத் திருப்தி செய்யவே இச்சங்கத்தை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் அங்கிளிக்கன் சபையும், ஒல்லாந்த சீர்திருத்த சபையுமே அதில் முக்கிய பங்கெடுத்தன. ஏனைய சபைகளும், அன்றைய ஆங்கிலேய அரசாங்கமும் அதற்கு வேண்டிய நிதியுதவிகளை வழங்கின. இச்சங்கத்தின் முதல் தலைவராக அப்போது இலங்கை ஜனாதிபதியாகவிருந்த திரு றொபேட் பிறவுண்றிக் இருந்தார். பின்பு யாழ்ப்பாணத்திலும், திருமலை , மட்டக்களப்பு , கண்டியிலும் இச்சங்கத்தின் கிளைகள் திறக்கப்பட்டன. வேதாகமச் சங்கத்தின் முக்கிய நோக்கம்- ***"இறைவனின் வாழ்வளிக்கும் வார்த்தைகளைக் கொண்டுள்ள பரிசுத்த வேதாகம அறிவை மக்கள் மத்தியில் பரப்பி அதனைப் படித்து வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் வாயிலாக மக்கள் தம் வாழ்வில் மிகுந்த பலனடைய வழி சமைத்துக் கொடுப்பதே"*** ஆகும்.

வேதாகமத்தை சுதேச மொழிகளில் மொழி பெயர்த்து அதை முழுமையாகவோ பகுதி, பகுதியாகவோ அச்சிட்டுக் குறைந்த விலையில் அவற்றை மக்களுக்கு கிடைக்கச் செய்தனர். "ஒரு குடும்பத்திற்கு ஒரு வேதாகமம். ஒரு கிறிஸ்தவனுக்கு ஒரு புதிய ஏற்பாடு" என்ற கொள்கையுடன் வேதாகமத்தை அனைவருக்கும் கிடைக்கச் செய்தனர். வேதாகமத்தை எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய நூல்களையும் எழுதி வெளியிட்டனர். மேலும் வேதாகமப் போட்டிகள், பரீட்சைகள் , வகுப்புக்கள் , பாசறைகள் என்பவற்றை நடாத்தி வேதாகம அறிவை வளர்த்தனர். இன்று இலங்கை வேதாகமச் சங்கம் இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபையின் ஒரு அங்கமாகச் செயல்படுகின்றது. இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபையில் அங்கத்துவம் வகிக்கும் இலங்கைச்சபை, மெதடிஸ்தசபை, தென்னிந்தியசபை , பப்ரிஸ்றசபை, ஒல்லாந்து புரட்டஸ்தாந்து சபை , பிறெஸ்பிற்றேரியன் சபை, இரட்சணிய சேனை என்பவற்றின் பிரதிநிதிகளால் அதன் நிர்வாகசபை அமைக்கப்பட்டுள்ளது.

## (02) இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் (பேரவை)

ஒரு குறிப்பிட்ட நாட்டின் ஆயர்கள் தங்கள் மேய்ப்புப் பணியை திறம்படச் செய்ய தங்களுக்குள் அமைத்துக் கொள்ளும் ஒரு குழுவே ஆயர் மன்றம் அல்லது பேரவையாகும். திருச்சபையின் தொடக்க காலம் தொட்டே தனிச்சபைகளை ஆண்டு வந்த ஆயர்கள் பொதுநன்மையையும் தனிச்சபைகளின் நலன்களையும் வளர்ப்பதற்காகவும் தங்கள் ஆற்றல்களையும், திறன்களையும், திட்டங்களையும் ஒன்றுபடுத்த சகோதர அன்பாலும் மறைபோதக ஆர்வத்தாலும் தூண்டப்பட்டு வந்திருக்கின்றனர். குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் ஆயர்கள் பிற ஆயர்களுடன் மிக நெருங்கி ஒன்றித்தும் இணைந்தும் பணிபுரியாவிடின் தங்கள் பணியைத் தகுந்த முறையிலும், பயன் விளைவிக்கும் முறையிலும் நிறைவேற்ற முடியாது. எனவே அவர்கள் பிற ஆயர்களுடன் கூடிக் கலந்தாலோசனை செய்வதன் வழியாக ஆழ்ந்த அனுபவ அறிவில் பங்கு கொண்டு தங்கள் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்வதினாலும் தங்கள் அறிவு,அனுபவம், ஆற்றல் அனைத்தையும் ஒன்று திரட்டிச் செயல்படுத்துவதினாலும் எல்லாச்சபைகளும் மிகுந்த பயனடைகின்றன. குறிப்பாக “காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ற மறைதூதுப்பணிகள் , திட்டங்கள் வழியாகத் திருச்சபை மக்களுக்கு வழங்கும் மேலான நலன்களை வளர்ப்பதே” இப் பேரவையின் நோக்கமாகும்.

இவ்வாறு பல்வேறு சபைகளின் ஆயர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டால் விழுமியப் பயன்-நன்மைகள் பல பெறலாம். இவர்கள் தங்கள் அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்து ஒருவருக்கொருவர் உறுதுணையாயிருக்கவும் முடியும்.

## 03) இலங்கை ஆயர்பேரவையுடன் இணைந்துள்ள பல்வேறு மறைப்பணித் துறைகள்

இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களின் ஞான வாழ்விலும் அவர்களின் ஆன்மீக வாழ்விலும் கரிசனை,பற்று உடையதாக செயற்பட்டு வரும் இலங்கை ஆயர் பேரவை பல்வேறு மறைப்பணித் துறைகள் வழியாக அம் மக்களை கிறிஸ்துவின் வழியில் வழிநடத்தி வருகின்றது. மனுக்குல மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்வினை அர்த்தமுள்ள முறையில் சான்று பகர்ந்து வருகின்றது.

## 3.1 தேசிய ஆணைக்குழுக்கள்

- குருக்கள் , துறவிகள் , குருமாணவர்கள்- உலகு சார்ந்த துறவற அமைப்புக்கள்
- திருவழிபாடு, கலாசார விவகாரங்கள்
- நீதி, அமைதி , மனித முன்னேற்றம்
- பொது நிலையினர்
- மறை அறிவிப்புப் பணி
- கல்வி, மறைக்கல்வி , விவிலிய மறைப்பணி
- கிறிஸ்தவ ஒன்றிப்பு, உரையாடல்
- சமூகத் தொடர்புகள்
- இணைப்பு துறவிகளுடனான ஆணைக்குழு

## 3.2 தேசிய அமைப்புக்கள்

- திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகள்
- இலங்கை கத்தோலிக்க சங்கம்
- மரியாயின் சேனை
- புனித வின்சென்ற் டி போல் சபை
- சவேரியன்ஸ்
- சினிமா அப்போஸ்தலத்துவத்திற்கான அனைத்துலக அமைப்பு
- சமூக பொருளாதார முன்னேற்ற நிலையம்
- தேசிய மறைக்கல்வி , விவிலிய மறைப்பணி நடு நிலையம்

## 3.3மறைமாவட்டங்களுக்கிடையிலான மறைபணி இயக்கங்கள்

- வானொலி தொலைக்காட்சி மறைப்பணி
- இலங்கைக் குருசில்லோ இயக்கம்
- மறுமலர்ச்சி மறைப்பணி
- இலங்கைக் கிறிஸ்தவ குடும்ப இயக்கம்
- கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள்
- இலங்கைத் தொழிலாளர் இயக்கம்
- இலங்கை லகிறிவி இயக்கம்
- அமல மரியின் மறை பரப்புச் சபை
- பொது நிலையினர்,இளையோர்,அன்பியக் கழகம்.

இவற்றை விட மறைக்கோட்ட மட்டங்கள், பங்கு மட்டங்கள், ஒவ்வொரு ஆலய திருச்சபை எனப்பல மட்டங்கள் வழியாகவும் மக்களுக்கு அரும்பெரும்பணியை இலங்கை ஆயர் பேரவை ஆற்றி வருகின்றது.

எடுத்துக் காட்டாக மறைக்கல்வி நிலையத்தை எடுத்துக் கொள்வோமானால் அதன் வழியாக மறை ஆசிரியர்கள் பயிற்றப்படுகின்றனர். மறைக்கல்வி பாடநூல்கள் தயாரிக்கப்படுகின்றன. மேலும் பல மறைக்கல்வி,வேதாகம நூல்கள் தயாரித்தும் வெளியிடப் படுகின்றன. வளர்ந்தோருக்கான மறைக்கல்வித் திட்டங்களை, நூல்களை தயாரித்து அமுல் செய்தல், மற்றும் வேதாகமப் போட்டிகள் , கருத்தரங்குகள் பாசறைகள் நடாத்தப்படுகின்றன. சமூகப் பொருளாதார முன்னேற்ற நிலையத்தை எடுத்துக் கொண்டால் அனாதைகளுக்கு,அகதிகளுக்கு- இல்லிடம் அமைத்துக் கொடுத்தல், நிவாரண உதவிகளை வழங்குதல், **வெள்ளப்பெருக்கு, சூறாவளி, சுனாமி , நிஸா, லைலா** போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது அவசர நிவாரண பணிகளையும் முன்னேடுத்துச் செல்கின்றது. வறுமைக்கு உட்பட்ட மாணவர்களுக்கு தங்கள் கல்வியைத் தொடர நிதியுதவி அளிக்கின்றது. மக்கள் மத்தியில் கிறிஸ்தவ விழுமியங்களை வளர்க்கவும் முயற்ச்சிகளை மேற்கொள்ளுகின்றது. அவ்வாறே திருவழிபாட்டு ஆணைக்குழுவும் எம் ஆலய திருவழிபாடுகளை எம் பண்பாட்டைத் தழுவி அமைக்க, அர்த்தமுள்ள முறையில் அவற்றை நிறைவேற்ற பல வழிகளிலும் உதவிபுரிகின்றது. கிறிஸ்தவ சமூகம் திருவழிபாடுகளில் பார்வையாளர்களாக இராமல் அர்த்தமுள்ள முறையில் முழுமையாக பங்கெடுக்ககூடிய சகல உதவிகளையும் வழங்குகின்றது.குருக்களும் ஞாயிறுதிருப்பலித் திருவுரைகளின் போதும் விசுவாசிகளின் வாழ்க்கைக்கு ஏற்ற பயனுள்ள நூல்களையும் கையேடுகளையும் தயாரித்து வழங்கி உதவி செய்தும் வருகின்றனர்.

## 04) இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை:

இலங்கை தேசிய கிறிஸ்தவசபையானது கிறிஸ்தவ திருச்சபைகளின் அனைத்துலக மன்றத்தின் பிரதிபலிப்பாகவே அமைந்துள்ளது. பல்வேறு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சபைகளுக்கிடையே பரஸ்பர ஒற்றுமையையும் நல்லுறவையும் வளர்க்கவும் சமூதாயத்திற்கு தேவையான பணிகளை ஒருங்கிணைத்து பொறுப்புடன் ஆற்றி சபைகளுக்கு உதவும் நோக்குடனும் இந்தஅமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பிலே

இலங்கைச் சபை, மெதடிஸ்தசபை , தென் இந்திய சபை , பப்பிரிஸ்ற் சபை, இரட்சணியசேனை , ஒல்லாந்த , சீர்திருத்த புரட்டஸ்தார்ந்து சபை , பிரெஸ்பிற்ரேறியன் சபை போன்றவை அங்கத்துவம் வகிக்கின்றன. இவ் இலங்கை தேசிய கிறிஸ்தவ சபையின் நிர்வாகத்தின் கீழ் இலங்கை வேதாகமச் சங்கம், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், கிறிஸ்தவ இளைஞர் சங்கம், கிறிஸ்தவ இளம் மகளிர் சங்கம் , கிறிஸ்தவ மாணவர் இயக்கம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்த நிறுவனங்களின் ஊடாக இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை-மக்களுக்கு இன, மத பாகுபாடின்றி சிறந்த பணியாற்றி வருகின்றது. **"கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல நாட்டிற்கும்,சமூதாயத்திற்கும் நற்பணியாற்றுலே"** இதன் நோக்கமாகும்.

ஆகவே தான் பல குழுக்களாக செயல்படுகின்றது குறிப்பாகமறைக்கல்விக்குழு, அபிவிருத்திக்குழு, மகளிர்குழு, உளவள பணிக்குழு ,இளைஞர்குழு, சமூகத்தொடர்புசாதனைக்குழு, இல்லிட வசதிக்குழு , மறைபரப்புக்குழு, நீதி சமாதானத்திற்கான குழு, நிதியுதவிக்குழு எனப் பல குழுக்களாக அமைந்து செயல்படுகின்றன. ஆரம்பத்தில் கிழக்காசிய கிறிஸ்தவ சபைகள் மன்றத்தின் கிளையாக இயங்கிய இச்சபை 1974ஆம் ஆண்டிலிருந்து ஆசிய கிறிஸ்தவ சபைகள் மன்றத்தின் கிளையாக இயங்கி வருகின்றது. வருடந்தோறும் பெந்தக்கோஸ்தே விழாவிற்கு முதல் ஞாயிறு தினத்தை ஆசிய ஞாயிறு தினமாக கொண்டாடி நான்கு ஆண்களுக்கு ஒரு முறை ஆசிய கிறிஸ்தவ மாநாடு இடம் பெற்று வருகின்றது. இன்று ஆசிய கிறிஸ்தவ சபையின் நிரந்தர உறுப்பினராக இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை இயங்கி வருகின்றது. அத்துடன் அனைத்துலக கிறிஸ்தவ சபைகளின் மன்றத்தின் அங்கத்தினராகவும் செயல்பட்டு வருகின்றது.

## 5:8சமாதானத்தை, நல்லுறவை கட்டியெழுப்புவதில் அனைத்து மதச்சமாதானத்திற்குமான அமைப்புக்களின் முக்கியத்துவம்

இன்றைய உலகில் மக்களிடையே உள்ள பிணைப்புக்கள், தொடர்புகள் மிக நெருக்கமுடையதாக காணப்படுகின்றன. இது மிகவும் போற்றத்தக்க செயல். இருப்பினும் இன, மொழி, பண்பாட்டு நிலையால் பலத்த போட்டியும் வேறுபாடுகளும் இருப்பது தெரிந்த விடயமே. ஆனால் நாம் அனைவரும் ஒரே கடவுளின் படைப்புக்கள், ஒரே இயல்பைக் கொண்டுள்ளவர்கள். அனைவருக்கும் பிறப்பிடம் ஒன்றே . அனைவருக்கும் மீட்பர் ஒருவரே . எல்லோருக்கும் இறுதிக்

கதி- கடவுள் ஒருவரே. **“எல்லோரும் நித்தியத்திற்கும் ஒன்றாக மகிழ்ந்து வாழ்வதே”** கடவுள் சித்தம். யாவரும் ஒரே இறைவனின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். இத்தகைய ஒருமைப்பாடு உடைய நாம் - இனம் , நிறம் , வாழ்க்கைநிலை , மதம் , மொழி , பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் எந்த மனிதரையும் வேறுபடுத்தி நோக்குவது முறையாகாது. அச்செயல் ஒரே இறைசாயலை கொண்டுள்ள நாம் இறைவனை நிந்திக்கும் செயலுக்கு ஒத்ததாகும். **“இறைவனை அனைத்து மக்களின் தந்தை”** என அழைத்து செபிக்கவும் இயலாது. எனவே மக்கள் மத்தியில் உருவாகி வரும் நெருக்கமான ஒற்றுமையை, உறவை ஊக்கவித்து வளர்ப்பது கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையும் பொறுப்புமாகும்.

அனைத்து மக்களுக்கிடையேயும் ஒற்றுமையை, தொடர்பை நல்லறவை, ஏற்படுத்தி வளர்ப்பதற்கு அனைத்து மதங்களுக்கிடையே சமாதானத்தை வளர்ப்பது அவசியமாகும். ஏனெனில் மத அடிப்படையில் இன்று ஒரு யுத்தம் ஆரம்பமாகுமானால் அது உலக மகாயுத்தத்திலும் கொடிய விளைவுகளை ஏற்படுத்தும். “அமைதியின் கருவியாகிய மதம் போரின் கருவியாக மாறி விடக் கூடாது” எனவே தான், இரண்டாம் வத்திக்கான் சங்கம் பல்வேறு கிறிஸ்தவ சபைகளுக்கு இடையேயும் , கிறிஸ்தவமல்லா மறைகளோடும் திருச்சபைக்குள்ள உறவினை ஆராய்ந்து அதை உருவாக்கி வளர்க்க “கிறிஸ்தவ ஒன்றிப்பு” -“கிறிஸ்தவமல்லா மறைகளோடு திருச்சபைக்குள்ள உறவு” என இரு கொள்கைத் திரட்டுக்களை வெளியிட்டுள்ளது. இன்று நம் நாட்டில் பௌத்தமதம்,இந்து மதம், இஸ்லாமியமதம், கிறிஸ்தவமதம் என உலகின் நான்கு பன் மதங்களை பின்பற்றும் மக்கள் இருக்கின்றார்கள். இம் மதங்களைப் பின்பற்றும் மக்களிடையே புரிந்துணர்வை, சமாதானத்தை, நல்லறவை, ஒற்றுமையை ஏற்படுத்த உழைப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையும் பொறுப்புமாகும். இம் மறைகளில் காணப்படும் உண்மையானதும் புனிதமானதுமான எதையும் கத்தோலிக்க திருச்சபை வெறுத்து ஒதுக்கவதில்லை. மேலும் எல்லா மனிதரையும் ஒளிர்விக்கும்- உண்மையின் ஒளிச்சுடரை அனைவரிலும் பிரதிபலிக்கின்ற செயல்முறைகள், வாழ்க்கை முறைகள், சட்டங்கள், கோட்பாடுகள் ஆகியவற்றை உண்மையாகவே மதித்து போற்றுகின்றது.

கிறிஸ்தவமல்லாத மறைகளையும் பின்பற்றுபவரிடத்தில் காணப்படுகின்ற அருள்நெறி மற்றும் அறநெறி(ஒழுக்கவியல்) சார்ந்த

அனைத்து நலன்களையும் சமூக பண்பாட்டு மதிப்பீட்டு நலன்களையும் ஏற்றுக் கொண்டு, அவற்றைப் பேணி வளர்ச்சியுறச் செய்ய வேண்டும். அனைத்து மதங்களுக்கிடையில் சமாதானத்தை, ஒற்றுமையை, ஐக்கியத்தை வளர்ப்பதற்கு சிறந்த வழி- அனைத்து மதத்தினரும் ஒன்றிணைந்து பொது வேலைகளில், பொது முயற்சிகளில் ஈடுபடுவதே ஆகும். கிறிஸ்தவர்களாகிய நாம் பிற மதத்தினரோடு இணைந்து செயல்படக்கூடிய வழி முறைகள் பல உண்டு. குறிப்பாக, நம் நாட்டைப் பாதிக்கும் தேசிய பிரச்சினைகள், அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள், இனப்பிரச்சினை, பொருளாதாரப்பிரச்சினை, சமூக அநீதி போன்ற விடயங்களில் பிறமதத்தினரோடு உரையாடி இணைந்து, கலந்தாலோசித்து, ஒத்துழைப்பதன் வழியாக மதங்களுக்கிடையில் நல்லுறவை , சமாதானத்தை ஏற்படுத்தலாம். தம்மத விடயங்கள், கோட்பாடுகள், செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடுவதும், பிற மதங்களைப் பற்றிய அறிவை வளர்ப்பதும் மதங்களுக்கிடையிலான வீண்சந்தேகங்களை, தவறான கருத்துக்களை அகற்றி புரிந்துணர்வையும் பரஸ்பர மதிப்பை வளர்ப்பதும், நல்லுறவை- சமாதானத்தை ஏற்படுத்துவதற்குமான வழிமுறைகளுமாகும்.

நம் நாட்டில் இன்று காணப்படும் பல மத இயக்கங்கள்- அமைப்புக்கள் சமாதானத்தை ஏற்படுத்தி, நல்லுறவை வளர்க்க முன்வர வேண்டும். குறிப்பாக சமயச் சமாதான நடுநிலையம், தேசிய கிறிஸ்தவ சபை , சமூகபொருளாதார முன்னேற்ற நடுநிலையம், (மனிதமுன்னேற்ற நடுநிலையம் - கரித்தாஸ்- கியூடெக்) என்பன பல சமூகப்பிரச்சினைகளில் இனமத வேறுபாடின்றி உழைக்க வேண்டும். இத்தகைய சூழலில் இன்று நம் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இவ்அனைத்து மதத்தினரையும் ஒன்று கூட்டி மனித உரிமை , வறுமை, சூழல் மாசுபடுதல், கல்விப்பிரச்சினை, உறைவிடமின்மை, சமூகஏற்றத்தாழ்வு போன்ற பொதுக்காரியங்களில் , பொதுப்பிரச்சினைகளில் இணைந்து செயற்படுவதன் மூலமாக மதப் புரிந்துணர்வு மிக்க பன்மத அமைதி நிறைந்த இலங்கையை உருவாக்கலாம் என்பது உறுதி.

## 5:9 ஒன்றிப்புமிக்க-ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதில் கிறிஸ்தவர்களது முன்னேற்றகரமான பொறுப்புக்கள் (கடமைகள்)

கிறிஸ்தவத்தின் சரித்திர ஆரம்பத்தில் இஸ்ராயேல் மக்களுடன் பேசி அவர்கள் மூலமாக தம்மை வெளிப்படுத்தி வந்த இறைவன் இன்றும் நம் நாட்டில் நடைபெறும் பல்வேறு சம்பவங்கள் , நிகழ்ச்சிகள் மூலமாக எம்மோடு பேசி எம்மை வழி நடத்தி வருகின்றார். "அவனின்றி அணுவும் அசையாதென்பர்".அவ்வாறே "இறைதந்தையின் அனுமதியின்றி நம் தலையிலிருக்கும் ஒரு முடிதானும் விழாது" என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே கூறியிருக்கின்றார். இவ்வுலகில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும், சம்பவங்களிலும் சத்தியமான கடவுள் பங்குபற்றுகின்றாறென்றால் அச்சம்பவங்களில் ஒரு சத்தியம், உண்மை இருக்க வேண்டும். இவ்வாறாக நம் நாட்டில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள், சம்பவங்கள், பிரச்சினைகள் போன்றவற்றில் இறைவனின் வெளிப்பாடு இடம்பெறுவதையே "காலத்தின் குறிகள்" என்று அழைக்கின்றோம். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம்- நம் நாட்டில் நடைபெறும் சம்பவங்கள் , நிகழ்ச்சிகள் மூலமாக எம்மை வழிநடத்தி வரும் இறைவன், வெளிப்படுத்தும் செய்தியை- விருப்பத்தை, எதிர்பார்ப்பை அறிந்து ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவது அவசியமாகும்.

நம் நாட்டில் , சமூதாயத்தில் காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளான வறுமை , பொருளாதார ஏற்றத்தாழ்வு , தொழில் வாய்ப்பின்மை, தேசீயவாதம் , இனவாதம் என்பன பெரும் கொடுமுடியாக இருக்கின்றன. இதனால் பல்லாண்டு காலமாக நம் நாட்டில் நிலவி வரும் இனப்பிரச்சினையும், அதன் விளைவாக நடந்து முடிந்த உள்நாட்டுக் கொடிய போரும், இதனால் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கம் அகதிவாழ்வு ,கைம் பெண் ஆக்கப்படல். உறைவிட வசதியின்மை ,மற்றும் உண்ண உணவுமின்றி,உடுக்க உடையுமின்றி வாழும் அந்தரிப்புமிக்க வாழ்க்கை, இளைஞர் , யுவதிகள் எனப் பலரின் உயிரிழப்பு, நிரபராதிகளின் உயிரிழப்பு, இத்தகைய நிகழ்வுகளில் மீள் புனர்வாழ்வு- புனரமைப்பு செயற்பாடுகளில் நிலவும் அடிப்படை மனித உரிமை பறிப்பு போன்ற பல நிகழ்வுகளிலும், இறைவன் எம்மை வழிநடத்தி வருகின்றார். என்பதை நாம் மறந்துவிடலாகாது. இருப்பினும் இத்தகைய சூழலில் இன,மத,மொழி,பண்பாட்டு-கலாச்சார நிலைகளில் காணப்படும் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை வளர்த்து ஒரு ஐக்கிய

இலங்கையை கட்டியெழுப்ப முயற்சி எடுக்க அதற்காக தினமும் உழைக்க கிறிஸ்தவர்களாகிய எமக்கு இறைவன் அழைப்பு தருகின்றார்.

- ❖ நாம் ஒரு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றால், அதற்கு முதல் நிபந்தனை- மனிதர்களிடையே நிலவும் பிரச்சினைக்களுக்கான காரணங்களை அறிந்து அவற்றை அகற்றி அழிக்க வேண்டும்.
- ❖ அநீதிகள், பாரபட்சங்கள், இன,மத,மொழி, பண்பாட்டு வேற்றுமை, பொருளாதாரஏற்றத்தாழ்வு,அடக்கி ஆளும் ஆதிக்க மனப்பான்மை, அதிகாரவெறி, வெறுப்பணர்வு போன்றவற்றை நாம் வேரறுக்க முயற்சிக்க வேண்டும்.
- ❖ மனிதரிடமுள்ள- பொறாமை, அவநம்பிக்கை, ஆணவம், தன்னல எழுச்சி, பழிவாங்கும் மனப்பான்மை போன்ற தீயநாட்டங்கள், தீமைகள் மற்றும் வன்முறைகளை தடுத்து நிறுத்த அனைவரும் சேர்ந்து குரல் கொடுத்தல்.
- ❖ மக்களின்- உணவு,உடல்,உளநலம்,உறைவிடம்,கல்வி, உழைப்பு போன்ற அனைவருடைய பொதுநலத் தேவைகள் அனைவருக்கும் நிறைவாக கிடைக்க உழைத்தல்.
- ❖ சமூக,கலாச்சார,பொருளாதார,அரசியல்,தொழில்நுட்பத் துறை அனைவரும் இணைந்து பங்கேற்று திறம்பட செயலாற்றுவதன் மூலம் இனப்பாகுபாட்டை முற்றாக அழித்தொழித்தல்.
- ❖ "இது எனது நாடு: எனக்கு மட்டுமே உரிமை உண்டு" என்ற சுயநல குறுகிய மனப்பான்மையை ஒழித்து, அது இங்கு பிறந்து, வாழ்ந்து வளரும் அனைவரினதும் நாடு. என்ற பரந்த மனப்பான்மை-சிந்தனையை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் ஏற்கச் செய்ய வேண்டும்.
- ❖ இலங்கையின் சுதந்திரத்திற்காக அனைத்து இன மக்களும் தோளோடு தோள்நின்று போராடியவர்கள். ஆதலால் இந்த நாடு அனைவருக்கும் உரியது. என்பதை மக்கள் உணரச் செய்ய வேண்டும் இதற்கு மக்களின் மனநிலை மாற வேண்டும்.
- ❖ இன, மத, மொழி, அரசியல், பண்பாடு- இவற்றின் அடிப்படையில் வேறுபாடு காட்டுவது தவறாகும். ஏனெனில் **"மனிதர்கள் அனைவரும் ஒரே இறைவனின் படைப்புக்கள்"** ஆதலால் **"நாம் அனைவரும் சகோதரர்கள்-சமநிலை மாண்பு கொண்டவர்கள்"** எனும் மனநிலையை வளர்த்துக் கொள்ளுதல்.
- ❖ ஒருவர் மட்டில் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய மதிப்பு, மரியாதை . ஒற்றுமைப் பண்பு ஆகியவற்றை நாம் வளர்ச்சியுறச் செய்ய வேண்டும்.

❖ கிராமங்கள் தோறும் சிறுசிறுகுழுக்களை அமைத்து கலந்துரையாடல்கள் மூலம்- வீண்சந்தேகங்களையும் வெறுப்புக்களையும் கழைந்து பரஸ்பர அன்பையும் நல்லுறவையும் நம்பிக்கையையும் ஒருவர் ஒருவரை ஏற்று மதித்து வாழும் பெருங்குணத்தையும் வளர்த்துக் கொள்ளுதல்.

❖ இன்று நம் நாட்டில் ஒரு ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப உழைக்கும் அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து குறிப்பாக சமூகசமயத்திற்கான நடுநிலையம்,நீதி சமாதானத்திற்கான திருச்சபையின் ஆணைக்குழு, இலங்கை தேசிய கிறிஸ்தவசபை, துலன, மனித நல பொருளாதார முன்னேற்ற நடுநிலையம், புபுது மறுமலர்ச்சிச் சபை போன்றவற்றுடன் இணைந்து கிறிஸ்தவர்கள் ஐக்கிய இலங்கை மலர அயராது உழைத்தல் வேண்டும்.

## 5:10 மதிப்பீடு-

❖ இலங்கை ஐரோப்பியரின் ஆட்சியிலிருந்து கி.பி.1948ஆம் ஆண்டு முழு விடுதலையைப் பெற்றுக் கொண்டது. இதனால் முழுச் சுதந்திரத்தைப் பெற்ற திருச்சபையின் கல்விச் செயற்பாடுகள், மறைப்பணிகள் துரிதகதியில் இடம் பெற்றன. இதனை சகித்துக் கொள்ளாத பௌத்த,இந்துமத தலைவர்களினால் மறுமலர்ச்சி, எழுச்சி,கண்டனங்கள் தோன்றின. பிறமதத்தவர் கத்தோலிக்க திருச்சபையின் மீதும், அதன் பன்முகப் பணியின் மீதும் கொண்டிருந்த வெறுப்பின் உச்சக்கட்டமே- அரசாங்கம் கத்தோலிக்க மதப் பாடசாலைகளை சுவீகரித்த விடயமாகும். இச்செயற்பாடு பல நன்மைத்தனங்களை திருச்சபை சமூகத்திற்கு வழங்கிய போதிலும் பாரிய பின்னடைவுகளும் (தீமைகள்) ஏற்பட்டன. இத்தகைய சூழலின் மத்தியிலும் திருச்சபை வெற்றி நடை போட்டு தமது போதனையாலும் பணியாலும் உயிரூட்டம் பெற்ற கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்க தொடங்கியது. எனலாம்.

## 6. நிறைவுரை

இலங்கை ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு மேலாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற மூன்று ஐரோப்பியர்களின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. என்பதனை நாம் மறந்துவிட முடியாது. இவர்களது ஆட்சிக் காலத்தில் எமது இலங்கை தேசம் பெற்ற நன்மைத்தனங்கள் பல. அதேவேளை சுதேச நிர்வாக கட்டமைப்பு இவர்களது ஆட்சியில் இல்லாமற் போனமை இலங்கை வாழ் மக்களுக்கு நேரிட்ட பின்னடைவாகும். இருப்பினும் போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கை பெற்ற செல்வம் **"கத்தோலிக்க மத விசுவாசம்"** என்றால் மிகையாகாது. அவர்களின் இலங்கை ஆட்சியில் இலங்கையில் வேரூன்றிய கத்தோலிக்கமும் மற்றும் ஒல்லாந்தர் காலத்தில் அறிமுகமாக ஒல்லாந்த சீர்திருத்த மதமும்(புரட்டஸ்தாந்துமதம்) அத்துடன் ஆங்கிலேயர் காலத்தில் மலர்ந்த மதச்சுதந்திரத்தின் பயனாக ஐரோப்பிய மிஷனரிகளின் செல்வாக்கும்-அவர்களின் காலத்தால் அளிக்க முடியாத மகத்தான பணியின் கனமான தாக்கமும் இன்றும் இலங்கைத் தீவில் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டே இருக்கின்றது. என்பதனை நாம் அறியலாம். ஏனெனில் அதுவே நமது மூதாதையரின் வரலாற்று பொக்கிஷமும் ஆகும்.

***"The End"***

**7.பிற்சேர்க்கை -**

# வரலாற்று விழுதுகள் (சரித்திரக்குறிப்புக்கள்)

## ✍ புராதன காலம் (கி.பி 1-1505)

(01) பெத்லகேமில் குழந்தை இயேசுவை வணங்க கீழைய தேசங்களிலிருந்து சென்ற அரசர்களில் ஒருவர்- **“கறுப்பு மேகஸ்” என அழைக்கப்படும் யாழ்ப்பாணஅரசர் “கஸ்பார் பெரிய பெருமாள்” ஆவார்.**

(02) **“மப்பேயி”** என்ற ஆசிரியர் எழுதிய வரலாற்று நூல்- **இந்திய வரலாறு**

(03) இலங்கையில் புராதன காலத்தில் கிறிஸ்தவ சமூகம் ஒன்று இருந்ததைப்பற்றி முதன் முதல் கூறும் ஒரே எழுத்தாளர்- **“கொஸ்மஸ் இன்டிகோப்பிளிரெஸ்”**

(04) 5ம் நூற்றாண்டில் சிங்கள அரச படையில் பணியாற்றிய இந்திய கிறிஸ்தவர்- “மைக்காரா”

(05) சிங்கள–பௌத்த மதத்தின் வரலாற்று நூல் - மகாவம்சம்

(06) புராதன இலங்கையின் தலைநகரம் -அநுராதபுரம்

(07) 1912ஆம்ஆண்டு அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்டது–கருங்கல்லினால் செதுக்கப்பட்ட “பாரசீக நெஸ்தோரிய சிலுவை”

(08) புராதனகாலத்தில் கீழைத்தேச வர்த்தகத்தின் ஏகபோக உரிமை யாரின் கைவசம் இருந்தது–அராபியர் (முஸ்லீம்)

(09) இலங்கைக்கு சுற்றுலாப்பயணியாக வந்து (கி.பி9ஆம் நூற்றாண்டில்) இந் நாட்டில் சமயச்சுதந்திரம் உண்டெனக் கூறியவர்-**“இகன்வஹப்”**

(10) புராதனகாலத்தில் கிறிஸ்தவம் இருந்தமையை உறுதிப்படுத்தும் ஆவணம்- “கிறிஸ்தவ சபைகளின் விபரணம்”-(கிரேக்கத்தில்- “கிறிஸ்தானிக்கா றொபோறாபீகா” என்பதாகும்)

## ✍ போர்த்துக்கேயர் காலம் (கி.பி 1505 – 1658)

(01) போர்த்துக்கேய அரசன் "வாஸ்கொடகாமா" இந்தியாவின் கல்கத்தாவிற்கு சென்றது – 1498 ஆண்டு

(02) போர்த்துக்கேயருக்கும் இஸ்பானியருக்கும் கீழைத்தேசங்களில் அவர்கள் கைப்பற்றும் நாடுகள் மீதான சகல அதிகாரமும் வழங்கப்பட்டது - திருத்தந்தை ஆறாம்அலெக்சாந்தரால் 1493ஆம் ஆண்டு

(03) போர்த்துக்கேய மன்னனுக்கும் உரோமைய திருத்தந்தைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை- "பத்ரோ ஆதோ" (அரச ஆதரவு)

(04) இந்தியாவில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளை நிர்வகிக்க பேரரசரால் அனுப்பப்பட்டவர்- டொம் பிரான்சிஸ்கோ, 1505 ஆம் ஆண்டு

(05) இலங்கைக்கு முதன் முதலாக வந்த போர்த்துக்கேய தளபதி- டொம் லோறன் சோ டி அல்மெய்டா, (ஒன்பது கப்பல்களில் - இவர்களது வருகை எதிர்பாராத விதத்தில் இடம்பெற்றது.)

(06) போர்த்துக்கேயரின் இலங்கைக்கான வருகை இடம்பெற்றது- 1505ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி

(07) போர்த்துக்கேயரின் வருகையின்போது கோட்டையை ஆட்சி புரிந்த சிங்கள அரசன் - ஒன்பதாம் தர்மபராக்கிரமபாகு.

(08) போர்த்துக்கேயரால் நிறுவப்பட்ட முதல் ஆலயம் - **புனித லவுறெஞ்சியார் சிற்றாலயம்** (கோட்டைப் பகுதியில்)

(09) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த செய்தி அறிவிக்கப்பட்டது- திருத்தந்தை இரண்டாம் யூலியசிற்கு

(10) போர்த்துக்கேயரின் இலங்கை வருகையின் போது இலங்கையின் இருந்த அரசியல் பிரிவுகள்-

1. இலங்கையின் தென்மேற்குப் பகுதி – கோட்டை சிங்கள அரசு
2. மத்திய மலைப்பிரதேசம் - கண்டி சிங்கள அரசு
3. வடபகுதி – யாழ்ப்பாணத் தமிழ் அரசு

(11) போர்த்துக்கேயரின் இலங்கை வருகையின் போது இலங்கையை ஆட்சி புரிந்த அரசர்கள்-

1. கோட்டை அரசு – 9ஆம் தர்மபராக்கிரமபாகு
2. கண்டி அரசு – விக்கிரமபாகு
3. யாழ்ப்பாண அரசு – சங்கிலியன்

(12) 9ஆம் தர்மபராக்கிரமபாகுவின் மரணத்தை (கி.பி1520) அடுத்து கோட்டையை ஆண்ட அரசன் - இவனது மகன் விஜயபாகு

(13) கோட்டை அரசின் முப்பெரும் பிரிவுகளும் , அதன் மூவேந்தர்களும்-
1. கோட்டை – ஏழாம் புவனேகபாகு
2. சீதவாக்கை – மாயதுன்ன
3. றைகம – பரராஜசிங்கம்

இது1521 இல் இடம்பெற்றது

(14) புவனேகபாகுவின் மரணத்திற்குப் பின்பு கோட்டையை ஆட்சி புரிந்த மன்னன் -தர்மபாலன் (புவனேகபாகுவின் பேரன்)

(15) யாரால் ? எப்போது? தர்மபாலாவின் சிலைக்கு முடிசூட்டு விழா இடம்பெற்றது – போர்த்துக்கேய மன்னன் மூன்றாம் யுவான் என்பவரால் 1543 ஆம் ஆண்டு

(16) இலங்கைக்கு வருகை தந்த முதல் ஐரோப்பிய மறைதூதுக்குழு அல்லது மிஷ்னறி -- யுவான் டா விலா டேோ கொண்டே என்ற குருவின் தலைமையில் வருகைதந்த பிரான்சிஸ்கன் சபை (06 குருக்கள்)–1543ஆம் ஆண்டு இவ்வருகை இடம் பெற்றது.

(17) பட்டத்து இளவரசனான தர்மபாலாவின் பாதுகாப்பை முன்னிட்டு அவனுக்கு கல்வியறிவு ஊட்டும் பொறுப்பு வழங்கப்பட்டது – பிதா விலா டேோ கொண்டேயிடம்

(18) கண்டி அரசன் ஜெயவீர திருமுழுக்குப் பெற்றதற்கான காரணம்- அரசியல் நோக்கமும் தனது அரசை பாதுகாப்பதும் ஆகும்.

(19) கண்டி அரசன் எப்போது திருமுழுக்குப் பெற்றான்- 1546 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 9ஆம் திகதி (இரகசியமாக திருமுழுக்குப் பெற்றான்)

(20) கோட்டை அரசன் புவனேகபாகு மரணமடைந்தது – 1551ஆம் ஆண்டு வைகாசிமாதம் எதிர்பாரதவிதமாக இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டான்

(21) தர்மபாலா இளைஞனாக இருந்தமையால் கோட்டை அரசை ஆட்சிபுரிந்தது –அவனுடைய தந்தை விதியபண்டார

(22) புவனேகபாகுவின் மரணத்தை விசாரனை செய்வதற்காக வருகைதந்த போர்த்துக்கேய மன்னனின் பிரதிநிதி–நொறோனா

(23) தர்மபாலா எப்போது திருமுழுக்குப் பெற்றுக் கொண்டான், அவனுக்கு வழங்கப்பட்ட புதிய பெயர் ? கி.பி 1556ஆம் ஆண்டு திருமுழுக்கப் பெற்று <u>டொன்யுவான்</u> என்ற பெயரை பெற்றுக் கொண்டான்

(24) தர்மபாலாவின் மரணம் எப்போது இடம்பெற்றது? கி.பி. 1597ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27 ஆம் திகதி

(25) கோட்டை அரசன் தர்மபாலாவின் மரணத்தை அடுத்து கோட்டை அரசு யாருக்கு வழங்கப்பட்டது ? மரண சாசனத்தின்படி <u>போர்த்துக்கேயருக்கு</u>

(26) சுதேச அரசர்களின் ஆட்சியின் பின்பு கோட்டையை ஆட்சி புரிந்த முதல் போர்த்துக்கேய மன்னன் - <u>முதலாம் பிலிப்பு</u>

(27) எவருடைய கட்டுப்பாடோ அல்லது வலோத்காரமோ இன்றி சுதந்திரமாக கிறிஸ்தவத்தை தழுவலாம் என்ற இணக் கப்பாடு ஏற்படுத்தப்பட்டது- <u>மல்வானை ஒப்பந்தத்தில்</u>

(28) இலங்கையில் முதன் முதலாக கட்டப்பட்ட கத்தோலிக்க ஆலயம் அல்லது வழிபாட்டுத்தலம் - <u>புனித லவுறேஞ்சியார் சிற்றாலயம்</u>

(29) இலங்கையில் மேற்குறிப்பிடப்பட்ட ஆலயத்தில் முதல் திருப்பலியை ஒப்புக் கொடுத்தவர்-

<u>அருட் திரு பிறேவிசென்ரே அடிகளார்</u>

(30) போர்த்துக்கேயரின் கீழைத்தேச நாடுகள் மீதான படையெடுப்பின் முதல் முக்கிய நோக்கம் -வர்த்தக ஏகபோக உரிமையைக் கைப்பற்றுதல்

(31) இலங்கையில் போர்த்துக்கேயரின் முறையான திட்டமிட்ட மறை போதகப் பணி எப்போது ஆரம்பமாகியது? 1543 ம் ஆண்டு இலங்கை வருகை தந்த <u>பிரான்சிஸ்கன் சபையினரின்</u> (ஆறு குருக்கள் அடங்கிய குழு) மறை பரப்பு பணியினைத் தொடர்ந்தது.

(32) புனித பிரான்சிஸ்கு சவேரியார் காலித்துறைமுகத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களை தரிசித்ததாகக் கூறப்படும் காலப் பகுதி? கி பி 1548ம் ஆண்டு

(33) போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் பிரான்சிஸ்கன் மறைபரப்பாளர்கள் ஆற்றிய பெரும் பணியின் வெளிப்பாடுகள் அல்லது அதற்கான சான்றுகளாவன.

- ❖ 100,000 இற்கும்மேற்பட்ட மக்கள் கத்தோலிக்கராயிருந்தனர்
- ❖ ஏறக்குறைய 50 ஆலயங்களும் , அநேகசிற்றாலயங்களும் காணப்பட்டன.
- ❖ 100 பங்குச்சபைகள் இருந்தன.

(34) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கை திருச்சபை முழுவதன் நிர்வாகக் கட்டமைப்பு யாருக்குக்கீழ் இருந்தது-இந்திய கொச்சின் மறைமாவட்ட ஆயரின் நிர்வாகத்தின் கீழ் **(ஆந்திரேடி சாந்த மரியா)**

(35) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்ட சபைகளாவன – 04 சபைகள்

- ❖ பிரான்சிஸ்கன் சபை – கி.பி. 1543
- ❖ இயேசு சபை கி.பி 1602
- ❖ அகுஸ்தினார்சபை – கி.பி 1605
- ❖ டோமினிக்கன் சபை (சாமிநாதர் சபை) – கி.பி 1605

(36) போர்த்துக்கேயரின் இலங்கை வருகையின்போது கண்டி அரசை ஆண்டமன்னன், அவனது மறுபெயர்- **ஜெயவீர, (வீரவாக்கிரமபாகு)**

(37) அரசன் ஜெயவீர திருமுழுக்குப் பெற்றுக் கொண்டதன் நோக்கம்? அரசியல் நோக்கம், கிறிஸ்தவத்திற்கு தன்னை அர்ப்பணிக்க விரும்பவில்லை

(38)கண்டி அரசர்கள் திருமுழுக்குப் பெற்ற பின்பு அவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்களாவன?
2ம்ஜெயவீர–டொம்பிலிப் :ஜெமசிங்க பண்டார–டொன்பிலிப்பு

(39) யாழ்ப்பாண அரசின் மன்னனின் மறு பெயர்கள் ?
சங்கிலியன் - (பரராஜசேகரன் , சங்கரன்)

(40) பௌத்த மக்களின் ஆதரவுடன் கண்டி அரசைக் கைப்பற்றிய மன்னன்- கோணப்புபண்டார (விமலதர்மசூரிய என்றபெயருடன் தன்னையே கண்டி அரசனாக்கி கொண்டான்.)

(41) குருவாக வந்து இஸ்பானியாவில் பணியாற்றி மரணித்ததாக கருதப்படும் கண்டி அரசன் யார்?
**டொன் பிலிப்பு: கி.பி 1642இல் மரணித்தான்**

(42) பௌத்த மதத்திற்கு ஆதரவளித்து கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய மன்னன் - விமலதர்ம சூரியா

(43) விமல தர்ம சூரியாவிற்குப் பின்பு கண்டி அரசின் அரசியாக பிரகடனம் செய்யப்பட்டவர் - டோனா கத்தரினா, 1594ஆம் ஆண்டு ஆடி மாதம் ஆறாம் திகதி

(44) கிறிஸ்தவம் ஒருபோதும் உறுதியாக நிலைபெறாத அரசு – கண்டி அரசு.

(45) வட இலங்கையின் யாழ்ப்பாண அரசில் பணியாற்றிய சபை – பிரான்சிஸ்கன் சபை

(46) யாழ்ப்பாண அரசில் கிறிஸ்தவம் போதிக்கப்படுவதை சற்றேனும் விரும்பாத அரசன் - <u>சங்கிலியன்</u> (கிறிஸ்தவத்தை தழுவுவது அந்நிய போர்த்துக்கேய அரசைஆதரிப்பதற்கு ஒத்ததாகும் என்பது இவனது கொள்கை)

(47) சங்கிலி அரசனின் மூத்த மகனுக்கு இரகசியமாக நற்செய்தியைப் போதித்து அவனை மனம்திருப்பியது - <u>“அந்திரே டி சூசா”</u> என்ற போர்த்துக்கேய வியாபாரி

(48)யாழ்ப்பாண அரசின் முதல் வேத சாட்சி யார்?
ஒரு அரசகுமாரன் - சங்கிலியனின் மூத்த மகன்(சங்கிலியனின் கோபவெறியினால் கொடூரமாய் கொலைசெய்யப்பட்டான்- காரணம் அவன் கிறிஸ்தவத்தைதழுவியமை)

(49) தென்னிந்திய கடலோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு கிறிஸ்தவத்தை அறிமுகம் செய்தவர்?
இயேசு சபையைச் சேர்ந்த புனித பிரான்சிஸ்கு சவேரியார் (கி.பி 1552இல் இடம் பெற்றது.)

(50) "ஒரு மனிதப் பண்பற்ற கொடியவன், சர்வதிகாரப் போக்குடையவன், முடிக்குரிய தன் மூத்த மகனையே கொலை செய்து, தன் படைப்பலத்தினால் கொடுங்கோலாட்சி செய்து வந்தான" என வரலாற்று ஆசிரியரால் கருதப்படும் மன்னன் - <u>சங்கிலியன்</u>

(51) சங்கிலியனின் கட்டளையால் அரங்கேறிய கொடூரமான செயல்- 1544ஆம் ஆண்டு மார்கழி மாதம் 700 கிறிஸ்தவர்கள் அவனது படைவீரர்களால் மன்னார் தோட்ட வெளியில் கொடூரமாக கொலைசெய்யப்பட்ட நிகழ்வு ஆகும். (மன்னார் மறை சாட்சிகள்)

(52) மறைசாட்சிகளின் பூமியாக மாறிய மன்னார்தீவு திருச்சபை வரலாற்றில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது- "புனித குருசுத்தீவு."

(53) மன்னார் மறை சாட்சிகளின் எதிரொலிப்பு– கொழும்பில் ஏறக்குறைய 70,000 பேரும் அதனைத் தொடர்ந்து அரசன் தர்மபாலாவும் கிறிஸ்தவத்தை தழுவினர்.

(54) போர்த்துக்கேய காலத்தில் இடம் பெற்ற புதுமை- புனித சவேரியார் மன்னாருக்கு வருகைதந்து (1545) மறைசாட்சிகளின் இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்பட்ட பூமியை தரிசித்த பின்பு இந்தியாவுக்கு திரும்பும் வழியில் அவர் நெடுந்தீவில் தரித்து அங்கு இறந்த ஒரு இளைஞனை உயிர்ப்பித்தார்.

(55) யாழ் மாவட்டத்திலுள்ள பருத்தித்தறையில் ஒரு புளிய மரத்தின்கீழ் நற்செய்தியைப் போதித்தவர்- <u>புனித சவோரியார்</u>

(56) யாழ்ப்பாணத்து மக்கள் அரசன் சங்கிலியனின் கொடுங்கோலாட்சியைப் பொறுக்க முடியாமல் எப்போது கலகம் செய்தனர், அதன் விளைவு யாது? கி.பி 1561 இல். விளைவு- அவனை நீக்கிவிட்டு அவனின் மகனான புவிராச சிங்கனை தம் யாழ்ப்பாண அரசின் அரசனாக்கினர்

(57) யாழ்ப்பாண அரசு முழுமையாக போர்த்துக்கேயரின் கட்டுப் பாட்டுக்குள் எப்போது கொண்டுவரப்பட்டது?
கி.பி 1621ஆம் ஆண்டு

(58) கி.பி1626ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்ததாக பதிவு செய்யப்பட்டிருக்கும் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை– "41260" கிறிஸ்தவர்கள் (போர்த்துக்கேயர் ஆட்சியின் இறுதிப்பகுதியில் யாழ்ப்பாண மக்களின் பெரும்பாலானோர் கிறிஸ்தவத்தைத் தழுவினர்)

(59) இலங்கைததீவின் முதல் அருட்கன்னியர்கள் என அழைக்கப்படுவது – பரராசசேகரனின் இரு அரச குமாரிகள் (டோனா மரியா, டோனா இசபெல் என்ற இரு அரச குமாரிகளும் கோவைக்கு சென்று அகுஸ்தினார் சபையின் கன்னியர்களாயினர்).

(60) பங்குப் பாடசாலைகளில் இடம்பெற்ற கல்விமுறை- மனப்பாடம் செய்தல் ,வினாவிடை முறையில் போதித்தல்

(61) ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க ஆசிரிய பயிற்சி கலாசாலையை ஆரம்பித்தவர்கள் - பிரான்சிஸ்கன் சபையினர்

(62) திருமணத்தின் புனிதத்தன்மைகளான ஒருமை , கட்டவிழாமை முதலான பண்புகள் மக்களிடையே புகுத்தப்பட்டது- போர்த்துக்கேயர் காலத்தில்

(63) மேற்கத்தேய வைத்தியம் இலங்கையில் முதன் முதலாக அறிமுகம் செய்யப்பட்டது.? போர்த்துக்கேயர் காலத்தில்

(64) போர்த்துக்கேயரின் பிறர்நலச் சேவைகளின் உருவாக்கமான தபானம் எவ்வாறு அழைக்கப்பட்டது? "மிசெறிக்கோடியா"

(65) இலங்கைக்கு வருகை தந்த மிகப்பெரிய போர்த்துக்கேய படையாக வர்ணிக்கப்படுவது? கோவையிலிருந்து போர்த்துக்கேய அரசபிரதிநிதி அப்பொன்ஸோ டி நொறோனா தலைமையில் வருகை தந்த (1551ஆம் ஆண்டு ஐப்பசி மாதம்) 3000 படை வீரர்கள்

(66) போர்த்துக்கேய அரச பிரதிநிதி மரணித்த வித்ம்-கோட்டையில் அபகரித்த பொக்கிஷங்களுடன் (வெள்ளி, பொன்னாலான, விக்கிரகங்கள், மணிகள், நகைகள் ) கோவைக்குத் திரும்பும் வழியில் அவன் பயணித்த கப்பல் புயலில் அகப்பட்டு கடலில் மூழ்கி மாண்டதாக கூறப்படுகின்றது.

(67) மனைவியின் தந்திர முயற்சியால் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட மன்னன்- <u>விதியபண்டார</u>

**(68)** இலங்கைவாழ் சுதேசிகள் போர்த்துக்கேயர் காலத்தில் பெற்றுக்கொண்ட பெரியதொரு கொடை அல்லது வரப்பிரசாதமாக கருதப்படுவது- **<u>“கத்தோலிக்க விசுவாசம்.”</u>**

✍ **ஒல்லாந்தர் காலம் (கி.பி 1658 – 1796 )**

(01) பதினாறாம் நூற்றாண்டில் திருச்சபையின் வரலாற்றில் ஏற்பட்ட மறுமலர்ச்சி – மார்ட்டீன் லூத்தரின் புரட்சி

(02) ஒல்லாந்தர் பின்பற்றிய சீர்திருத்தக் கொள்கை யாது? கல்வினிஸ்ற் சீர்திருத்தக் கொள்கை(ஜோன் கல்வின்)

(03) ஒல்லாந்து தேசம் நீண்ட காலமாக எந்த நாட்டின் ஆட்சிக்கு உட்பட்ட நாடாகவிருந்தது? இஸ்பானியா

(04) ஒல்லாந்தர் கிழக்கிலங்கை நகரமாகிய மட்டக்களப்பை எப்போது கைப்பற்றினர்? கி.பி1638ஆம்ஆண்டு வைகாசி மாதம் 18ஆம் திகதி

(05) பின்வரும் இடங்கள் எப்போது ஒல்லாந்தர் வசமாகியது?

- ❖ மட்டக்களப்பு – கி.பி 1638
- ❖ திருகோணமலை- கி.பி 1639
- ❖ நீர் கொழும்பு, காலி- கி.பி 1640
- ❖ களுத்துறை, பாணந்துறை- கி.பி 1655
- ❖ கொழும்பு- கி.பி 1656
- ❖ மன்னார் , யாழ்ப்பாணம்- கி.பி 1658

(06) போர்த்துக்கேயரின் ஆட்சியின் முடிவில் இருந்த கத்தோலிக்க மதசெல்வாக்கின் வெளிப்பாடு:விபரம்-

- ❖ ஏறக்குறைய 200,000 பேர் கத்தோலிக்கராயிருந்தனர்
- ❖ 125 ஆலயங்கள் காணப்பட்டன.
- ❖ 100 பங்குகள் காணப்பட்டன.
- ❖ 120 குருக்கள் இருந்தனர்
- ❖ இவர்கள் பிரான்சிஸ்கன், இயேசு, அகுஸ்தினார், சாமிநாதர் சபையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்

07) ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர் அனுபவித்த பெரும் துன்பம்-கத்தோலிக்கமதம் நாட்டில் முற்றாக தடைசெய்யப்பட்ட மதமாக அறிவிக்கப்பட்டமை. அத்துடன் தங்கள் குருக்களையும் மறைபரப்பாளர்களையும் துறவிகளையும் இழந்தனர்.

**08) நெருப்பினால் பொன் புடமிடப்படுவது போல் இலங்கை கத்தோலிக்க திருச்சபை சுத்திகரிக்கப்பட்டு, புதிதாய் தாபிக்கப்பட்டு, புத்துயிருடன் பிரகாசமாய் வளர்ந்த காலம்?**
**ஒல்லாந்தர் காலம்**

09) போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கையை கைப்பற்றியது- ஒல்லாந்த அரசு அல்ல மாறாக பலர் பங்கெடுத்த ஒரு வியாபார நிறுவனமான ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பனியே ஆகும். (DEIC)

10) ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பனியின் நோக்கம்- <u>**"வர்த்தக ஆதிக்கம்"**</u> (தமது நாட்டினை அபிவிருத்தி அடையச் செய்வது)

11) ஒல்லாந்தர் காலத்தில் மறையைப்பரப்பும் அடித்தளமாக கருதப்பட்டது- <u>**பாடசாலை**</u>

12) முதன் முதலாக அச்சுக்கூடத்தை மறை பரம்பலுக்கு அறிமுகம் செய்தோர் - <u>**ஒல்லாந்தர்.**</u>

13) விவசாயமூலதனங்களையும், கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்வதை நோக்கமாக கொண்டவர்கள்- <u>ஒல்லாந்தர்</u>

14) கத்தோலிக்கர் விசுவாச ஊக்குவிப்பு இன்றி ஆயனில்லா ஆடுகள்போல் எவ்வளவு காலம் துன்பட்டனர்?
<u>**"30 ஆண்டுகளுக்கு மேல்"**</u>

15) <u>**"இலங்கையின்அப்போஸ்தலர்"**</u>என சிறப்பாக அழைக்கப்படுபவர்? அருளாளர் யோசப்வாஸ் அடிகளார்.

16) யோசப்வாஸ் அடிகளார் எப்போது, எங்கே அவதரித்தார்?
கி.பி 1651ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதி இந்தியாவின் கோவையிலிருந்து உயர்ந்த கொங்கானிமொழி பேசும் கிறிஸ்தவ பிராமணர் குலத்தில் அவதரித்தார்.

17) யோசப்வாஸ்அடிகளார்எப்போதுகுருவாகதிருநிலைப்படுத்தப்பட்டார்?
கி.பி 1676ம் ஆண்டு

18) ஆசியாவிலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்ட தியான சம்பிரதாயச் சபை யாது?
**"புனித பிலிப்பு நேரியாரின் தியான சம்பிரதாயச் சபை"**

19) யோசப்வாஸ் அடிகளார் இலங்கைக்கு வருகைதந்தது எப்போது?
கி.பி 1686ம் ஆண்டு

20). யோசப்வாஸ் அடிகளாார் தமிழ்மொழியை நன்கு கற்றுக்கொண்ட இடம்? **"தூத்துக்குடி"**

21) யோசப்வாஸ் அடிகளார் தம்மை ஒரு கத்தோலிக்க குரு என்பதை எவ்வாறு முதலில் மக்களுக்கு வெளிப்படுத்தினார்?
கழுத்தில் ஒரு பெரிய செபமாலையை எல்லோரும் காணும் படியாக அணிந்திருந்தார். பின்பு கோவைப் பேராயரின் அதிகாரப் பத்திரத்தை மக்களுக்கு காண்பித்தார்.

22) முப்பது ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்பு யோசவ்வாஸ் அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுத்த இடம்?
யாழ்ப்பாணத்திலிருந்த மூப்பருடைய வீட்டில்.

23) இலங்கையில் யோசப்வாஸ் அடிகளார் ஆரம்பித்த அரும்பெரும் ஆன்மீகப் பணியின் நடுநிலையம்- **மூப்பரின் இல்லம்.**

24) ஒல்லாந்தர் காலத்தில் நூற்றுக்கு நூறு வீதம் கத்தோலிக்க மக்களைக் கொண்டிருந்த பகுதி – **சில்லாலைக் கிராமம்**

25) **"சின்ன உரோமை"** என கத்தோலிக்க விசுவாசத்திலும், ஒழுக்க வாழ்விலும் சிறந்து விளங்கிய இடம்- சில்லாலை

26) யோசப்வாஸ் அடிகளார் இலங்கையில் 1689ம் ஆண்டு அரங்கேற்றிய முக்கிய நிகழ்வு- எட்டு இடங்களில் வெளிப்படையாக திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

27) அருளாளர்யோசப்வாஸ்அடிகளாரையும், அவரது வழிபாடுகளில் பங்கெடுக்கும் முக்கிய கத்தோலிக்கரையும் கைது செய்ய திட்டமிட்ட ஒல்லாந்த அதிகாரி- **"என்றிக் அதிரியான் வான் றீட்"**

28) யோசப்வாஸ் அடிகளார் 1690ம் ஆண்டு ஒழுங்கு செய்த நிகழ்வு? கிறிஸ்துவின் பிறப்புத் திருவிழாவினை மூன்று வெவ்வேறு இடங்களில் ஒப்பு கொடுப்பது.

29) ஒல்லாந்த அதிகாரியின் கட்டளைக்கு அமைவாக சவுக்கு அடிகளின் வேதனை தாங்கமுடியாமல் மரணித்தவர்-
**"டொன் பேதுரு"** என்ற தலைவர்

30) யாழ்ப்பாணத்தில் மூன்று ஆண்டுகள் இறை பணி புரிந்த பின்பு அடிகளார் எங்கே சென்றார்?
**கால் நடையாக பூநகரி வழியாக வன்னிப்பிரதேசம் சென்றார்.**

31) ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களுக்குப் பயந்தோடிய ஆயிரக் கணக்கான கத்தோலிக்கர்கள் ஒன்று கூடி வாழ்ந்த நகரம்- **"புத்தளம்"** என்ற நகரமாகும். (போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட சிற்றாலயமும் ஒன்று அங்கு இருந்தது)

32) மறைபணிபுரிய அடிகளார் எப்போது கண்டி நகரிற்கு நுழைந்தார்? கி.பி 1692ம் ஆண்டு சித்திரை மாதம்.

33) ஒல்லாந்தரால் துன்புறுத்தப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு ஆதரவுஅளித்த அரசன்- கண்டி அரசனான **"இரண்டாம் விமலதர்ம சூரியன்"**

34) கண்டி அரசனால் வாஸ் அடிகளார் கைது செய்யப்படுவதற்கு காரணமாக அமைந்த விடயம் - போர்த்துக்கேயருக்கு வேவு பார்க்கும் உளவாளி என்ற தப்பான வதந்தி

35) அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரால் கண்டி நகரத்தில் கட்டப்பட்ட சிற்றாலயம்- "அஞ்ஞானிகள் மனமாற்றத்தின் மாதா" ஆலயம்.(அஞ்ஞானிகள் மனமாற்றத்தின் மாதாவுக்கென அர்பணம் செய்யப்பட்டது.)

36) அருளாளர் யோசவ்வாஸ் அடிகளார் அரங்கேற்றிய புதுமை-
கி.பி 1696ம் ஆண்டின் இறுதியில் கண்டி அரசில் மழையில்லாது எங்கும் கடும்வரட்சி உண்டான போது, நகரின் சதுக்கத்தில் அடிகளார் ஒரு பீடத்தை அமைத்து அதன்மேல் ஒரு சிலுவையை வைத்து முழந்தாள் படியிட்டு செபித்தார். - சிறிது நேரத்திற்குப் பின்பு பேரிரச்சலுடன் பெரும் மழை பெய்யத் தொடங்கியது. ஆனால் அடிகளார் முழந்தாள் படியிட்டிருந்த இடத்தில் ஒரு துளி மழை ஏதும் விழவில்லை.

37) கொச்சின் ஆயரிடமிருந்தும், தியான சம்பிரதாய சபைச் சிரேஷ்டரிடமிருந்தும் வாஸ் அடிகளாருக்கு கிடைத்த இருவிதமாக அதிகாரப் பத்திரங்கள்-
1) கொச்சின் ஆயரின் இலங்கைப் பிரதிநிதி
2) இலங்கையிலுள்ள தியானசம்பிரதாயச் சபைக்குருக்களுக்கு சிரேஷ்டர்

38) வாஸ் அடிகளாருக்கு துணையாக இலங்கை வருகை (1696) தந்த ஒறற்ரோறியன் மறைபோதகக் குருக்கள்-
**1) பேதுரு பெர்றாவோ**
**2) யோசவ் டெமெனெசெஸ்**
**3) யோசவ் கர்வாலோ**

39) **வாஸ் அடிகளாரின் மற்றும் ஒற்றரோறியன் சபைக்குருக்களின் மனிதநேயப்பணி சிறந்தோங்கிய இடம்-**
**"கண்டி நகர்" (இங்கு இவர்கள் இன, மத, சாதி பேதமின்றி இறந்தவர்களை அடக்கம் செய்தனர். வைத்தியசாலை ஒன்றினையும் அமைத்து நோயாளிகளைப் பராமரித்தனர்).**

40) இரண்டாம் தடவையாக வாஸ் அடிகளாருக்கு துணையாக இலங்கையில் மறைபோதகப் பணியில் ஈடுபடுவதற்காக வருகை தந்த (1703) ஒற்றரோறியன் மறைபோதகக் குருக்கள்-
1) அருட்திரு பேதுரு டா சுல்தானோ
2) யாக்கோமே கொன்சால்வெஸ்
3) மிகுவெல் டி மெல்லோ
4) யோசே டெ சமாரியா
5) மனுவேல் டே மிராண்டா

41) கத்தோலிக்கருக்குத் தேவையான வேத நூல்களை எழுதும் பொறுப்பு வாஸ் அடிகளாரால் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?
யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரிடம்

42) வாஸ் அடிகளார் இலங்கையில் மறைப்பணியாற்றிய கால அளவு?
**"25" ஆண்டுகள்**

43) வாஸ் அடிகளார் எப்படி எப்போது மரணமானார்?
நோய்வாய்ப்பட்டு 1711ம் ஆண்டு தை மாதம் 11ம் திகதி

44) வாஸ் அடிகளாருக்கு **"முத்திப்பேறு பட்டம்"** யாரால் எப்போது வழங்கப்பட்டது?
திருந்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் இலங்கை வருகையின் போது அவரால் 1995ம் ஆண்டு வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

45) வாஸ் அடிகளரால் கோவை நகரில் நிறுவப்பட்ட சபை யாது?
**"புனித பிலிப்பு நேரியாரின் சபை" (தியான சம்பிரதாயச்சபை)**

46) வாஸ் அடிகளார் தமது சபைக்குருக்களுக்கு வழங்கிய கட்டளை யாது? **"இலங்கைத் தேசிய மொழிகளான தமிழையும் சிங்களத்தையும் குருக்களெல்லாரும் கற்க வேண்டும்"என்பதாகும்.**

47) **ஒல்லாந்தருக்கும் கண்டிஅரசுக்குமிடையேபோர்மூண்டகாலப்பகுதி- கி.பி 1762 முதல் 1765 வரை**

48) "தியான சம்பிரதாயச் சபை" எவ்வளவு காலம் இலங்கையில் **அளப்பரிய பணியாற்றியது? 150 ஆண்டுகள்**

49) வாஸ் அடிகளாரைத் தொடர்ந்து இலங்கையில் மகத்தான பணியாற்றியவர் யார்?
அருட்திரு யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் ஆவார்.

50) உள்நாட்டுக் கிறிஸ்தவ இலக்கியம், சங்கீதம், நாடகம் போன்ற கலைகளை தோற்றுவித்தவர் யார்?
அருட்திரு யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார்.

51) கொன்சால்வெஸ் அடிகளார் எப்போது எங்கே அவதரித்தார்? கி.பி1676ம் ஆண்டு ஆவணி மாதம் 8ம் திகதி இந்தியாவில் கோவை பட்டணத்தில் <u>"திபாரிய"</u> என்னும் இடத்தில் கொங்கனி மொழி பேசும் கிறிஸ்தவ பிராமணர் குடும்பத்தில் அவதரித்தார்.

52) கொன்சால்வெஸ் அடிகளார் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு எப்போது ஒற்றரோறியன் சபையில் இணைந்துகொண்டார்? கி.பி 1700ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி

53) கொன்சால்வெஸ் அடிகளார் தமிழ் மொழியைப் பேசவும், வாசிக்கவும் எழுதவும் எங்கு கற்றுக்கொண்டார்? <u>"கொச்சினில்"</u>

54) கொன்சால்வெஸ் அடிகளாரிடம் பணிக்காக ஒப்படைக்கப்பட்ட இலங்கையின் பல்வேறு பகுதிகள்-
மன்னார், அரிப்பு, முசலி, மாதோட்டம் போன்ற பகுதிகள்.

55) கொன்சால்வெஸ் அடிகளார் எவ்வெவ் மொழிகளில் புலமை கொண்டிருந்தார்? தமிழ்,சிங்களம்,போர்த்துக்கேயம்,ஒல்லாந்தம், இஸ்பானியம்,இலத்தீன்

56) கொன்சால்வெஸ் அடிகளாரால் ஆக்கப்பட்ட இலக்கியங்கள்-
1) தமிழில் மட்டும் - 06
2) சிங்களத்தில் மட்டும் - 08
3) தமிழிலும் சிங்களத்திலும் - 10
4) போர்த்துக்கேயத்தில் - 04
5) ஒல்லாந்த மொழியில் - 01
6) அகராதிகள் - 03

57) கொன்சால்வெஸ் அடிகளாரால் கல்வினிஸ்ற் மதத்திற்கு எதிராக எழுதப்பட்ட நூல் எது? <u>"பேதகாரயங்கே தர்க்கய"</u>

58) வாஸ் அடிகளாரின் மரணித்தின் பின்பு இலங்கைத்திருச்சபையின் தலைவராக நியமனம் பெற்றவர்- டெமெனெசெஸ் அடிகளார்

59) கண்டி அரசர் நரேந்திரசிங்கவினால் கொன்சால்வெஸ் அடிகளாருக்கு வழங்கப்பட்ட பெயர்? "சாங்கோபாங்க சுவாமி"

60) டெமெனெசெஸ் அடிகளாரின் இறப்பின் (கி.பி 1724) பின்பு இலங்கை திருச்சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர்- அருட்திரு யாக்கோமேகொன்சால்வெஸ் அடிகளார்.

61) கொன்சால்வெஸ் அடிகளரால் இயற்றப்பட்ட இலக்கியங்களுள் ஆக்கப்பட்ட காலம் முதல் இன்றுவரை பயன்பாடு உடைய இலக்கியமாகக் கருதப்படுவது?
<u>**"வியாகுலப்பிரசங்கம்**</u>" (முதலில் சிங்களத்திலும் (1728) பின்பு தமிழிலும் (1730) எழுதப்பட்டது.)

62) **கொன்சால்வெஸ்** அடிகளார் எப்போது மரணித்தார்? அவரது உடல் எங்கு அடக்கம் செய்யப்பட்டது?
கி.பி 1742ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி, **போளவத்தையில் அவரால் கட்டப்பட்ட தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது.**

63) **கொன்சால்வெஸ் அடிகளார் எவ்வளவு காலமாக இலங்கையில் மறைப்பணியாற்றினார்?** "37 **வருடங்களாக"**

64) **கொன்சால் வெஸ் அடிகளார் எழுதிய மொத்த நூல்கள்?**
**"42ற்கும்"** அதிகமானவை

65) **தமிழ் சிங்கள கத்தோலிக்க இலக்கியத் துறையில் சிறப்பிடம் பெறுபவர்? அருட்திரு யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார்.**
<u>**(கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை)**</u>

66) **தமிழ் மொழியைக் கசடறக் கற்கவும், இலக்கியத்துறையில் ஈடுபடவும் தூண்டு கோலாய் அமைந்தவர்?**
**அருட்திரு யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார்**

67) **ஒல்லாந்தர் காலத்தில் ஒல்லாந்த கல்வினிஸ்ற மதத்தைப் பரப்பியவர் யார்? பிலிப்பல்தேயுஸ் பாதியார்**

68) ஒல்லாந்தப் போதகரான பல்தேயுஸ் பாதிரியார் இலங்கையில் மறைபணிபுரிந்த கால விபரம்? **கி.பி 1658 – 1665 வரை**

69) பல்தேயுஸ் பாதிரியார் எப்போது எங்கே பிறந்தார்?
கி..பி 1632ம்ஆண்டு ஐப்பசிமாதம், ஒல்லாந்திலுள்ள **"டெல்ப்ற்"** என்ற ஊரில் பிறந்தார்

70) பல்தேயுஸ் பாதரியார் எப்போது ஒல்லாந்த சீர்திருத்த சபையில் ஒரு மறைபணியாளராக நியமனம் பெற்றார்?
கி.பி 1654ம் ஆண்டு தமது 21வது வயதில்

71) கத்தோலிக்கமதம் இரகசியமாகவோ அல்லது பகிரங்கமாகவோ ஒல்லாந்தர் காலத்தில் எப்போது தடைசெய்யப்பட்டது?
கி.பி 1642ம் ஆண்டில்

72) பல்தேயுஸ் பாதிரியாரின் பொறுப்பிலே காணப்பட்ட கிறிஸ்தவ சமூகங்கள் - 24 ஆகும்.

73) "நற்செய்தியைப் போதிப்பதற்குச் சிறந்த பயனுள்ள வழி மக்களுக்கு- எம் மொழியைக் கற்பிப்பதை விட நாம் அவர்களின் மொழியைக் கற்றுக் அறிவதே சிறந்ததாகும்" என்ற கொள்கையுடையவர்- **பிலிப்பல்தேயுஸ் பாதிரியார்**

74) பல்தேயுஸ் பாதிரியார் எழுதிய மறைக்கல்வி நூல்-
**"எம்மதத்தின் முக்கிய கட்டளைகள்"**

75) பல்தேயுஸ் பாதிரியாரின் மறைப்புப் பணி வெற்றியடைந்தமைக்கான அடையாளம்-
அவருடைய இலங்கைப்பணியின் முடிவில் யாழ்ப்பாணத்திலிருந்த 120,000 பேர்களில் 100,000 பேர் கல்வினிஸ்ற் கிறிஸ்தவர்களாக இருந்தனர்

76) வேதாகமத்தை மையமாகக் கொண்டு அதிலேயே முற்று முழுவதுமாக தங்கியிருக்கும் மதம்-
**"கல்வினிஸ்ற்மதம்"**

77) பல்தேயுஸ் பாதிரியாரின் உதவியாளர்களாக செயற்பட்டவர்கள்-
**வண. யுவான், அ. பிறேயில் என்ற இருவரும்**

77) பல்தேயுஸ் பாதிரியார் இலங்கையிலிருந்து வெளியேறியமைக்கான காரணம்- கம்பனி இவருக்கு கொடுத்து வந்த ஆதரவினை விலக்கியமையே ஆகும்.

# ✍ ஆங்கிலேயர் காலம் (கி.பி 1796 – 1948)

01) ஆங்கிலேயகிழக்கிந்திய கொம்பனி எப்போது நிறுவப்பட்டது? கி.பி 1660ம் ஆண்டு

02) ஆங்கிலேயரின் வாணிப மையமாகக் கருதப்பட்ட துறைமுகம் எது? திருகோணமலைத் துறைமுகம்

03) பின்வரும் நாடுகள் எவ்வெப்போது ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டன?
திருகோணமலை – கி.பி 1795 ஆம் ஆண்டு
யாழ்ப்பாணம் - கி.பி 1795ம் ஆண்டு
மன்னார் - கி.பி 1795ம் ஆண்டு
கல்பிட்டிய–1795ம்ஆண்டு
கொழும்பு –கி.பி 1796ம் ஆண்டு

04) இலங்கையிலிருந்த ஒல்லாந்தரின் உடமையெல்லாம் எப்போது ஆங்கிலேய கிழக்கிந்திய கொம்பனியின் கைக்கு மாறின? கி.பி 1796ம் ஆண்டு மாசி மாதம் 16ம் திகதி

05) ஆங்கிலேயர் பொதுவாக எந்தச் சபையை சேர்ந்த கிறிஸ்தவர்களாயிருந்தனர்? அங்கிளிக்கன் சபையை

06) இலங்கை எப்போது ஒரு அரச குடியேற்ற நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது? கி.பி 1802ம் ஆண்டு

07) இலங்கையின் நிர்வாகத்தை கிழக்கிந்திய கொம்பனியிடமிருந்து ஆங்கிலேய அரசு எப்போது பொறுப்பெடுத்தது?
கி.பி 1801ம் ஆண்டு

08) இலங்கையின் முதல் ஆளுணர் யார்?
**"பிறெட்றிக் நோத்" (கி.பி 1798 – 1805)**

09) "எம்மதமும் சம்மதம்" என்ற கருத்தினைக் கொண்டவர்?
"தோமஸ் மெயிற்லண்ட்"

10) கத்தோலிக்கர் மேல் ஒல்லாந்தரால் விதிக்கப்பட்ட பலவிதமான தடைச்சட்டங்கள் எப்போது யாரால்? விலக்கப்பட்டது?
கி.பி 1806ம் ஆண்டு வைகாசி மாதம் 27ம் திகதி, தோமஸ் மெயிற்லண்ட்

11) இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை மறுபிறப்படைந்த நாள்?
கி.பி 1806ம் ஆண்டு ஆனி 4ம் திகதி

12) இலங்கை போன்ற ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளில் வாழும் கத்தோலிக்கருக்கு உண்மையான முழு மத சுதந்திரத்தை வழங்கியது-
இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் கி.பி 1829ம் ஆண்டு சித்திரை மாதம் 13ம் திகதி அங்கீகரிக்கப்பட்ட "அரசருக்குக் கீழ்ப்பட்ட றோமன் கத்தோலிக்க குடிமக்களுக்கு நிவாரணம்" என்ற சட்ட மூலம்

13) இலங்கையில் ஏறக்குறைய 300 ஆண்டுகள் ஒரே தனிச் சுதந்திர தனி அரசாக செயற்பட்ட அரசு– கண்டி அரசு

14) தனி அரசாக செயற்பட்ட கண்டி அரசு எப்போது ஆங்கிலேயரின் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டது?
கி.பி 1815 ம் ஆண்டு

15) ஆங்கிலேயர் காலத்தில் இடம்பெற்ற மதச்சுதந்திரத்தின் பயனாக இலங்கைக்கு வருகை தந்த மறைபரப்பச் சபைகள் (மிஷனறி)-
1) அங்கிளிக்கன் சபை – கி.பி 1801
2) லண்டன் மிஷனறிச் வபை – கி.பி 1805
3) பப்ரிஸ்ற் மிஷனறி – கி.பி 1812
4) மெதடிஸ்த சபை (வெஸ்லியன் மறைபரப்புக்குழு)- கி.பி 1815
5) மீட்பர் சபை – கி.பி 1845
6) சிஸ்ரேஷியன் சபை – கி.பி 1845
7) சில்வெஸ்திரின் ஆசிர்வாதப்பர் சபை - கி.பி 1845
8) சேர்ச் மிஷனறி சபை (Cms) – கி.பி 1815
9) அமெரிக்கன் மிஷன் சபை (ACM)- கி.பி 1818
10) அமல மரித்தியாகிகள் சபை (omi)- கி.பி 1849

16) இலங்கையின் முதல் அப்போஸ்தலிக்க விக்காராக (Vicariate Apostolic of Ceylon) நியமிக்கப்பட்டவர்-
**அதி.வண பிரான்சிஸ்கோ சேவியர் அடிகளார்.**

17) இலங்கையின் இரண்டாம் அப்போஸ்தலிக்க விக்காராக நியமிக்கப்பட்டவர்? **அதி.வண விசென்ரே டோ றோசைறோ அடிகளார்.**

18) ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கைக்கு வருகை தந்த முதல் ஐரோப்பிய கத்தோலிக்க மறைபரப்பாளர் (மிஷனறி)-
வண அலெக்சாந்தர் ரூமாஸ் என்பவர், 1842ம் ஆண்டு பங்குனி 11ம் திகதி இலங்கைக்கு வந்தார்.

19) இலங்கையின் மூன்றாவது அப்போஸ்தலிக்க விக்காராக நியமிக்கப்படடவர்-அதி.வணகயித்தானோஅன்ரோனியோஆண்டகை

20) இலங்கைக்கு வருகைதந்த இரண்டாவது ஐரோப்பிய கத்தோலிக்க மறைப்பாளர்- வண ஒறாஷயோ பெற்றக்கினி அடிகளார், 1842ம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்தார்.

21) இலங்கையில் திருநிலைப்படுத்தப்பட்ட முதல் ஆயர்-
அதி. வண கயித்தானோ அன்ரோனியோ, 1846ம் ஆண்டு மாசிமாதம் 8ம்திகதி கொட்டாஞ்சேனை புனித லூசியாள் ஆலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டார்

22) இலங்கைக்கு வருகை தந்த மூன்றாவது ஐரோப்பிய கத்தோலிக்க மறைப்பாளர்- வண அந்திரே றெய்னோ அடிகளார் (பிரெஞ்சுக் குரு)

23) அமல மரித் தியாகிகள் சபையின் நிறுவுனர் ?
இயூஜின் டி மசனெட் ஆண்டகை

24) சுதந்திர யுகத்தில் இலங்கையில் பணிபுரிந்த துறவற கன்னியர் சபைகள்-
திருக்குடும்பக் கன்னியர் சபை (கி.பி 1862)
டி லா சால் கிறிஸ்தவ சகோதரர் (கி.பி 1867)
நல்லாயன் சபை (கி.பி 1869)
பிரானசிஸ்கன் சபைக் கன்னியர்கள் (கி.பி 1886)
இயேசு சபையினர் (கி.பி 1893)

இவர்களுடன் பிறர்சிநேக சகோதரிகள், மாரிஸ்ட சகோதரர்கள், பிரான்சிஸ்கன் மரியாள் சபைக்குருக்கள் இலங்கைக்கு வருகை தந்து பன்முக மறைபணிகள் அதாவது பிறர் நல, மனித நேய சமூக சேவைகளில் ஈடுபட்டனர்.

25) இலங்கை வட, தென் என இரு மாநிலங்களாக (Vicariates) எப்போது பிரிக்கப்பட்டது?
கி.பி 1847ம் ஆண்டு புரட்டாதி 9ம் திகதி

26) வடமாநிலம் எப்போது தனி மறை மாநிலமாக ஆக்கப்பட்டது? அதன் முதல் அப்போஸ்தலிக்க விக்காராக நியமனம் பெற்றவர் யார்?
கி.பி 1849ம்ஆண்டு, பெற்றக்கினி ஆண்டகை

27) முதலில் உருவான இலங்கையின் மறை மாநிலங்கள்?
கி.பி 1849ம் ஆண்டு- கொழும்பு, யாழ்ப்பாணம்

28) **“இலங்கையின் இரண்டாம் அப்போஸ்தலர்”** என சிறப்பாக அழைக்கப்படுபவர்? கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகளார் (omi) (இலங்கைத் திருச்சபைக்கு ஆற்றிய சிறந்த சேவையின் நிமித்தம்)

29) இலங்கை ஓர் தனித் திருச்சபையாக அமைப்பு பெற்றது?
கி.பி 1886ம் ஆண்டு

30) கொழும்பு அதிமேற்றிராசனத்தின் அதிமேற்றியராணியார் விபரம்-
1) பொன்ஜீன் ஆண்டகை (1886 – 1893)
2) அதி.வண அன்று மெலிசன் (1893 - 1905)
3) அன்ரனி கூடெற் (1905 – 1929)
4) பீற்றர் மார்க் (1929- 1937)
5) ஜோண் மேரி மஸொான் (1938 – 1947)

31) காலி மறை மாவட்டத்தின் முதல் ஆயர்-
வான் ரீத் அடிகளார் (1895 – 1934) -இயேசு சபையைச் சேர்ந்தவர்

32) திருமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதல் ஆயர்- சார்ள்ஸ் லாவிஞ்ஞ அடிகளார் (1899 – 1913)

33) முதன் முதலாக இலங்கைக்கு வருகை தந்த ஐரோப்பிய துறவற கன்னியர் சபை? திருக்குடும்பக் கன்னியர் சபை (கி.பி1862)

33) கொழும்பில் முதன் முதலாக கத்தோலிக்க அச்சகத்தை உருவாக்கியவர்- சில்லாணி ஆண்டகை (கி.பி 1869)

34) முதல் இலங்கை கத்தோலிக்க ஆங்கிலேயப் பத்திரிகை- "இலங்கை கத்தோலிக்க தூதன்" (கி.பி 1869)

35) முதல் இலங்கை கத்தோலிக்க சிங்களப் பத்திரிகை- "ஞானார்த்த பிரதீபய" (கி.பி 1873)

35) முதல் இலங்கை கத்தோலிக்க தமிழ் பத்திரிகை- "யாழ்ப்பாண கத்தோலிக்க பாதுகாவலன்" (கி.பி 1876)

36) யாழ்ப்பாணத்தில் எப்போது கத்தோலிக்க அச்சகம் நிறுவப்பட்டது?
கி.பி 1871ம் ஆண்டு

37) உரோமை நகரில் குருவாக திருநிலைபடுத்தப்பட்ட முதல் இலங்கையர்? அருட்திரு.கொர்னேலியஸ் யே.பி பர்னாந்து அடிகளார்.

38) இலங்கையின் முதல் சுதேச அமல மரித்தியாகி (Omi)- வண சகோ ஸ்ரீவன் பூரியாவார்

39) சுதேச குருக்களைப் பயிற்றுவிப்பதற்கென இலங்கையில் முதல் குருமடத்தை ஆரம்பித்தவர்-
பொன்ஜீன் ஆண்டகை (கி.பி 1871) புனித மடுத்தீனார் குருமடமே ஆகும்.

40) புனித மடுத்தீனார் குருமடத்தில் பயின்று வெளியேறிய முதல் மேற்றிராசனக்குரு – தமிழரான வண. சவரிமுத்து சந்திரசேகரர், இவர் கி.பி 1876ம் ஆண்டு மார்கழி மாதம் 29ம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

41) குருத்துவ மேற்படிப்புக்கு உதவியாக சர்வகலாசாலை நிலையிலான குருமடத்தை நிறுவியவர்? அப்போஸ்தலிக்க பிரதிநிதி லடிஸ்லவுஸ் சலெஸ்கி கி.பி 1893 ம் ஆண்டு **"பாப்புவின் குருமடம்"** கண்டியில் ஆரம்பிக்கப்பட்டது.

42) ஒல்லாந்தரின் ஆட்சியின்போது அனைத்துப் பாடசாலைகளும் கல்வித்துறையும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட எந்த ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிலிருந்தன?
"பாடசாலை ஆசிரியரின் ஆசிரியரின் ஆணைக்குழு"

43) ஆங்கிலேய அரசாங்கம் எப்போது பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்தியது- கி.பி 1798ம் ஆண்டு

44) ஆங்கிலேயர் காலத்தில் கல்விச் சுழலில் ஏற்பட்ட புதியதொரு மாற்றம்-
ஆங்கில மொழி கற்கும் அவசியம் ஏற்பட்டமை

45) இலங்கையில் ஆங்கிலேயர் காலத்தில் காணப்பட்ட மூன்று தரமான பாடசாலைகள்-
1) அரசாங்கப் பாடசாலைகள்
2) மிஷன் பாடசாலைகள்
3) தனியார் பாடசாலைகள்

46) **"பாடசாலை ஆணைக்குழு"** எப்போது உருவாக்கப்பட்டது? கி.பி 1834ம் ஆண்டு

47) ஆங்கிலேயர் காலத்தில் காணப்பட்ட மூன்று வகையான பாடசாலைகள் (மொழி அடிப்படையில்) -
1) ஆங்கிலப் பாடசாலைகள்
2) ஆங்கில – சுதேச மொழிப் பாடசாலைகள்
3) சுதேச மொழிப் பாடசாலைகள்.

48) **"மத்திய பாடசாலை ஆணைக்குழு"** எப்போது உருவாக்கப் பட்டது? கி.பி 1841ம் ஆண்டு

49) மத்திய பாடசாலை ஆணைக்குழுவின் நோக்கம்-
***"இலங்கைப் பிரசைகள் அனைவருக்கும் ஏற்ற கல்வி அளிப்பதே"***

50) வண. கிறிஸ்தோப்பர் பொன்ஜின் அடிகளாரால் வெளியிடப்பட்ட சிறுநூல்-
"இலங்கை கத்தோலிக்க கல்வியை பற்றிய ஒருசில வார்த்தைகள்' (கி.பி 1860)

51) பொன்ஜீன் அடிகளாரின் நன்கொடை பாடசாலை முறைமை, பன் மதத்தவர் நீதியுடன் வாழும் சூழல் தொடர்பான விடயங்களை உள்ளடக்கி வெளிவந்த நூல்- **"கத்தோலிக்க திருச்சபையும் சீர்திருத்தமும்"**

52) **"பொதுக்கல்வித் திணைக்களம்"** எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அதற்கு வித்திட்டவர் யார்?
கி.பி 1869ம் ஆண்டு, வண கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகளார்

53) **"அரசஉதவிபெறும் (நன்கொடை) மதப்பாடசாலைகளின் தந்தை"** (FATHER OF DENOMINATIONAL SCHOOL SYSTEM) என அழைக்கப்படுபவர்? வண. கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகளார்.

54) பெற்றக்கினி ஆண்டகையால் கி.பி 1849 இல் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை – **"யாழ்ப்பாண கத்தோலிக்க ஆங்கில பெண்கள் பாடசாலை"** (அயர்லாந்து நாட்டு விதவையான திருமதி மேரி ஆன் ஒபிளநகன் என்பவரின் தலைமையில் இயங்கியது)

55) ஆங்கிலேயர் காலத்தில் திருச்சபையை தேசிய பண்பாட்டு மயமாக்க முன்னின்று உழைத்தவர்-
ஆதி.வண பொன்ஜீன் ஆண்டகை

56) இலங்கையின் முதல் சுதேச சிங்கள பேராயரும் கர்தினாலு மாகிய அமலமரிதியாகி யார்?
**"தோமாஸ் கர்த்தினால் கூறே ஆண்டகை"** (சிறந்த இறையியலாளர்)

57) இரண்டாம் வத்திகான் சங்கத்தின் தீர்மானங்களுக்கமைய இலங்கைத் திருச்சபையின் பண்பாட்டு மயமாக்கலை முன்னெடுத்துச் சென்றவர்-
தோமாஸ் கர்தினால் கூறே ஆண்டகை அவர்கள்

58) தேவத்தையில் அமைந்துள்ள இலங்கை மாதா பேராலயத்தைக் கட்டியவர்- தோமாஸ் கர்த்தினால் கூறே ஆண்டகை அவர்கள்.

59) இலங்கையின் முதல் சுதேச சிங்கள ஆயர்-
**எட்மண்ட பீரிஸ் ஆண்டகை**

60) இலங்கைச் சரித்திரத்திற்கு மகத்தான, ஒப்பற்ற, இணையற்ற பங்களிப்பை ஆற்றியவர்-
**"வண. எஸ்.ஜி. பெரோரா" (இயேசு சபை)**

61) இலங்கைத்தமிழர் வரலாற்றுக்கும் தமிழ்மொழிக்கும் மகத்தான பங்களிப்பை ஆற்றியவர்-
**வண. சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளார் (பன்மொழிப்புலவர்)**

62) சுதேச இசை, சங்கீதம், பாடல்கள், இலங்கைக் கட்டிடம் கலை போன்றவற்றினை திருச்சபைக்கு அறிமுகம் செய்தவர்-
குருநாகல ஆயிரான வண. லக்தாசா டி மெல்

63) சகல மதத்தினருக்கும் சட்டபூர்வமாக மதச்சுதந்திரம் வழங்கப்பட்டது-
கி..பி 1806ம் ஆண்டு
64) 19ம் நூற்றாண்டின் இறுதியில் பௌத்த சீர்திருத்த வாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம்-
**"மது விலக்கு இயக்கம்"**
65) இலங்கை வரலாற்றில் **"பௌத்த – முஸ்லீம் கலவரம்"** முதலில் இடம் பெற்றது- கி.பி 1915ம் ஆண்டு
66) இலங்கைத் தேசிய காங்கிரஸ் எப்போது அமைக்கப்பட்டது-
கி.பி 1919 ஆண்டு
67) இலங்கைத் தேசிய காங்கிரஸின் முதல் கூட்டத்தில் தலைவர்களாக நியமனம் பெற்றவர்கள்-
திரு. பென்னம்பலம் அருணாசலம், அவரைத் தொடர்ந்து கிறிஸ்தவரான சேர் ஜேம்ஸ் பீரீஸ் அவர்களும் நியமனம் பெற்றனர்.
68) **"டொனமூர் ஆணைக்குழு"** எப்போது நியமிக்கப்பட்டது?
கி.பி 1931ம் ஆண்டு (இவ் ஆணைக்குழுவால் டொனமூர் சட்ட யாப்பு அறிமுகம் செய்யப்பட்டது)
69) 21வயதுக்கு மேற்பட்ட சகல **ஆண், பெண்கள் இருபாலாருக்கும்** வாக்குரிமை வழங்கப்பட்ட யாப்பு? டொனமூர் சட்ட யாப்பு
70) **"சோல்பரி ஆணைக்குழு"** **எப்போது** நியமிக்கப்பட்டது-
கி.பி 1946ம் ஆண்டு (இவ் ஆணைக்குழுவால் சோல்பரி சட்ட யாப்பு அறிமுகம் செய்யப்பட்டது.)
71) மக்கள் பிரதிநிதிகள் சபை, (கீழ்ச்சபை) செனற்சபை (மேல்சபை) என்ற இருஅமைப்புகளைக் கொண்ட மக்களாட்சிமன்றம் உருவாக்கப்பட்ட காரணமாக அமைந்த யாப்பு?
**"சோல்பரி சட்ட யாப்பு"**
72) இலங்கை பிரித்தானியரின் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்ற காலப்பகுதி? கி.பி 1948ம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி

## ✍ சுதந்திர இலங்கை (கி.பி 1948 – தற்காலம் வரை)

01) இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்பு சுதந்திர இலங்கையின் முதல் பிரதமராக நியமனம் பெற்றவர்?
**மாண்புமிகு டி.எஸ்.சேனநாயக்கா**
02) ஐக்கிய தேசியக் கட்சியின் நிறுவுனர்-
**மாண்புமிகு டி. எஸ். சேனநாயக்கா**
03) அனைத்து இனத்தவரும், மதத்தவரும் அங்கத்துவம் வகித்த கட்சி – ஐக்கிய தேசியக்கட்சி

04) இலங்கையில் திருச்சபையின் ஆட்சிப்பீடம் எப்போது நிறுவப்பட்டது? கி.பி 1887 ம் ஆண்டு

05) இலங்கையின் முதல் சுதேச தமிழ் ஆயா-
அதி.வண ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை. (கி.பி 1950ம் ஆண்டு யாழ் மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார்)

06) இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் ஆட்சிப்பீடத்தில் இன்று அங்கத்துவம் பெற்றிருக்கும் மறைமாவட்டங்கள் பதினொன்று ஆகும்.

1) கொழும்பு 2) காலி 3) குருணாகலை
4) யாழ்ப்பாணம் 5) சிலாபம் 6) இரத்தினபுரி
7) கண்டி 8) அநுராதபுரம் 9) மன்னார்
10) திருமலை—மட்டுநகர் 11) பதுளை

07) கண்டி நகரில் "இலங்கைத் தேசிய பெரிய குருமடம்" எப்போது ஆரம்பிக்கப்பட்டது.? கி.பி 1955ம் ஆண்டு

08) அரசஉதவிபெறும் (நன்கொடை)மதப்பாடசாலை முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.?
கி.பி 1869ம் ஆண்டு

09) பௌத்த இந்து மத மறுமலர்ச்சிக்கு வித்திட்ட காரணி-
கத்தோலிக்க திருச்சபை சுதந்திர காலத்தில் அடைந்த பன்முக முன்னேற்றம்.

10) "பௌத்த ஆணைக்குழு" எப்போது நியமிக்கப்பட்டது.?
கி.பி 1954ம் ஆண்டு

11) பௌத்த ஆணைக்குழு கத்தோலிக்க மதத்திற்கு எதிராக வெளியிட்ட அறிக்கை ?
**"பௌத்த மதத்துக்கு நம்பிக்கைத் துரோகம்"" (கி.பி (1956)**

12) கத்தோலிக்க திருச்சபைக்கு எதிரான பௌத்த ஆணைக்குழுவின் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை என எண்பித்த அமைப்பு-
**"இலங்கைக் கத்தோலிக்கர் ஐக்கியம்"**

13) சுதந்திர இலங்கையில் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட பெரிய தீங்கு, அநீதியான சம்வவமாகக் கருதப்படுவது?
**"அரச உதவி பெறும் அனைத்துப் பாடசாலைகளும் அரச உடைமை ஆக்கப்பட்டமை"**

14) "அனைத்துமதப்பாடசாலைகளையும் தேசிய மயமாக்குவதை தங்களது தேர்தல் விஞ்ஞாபனமாகக் கொண்ட கட்சி ?
ஸ்ரீமதி பண்டார நயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி(1960இல் இலங்கை அரசியலில் ஆட்சியைக் கைப்பற்றியது)

15) அனைத்து மதப் பாடசாலைகளையும் தேசிய மயமாக்கும் மசோதாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எங்கு, எப்போது சமா்ப்பித்தது?
மக்களாட்சி மன்றத்தில், 1960ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ம் திகதி
16) அனைத்து மதப்பாடசாலைகளையும் தேசிமயமாக்கும் திட்டத்திற்கு எதிராக குரல் கொடுத்தவா்?
இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான அதி.வண தோமாஸ் கூடறே ஆண்டகை அவா்கள்.
17) கொழும்பில் கத்தோலிக்கரினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் எதிா்ப்புக் கூட்டத்தை அறிந்து, வத்திக்கானின் பணிப்புரைக்கு அமைய இலங்கைக்கு வருகைதந்த இந்திய ஆயா்- "கிறாசியாஸ் ஆண்டகை" (இவரின் தலையீட்டினால் எதிா்ப்புக் கூட்டத்தால் ஏற்படவிருந்த ஆபத்து விலக்கப்பட்டது)
18) அனைத்து மதப்பாடசாலைகளையும் அரச உடைமைளாக்கும் சட்டத்தின் பிரகாரம் கத்தோலிக்க திருச்சபையின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டன. இதன் விபரம் வருமாறு-
   - 600க்கும் மேற்பட்ட பங்குப் பாடசாலைகள்
   - அதன் காணிகள், கட்டிடங்கள், தளபாடங்கள் அனைத்தும் எவ்வித நஷ்டஈடுமின்றி பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்டன.
19) "ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி" ஆட்சியின் 20 ஆண்டுகளுக்குப் பின்பு இலங்கையின் அரச ஆட்சியை கைப்பற்றியது?
ஜே.ஆா் ஜயவா்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம். (1980ம் ஆண்டில்)
20) வேதாகமச்சங்கம் முதன் முதலில் எங்கு, எப்போது ஆரம்பிக்கப்பட்டது? - பிரித்தானியாவில் 1804ம் ஆண்டு
21) இலங்கை வேதாகமச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
கி.பி 1812ம் ஆண்டு
22) இலங்கை வேதாகமச் சங்கத்தின் முதல் தலைவா் யாா்?
அப்போது இலங்கை ஜனாதிபதியாகவிருந்த "திரு றொபேட் பிறவுண்றிக்."
23) இலங்கை தேவாகமச் சங்கத்தின் கிளைகள் எங்கெங்கு ஆரம்பிக்கப்பட்டன?
யாழ்ப்பாணம், திருமலை, மடடக்களப்பு, கண்டி
24) தேவாகமச் சங்கத்தின் முக்கிய நோக்கம்?
"இறைவனின் வாழ்வளிக்கும் வாா்த்தைகளைக் கொண்ட வேதாகம அறிவை மக்களுக்க வழங்குவது"

25) இலங்கையின் மறைமாவட்டங்கள் உதயமாகிய கால விபரங்கள்-
கி.பி 1883ம் ஆண்டு – கொழும்ப, யாழ்ப்பணம், கண்டி
கி.பி 1893ம் ஆண்டு – காலி, திருமலை, மட்டக்களப்பு

26) இலங்கை ஆயர்மன்றம் அல்லது பேரவை எப்போது அமைக்கப்பட்டது? கி.பி 1899ம் ஆண்டு

27) இலங்கை ஆயர் மன்றத்தின் புதிய சாசனங்கள், சட்ட அமைப்புக்கள் என்பன எப்போது அங்கீகரிக்கப்பட்டன?
கி.பி 1870ம் ஆண்டு திருத்தந்தையால் அங்கீகரிக்கப்பட்டு, சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு 1975ம் ஆண்டில் இறுதி வடிவம் எடுத்தன.

28) பல்வேறு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சபைகளுக்கிடையே பரஸ்பர ஒற்றுமையையும் நல்லுறவையும் வளர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட அமைப்பு?
"இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை"

29) இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை எப்போது "ஆசிய கிறிஸ்தவ சபைகள் மன்றத்தின்" கிளையாக இயங்கத் தொடங்கியது? கி.பி 1974ம் ஆண்டிலிருந்து.

30) "அனைத்து மதச் சமாதானத்திற்குமான இயக்கம்" இதனுடைய முக்கிய நோக்கமாக அமைவது- **"மத வேறுபாடின்றி அனைவரையும் இணைத்து மனித உரிமை, வறுமை, சூழல் சமநிலை, கல்வியின்மை, சமூக ஏற்றத்தாழ்வு, சமாதானத்தின் முக்கியத்துவம் போன்றவை தொடர்பாக கலந்தாலோசித்துப் பொதுப்பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டு முயற்சி எடுதல்"** ஆகும்.

## "The End"

# 8.துணை நின்ற நூல்களின் விபரம்

04) J.E ஜெயசீலன், "யாழ் திருச்சபை வரலாறு", வளன் ஆச்சிரமம், யாழ்ப்பாணம், 1997

05) பிலிப்ஸ் இ. யேசுதாசன், "கிறிஸ்தவ வாழ்வு", அமலி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம், 2003

06) சா. ஞானப்பிரகாசர், "யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க திருச்சபை சரித்திரச் சுருக்கம்", ஏனைய வெளியீடு, இடம், ஆண்டு பற்றிய தகவல்கள் இல்லை ஏனெனில் புத்தகம் சேதமடைந்துள்ள நிலையில் உள்ளது.

3

## ஆசிரியர் உங்களுடன்

## VICKNA -JAFFNA

## DMI -JAFFNA

## N.E.C-JAFFNA

## BITSMANS -JAFFNA

## SHAMROCK ACADEMY-EACHCHAMODDAI

## HIGH COLLEGE OF ARTS KOKKUVIL

கௌரவ மறையாசிரியர் திரு.எஸ்.கேயூட் பெனடிற்
துணை விரிவுரையாளர்,
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீகத் துறைகள்,
யாழ் பல்கலைக்கழகம்.